7. மா+இரு - என்பது "இ ஈ ஐ வழியவ்வும், ஏனையுயிர்வழிவவ்வும்," என்றவிதிப்படி, மாவிரு என்றுக வேண்டியிருக்க, "இடையுரிவடசொலின் இயம்பிய கொளாதவும்" என்ற விதிப்படி, இச்சொல்லின் பகுதி உரிச்சொல்லாகையின், பொது விதிபெறுது மாயிரு - என்றுகின்றது.

8. மண்+யாது, என்பது "தன்னொழி மெய்ம்முன் யவ்வரின்." என்ற சூத்திரப்படி, மண்ணியாது, என்றுதலை யொழித்துச் சில விடங்களில், மண்யாது என்று, மேற்சூத்திரத்திலுள்ள துணி நரும் என்பதி னீற்றும்மையால் இயல்பாக விருக்கின்றது. (துணியாதவரும் உளர் - என்னும் பொருள் தருவதுபற்றி)

9. * (வேற்றுமையில்) பொன் + தீமை, பொற்றீமை என்றுவதுபோல், ஆன் + கன்று, வண்டின்+கால், என்பவை முறையே, ஆற்கன்று, வண்டிற்கால், என்றுதலை யொழித்து "இடையுரி வடசொலினியம்பிய." என்ற விதிப்படி, நிலைமொழி யீறு இடைச்சொல்லாக விருப்பதால் இயல்பாக விருக்கின்றது.

10, நம்பி+பூ, தாமரை + கொட்டை, என்பவைமுறையே நம்பிப்பூ, தாமரைக்கொட்டை, என்றுதல்போல, ஆதி+பகவன், தன+தடம் என்பவை, விகாரப்படாமல், நிலைவருமொழிகளில் வடமொழிகள் கலந்து வருவதால், மேல் உதாரணத்திற் காட்டிய சூத்திரவிதிப்படி இயல்பாக விருக்கின்றது.

11. தோன்றல் + தீயன், வேள் + தீயன் என்பவை (அல்வழிக்கண்) "குறில் செறியாலள." என்ற விதிப்படி, முறையே, தோன்றறீயன், வேடீயன் என்றுதல்போல, வேற்றுமையிடத்தும் இச்சூத்திரத்தின் கண்ணே கூறிய பிறவென்றமிகையால், தோன்றறீமை வேடீமை என்று கின்றது.

12. கல் + எறிந்தான் என்பது, "தனிக்குறின் முன்னொ ற்றுயிர்வரி னிரட்டும்." என்றவிதிப்படி கல்லெறிந்தான் என்றுவதுபோல், அவ் + அற்று, என்பது அவ்வற்று என்றுகாமல், "வவ்விறுசுட்டிற் சுற்றுறல்வழியே." என்றதின் வழியே என்றமிகையால் அவற்று என்றுகிறது.

13. மக + அரிது. என்பதில் வகரவுடம்படு மெய்தோன்றி மகவரிது என்றுகுமாயினும், மக + அத்து + குறை, என்னுங்கால் அவ்வுடம்படு மெய்தோன்றுது, "அத்தினகரமகர முனையில்லை." என்றசூத்திரப்படி - மகத்துக்குறை என்றுகின்றது.

14. செயப்படு பொருளானது, கருத்திற் செயப்படுவது, கருத்தின்றிச் செயப்படுவது, இருமையிற் செயப்படுவது, எனவு மூன்று வகைப்படும். உ-ம். வருமாறு. மரத்தை வளர்த்தான், சோற்றைக் குழைத்தான் பதரையும் நெல்லையும் பணத்திற்குக் கொண்டான்.

15. உடனிகழ்ச்சிப் பொருளானது, வேறு வினையுட னிகழ்ச்சியென்றும் வினையில்லுட னிகழ்ச்சியென்றும் இருவகைப்படும். உ-ம். தொடியொடு தொல்கவின் வாடியதோள், மலையொடு பொருதமால்யானை.

16. வினைமுற்றே வினையெச்சமாதற்கு உதாரணம். கண்டனன் வணங்கினான். என்பதில், கண்டனன் என்னும் வினைமுற்று கண்டு - என வினையெச்சமாகின்றது. குறிப்புமுற்று பெயரொச்ச வினையெச்சங்களாகும் வகை. உ-ம்,

வெந்திறலினன் + வில்லினன் வந்தான், அவன் பொன்னன் + வந்தான், ஆகிய விவை, வெந்திறலினனுகிய வில்லினன், அவன் பொனனனுகி, எனமுறையே பெயரெச்ச வினையெச்சங்களாயின.

17. சேர, சோழ, பாண்டியர் என உம்மைத் தொகையில் வரவேண்டியவை, சேரன், சோழன், பாண்டியன், எனப் பிளவுபட்டுவரின், செவ்வெண் எனப்படும்.

18 குவ்வுருபிற்குப் பதிலாக, பொருட்டு அல்லது ஆக, நிமித்தம் என்னுஞ் சொல்லுருபுகள்வரும். உ - ம். கூலியின் பொருட்டு, அல்லது கூலிற்காகவேலை செய்தான், கூலிநிமித்தம் வேலைசெய்தான்.

19. இடப்பொருள் தன்னிற் சிறிதிடமாவதும், முழுதிடமாவதும் விடயமாவதும் எனவு மூவகைப்படும். உ - ம். ஊர்க்கணிருந்தான், தீயின்கணுள்ளது சூடு, கல்வியின்கண் ஆசைவைத்தான்.

20. தெரிநிலை வினைகள், நட, வா, முதலிய வினைப்பகுதிகளினின்று பிறப்பதன்றியும், சிறுபான்மை, பெயர், இடை உரிச்சொற்களினுன்றும் பிறக்கும்; உ - ம். கடைக்கணித்தான், சித்திரித்தான். ஆகிய இவை கடைக்கண், சித்திரம் என்னும் பெயரினின்றும்; போன்றுன், நிகர்த்தான். என்பன, போல், நிகர் - என்னும் உவமையிடைச் சொற்களினின்றும்; சான்றுன், சிறுத்தான் என்பன - சால், சிறுமை, என்னு முரிச் சொற்களினின்றும் பிறந்தன.

21. வினு மூவகைப்படும் அவையாவன - அறியான் வினு, ஐயவினு, அறிபொருள்வினு - உ - ம். முறையேவருமாறு. உயிர் எத்தன்மைத்து? குற்றியோ மகனோவவ்வுரு? அம்மனிதன் எங்கிருக்கிறுன்? — கறக்கிற வெருமைபாலோசினையோ? என்பது வினுவழு. இவ்வூர்க்கு வழியாதெனின், என் ஆவின் கன்று என்பதுவிடைவழு.

22. மொழி மாற்றுப்பொருள் கோளாவது தமக்குஏற்ற விரண்டு பயனிலைகளைப் பொருந்து மொழிகளை ஏலாதவிர ண்டு பயனிலைகளோடு சேர்த்துச் சொல்வதாம். உ-ம். சுரை யாழ அம்மி மிதப்ப இது தழாத்தொட ரெனவும் படும்.

23. மரபு அஃதாவது எந்தப்பொருளை பெரியோர் எந்தச் சொல்லால் எவ்விதமாகச் சொன்னார்களோ அந்தப்பொரு ளை அந்தச் சொல்லால் அவ்வாறு கூறுவது. உ-ம். குதிரை க்குட்டி, மான்கன்று, பசுவின்கன்று முதலியன. குதிரை க்குட்டி எனபதை குதிரைக்கன்று எனச் சொல்லின் மரபு வழுவாம். மற்ற வற்றிற்கும் இவ்வாறே.

24. உருபுமயக்கம். அஃதாவது ஒரு வேற்றுமையுருபு நின்றவிடத்தே மற்றொரு வேற்றுமையுருபு மயங்கி வருவது. அவ்வாறு வரினும் பொருள் செல்லும் வழியே உருபுசேரும். எனவே எவ்வுருபு இருப்பினும் பொருளை நோக்கித் திரித் துக் கொள்க. உ-ம். மதுரையை நீங்கினன். இதில் நீக்கப் பொருள் இரண்டாம் வேற்றுமையில் வந்தது.

25. உருவகம் என்னும் அலங்காரம்—"உவமையும் பொ ருளும் வேற்றுமையொழி வித்தொன்றென மாட்டினஃதுரு வகமாகும்." என்றபடியே உபமான மாம்பொருளையும், உவ மிக்கப்படும் பொருளையும் வேற்றுமையில்லாமற்செய்து ஒன் றென்பதாக வொற்றுமை படுத்துவது உருவகமெனப்படும்.

26. செய்யுள் 4-வகைப்படும். அவையாவன; முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை. இவற்றுள் முத்தக மாவது, தனியே நின்று ஒருபொருளைத் தந்து முடிவுபெறு வது. குளகமாவது பலபாட்டாய் ஒருவினைகொண்டு முடி வது. தொகைநிலையாவது ஒருவராலுரைக்கப்பட்டுப் பல பாட்டாய் வருவனவும் பலராலுரைக்கப்பட்டு பலபாட்டா ய் வருவனவுமாம். தொடர்நிலையாவது பொருளினாலும் சொல்லினாலும் தொடர்ந்து நிற்பதாம்.

Forces of—ஏ, உம், ஓ. ஏ, உம், ஓ, என்னும் இடைச்சொற்களின் பொருள்கள். ஏகாரமானது, தேற்றம், எண், வினா, பிரித்தல், ஈற்றசை, இசைநிறைஎன ஆறுவகைப்படும். உ-ம். முறையேவருமாறு - சன்மார்க்கருக்கே புகழ்; மலையே, ஜலமே, தீயே, வளியே; நீயே, செய்தாய்; (இவர்களுள்) அவனேசெய்தான்; பகர்ந்தனனே; ஏயே இவள் ஒருத்தி, அன்றியும் இவ்வேகாரம் யானேகொண்டேன்? என்னும்போது யான் கொள்ளவில்லையென்னும் எதிர்மறைப் பொருளையும் தருகின்றது.

உம் என்பது, எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண், தெளிவு, ஆக்கம் என எட்டுபொருளைத் தரும். இவற்றுள், சிறப்பு என்பது உயர்வுசிறப்பு, இழிவு சிறப்பு என்றும் எச்சமானது இறந்தது தழீஇயது எதிரது தழீஇயது என்றும் இவ்விருவகைப்படும்.

(உ-ம்.) முறையேவருமாறு. அவன் வரற்குமுரியன்; குறவருமருளுங்குன்றம் - (உயர்வுசிறப்பு) புலையனும் விரும்பாயாக்கை (இழிவுசிறப்பு) பத்தாயினும் எட்டாயினும் கொடு; சாத்தனும் வந்தான் என்பது கொற்றனும் வந்ததன்றி எனப்பொருள்படின் இறந்தது தழீஇய எச்சவும்மை, இனிக்கொற்றனும் வருவான் எனப்பொருள்படின், எதிரது தழீஇய எச்சம்; தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்கள்; சாத்தனும் கொற்றனும் வந்தார்கள்; ஆணுமன்று பெண்ணுமன்று; பாலுமாயிற்று.

ஓகாரம் எட்டுபொருளைத்தரும். அவையாவன. ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெளிவு, கழிவு, அசைநிலை, பிரிநிலை. இவற்றுள் சிறப்பு உயர்வுசிறப்பு இழிவுசிறப்புஎன இருவகைப்படும். உ-ம். வேலைசெய்யவோ போகிறாய்; அவனோசெய்தான்; ஓ ஓ பெரியன் (உயர்வுசிறப்பு) ஓ ஓ கொடியன் (இழிவுசிறப்பு); நானோசொன்னேன்; நன்றோ அன்று

நிதோ அன்று; நைதலின்றி நல்லறம் செய்தாலோ உயிருட்யும்; ஓ ஓ உவமன்; அவனேசெய்தான்.

Masculine and Feminine of certain words. அடியிற் குறித்திருக்கும் பதங்களை ஆண்பால் பெண்பால்களில் மாற்றிச் சொலவதில் கல்வியில் சற்றுத் தேர்ந்த சிறுவர்களும் தவறுகின்றனர். (குறிப்பு) இப்படி உபயோகிப்பதில் சி. விகுதி நிற்கும் சிலவிடங்களில் தி விகுதிவருதலும் உண்டு இவை போன்ற இன்னும் பலபதங்கள் உள.

Class 27.

ஆண்பால்	பெண்பால்	ஆண்பால்	பெண்பால்
1. வாணியன்	வாணிச்சி	கூனன்	கூனி
இடையன்	இடைச்சி	தலைவன்	தலைவி
வேட்டுவன்	வேட்டுவச்சி	காவற்காரன்	காவற்காரி
புலையன்	புலைச்சி	பாடகன்	பாடகி
வடுகன்	வடுகச்சி	பெருமான்	பெருமாட்டி
தச்சன்	தச்சச்சி	தாமரையான்	தாமரையாள்
கணக்கன்	கணக்கச்சி	துரந்தரன்	துரந்தரி
சேணியன்	சேணிச்சி	வல்லான்	வல்லாள்
மடையன்	மடைச்சி	தேவன்	தேவி
கைக்கோளன்-	கைக்கோளத்தி-	பாங்கன்	பாங்கி
ஒட்டன்	ஒட்டச்சி	தோழன்	தோழி
2. தட்டான்	தட்டாத்தி	———	———
கன்னான்	கன்னாத்தி	பார்ப்பான்	பார்ப்பினி / பார்ப்பாத்தி
குறவன்	குறத்தி		
குமாரன்	குமாரத்தி	சீமான்	சீமாட்டி
கருமான்	கருமாத்தி	புண்ணியவான்	புண்ணியவதி
உழவன்	உழத்தி	பணக்காரன்	பணக்காரி
எயினன்	எயிற்றி		

3. பொன்னன் பொன்னி
இராஜன் { இராஜாத்தி / இராணி / இராக்கினி
இராக்ஷதன் இராக்ஷதி
அரசன் அரசி
குமரன் குமரி
மகராஜன் மகராஜி
குள்ளன் குள்ளி
கள்ளன் { கள்ளி / கள்ளச்சி
சக்கரவர்த்தி சக்கரவர்த்தி
அரக்கன் அரக்கி

குணவான் குணவதி
நாயகன் நாயகி
காதலன் காதலி
துன்மார்க்கன்-துன்மார்க்கி

Common gender.

மேல் இருபாலுக்கும் பொது
வான வார்த்தைகள்.

சரசி, தபசி, ஏழை, குரு.

பெருமாள் என்கிற பதம் பெண்பாலைப் போலக் காணப்படினும், இதுஆண்பாலையே காட்டுகிறது.

Prose order of versus. செய்யுள் நடையை வசனரூபமாக மாற்றும் வகை.

Class 28.

1. இத்தாழ் டணையி லிருந்தான்றிக் காயெண்ணிற்
பத்தா யிரக்கோடி டயென்ன—உய்த்ததனில்
தேர்நிறுத்தி யெண்ணினன் றேவர் சபைநடுவே
தார்நிறுத்துந் தோள்வேந்தன் றான். (நளவெண்பா)

மேற்படி செய்யுளில் தனிச்சீர் முதல்கடை இரண்டு அடிகளையும் வசனரூபமாகமாற்றி யிருக்கிறது. தேவர்சபைநடுவே தார்நிறுத்தும் தோள்வேந்தன் அதனில் தேர்நிறுத்தி உய்த்து எண்ணினன். (இதன்பொழிப்புரை) தேவருடைய சபாமத்தியில் மணமாலை நிறுத்தப்பெற்ற தோள்களையுடைய நளமஹாராஜன் அவ்வயலின்கண் தன் இரதத்தைநிறுத்தி கவனமாகப்பார்த்து அக்காய்களை எண்ணினன்.

Exercise. அடியில் வருபவைகளை மேற்காட்டியபடி வசனரூபமாக மாற்றுக.

1. 'பேதைமட வன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்—கோதிக்
கடித்துத்தான் முத்துமிழும் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா வென்றான் பெயர்ந்து." (நளவெண்பா)

2. "வெள்ளி நிலமடந்தை மென்முலைமேல் வெண்டுகில்போ
குன்ற ருவிபாயுங் குடநாடன்—நின்றபுகழ் [ல்
மாதே யிவன்கண்டாய் மானத் தனிக்கொடியின்
மீதே சிலைபுயர்த்த வேந்து". (நளவெண்பா)

3. "முகமூன்று பெற்றாள் போல்—எய்த
வருவானைப்பா ரொன்றான் மாற்றாரை வென்று
செருவானைப் பார்த்துவக்கும் சேய்". (நளவெண்பா)

Explanation of abbreviations with Certain Revenue Terms. குறிப்பாய் நிற்கும் சொற்களை விவரிக்கும்வகையும், U. C. S. பரீக்ஷையில் கொடுக்கப்படும் சில ரெவினியு பதங்களும். இத்தன்மைய பதங்களைச் சுருக்கி அச்சிட்டுக் கொடுக்கின்றனர்.

Class 29.

௵	வருஷம்	உ-ம்	உதாரணம்
௴	மாதம்	௸	மேற்படி
௳	தேதி	க-ரை	கருத்துரை
ம-ா-ா-ஸ்ரீ	மஹாராஜராஜ ஸ்திரீ	பொ-ரை	பொழிப்புரை
		ப-ம்	பதம்
ஸ்ரீ	ஸ்திரீ	பொ-ள்	பொருள்
௵	க்கு	எ-ய்	எழுவாய்
௮	மேலும்	ப-லை	பயனிலை
௭	ரெம்பர்	செ-ள்	செயப்படுபொருள்
இ-ள்	இதன்பொருள்	எ-று	என்றவாறு

வ-று	வருமாறு	ஆஜர்	ஜோராவரி
எ-து	என்பது	ஜாஸ்திடவுல்	பேரீஜு
நஞ	நன்செய்	சட்டம்	முனுஷிப்பு
புஞ	புன்செய்	நாஜர்	ஜில்லா
இ-பி.	இறிஸ்து பிறந்து	தாரோகா	தாலூக்கா
		வாக்குமூலம்	கம்பெனி
வசூல்	நமூனு	ஜவேஜு	கரார்நாமா
தாசில்	யாதாஸ்து	இஸ்தியார்நா	துக்குடி
இனும்தார்	சூப்ரீம்கோர்	மா	டிஸ்டிரிக்ட்டு
பைமாஷ்	ட்டு	ஜாபிதா	தீர்வை
அஜிமாஷ்	இராஜிநாமா	ஜவாப்தாரி	கிஸ்தி
டிப்டிகலக்டர்	மனுஅர்ஜி	ஜவாமுனிஷிப் [பு	அசிஸ்டாண்டு
சூப்பிரிண்	டெபட்டாமணிய [ம்	மிராசு	கலெக்டர்
ண்டு	கர்ணம்	கிராமமேனை	தஸ்தாவேஜு
வக்காளத்து	அசல்.	பாபத்து	சர்க்கார்ஜப்தி
மேடோவர்	நகல்	ராதாரி	பசலி
மாசூல்	முக்தியார்நா [மா	ஆயம்	நபுர்ஜாமீன்
பைசல்	கரம்பு	கஜானு	கைதி
குடிவாரம்	சாவி	காபந்து	மிட்டாதார்
மேல்வாரம்	திவாணத்தார்	சதர் அதாலத்	மானியம்
தாக்கீது	சரத்து	கோர்ட்டு	கிட்டா

APPENDIX.

அநுபந்தம்.

COMPOSITION. வாக்கியரசனை.

வாக்கியரசனை என்பது, வாக்கியம் இன்னதென்பதும், அதன்பிரிவுகளையும், அதைஅமைக்கும் விதமுதலியவற்றையும் குறித்துச்சொல்லும் நூலாம்.

1. Sentence. வாக்கியம் என்பது எழுவாய் பயனிலை செயப்படுபொருள் ஆகிய இம்மூன்றும் கூடியதாம். செயப்படுபொருள் இல்லாததும் வாக்கியமாகும். உம். அவன் கோயிலைக்கட்டினான். குதிரை ஓடிற்று.

(a.) Subject. எழுவாய் என்பது வாக்கியத்தின் முதற்பொருளாம். உ-ம். காற்று வீசிற்று. இதில் காற்று-எழுவாய்.

(b.) Predicate. பயனிலைஎன்பது வாக்கியத்தின் முதற்பொருளின் தொழிலைக்காட்டும் முற்றுவினையாம். உ-ம். அவன்படித்தான் - இதில்படித்தான்-என்பது-பயனிலை.

(c.) Object. செயப்படுபொருள் என்பது வினைமுதலின் செயலைஏற்கும் பொருளாம். உ-ம். சோற்றையுண்டான். இதில் - சோறு - என்பது செயப்படுபொருள்.

Note. குறிப்பு. எழுவாய் மறைந்துநிற்கும் வாக்கியமும் உண்டு. உ-ம். வேலையை செய்தான்-இந்தவினைமுற்றில் ஆன்விகுதி, உயர்திணை, ஆண்பால், படர்க்கைஇடம் ஒருமை எண் இவற்றைக்காட்டலால் ஒருவன் என்பது இதன் எழுவாய்என்று தெரிகிறது. பயனிலை பெயர்ச்சொல்லாகவும், வினாவாகவும் கூட இருக்கும். உ-ம். அமைச்சன் இவன்,

அமைச்சன் எவன். இவற்றில், முறையே, இவன், எவன் என்பன பயனிலைகளாம். இப்படியிருக்க, இருக்கிறுன் என்பது இவ்விரண்டிடத்திலும் மறைந்திருக்கிறது எனச்சொல்வதும் உண்டு.

Divisions of sentence. வாக்கிய பிரிவுகள். வாக்கியமானது, தனிநிலை, தொடர்நிலை, இடைப்பிறவரலாய் வரும் வாக்கியம் என மூவகைப்படும்.

2. Simple sentence. தனிநிலை வாக்கியம் என்பது தனித்து நிற்கும் ஒரு வாக்கியமாம். உதாரணம். அவன் தானம்செய்தான்; குதிரை ஓடிற்று.

3. Compound sentence. தொடர்நிலை வாக்கியம் என்பது, வாக்கியங்கள் ஒன்றேடொன்று சேர்ந்தாயினும், இரண்டு மூன்று எழுவாய்கள் ஒருபயனிலையைக் கொண்டாயினும் அல்லது ஒரு எழுவாய் பலபயனிலையைக் கொண்டாயினும் வரும் வாக்கியத் தொடர்பாம். உ-ம். நான்வந்தேன் ஆனல் நீ பார்க்கவில்லை; இராயரும் அப்பாஜியும் வந்தார்கள்; நீதியதிபன் வழக்கை விசாரித்துத் தீர்ப்புகொடுத்தான்.

4. Complex sentence. இடைப்பிறவரலாய் வரும் வாக்கியம் என்பது, ஒரு முதனிலை வாக்கியத்தையும், இதைத்தழுவி, என்று என்பதனல் பிரிக்கப்பட்டு வருகிற ஒன்றும் பலவுமான துணைநிலை வாக்கியங்களையும் உடைய, அடைவாக்கியத் தொடர்பாம். உ-ம். இம்மந்திரி, கௌரவ பட்டங்களையுடைய அடுத்தநாட்டதிபதி வந்திருக்கிறுர் என்று தன் அரசனுக்குத் தெரிவித்தார். இதில் மந்திரி தெரிவித்தார் என்பது முதனிலை வாக்கியம். அதிபதி வந்திருக்கிறுர் என்பது துணைநிலை வாக்கியம்.

கௌரவ பட்டங்களையுடைய என்பது. அடைமொழி.

(*a*) Principal sentence. முதனிலை வாக்கியம் என்பது, இடைப்பிற வரலாய் வரும் வாக்கியத்திலிருக்கும் தலைமைவாக்கியமாம். உ-ம். மேல் 4-வது, விதியிற்காண்க.

(*b*) Subordinate sentence. துணைநிலை வாக்கியம் என்பது, முதனிலை வாக்கியத்தைத் தழுவிவரும் மற்றோர் வாக்கியமாம். உ-ம். மேல் 4-வது, விதியிற்காண்க. இத்துணை நிலைவாக்கியம் வாக்கிய உறுப்பு எனவும்படும். அன்றியும் இது பெயர்வாக்கியம், பெயருரிவாக்கியம், வினையுரிவாக்கியம் என மூவகைப்படும். இவற்றுள்;

(*c*) Noun sentence. பெயர்வாக்கியம் என்பது, பெயர்ச்சொல்லின் தன்மையைப் பெற்று வரும் வாக்கியமாம். இது, பெயர்ச்சொல்லைப் போல, வாக்கியத்தில் எழுவாயாகவும், செயப்படுபொருளாகவும் வரும். உ-ம். அவன் **சரியான தீர்ப்பு கொடுக்கவில்லை என்பது** பளிங்குபோல் விளங்குகிறது. நாம், **கடவுளை வணங்கவேண்டுமென்பதை** சொப்பனத்திலும் மறக்கக்கூடாது. இவற்றுள் வேற்றெழுத்தால் அச்சிடப்பட்டிருப்பவை, முறையே எழுவாயும் செயப்படுபொருளுமா யிருக்கின்றன.

(*d*) Adjective sentence. பெயருரி வாக்கியம் என்பது, பெயரைத்தொடர்ந்து வரும்போது, பண்புச்சொல்லுக்குச் சமானமாகிய ஒரு சொற்றொடராயும், பிரிக்கப்படும்பொழுது, வாக்கியமாகவும் வரும் சொற்றொகுதியாம். உ-ம். அவன் **யாவருக்கும் நன்மைசெய்கிற** மனிதன் ஆதலால் எல்லோரும் அவனை விரும்புகிறார்கள். இதில் வேற்றெழுத்

தால் அச்சிடப்பட்டிருப்பது நல்ல என்னும் பண்பு ச்சொல்லுக்குச் சமான மானது. இதைப்பிரித்துச் சொல்லின், அவன் யாவருக்கும் **நன்மைசெய்கிறவன்** ஆதலால் எல்லோரும் விரும்புகின்றனர் என வாக்கியம் ஆகிறது.

(*e*) Adverbial sentence. வினையுரி வாக்கியம் என்பது வினைமுதலியவற்றைத் தொடர்ந்து வரும்போது, வினையுரிச் சொல்லுக்குச் சமானமாகிய சொற்றொடராயும், வாக்கியமாயும் வரும் சொற்றொகுதியாம் உ-ம். நீ **வாசிப்பதற்காக** புத்தகம் கொடுப்பேன்; நீ **வாசிக்கவேண்டும் என்று** புத்தகம் கொடுப்பேன். இதில் வேற்றெழுத்தால் காணப்படும், சொற்றொடரும், வாக்கியமும், புத்திமான் வணக்கமாய் நடந்துகொள்வான் என்பதிலுள்ள, வணக்கமாய் என்னும் வினையுரிக்குச் சமமானவை.

(*f*) Phrase. சொற்றொடர் என்பது பயனிலையின்றி வரும் பதத் தொடர்ச்சியாம். உ-ம். நல்லமனிதனுடைய.

(*g*) Clause. வாக்கிய உறுப்பு என்பது ஒரு முதனிலைவாக்கியத்தைத் தழுவிவரும் வாக்கியமாம் உ-ம். நீ வரவேண்டும் என்று அவன்சொன்னான். இதில் நீ வரவேண்டும் என்பது வாக்கிய உறுப்பு. இதை 4-வது (*b*) இல் காண்க.

(குறிப்பு.) வாக்கியங்களின் பொருளை உணர்தற்கு, அவாய்நிலை, அண்மை, தகுதி, கருத்துணர்ச்சி, ஆற்றலுணர்ச்சி முதலியன ஆவசியமாம்.

1. அவாய் நிலையாவது, ஒருவாக்கியத்தில் எந்தச் சொல்லுக்கு எந்தச்சொல் அவசியமானதாயிருக்கிறதோ அதை அந்தச்சொல் அவாவிநிற்றலாம். உ-ம். பசுவைக்கொண்டுவா என்கையில், கொண்டுவா என்பதற்குப் பசு என்பதும்,

பசுவைஎன்பதற்கு கொண்டுவா என்பதும் ஒன்றுக்கொன்று அவசியமாயிருத்தலால் இதற்கு அவாய்நிலை என்னப்படும்.

2. அண்மை என்பது, வாக்கியத்திலிருக்கும் சொற்களை, தொடர்ச்சியாக காலதாமசம் இன்றிச்சொல்வதாம். அவ்வாறல்லாமல் சொல்லின் அவ்வாக்கியத்தின் பொருளுணர்ச்சி உண்டாகாது. எப்படிஎனில்? அவ்விருக்ஷத்தில் நூறு காய்கள் இருக்கின்றன : என்னும், வாக்கியத்தில் இருக்கிற வார்த்தைகளை ஒவ்வொரு சாமத்துக்கு ஒவ்வொன்ருகச்சொல்லின் அவ்வாக்கியத்தினுடைய முழுக்கருத்தும் இன்னதென்று தெரிதல்கூடாது. ஆகையால் இவ்வாறு சொல்லாமல் தொடர்ச்சியாக அப்போதே தெரிவிப்பது அண்மையாம். இவ்வாறன்றியும், கல்லுண்டான் நெருப்புடையது, மணிபத்திரன் என சொற்களை முன்பின்னுகமாற்றி, வாக்கியத்துக்கு யாதொரு கருத்தும் உண்டாகாதபடி சொற்களைச்சேர்த்தல் அண்மையாகாது எனவும்; கல்நெருப்புடையது, உண்டான் மணிபத்திரன் எனக் கிரமப்படுத்திக்கூறல் அண்மையாம் எனவும்அறிக.

3. தகுதியாவது, வாக்கியத்துள்ள சொற்கள் ஒன்ருெடொன்று பொருள்பொருத்த முண்டாயிருக்கத்தொடர்தல் உ-ம். நீரால்நனை. இதில் நனைத்தற்கு நீர்கருவி யாதலால் இது தகுதியாம். நெருப்பாலே நனைஎனின், நனைந்தற்கு நெருப்பு கருவியன்று ஆதலின் இது தகுதியன்ரும்.

4. கருத்துணர்ச்சியாவது, வாக்கியத்துள்ள சொற்பொருளை சமயத்தைக்கண்டு அறிதல். பசித்தோனுகிய ஒருவன், மாகொண்டுவா என்பானுனல், தின்னுமாவென்றும், ஒருவன் தலைக்கவச முதலியவற்றைத் தரித்துக்கொண்டு வேலையாளைப்பார்த்து மாகொண்டுவா என்பானுயின், குதிரையென்றும் சமயத்தைநோக்கிப் பொருள் அறிதலாம்.

5. ஆற்றலுணர்ச்சியாவது, விரலழகிது எனில், விரல் எனுஞ்சொல் நகத்தையுணர்த்தாமல், விரலையே காட்டுவதால் இது அச்சொல்லின்கணுள்ள சத்தியென அறிதலாம்.

5. Two or more nominatives. இரண்டு அல்லது பல எழுவாய்கள். உயர்திணையில் பல எழுவாய்கள் அடுத்துவரின், பயனிலை பலர்பாலாகவும், அஃறிணை எழுவாய்கள் அடுத்துவரின் பயனிலை பலவின் பாலாகவும் இருக்கும்.

உ-ம். இராஜனும் அவன் மனைவியும் மந்திரிகளும் வந்தார்கள்; மிருகங்களும் பக்ஷிகளும் உறங்கின; இலைகளும் கனிகளும் உதிர்ந்தன.

6. Subjects of different Classes. உயர்திணை அஃறிணை எழுவாய்கள். உயர்திணை எழுவாயுடன் அஃறிணை எழுவாய் அடுத்துவந்தால் அவற்றுள் ஒன்று ஒடு அல்லது உடன் என்பதைப்பெற்று ஒரே பயனிலையையும், அப்படிப் பெறாவிடின் உம் என்பதைப்பெற்று வெவ்வேறு பயனிலையையும் கொள்ளும். உ-ம். பசுவோடு இடையன்வந்தான். பசுவும் வந்தது இடையனும் வந்தான்.

(குறிப்பு.) இங்கு முதல் உதாரணத்தில் இருப்பதுபோல் உருபேற்காத எழுவாய் என்னதிணையோ பயனிலை அத்திணையாகும்.

7. Subjects of different persons. இடப்பெயர் எழுவாயாதல்.

தன்மையிடத்து எழுவாயோடு முன்னிலை, படர்க்கையிடத்து எழுவாய்கள் தனித்தாயினும் தொடர்ந்தாயினும்வரின், பயனிலை தன்மை யிடத்ததாகும். உ-ம். நானும் நீயும் ஓடினோம்; நானும் அவனும் ஓடினோம்; நானும் நீயும் அவனும் ஓடினோம்.

முன்னிலையிடத்து எழுவாய்... படர்க்கையிடத்து எழுவாய் அடுத்துவரின் பயனிலை முன்னிலையிடத்ததாகும். உ-ம். நீயும் அவனும முயன்றீர்கள்.

(குறிப்பு.) ஒரு எழுவாய் பல பயனிலையைக் கொள்ளும் பக்ஷத்தில் கடைசிவினை தவிர மற்றவை வினையெச்சமாகும். உ-ம். மன்னன் அவ்வழக்கை நன்றாய் விசாரித்து, தீர்ப்பு எழுதி வாசித்துக் காண்பித்தான். பல பயனிலைகளாவன- விசாரித்தான், எழுதினான், வாசித்தான்.

8. Adjectives to be filled up. கொடுத்த வாக்கியங்களிலுள்ளபெயர்ச்சொற்களோடு, தகுந்த பண்புச்சொற்களைச் சேர்க்கும்வகை.

1. —மேகம் புகையைப்போ லிருக்கின்றது.

2. இரும்புக்கு—பொன் என்றுபெயர்.

3. காய்ந்த இரும்பு—நிறத்தை அடைகிறது.

மேல் உதாரணங்களின் விடை. 1. வெண், 2. கரும், 3. செம்.

Exercise. மேற்காட்டிய விதமாக, அடியில் கோடிட்டு இருக்கும் இடங்களில், தகுந்த பண்புச்சொற்களைச்சேர்க்க.

1. காக்கை—நிறமுடைய தென்பது சிறுவர்களுமறிந்ததன்றோ?

2. இது ஆழமுள்ள கிணறாகையின், இதில் தண்ணீர்மொள்ள—கயறு வேண்டும்.

3. 100000-பேரடங்கிய சேனையானது—சேனை என்னப்படும்.

4. நினைக்கும் காரியமனைத்தும் கைகூடுவது—காலத்தின் இலக்ஷணம்.

5. சமுத்திரத்தில் கப்பல்கள்—இடத்தில் தான் ஓடக்கூடும்.

6. விளங்கனி—வடிவுள்ளதென்பது — பிள்ளைகட்கும் தெரியும்.

7. பஞ்சலோகங்களில்—நிறமுடையதுவெள்ளி.

8. சூரியன்—உருவமுடைத்தாயிருந்தும் — தூரத்திலிருப்பதால் சிறிதாகக் காணப்படுகிறது.

9. இவன் துர்ப்போதனையால் அவன்—குணம் மாறுபட்டிருக்கிறது.

10. கெம்பு என்பது விலையுயர்ந்த—நிறக்கல்.

9. Adverbs to be filled up. தகுந்த வினையுரிச்சொற்களைச் சேர்க்கும்விதம்.

1. மிருகங்களுள் அதிக—ஓடுவது குதிரை.

2. அவன்—வாசிக்கிறபடியால் அது எனக்குக் கேட்கவில்லை.

3. வீட்டின் கூரைகள் — இறக்கப்பட்டிருக்கின்றன.

விடை. 1. வேகமாய், 2. மெதுவாக, 3. சாய்ப்பாக.

Exercise. அடியில் கோடிட்டு இருக்கும் இடங்களில் மேற்காட்டியபடி தகுந்த வினையுரிச்சொற்களைச்சேர்த்து எழுதுக.

1. ஆடுமாடுகள் பசும்புல்லைக்கண்டால்—மேயும்.

2. நிர்ஜனமான அக்காட்டில் சிறுவன் — திரிந்தான்.

3. சிறுவர்கள் தங்கள் பாடங்களை — படித்தால் கல்வியில்—தேறுவார்கள்.

4. அக்காரியத்தில் அவன்—பிரவேசிக்கவில்லை.

5. புத்தியீனச் சிறுவர்கள் தங்கள் காலத்தை—கழிப்பார்கள்.

6. அரசனால் கொடுக்கப்பட்ட தனத்தை — ஏற்றுக்கொண்டான்.

7. அச்சிறுவன் மிகவும்—பேசுவதைக்கேட்க சந்தோஷம் உண்டாகிறது.

8. தாய் தந்தையரிடத்தில் — நடக்கும் பிள்ளையை யாவரும்—ஏற்றுக்கொள்வார்கள்.

9. பாணங்களை எதிரியின்மேல்—விட்டான்.

10. இரதத்தை எதிரியின்சயிந்நியத்துக்கு—நடத்தினான்.

10. Nouns or Pronouns to be filled up. தகுந்த பெயர்ச்சொல் அல்லது இடப்பெயர்களைச்சேர்க்கும் விதம்.

1. மலையினின்று விழும்ஜலம்—என்னப்படும்.

2. ஒருவன்—எண்ணும் எல்லா—உம்முடிப்பது அரிது.

3. ஆற்றில்—வருவதற்குமுன்—கோலிவைத்தல் வேண்டும்.

விடை. 1. அருவி. 2. தான், கருமம். 3. வெள்ளம், அணை.

Exercise. பின்வரும்வாக்கியங்களுள் கோடிட்டு இருக்கும் இடங்களில் தகுந்த பெயர் அல்லது இடப்பெயர்களைச் சேர்க்க.

1. அவன்முகம் சூரிய—போல்ஜொலித்தது.

2. அக்காட்டில்— — — முதலியதுட்ட மிருகங்கள் வாசஞ்செய்கின்றன.

3. அந்தநக்ஷத்திரத்தை — ஆல்பார்த்தாலொழி யத் தெரியாது.

4. அரசன்—வீற்றிருக்கும்போது—மந்திரியோடு இராச்சிய—குறித்து ஆலோசிப்பான்.

5. அன்று இரவில்— —வேடிக்கைபார்க்கப போனீர்களன்றோ.

6. நான் என்னசொல்லியும் அவன் — இரங்கவில்லை,

7. இன்பம் வரினும்—வரினும் சலியாத—உடையோன்.

8. ஒருவன் நமக்குத் தீமைசெய்யினும்—நன்மையே செய்யவேண்டும்.

9. நானும்—உம்—உம் அக்காரியத்தை முடித்தோம்.

10. ஒருவன் அகத்தின் அழகு—விளங்கும்.

11. Verbs to be filled up. வினைச்சொற்களைச் சேர்க்கும்விதம்.

1. வண்டியின் சக்கரம் கிறுகிறென்று—

2. அவனுக்கு இரு வருஷத்திற்குள் பேசும்திறம்—. கங்கை இமயமலையிற் பிறந்து தென்கிழக்காய்— வங்காளக்குடாவில்—

விடை. 1. சுழல்கிறது, 2. உண்டாயிற்று. 3. ஓடி, விழுகிறது.

Exercise. பின்வரும் வாக்கியங்களில், தகுந்த வினைச்சொற்களைச் சேர்க்க.

1. அக்கல்விச்சாலையில் நானும் அவனும்—

2. இமயமலை ஆகாயத்தை—வளர்ந்திருக்கின்றது

3. கங்கையோடு—உபநதிகள் எங்கிருந்து—?

4. கங்கையினின்று—கிளைநதிகள் எந்த சமுத்திரத்தில்—?

5. நீர்—கரேவார்த்தை அவன்மனதை—.

6. மனுச்சக்கரவர்த்தி நீதி—அரசாக்ஷி—.

7. உபாத்தியாயர்—கேள்விக்குச்சரியான உத்தரம்—.

8. அவன் வில்லினின்றும்—அம்பு சுமார் அரைகுரோசதூரம்—.

9. அக்கட்டடத்தைக்கட்டி, தான் வசிக்காமல் குடிக்கூலிக்கு—.

10. ஆகாயத்தினின்று—மழைத்துளி ஒன்ருய்—ஆருக—பள்ளநிலங்களின் வழியாக—கடலில் விழுகிறது.

12. Words to form sentences without inserting any new words. கொடுத்த பதங்களோடு வேறு பதங்களைச் சேர்க்காமல், வாக்கியமாக்கும் வகை. உ-ம். கல், மாணிக்கம், எல்லாம், ஆமோ, கல் என்பவற்றை, கல்லெல்லா மாணிக்கக் கல்லாமோ என்றபடி நிறுத்தவாக்கிய மாகிறது.

Exercise. மேற்காட்டியபடி அடியில் வருபவைகளை வாக்கிய மாக்குக.

1. காரணத்தால், யாது, கட்டளைக்கு, இராஜ, ஒப்பிடுகிருர், வேதத்தை.

2. தாகத்திற்கு, பேர், கிடையாது, தண்ணீர், கங்காபவானி.

3. அழகு, விலைமகட்கு, மினுக்குதல், மேனி, தன்.

4. பரிபாலித்தார், எஜமானர், பூர்வம், அறிந்து, சிரமத்தை, வேலையாட்கள்.

5. இக்காலத்தில், வழியை, பொருள், அறிந்திருக்கிறார், சிறுபிள்ளைகளும், தேடும்.

13. Words to form sentences by adding appropriate terms. கொடுத்தவார்த்தைகளோடு தகுந்த சொற்களைச் சேர்த்து வாக்கியமாக்கும் வகை. 1. நீர், பால், அன்னம் ஆகிய இப்பதங்களோடு சிலபதங்களைச் சேர்க்க வாக்கியமாகும். உ-ம்.

அன்னமானது, நீர்கலந்த பாலில், நீரைப்பிரித்துப் பாலைக்குடிக்கும்.

Exercise. மேற்காட்டியபடி அடியில் கொடுத்திருக்கும் பதங்களோடு தகுந்தவற்றைச் சேர்த்து வாக்கியமாக்குக.

1. கொவ்வை, குமிழ், இதழ், நாசி. 2. மழை, மின்னல், உற்பாதம், குமுறல். 3. கயல் அமை தோள், கண். 4. சந்தனம், முள், மரம். 5. கஜம், அரசன், பதாதி, சைந்நியம். 6. சூரியன், ஆம்பல், சந்திரன், தாமரை. 7. தேனீ, சாக்ஷி, ஈட்டும். 8. ஜலம், கானல், பிரமை, அலைகத்தேர். 9. குணம், தக்கோர், கொடை, நலம், தண்ணீர், நிலம். 10. சர்க்கரை, தேன், மாரி.

14. Grouping up simple sentences. பல தனிநிலைவாக்கியங்களை ஒன்றாய்ச்சேர்க்கும் வகை.

1. பின் இராவணனுதியரால் உலகம் நடுக்குற்றது, அவர்களை சிக்ஷிப்பதற்காக கடவுள் அவதரித்தனர், அவதரித்தகாரியம் நிறைவேறிற்று. தேவர்கள் முதலிய யாவரும் சந்தோஷ மடைந்தனர்.

(விடை) பின் இராவணாதியரால் உலகம் நடுக்குற்றபொழுது அவர்களை சிக்ஷிப்பதற்காக கடவுள அவதரித்து அக்காரியம் நிறைவேறியதால் தேவர்கள்முதலிய யாவரும் சந்தோஷ மடைந்தனர்.

Exercise. பின்வரும் வாக்கியங்களை மேற்காட்டியபடி ஒன்றுகச்சேர்க்க.

1. அரசன் கொலுவுக்கு ஒரு சந்நியாசி வந்தார், தன்கையில் மயில்விசிறி வைத்திருந்தார், அரசனைப்பார்த்து இதனுல் உண்டாகும் காற்றைப்பாரும் என்று விசிறினர்.

2. இதைப் புகழேந்தி கேள்விப்பட்டார். இவன் சுபாவத்தைக்குறித்து நெடுமூச்செறிந்தார். நம்முடையபாடல் இவன் செவிக்கு அருவருப்பாயிருக்கக் காரண மென்னென்று ஆலோசித்தார்.

3. உமக்குச் சாஸ்திரங்கள் தெரியுமோ வென்ருன், சகலசாஸ்திரங்களும் தெரியும் என்ருர், அவற்றின் பெயர்களில் சிலவற்றைக்கேட்க விரும்புகிறேன் என்ருன்.

15. To change active verb into passive and passive into active. செய்வினையை செயப்பாட்டுவினையாகவும், செயப்பாட்டுவினையை செய்வினையாகவும் மாற்றும் வகை.

குறிப்பு. செய்வினையில் இரண்டாம்வேற்றுமையில் இருக்கும்பெயர், செயப்பாட்டுவினையில் முதல் வேற்றுமையில் நின்று படு என்னும் துணைவினையால் ஆகும்முற்றுக்குக் கர்த்தாவாகும். உ-ம். இந்நால்வரும் மலையைக்குடைந்து வழியை உண்டாக்கினர். இந்தச் செய்வினை செயப்பாட்டு வினையாகும்போது, இந்நால்வராலும் மலை குடையப்பட்டு வழி உண்டாக்கப்பட்டது என்ருகிறது. இரத்தினம் மாணிக்கத்

தால் அடிக்கப்பட்டான். என்பது செயப்பாட்டுவினை. இது செய்வினையாகும்போது மாணிக்கம் இரத்தினத்தை அடித்தான் என்றுகிறது.

Exercise. பின்வரும் செய்வினைகளை மேற்காட்டியபடி செயப்பாட்டு வினைகளாகவும், செயப்பாட்டு வினைகளை செய்வினைகளாகவும் மாற்றுக.

1. Active. திக்குமயக்குள்ள விண்வீழ்கொள்ளியை உவமையிட்டான்.

2. அக்குழிகளை தண்ணீரால் நிறைக்கிறார்கள்.

3. அவனுடைய சாமர்த்தியத்தை பரீக்ஷித்தான்,

4. அநேக வருஷங்களாக இவ்வாலயத்தைக் கட்டுகிறார்.

5. இவ்விஷயத்தில் அரசனைக் குறை கூறுகிறார்கள்.

6. யந்திரபலத்தினும் அறிவின்பலனை வியந்திருக்கிறார்கள்.

7. அவன் நல்லோர் நடைகளை அநுசரித்தான்.

1. Passive. என்னுற் பற்பலவிநோதங்கள் காணப்பட்டன.

2. நிகாயாஎன்பவன் தன் குற்றத்தினிமித்தம் தண்டிக்கப்பட்டான்.

3. இவ்வாபரணங்கள் நல்லவேலைக்காரனுல் செய்யப்பட்டன.

4. அத்தேசத்தில் இவ்வரசனுடைய கொடி நாட்டப்பட்டிருக்கின்றது.

5. சுரங்கங்களிலிருந்து உலோகங்கள் வெட்டியெடுக்கப் படுகின்றன.

16. To re-write sentences according to the directions given. வாக்கியங்களை, பொருள் பேதப்படாமல், ஆங்காங்கு குறித்தவிதப்படி பெயர்த்தெழுதும் வகை.

குறிப்பு. இப்படிப் பெயர்த்தெழுதுகையில் இருக்கிற பதங்களுள் ஒன்றிரண்டை மாற்றுதலும், இல்லாதவற்றைச் சேர்த்தலும் பொருந்தும்.

1. நாம் கண்டு பேசினமனிதன் இவன். (கண்டு என்பதற்குப் பதிலாக கண்ட என்பதை உபயோகிக்க.) விடை. நாம் பேசும்படி கண்டமனிதன் இவன்.

2. இச்சண்டையில் அவன் ஜெயமடைந்தான். (அவன் என்பதை அவனுக்கு என்று மாற்றுக.) விடை. இச்சண்டையில் அவனுக்கு ஜெயம் உண்டாயிற்று.

3. இந்நதி அதிகவேகமாய் ஓடுகிறது. (ஓடுகிறது என்பதை ஓட்டம் என மாற்றுக.) விடை. இந்நதியின் ஓட்டம் அதிகவேகமானது.

Exercise. பின்வருபவைகளை ஆங்காங்கு குறித்தபடி பொருள்பேதப்படாமல் பெயர்த்தெழுதுக.

1. பிரமபுத்திரா இமயமலையின் வடசாரலிற் பிறந்து கடலில் விழுகிறது. (பிறந்து என்பதை பிறக்கிற என மாற்றுக.)

2. வண்டுகள் புஷ்பங்களிலுள்ள தேனை கிரகிக்கின்றன. (கிரகிக்கின்றன என்பதை கிரகிக்கப்படுகிறது என்றும் தேனை என்பதை தேன் எனவும் மாற்றுக.)

3. பெரியோர், தமக்குக் கெடுதிசெய்தவர்க்கும் நன்மை செய்வர். (செய்வர் என்பதைச் செய்யார் என மாற்றுக.)

4. விறகு தலையனுக்கு வந்த நோய் விறகாலடித்தால் போகும். (வந்த என்பதைவரின் என மாற்றுக.)

5. சமுத்திரம் சந்திரன் வரவைக்கண்டு சந்தோஷிக்கும். (சந்தோஷிக்கும் என்பதை சந்தோஷம் எனமாற்றுக.

6. தாய்வீடாகிய சமுத்திரம் ஒரு சிகாமணியை அனுப்பியது போலிருந்தது. (சமுத்திரம் என்பதை சமுத்திரத்தால் என மாற்றுக.)

7. கடலின் நடுவிருக்கிற மந்தரகிரியைப் போலப் பிரகாசித்தார். (மந்தர கிரியை என்பதை கிரிக்கு என மாற்றுக.)

8. அடியேனுக்கு உண்டாயிருக்கிற சக்தியெல்லாம் தேவரீர் தந்ததே. (உண்டாயிருக்கிற என்பதை உடைத்தாயிருக்கிற என்றும், தந்ததே என்பதைப் பெற்றதே என்றும் மாற்றுக.)

9. நம்முடைய பாடல் இவன்செவிக்கு நாராசம் காய்ச்சிவிட்டதைப்போலிருக்கின்றது. (நம்முடைய என்பதை நாம் என்று மாற்றுக.)

10. அத்தபோதனர் பற்பல கதைகளை இயம்பி அவர்கள் மகிழச்செய்தனர். (இயம்பி என்பதை இயம்பியதால் என்றும், செய்தனர் என்பதை எய்தினர் எனவும் மாற்றுக.

17. Expansion of words into phrases or sentences. வார்த்தைகளை பொருள் பேதப்படாமல், சொற்றொடர் அல்லது வாக்கியங்களாக விவரிக்கும்வகை.

1. அவர்கள் வழக்கு இன்னும் இழுப்பில் இருக்கிறது.

2. இக்கட்டடம் நாம் பார்த்த வெல்லாவற்றுள்ளும் கிலம்.

3. அந்த அமர்க்களமெங்கும் செந்நீரின் வெள்ளம்.

விடை. 1 அவர்கள் வழக்குக்கு இன்னும் தீர்ப்பு கிடைக்காமல் இருக்கிறது.

2. நாம் பார்த்த எல்லா கட்டடங்களுள்ளும் இது கட்டப்பட்டு நெடுநாளாயிற்று.

3. அந்த அமர்க்களத்தில் அனேகர் பிராணசேத மடைந்தனர்.

Exercise. பின்வருபவைகளுள் வேற்றெழுத்தால் அச்சிட்டிருப்பவைகளை மேற்காட்டியபடி சொற்றொடர் அல்லது வாக்கியங்களாக விவரிக்க.

1. இச்சிறுவன் வாசகத்தை நன்றாக வாசிக்கிறான்.

2. இம்மாணுக்கன் புத்தி கூர்மையானது.

3. அவன் இவ்விஷயத்தில் தருடாய் இருக்கிறான்.

4. அக்குதிரைகள் எல்லாவற்றிலும் இது சிறந்தது.

5. அவன் போர்க்களத்தில் தன் எதிரியின் நேர் நின்று நாணேறிட்டான்.

6. இவ்வாலயத்தில் இன்று துவஜா ரோகணம்.

7. அவ்வதிகாரி இவன் கையில் இருக்கிறான்.

8. அந்தப்பிரதிமை என் கண்ணில் இருக்கிறது.

9. அவ்வரசன் செங்கோல் கோணிற்று.

10. அவன்சொன்னது இவன்மனதில் தைத்தது.

11. அக்குடிகள் கொடுங்கோல் மன்னனாட்டில் வசிக்கிறார்கள்.

12. இந்தஜில்லாவில் அவனுக்கு சாய்கால்உண்டு.

குறிப்பு. மேல் அப்பியாசத்துக்கு விடை கிரமப்படி காட்டி யிருக்கிறது.

1. பிழையில்லாமல் திருத்தமாக. 2. விஷயங்களை நுணுக்கமா யறியத்தக்கது. 3. இன்னதென்று விசாரித்தறியாமல். 4. நன்றய் ஓடக்கூடியது. 5. சண்டைசெய்ய ஆரம்பித்தான். 6. திருவிழா ஆரம்பமாயிற்று. 7. சொல்லுகிறபடி கேட்கிறவனுக. 8. அதிக வியாபகமுண்டாய். 9. செவ்வையாக ஆளவில்லை. 10. வருத்தத்தையுண்டுபண்ணிற்று. 11. பிரஜைகளை இம்சைபடுத்துகிற. 12. தன்பிராயத்தனம் அல்லது அதிகாரத்தைச் செலுத்த சக்தி.

18. Expansion of phrases into sentences. முழுக்கருத்தைத் தராத சொற்றொடரை வாக்கியமாக்கும்விதம்.

1. தேகமுயற்சி உடலை பலவீனப் படுத்துவதற்குப் பதிலாக வலிவைத் தருகின்றது. விடை தேகமுயற்சி உடலுக்கு வலிவைத்தருகின்றது, ஆனல், பலவீனப்படுத்துகிறதில்லை.

2. அவன் தன் குற்றத்திற்காக தண்டிக்கப் பட்டான். (விடை.) அவன் குற்றஞ்செய்தான் ஆகையால் தண்டிக்கப்பட்டான்.

3. அவன் உத்தியோகசாலை உனக்குத்தெரியுமா? (விடை) அவன் இன்ன இடத்தில் உத்தியோகமாய் இருக்கிறன் என்று உனக்குத் தெரியுமா?

Exercise. அடியில் வரும் வாக்கியங்களுள் வேற்றெழுத்தால் அச்சிட்டிருப்பவைகளை பொருள் பேதப்படாமல் மேற்காட்டி யிருக்கிறபடி வாக்கியங்களாக மாற்றுக.

1. வேலையாட்களுக்குப் பணம்கொடுப்பதற்குப் பதிலாக தானியத்தைக் கொடுத்தான்.

2. அவனுக்குப் பரிசுகிடைக்குமென்றதைரியம் இருந்தது.

3. அவன் சாமர்த்தியம் ஒருவர்க்கும் தெரியாது.

4. அவன் க்ஷேமத்தைக்குறித்து விசாரித்தேன்.

5. என் வாசஸ்தானம் உனக்குத் தெரியுமா?

6. குணம் தன்தன் குலத்தளவாக இருக்கும்.

7. மரத்தின்தன்மை அதன்கனியால் விளங்கும்.

8. நிழலின் அருமை வெயிலில் நின்றால் தெரியும்.

19. Single word in place of a phrase or sentence. ஒரு சொற்றொடர் அல்லது வாக்கியத்துக்குப் பதிலாக ஒரு வார்த்தையை உபயோகிக்கும் விதம்.

1. இந்த வேவுகாரன் மெய்போற் பொய் பேசுவதிற் றேர்ந்தவன்.

2. அவ்விடையன் உதைகாற்பசுவை வைத்திருக்கிறான்.

3. நீ எப்போதாவது சூரிய சந்திரரைச் சூழ்ந்திருக்கும் வட்டத்தைக் கவனித்ததுண்டா? (உத்தரம்.) 1-சித்திரம், 2-சுதை, 3-பரிவேடம்.

Exercise. அடியில்வரும் வாக்கியங்களுள் வேற்றெழுத்தால் அச்சிட்டிருக்கும் சொற்றொடர் அல்லது வாக்கியங்களுக்குப் பதிலாக, மேற்காட்டியபடி ஒவ்வொருவார்த்தையை உபயோகிக்க.

1. தென்றலைத்தோகப்பெற்றவன் மல்லிகை, முதலியமலர்களை கணைகளாக உடைத்தா யிருக்கிறான்.

2. இக்கவிஞன், பல பாட்டுகள்கூடி பொருள்தரும் செய்யுளை இயற்றினன்.

3. இவ்வைத்தியன், மூர்ச்சைதீர்த்து உயிர்தருமருந்தை வைத்துக்கொண்டிருக்கிறான்.

4. இவ்வுத்தியோகம் செய்பவன் கைம்பெண் பெற்றபிள்ளை என்றுகேள்வி.

5. அவனுக்கு, காயம் பட்டதனால் உண்டான இரணத்தைத் தீர்கதுமருந்தை உபயோகித்தான்.

உத்தரம். 1. மன்மதன். 2. குளகம். 3. சஞ்சீவகரணி. 4. கோளகன். 5. சமானகரணி.

Essays. பின்வரும் விஷயங்களைப்பற்றி வியாஸம் எழுதுக. கடவுள், கல்வி, உண்மை, நற்குணம், காலத்தின்உயர்வு, மழை, சூரியன்.

(குறிப்பு.) எந்தவிஷயத்தைக்குறித்தும் எழுத ஆரம்பிக்கும்போதே, முதலில் அவ்விஷயத்தின் பெயரும் (கூடுமானால்) அப்பெயரிடப்பட்டதின் காரணமும் அதற்குத்தக்க நியாயமும் பிறகு அவ்விஷயத்தின் தன்மையும் அதன் பிரிவுகளையும், அதற்குரிய நியாயங்களை காரணகாரிய மாகவும், அதன்பயனையும் எடுத்த விஷயத்தைவிட்டு வேறொன்றைச் சொல்லாமலும், புத்தி, அனுபவ முதலியவற்றிற்கு மாறுபடாமலும் சொல்லவேண்டும்.

ERRATA.

பிழைத்திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
6	13	இரங்க்ல்	இரங்கல்
7	11	போர்செய்தல்	பொருந்தச்செய்தல்
13	17	சுற்றந்தாழல்	சுற்றந்தழால்
14	2	குதூகுலம்	குதூகலம்
16	19	ஜடாமகுடம்	ஜடாமகுடம்
17	16	எதிலாரார	ஏதிலாரார
26	19	சோர்புனன்முழ்கி	சோர்புனன்மூழ்கி
30	9	குவலய	குவலயம்
53	24	முவகைப்படும்	மூவகைப்படும்
57	11	Versus	Verses
59	7	ஐவேஜு	ஐவேஜு
71	4	இருக்கிறார்	இருக்கிறார்கள்

(குறிப்பு.) உலகவழக்குப் பதங்களுள் சில இதனுள் அடங்கும். ஒற்றெழுத்துக்குப் புள்ளியில்லாவிட்டாலும் முன்பின் சந்தர்ப்பத்தால் தெரியுமாகையின் அவற்றை எடுத்துக் காட்டவில்லை. திரவியம் என்பது திரவ்விய மெனவும், கயிறு கயறு எனவும், சாய்ங்கால மென்பது சாயங்காலம், சாயுங்கால மெனவும் வழங்குகின்றன. கார் என்னும் பதம் வழக்கத்தில் காப்பாற்று என்னும்பொருளில் வழங்குகிறது.

Technical Terms used in Tamil Grammar with their English equivalents.

1.	அளபெடை... ...	Prolongation of sound.
2.	குற்றியலுகரம் ...	Abbreviated உ.
3.	ஒருமொழி	Word with single meaning.
4.	பொதுமொழி ...	Ambiguous word.
5.	இயற்சொல் ...	Unequivocal pure Tamil.
6.	திரிசொல் ...	Equivocal pure Tamil.
7.	திசைச்சொல் ...	Provincial words.
8.	இடைச்சொல் ...	Particle.
9.	உரிச்சொல் ...	Qualifying word or adjective.
10.	இடுகுறிப்பெயர் ...	Arbitrary Nouns.
11.	காரணப்பெயர் ...	Appellative Nouns.
12.	முதல் வேற்றுமை.	Nominative case.
13.	2ம் வேற்றுமை ...	Accusative case.
14.	3ம் ஷை	Instrumental Ablative.
15.	4ம் ஷை	Dative case.
16.	5ம் ஷை	Ablative of motion.
17.	6ம் ஷை	Genitive case.
18.	7ம் ஷை	Local ablative case.
19.	8ம் ஷை	Vocative case.
20.	பகுதி...	Root.
21.	விகுதி	Termination.
22.	சாரியை	Increment.
23.	ஏவல்	Imperative.
24.	வியங்கோள் ...	Optative.
25.	வினையெச்சம் ...	Adverbial participle.
26.	பெயரெச்சம் ...	Adjective participle.
27.	எதிர்மறைவினை ...	Negative verb.
28.	உடன்பாட்டுவினை.	Affirmative verb.
29.	குறிப்புவினை ...	Conjugated nouns.
30.	தெரிநிலைவினை ...	Verb indicating difference of time.
31.	செயப்படுபொருள் குன்றியவினை ...	Intransitive verb.
32.	செயப்படுபொருள் குன்றாவினை ...	Transitive verb.

33. தன்வினை ... ... Verb deno ting direct action, Transitive or Intransitive.
34. பிறவினை ... ... Causal verb.
35. இசைநிறை... ... Euphonic Particle.
36. அசைநிலை ... ... Redundant particle.
37. வழுவமைதி ... Anomalies.
38. உருபுமயக்கம் ... Interchange of Casal sings.
39. தொகைநிலை } தொகாநிலை } Elliptical and unelliptical phrases.
40. வேற்றுமைத்தொகை ... Ellipsis of casal sign.
41. ஆகுபெயர் ... ... Synecdoche.
42. மரபு ... ... Prescription.

Technicalities concerning Prosody.

அசை ... ... Metrical syllable.
சீர் ... ... Metrical feet.
தளை... ... ... Connection of feet.
அடி ... ... Line.
தொடை ... ... Consonance.
எதுகைத்தொடை ... Rhyme.
மோனைத்தொடை ... Alliteration.
அணி ... ... Rhetorical embellishment.
மறிநிலை ... ... Inversion.
பொருளணி ... ... Ornament derived from the sense.
அடுக்கு ... ... Repetition.
சித்திரவணி ... ... Various fantastic measures.
உவமையணி... ... ... Comparison.
உருவகவணி... ... ... Figurative language.
வேற்றுமையணி ... ... Antithesis.

LAWS OF TAMIL COMPOSITION.

PART I: SYNTAX.

வாசக இலக்கணம்.

முதலாம் அதிகாரம்.

சொற்றொடர் இலக்கணம்.

இதில்
தமிழ்ப்பாஷையினது வாசகநடைக்கு உரிய
சகல முன்னூல் விதிகளும் வழக்கு ஆதாரமான அநேக
நூதன விதிகளும் இலக்கிய உதாரணங்க
ளுடன் காட்டியிருக்கிறது.

BY

JOHN AREEVANUNDUM PILLAY.

*இணர் ஊழ்த்தும் நாறு மலர் அனையர், கற்றது
உணர விரித்து உரையாதார்.* [குறள்.]

MADRAS:
PRINTED AT THE BRANCH UNITED SCOTTISH PRESS,
BY GRAVES, COOKSON AND CO.
1866.

PREFACE.

THE present treatise, which is only the first part of a projected work on the Laws of Tamil Composition, is occupied exclusively with the Rules of Syntax. It claims to be a *new* book in every respect. It aims to supply a want which, it is believed, has been long felt. Regarding the Tamil language, not simply as one found in a few time-worn books, but as a *living reality*, as one spoken and used by millions of people, the author has not only very carefully considered all the old rules, but has brought out to view several as yet unnoticed principles and usages of the language, which he has now for the first time embodied in new rules and incorporated with many of the old rules which too have been in several instances greatly modified. In the exposition of nearly every important rule, he has endeavoured to lay open the principle underlying it, because in this way a rule is far better appreciated and understood. Great care has been taken in the selection of examples, which comprise some of the choicest specimens of Tamil composition. Thus treated, it is hoped that the subject may prove of real interest and practical value to the student. For further explanation of the plan and arrangement of the book, the reader is referred to the Introduction.

MADRAS:—*July*, 1866.

CONTENTS.

சூத்திரங்களை வாசிக்குமாறு.

இந்நூல் முழுதும் உகர ஈற்று மொழிகளைத் தெளிவு நோக்கிப் பெரும்பாலும் சந்திநீக்கிப் பிரித்து அச்சிடுவித் திருக்கின்றமையால், வாசிப்போர் சந்தியை அனுசரித்துக் கொண்டு,

> ஒன்று நான்கு ஐந்து ஆறு உருபொடு கருவி
> வரும் எனக் கிளரினர் ஈசான தேசிகர்.

என வருவனவற்றை

> ஒன்றுநான் கைந்தா றுருபொடு கருவி
> வருமெனக் கிளரினர் ஈசான தேசிகர்.

என்று சூத்திர இசை கெடுதலின்றிச் சீரை அமைத்து வாசிக்கவும்.

ERRATA.

பக்கம்.	பிழை.	திருத்தம்.
61. சூத்:105 உரை.	பயனிலையானுல்.	பயனிலை வினையானுல்.
144. சூத். 320.	செய்து வினையோடு.	செய்ய வினையோடு.

ABBREVIATIONS.

அவி=அவிரோத உந்தியார்.
அற=அறநெறி.
ஆண்=ஆண்டான் கவி.
இரா or ராம=ராமாயணம்
இராமா=இராமனுசயர் உ [ரை.
ஔ=ஔவைபாடல்.
கதா=கதாமஞ்சரி.
கந்த=கந்தப்புராணம்.
கம்=கம்பன்.
கிருஷ்=கிருஷ்ணன் விடுதூ [து.
குற=குறள்.
கைவல்=கைவல்யநவநீதம்.
கோவிந்=கோவிந்தசதகம்.
சத்=சத்தப்பிரகரணம்.
சாமி=சாமிநாதபிள்ளை.
சிலப்=சிலப்பதிகாரம்.
சீவ=சீவகசிந்தாமணி.
செந்=செந்தமிழ்.
தாய்=தாயுமானுர்.
திருச்=திருச்சதகம்.
திருமு=திருமுருகாற்றுப் [படை.
திருவா=திருவாசகம்.
திருவாய்=திருவாய்மொழி
தம்ம=தம்மட்டிப் பட்ட [ன்.
துரை=துரைத்தன விளக்க [ம்.
தேம்=தேம்பாவணி.
நள=நளச்சக்கரவர்த்தி [கதை.
நன்=நன்னூல்.
நன் உரை=நன்னூலுரை.
நால்=நாலடி.
நீதி=நீதிநெறி.
நைட=நைடதம்.
பகவ=பகவத்கீதை.
பஞ்=பஞ்சதந்திரம்.
பரமா=பரமார்த்தகுரு.
பரிமே=பரிமேலழகர்.
பழ=பழமொழி.
பார=பாரதம்.
பிரகி=பிரகிருதிவிநோதம்.
புகழ்=புகழேந்திப்புலவர்.
விசா=விசாகப்பெருமாள்.
விநோ=விநோதரசமஞ்சரி
வெற்=வெற்றிவேற்கை.
வேதநா=வேதநாயக சாஸ் [திரி.
வேதி=வேதியொழுக்கம்.

INTRODUCTION.

பாயிரம்.

"ஆயிரம் முகத்தான் அகன்றதாயினும்,
பாயிரம் இல்லது பனுவல் அன்றே."

என நன்னூல் ஆசிரியர் கூறியவாறு யாமும் இந்நூற்குப் பாயிரம் எழுதுகின்றோம். தமிழ் இலக்கியங்களுக்கு அனந்தம் இலக்கண நூல்கள் சூத்திரங்களானும் உரையினானும் வாசக வினாவிடையினானும் உளவாக, யாமும் ஒரு நூலை எழுதத்தொடங்குவான் யாது காரணத்தானெனக் கேட்பாரும் உளராகலின், இந்நூலினது நிமித்தகாரணத்தை இதுவெனக் கூறுதும். இதுகாறும் இயற்றியுள்ள இலக்கண நூல்கள் பெரும்பாலும் செய்யுளின்கண்ணே அமைந்த விதிகளை எடுத்துக் காட்டியதன்றி, வாசக நடைக்கே உபயோகப்படும் தன்மைய நூல்கள் இல்லை. அகஸ்தியர் முதல் வீரமாமுனிவர் இறுதியாயுள்ள சகல இலக்கணிகளும் செய்யுளையே பெருமிதம் அனுசரித்து அதற்கே இலக்கணங் கூறினவர் அன்றி, வாசக நடையைத்தழுவிச் சாமானிய வழக்குக்கு விதிகூறினர் இலர் எனற்கு அவர் எழுதிவைத்த இலக்கியங்களே திருஷ்டாந்தமாகியது. இலக்கண வினாவிடை முதலாய பல சின்னூல்கள் உரைவாசகமாய் எழுதப்பட்டிருக்க, இவற்றுள் வாசகநடைக்கு உபயோகமான விதிகளும் இலக்கணங்களும் இல்லையோவெனின்: இவ்வுரையாசிரியர் பலரும் வாசக நூலாசிரியரும், நன்னூல் ஆசிரியரது துறையையே அனுசரித்து அவர் சொல்லிய விதிகளைமாத்திரம் பல உதாரணங்களைக்கொண்டு விரிப்பரன்றியும், செய்யுள் ஆட்சியே வழக்காகக் கொண்டு உலக வழக்குக்குப் பொருந்தா விதிகளைச் சாதிப்பரன்றியும், உலகவழக்கு வெளிப்படையாமாறு நூதன விதிகள் அமைத்தவர் இலர். இஃதன்றியும், இலக்கணங்களில் ஒருவாறு தேர்ச்சியும் பயிற்சியும் உடையவராயினும், வசன நடையில் ஒன்றை எழுதப்புகின், சிற்சில பிரயோகங்களில் மலைவுதோன்றி மயங்குவரன்றியும், தாம் கற்றதும் மாணாக்கருக்குக் கற்பிப்பதுமாய இலக்கண விதிகளின் பயனும் உபயோகமும் இதுவென்று அறிகிலரன்றியும்,

"காரிகை கற்றுக் கவிபாடுவதினும்
பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றால்"

என்றாங்கு, இலக்கண நூல்களை ஆய்ந்து வாசக மெழுதிக் கொள்வதற்கு அனந்தம் மயக்கங்கள் தோன்றுவதன்றியும், தத்காலத்தில் செய்யுள் நடையினும் வாசக நடையே சிறப்பென்றாங்கு சகல கல்விச்சாலைகளிலும் வாசக நடையைப் பயிற்றுவிப்பதினாலும், செய்யுளினும் வாசக நடையினானே அனேகம் நூல்கள் அச்சிடப்படுவதனாலும், வாசக நடைக்கே உபயோகப்படுமாறு ஓர் நூலைச் செய்வதிற் பயன் உண்டென்க.

வாசகநடைக்கே இஃது இலக்கணம் என்றமை, எழுத்தையென்கினும் சொல்லையென்கினும், பதவியல் புணர்ச்சி விகாரங்களையென்கினும் இதனுட் கூறாது, வாக்கியங்களினுள்ளே சொற்கள் பொருளினால் ஒன்றோடொன்று தொடருமிடத்து, அமைந்து நிற்கும் விதிகளையும் இலக்கணங்களையும் மாத்திரம் எடுத்துக் கூறுதும். அதனால் இந்நூற்கு வாசக இலக்கணம் எனப் பெயர் தந்தனம். அன்றியும், இதனை மூன்றுபிரிவாய் வகுத்து, சொற்கள் பொருளாற் றொடரும் தொடர்ச்சியுள் அமைந்த விதிகளைச் சொற்றொடர் இலக்கணமென முதலாம் அதிகாரத்தினுள்ளும், பலவகையான வாக்கியங்களைப் பகுத்துப்பார்ப்பதில் தெரியாநின்ற இலக்கணங்களை வாக்கிய இலக்கணமென இரண்டாம் அதிகாரத்தினுள்ளும், வாக்கியங்களைக் கருதின கருத்திற்கேற்பப் பலவாறாக விரித்து விரித்துக் கூறுதற்குரிய விதிகளை விரித்துரை இலக்கணமென மூன்றாம் அதிகாரத்தினுள்ளும் காட்டித் தமிழ்ப்பாஷையினது வாக்கிய இலக்கணங்கள் ஒன்றேனும் வழுவவிடாது எம்மால் இயன்றளவில் கடவுள் துணையை முன்னிட்டுக்கூறுவாம்.

அன்றியும், இவ்வாக்கிய இலக்கணம் நன்னூல் தொன்னூல் முதலாய நூல்களில் அமைந்திலவோவெனின்; அந்நூல்களில் சொற்றொடருக்குரிய பலவிதிகள் பற்பல இடங்களில் வரன்முறைதப்பிச் சிதைவுபட்டு,
"முல்லையைக் குறிஞ்சியாக்கி, மருதத்தை முல்லையாக்கி,
புல்லியநெய்தல் தன்னைப் பொருவரு மருதமாக்கி,
எல்லையில் பொருள்களெல்லாம் இடைதடுமாறும் நீரால்."
"அரிப்பரித்தாங் செய்த்துப் பொருள்செய் திடுமாறே"
அவ்விதிகளையெல்லாம் யாமும் ஆராய்ந்தொருங்கமைத்து

"நேரினமணியை நிரல்படவைத் தாங்கு
ஓரினப்பொருளை ஒருவழிவைத்துக்"

கூறினுமென்க. இஃதன்றியும், முன்னூலோர் சொன்ன எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் யாவராலும் நன்குமதிக்கப்பட்டுப் பொன்னே போலும் போற்றப்படுகின்றமை, அவ்விலக்கணங்களிலுள்ள பரிபாஷை நாமங்களையே யாமும் இந்நூலில் இலக்கணக் குறூஉக்குறியா வழங்கியதன்றியும், இந்நூலிற்குப் பொருந்திய விதிகள் யாவையும் அந்நூற்களினின்று அனுசரித்துக் கொண்டேமாகலின், அவையே எமக்கு மேற்கோளாம் என்க. இங்ஙனமாதலின், இந்நூல் ஒன்றைப்பார்த்தலால் வேறு இலக்கண நூல்கள்பார்க்கவேண்டிய நிமித்தம் இல்லையென்றும் எண்ணற்க. இங்ஙனம் வழங்கிய இலக்கண மொழிகளினது பொருள் விளங்க, வேறு இலக்கணங்களைப் பார்த்தலே வேண்டும். அந்நூல்களிலுள்ள மலைவுகள் நீங்கவேண்டின், இந்நூலைப் பார்த்தால் அவை நீங்கும். அஃதன்றியும், நூதனமாய் ஓர் இலக்கணம் செய்வது நமது கருத்தன்றாகலின், பொதுவாய் இலக்கண விசேஷங்களை உணரவேண்டின், இந்நூலைப் பார்ப்பதில் பயன் இன்று. வாசக நடைக்கு ஆம் விதிகளை மாத்திரம் அறியவேண்டின், இந்நூலில் அவைமிக்க விரிவிற் காட்டப்படும்.

முதனூல் வழிநூல் சார்புநூலெனக்கிடந்த பல இலக்கணநூல்கட்கும் இந்நூற்கும் உள்ள முக்கியமான பெருவிகற்பம் யாதெனில், செய்யுளில் இன்னின்ன விதிகள் அமைந்திருக்கின்றது என்று முன்னோர் கூறினரன்றி, யாம் இதனுட் கூறுமாறு, இன்னின்ன விதிகள் இன்னின்ன வழக்குக்கு ஆமென்று கூறினர் அலர். அதனை இரண்டொரு உதாரணங்களில் விளக்கிக்காட்டுதும். என்னையெனின், எழுவாய்ப்பின்னர் சொல்லுருபா வரும் சில சொற்கள் உண்டெனவும், ஏகார இடைச்சொல்லானது இத்தனை பொருளில் வருமெனவும் இயம்பினாரன்றி, எழுவாய்ப்பின்னர் சொல்லுருபுகள் இன்னின்ன பொருளான், இன்னின்ன தொடரான், இன்னவாறடைதற்கு இன்னின்னவை உதாரணமெனவும், இன்ன சொற்றொடரில் ஏகாரம் தேற்றமாகவேனும் சாரியையாகவேனும் வேறுபொருள் பட்டென்கினும், வருமென்றும் கூறாது விடுத்தனர் ஆதலின், இவ்விதிகள் உபயோகப்படும் வகை மாணாக்கருக்கு இலக்கண வழியான் அகப்படுகின்றதில்லை. அதனால் வாசக நடைக்கு

உபயோகப்படும் சகல துறைகளானும் விதிகளும் உதாரணங்களும் கூறப்படும். இங்ஙனம், வழக்கை அனுசரித்து அநேகம் விதிகளை முன்னூல் விதிகளுக்கு மாறுகோளாகவும், வேறு பல விதிகளை நூதனமாகவும் இயற்றி, இவ்விதிகள் யாவுக்கும் யாவராலும் நன்குமதித்துச் சிறப்புச் செய்யப்படுகின்ற செய்யுள்களினின்றும், வாசக இலக்கியங்களினின்றும் சர்வ ஜனப்பிரயோகமான பழமொழிகளினின்றும் உதாரணங்கள் கூறியுளேமாதலின், யாம் கூறிய விதிகளை ஒருவர் ஆட்சேபிக்கப் புகின்,

> "காவினைப் பழிக்கின் ஆண்டார் கடிமலர்ப்
> பழித்ததொப்பாம்.
> வாவியைப் பழிக்கிற் கொண்டவண் புனல்
> பழித்ததொப்பாம்." [நீதிநூல்.]

என்றாங்கு, யாம் எடுத்துக்காட்டிய இலக்கிய உதாரணங்களையும் ஆட்சேபித்து நீக்கவேண்டி வருமன்றியும், அங்ஙனமே விதியையும் உதாரணங்களையும் வழுவென்றே சாதிப்பாராகினும், யாம் இந்நூலிற் கருதிய கருத்தும் நிமித்தமும் இதுவென மாத்திரம் உணரப்பெறுவராகின், தம் ஆட்சேபனையை நிறுத்தி எமது பட்சத்தில் வந்து எமது துறையையே அனுசரிப்பர் எனற்கு யாதும் சந்தேகம் இல்லை என்க. அஃதெவன் எனின், உலக வழக்கையும் உரைவாசகங்களையும் உணர்த்துவிப்பதே இந்நூலினது கருத்தாயிருத்தலான, உலக வழக்கொடு பொருந்திய செய்யுள் வழக்குகளை யாமும் அனுசரித்து, அவ்வுலக வழக்கொடு பொருத்தமில்லாத செய்யுள் ஆட்சியை இங்ஙனம் நீக்கியிருத்தலான் என்க. இஃது இந்நூலினது மதமாயிருத்தலான், இரு வழக்குக்கும் பொருந்திய விதிகளுக்குச் செய்யுளினின்று உதாரணங்களும் ஒரோ வழக்கின்கண் அமையும் விதிகட்கு வாசகநூல்களினின்று மாத்திரம் உதாரணங்களும் காட்டினுமென்க. இவ்வாறு உதாரணங்கள் காட்டியதில், பழமையான விதிகட்கு மிக்குதாரணங்கள் வேண்டியிராமையால், அவைகட்குச் சில சில உதாரணங்களும், நூதன விதிகளாயிருப்பவற்றை யாரும் எளிதில் அங்கிகரியார் என்பதைப்பற்றி விஸ்தாரமான உதாரணங்களும் காட்டியிருக்கிறோம்.

எந்நூலாசிரியரும் தந்நூலை வாசித்தலால் வீடடையலாம் எனக் கூறுமாறு யாம் கூறேம். வாசக நடையினது

பயனை விவரித்தெழுதவேண்டியதுமில்லை. எந்நூல்களும் செய்யுளாகுமெனினும், செய்யுள் நடையில் எழுதப்படுமெனினும், யாவருக்கும் பயன்படமாட்டா. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாக மாட்டாமையால், செய்யுள் வல்லவர்கள் யாவரும் கம்பனைப்போலும் வள்ளுவனைப்போலும் சிறந்த வாக்குடையவர் ஆகார். ஆகினும் வாசகநடையில் சிற்சிலர் மிக்க வரமுடையவராகினும், நல்வாசக நடையில் எழுதிக்கொள்ளுதல் யாவருக்கும் இயலும். ஒருவன் எப்பொழுது நாவைத்திறந்து பேசலுற்றானோ, அப்பொழுதே நல்ல வழக்குப் பேச்சுநடையில் பேசுவதும் எளிதே. எவராவது பிறக்கும்போதே பேச்சுந் திறமையுடன் வருவதும் இல்லையாகையால், பிறர் வாய்ச்சொல்லைக் கேட்கும்போதும் நூல்களை வாசிக்கும்போதும், நல்ல வழக்கு இவையென்று கவனியாதும், சகலரும் பேசிக்கொள்ளும் நடையைப் பாராமலும் நினைத்தபடி பேசுதலும் வழூப்பட எழுதலும் எத்தன்மைத்தென்றால் "இனிய உளவாக இன்னாத பேசல், கனியிருப்பக் காய்கவர்ந்தற்று." வாய்ப்பேச்சினால் ஒருவரது உயர்வும் இழிவும் தோன்றுவதுபோலும், நல்வாசக நடையினால் ஒருவர் மனத்தினது கல்விப்பொருளும் தரித்திரமும் தோன்றிவிடும். இதனால், எவ்வளவு கற்றும், எவ்வளவு பாஷைகளை அறிந்தும், எவ்வளவு ஆன்ற ஞானமும் உணர்வும் உடையவராகினும், சொல்வன்மை யில்லாதவர்களைப் பூங்கொத்தில் மிக்கழகாய் மலர்ந்தும் பரிமளமில்லாத புஷ்பங்களுக்குச் சரியென்றார் நாயனார். தாம் கற்ற கல்வியோடு பேசும் எழுதும் சக்தியுடையவர்களைப் பரிமளம்பொருந்திய பொன்மலர்களுக்கு உவமானஞ் செய்தார் நீதிநெறியாசிரியர்.

தமிழ்ப்பாஷையின் நடையைக்கூர்ந்து பார்க்கின், பேச்சுநடை எழுத்துநடை செய்யுள் நடையென மூன்று வகைப்படும். இம்மூன்று நடையும் நாளதுவரையும் மதிக்கப்படும் தன்மையை நோக்கின், ஸ்திரீசாதிகளைப்போலும் பேச்சு நடை அவமதிக்கப்படுவதாயும் புருஷர்களைப்போல எழுத்துநடை சன்மானிக்கப்படுவதாயும், ஒருவர் கண்ணுக்கும் வெளிப்படாத கடவுளைப்போலும் செய்யுள்நடையாவராலும் தொழப்படுவதாயும் இருப்பதன்றி, யானையைக் கண்ட குருடர்போலச் செய்யுள் நடையை யிதுவென்று நிஸ்சயமாய் இருவரேனும் ஒன்றுபோற் கூறியதில்லை. உள்ள இலக்கணங்கள் யாவும் செய்யுள் நடைக்கே உண்டா

யிருத்தலால், அந்நடையைப்பற்றி இவ்விடத்தில் நெடிது
கூறவேண்டிய காரணமும் இல்லை. மற்றைய இரண்டு ந
டைகளையும் யோசிக்கின், எழுத்துநடைக்குள்ள டம்பமும்
செருக்கும் அற்று பேச்சு நடைக்குள்ள இழிவும் அவமா
னமும் நீங்கி இரண்டும் சமானமாகி வாமபாகத்தில் பார்
வதியாரைக்கொண்ட பரமேஸ்வரர்போலாகுமெனின், தமி
ழும் தெய்வபாஷையாகிச் சகலராலும் சீரும் சிறப்பும்
செய்யப்படுமென்க. தெய்வ பாஷையென்றது எதனால் எ
னில், நினைத்தபோதே கருத்தை வெளிப்படுத்திய தெய்வத்
திற்குப் பேச்சென்றும் எழுத்தென்றும் செய்யுள் என்றும்
இல்லாமையால்.—ஆகவே, நாளதுவரையும் இழிவாய்க் க
ருதப்பட்டு வருகின்ற பேச்சுநடை மேன்மையடையவும்,
அது எழுத்து நடையோடு ஒன்றாகி ஐக்கியப்படவும், பண்டி
தர் பாமரர் யாவருக்கும் பாஷை ஒன்றாகி விளங்கவும், ச
ங்கில் அள்ளிக்கடல் நீரைக் காட்டியதுபோல ஏதோ எம்
மால் இயன்ற சொற்ப அறிவினால் இந்நூலை எழுதினோம்.
நன்மையாயினும் நூதனமாதலால் வெறுத்தலும், தீயன
வாகினும் தொன்மையா யிருத்தலால் விடாது அனுசரித்த
லும் சிலருக்கு வழக்கானதால், அன்னோர் இந்நூலுக்குக்
குற்றங் கூறுவர் என்றே அஞ்சுகிறோம்.

அன்றியும், வழக்கு வழக்கென்று இந்நூலிற் பெருமித
ம்கூறுவதினால், அவ்வழக்கென்ற பதத்திற்கு நாம் கருதின
பொருள் இன்னதென்று இங்ஙனம் சொல்வது கிரமமாகு
ம். என்னத்தினாலெனில், வழங்கப்படுவனவெல்லாம் வழ
க்காகினும், ஒன்றில் வழக்கானது ஒன்றுக்கு வழக்காகமா
ட்டாமையினால், வழக்கின்னதென்பதை முதல் முதல் வரை
யறுத்துக்கூறுதலுங் கடனே. "இலக்கியம்கண்டதற்கு இ
லக்கணம்" என்றதினால் இலக்கணவிதிகள் யாவும் ஒருவா
று வழக்காகுமெனினும், அவைகளை இலக்கணவிதிகள் என்
றுகூறுவதன்றி வழக்கென்பதிற் பயனில்லை. அதனால்முன்
னர்க்கூறிய மூன்றுநடைகளுக்கும் பொதுவாயுள்ள விதி
கள் எவையோ அவற்றையும் வழக்கென்பதற் பயனில்லை.
இலக்கண விதிகள் ஒரு புடைநோக்கியும், கருதிய கருத்து
அந்நடையில் தோன்றுகில்லாது வேறுநடையில் தோன்ற
ப்பெறுமெனில், அதையே வழக்கென்க. இதனையே வழுவ
மைதியென இலக்கணநூலோர் கூறியது. ஆகினும், அவர்
வழுவமைதியென ஏழனம்பேசிக் கூறினரன்றி, வழக்கெ
ன்று பெருமிதம்செய்து கூறினரலர். அஃதன்றியும், வழ

க்கொருபுடையாகவும் இலக்கணம் எதிர் புடையாகவும் வருமிடத்து "யாதனுருபிற் கூறிற்றாயினும் பொருள்செல் மருங்கின் வேற்றுமையாகும்" எனவும் "வினைமுற்றே வினையெச்சம் ஆகலும்" எனவும் கூறிய பல புறனடை விதிகளால் இலக்கண விதிகளையே ஸ்தாபித்தாரன்றி, வழக்கை ஸ்தாபித்தவர் இலர். இதனால் ஒரு வேற்றுமையை ஒரு வேற்றுமையிற் கூறினும், ஒரு வினையை ஒரு வினையாகக் கூறினும் காரணம் வேண்டுமாகையான், அக்காரணங்களை எடுத்துக் கூறி வழக்கை நிறுத்துவதே இந்நூலின் முக்கிய நோக்கம் என்க.

பழமையான நூல்களில் மிக்கபிமானம் கொண்டு நூதன இலக்கணங்களை இகழ்கின்றவர்கள் இந்நூலைப் பார்த்துச் சொல்லத்தக்கவை எத்தன்மையாமெனில்: பூர்வம், துலுக்கர் எகிப்திய தேசத்தைச் செயித்தகாலத்தில், அத்தேசத்தில் கல்விப்பொருளிலும் செல்வப்பொருளிலும் குறைவில்லாதவர்களுக்கு உறைவிடமான அலக்சந்திரியா நகரத்திலுள்ள பேர்போன புஸ்தகச்சாலையிலிருந்த அந்த ஏழுலட்சம் புஸ்தகங்களை என்ன செய்கிறதென்று காலிப் ஓமாவினிடத்திற் கேட்டபோது, அவைகள் கொரானுக்கு விரோதமாயிருக்குமாகின் அவஸ்ஸியம் அழிக்கவேண்டியதென்றும், அல்லது அவை விரோதப்படாமல் கொரானிலுள்ளவற்றையே சொல்லுமெனில், அவைகள் இருந்து என்ன பலன் ? வீண்பொருள் நஷ்டத்துக்கிடமானதால் உடனே நெருப்பிட்டுச் சுட்டெரிக்க வேண்டியதென்றும் சொல்லிய உத்தரவுக் கொக்கும். எங்ஙனமெனில், முன்னோர் நூலிலுள்ளவைகளையே இதில் எடுத்தெழுதி யிருக்குமிடத்தில், அவைகள் இருக்க, இதனால் பயன் என்னை என்றும், அல்லது, அவைகளுக்கு மாறான விதிகளை யிதில் கூறியிருக்குமெனில், அவைகளுக்கு விரோதமான நூல்களை அங்கீகரித்தல் கூடாதென்றும், தீர்மானம் செய்து, இஃதைச் சுடுகாட்டுக் கனுப்பித் தகனிக்கவேண்டியதென்று சிலரும், இடுகாட்டுக்கனுப்பிப் புதைக்கவேண்டியதென்று சிலரும் அபிப்பிராயம் சொல்வார்களன்றி வேறனுகூலமான அபிப்பிராயங்கள் சொல்லார்கள் என்றே எண்ணுகிறோம்.

அன்றியும், நன்னூல் முதலாய சிலநூல்களில் நமக்குள்ள சொற்ப அறிவில் அங்கங்குதோற்றின விதிகளை அங்கீகரித்து வரிசையா யெடுத்தெழுதினதுமன்றி, நெடுங்காலம் வாசநடையில் சொற்பப்பயிற்சி இருந்தமையினாலும், பலவா

சகநூல்களைப் பலகாலும் வாசிக்கும்படி நேரிட்டதினாலும், அக்கக்காலத்தில்புலப்பட்ட வழக்கமைதிகளையெல்லாம் அப்போதைக்கப்போதே குறித்துவைத்து இந்நூலிற் கோர்வைசெய்ததேயன்றி, நூதனமாய்க் காட்டிய பல விதிகளுக்கு ஆதாரமான நூல்கள் நமக் கெப்போதாகிலும் அகப்பட்டதில்லை. அதனால், இவ்விதிகளிலும் சிலது பொதுவழக்கை வெளிப்படுத்தாது சிலசில உதாரணங்களுக்கு மாத்திரம்பொருந்தினதாய் இருந்தாலும்இருக்கலாம். தமிழ்ப்பாஷையானது நூற்றிருப்பது லட்சம் மனிதரால், எத்தனையோ நாடுகளில் வழங்கி வரும்போது, அத்தனை நாடுகளிலும் போய் அத்தொகை மனிதரையும் கண்டு பேசிப் பழகினது போல இதுவே வழக்கு இது வழக்கல்லவென்று நிஷ்கருஷையாய் எடுத்துக் கூறுவதுங் கூடாமையால், இந்நூலிற் கூறியவழக்குக்கு விரோதம் கண்டவர்களும் தாங்கள் கண்டதே சாமானிய வழக்கென்றும் மற்றையவெல்லாம் வழுவென்றும் சொல்லுதல் கூடா. கட்டின வீட்டுக்குப் பழுதுசொல்லுதல் எளிது என்று பழமொழியாகச் சொல்லப்படுமெனினும், கட்டின வீட்டில் யதார்த்தமாகவே பழுதுதோன்றுமெனில் அதை யிடித்துக் கட்டுதலும் நியாயமே. அதுபோலும், இந்நூலில் எங்ஙனமாவது பழுது கண்டவர்கள் குதர்க்கம் நோக்கிக் குற்றம் கூறாது யதார்த்தமாயுள்ள பிழைகளைத் தெரியப் படுத்துவரோயாகின் அப்பிழைகளைத் திருத்தி யெழுதுவதும் நியாயம் என்றெண்ணுகிறோம்.

நூதனமான நூல்களைப்பற்றிக் குற்றங்கூறுதல் பெரும்பாலும் வழக்கமானதால், இனிமேல் ஒவ்வொருவருக்காய்ச் சமாதானஞ் சொல்லிக்கொண்டு வரவேண்டிய தொந்தரைக் கிடம் வைக்காமல், இதைப்பற்றி ஆக்ஷேபிக்கக்கூடிய சகல ஆட்சேபனைகளுக்கும் ஒருங்கே சமாதானம் சொல்லுகின்றோம்.

இந்நூல் ஒன்றைப்பார்த்தலானே வாசகநடை நன்கமைத்து எழுதும் சக்தி உண்டாய் விடுமோவெனின் :

"எந்நூற் கூட்டினும் எத்துறை காட்டினும்
அந்நூற் கெல்லாம் அறிவாதியென்ப." [வீரமாமுனி.]

என்றமை, வாசகநடைக்கு இன்றி அமையாது இயலும் சாதனங்களினுள் இஃதொன்றாதலன்றி, அறிவிலிகட்கும் இஃதில் விருப்புறாதோர்க்கும் இந்நூலேனும் எந்நூலேனும் பயன்படுவதில் என்க. முயற்சியும் ஊக்கமும் ஒன்றின்மேல்

காட்டமும் இல்லாதார் கையிலுள்ள சாதனங்கள் எத்தன்மைத்தேனும், "பேடிகை வாளாண்மைப் போல்க் கெடும்." [குறள்.] நல்ல துணைக்கருவிகள் வினையாளர் கையில் எத்தன்மைத்தோ அத்தன்மைத்தே கற்றோரிடத்தும் கல்வியில் விருப்புற்றோரிடத்தும் இந்நூல் என்க. இதனைக் கிரமமாய் முழுமையும் ஒரு காலேனும் பல காலேனும் பார்ப்பின் இலக்கண மலைவுகள் அநந்தம் தானே நீங்குமன்றியும், கருதிய கருத்தைப் பலவாறு சொல்லும் சக்தியும் தோன்றும். ஒரு கருத்தை ஒருவன் முதல் முதல் தன் மனத்தே கசடற நினைத்தலும், பின்னர் தான் நினைத்தவாறே தெளிவும் சிறப்பும் அமையப் பிறருக்கு வெளிப்படுத்தி வைத்தலுமே, நல் வாசக நடையினது தன்மையன்றி, அரும்பதப் பிரயோகங்களினாலே மயக்கந் தோன்ற எழுதுவது நன்னடையன்று.

எண்பொருள் வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு. [குறள்.]

இஃதும் ஒருவர்க்கு எளிதில் உண்டாகியதன்று. கருதிய கருத்தை உரிய மொழிகொண்டு, கேட்கின்றாரது திறமைக்கேற்ப, இடம் பொருள் ஏவலினது தொடர்புதோன்ற எழுதுவதும், பல நூல்களை வாசித்தலானும் பெரியார் வாய்ச் சொல்லைக் கூர்மையாய்க் கேட்டலானும், ஆடியகாலும் பாடிய மிடறு மென்றாங்கு நெடுங்காலப் பயிற்சியானும் உண்டாகவேண்டியதன்றி, யாதாமொரு சாதனமொன்றைக் கொண்டு உண்டாகற் பாற்றன்று.

அன்றியும் பொருட்சுவையும் சொற்சுவையும் இனிது தோன்ற அமைத்தெழுதுஞ் சக்தி இந்நூலை எழுதினோனுக்கு இல்லாதிருக்க, அந்தச் சக்தியை மற்றவர்களுக்கு இந்நூல் மூலமாய் அவன் உண்டாக்குதல் எவ்வாறென்று சிலர் இகழ்வதற்கு இடமாகுமாகையால் அன்னோர்க்கு அறைகுதும்: இரண்டு காலுமின்றிச் சப்பாணியாய்ப் பிறந்த ஒருவன் ஓடும் நடக்கும் சக்தி யில்லாதிருந்தும், பல பாட்டைகள் குறுக்கிடும் ஓர் சந்தியில் அசையாது உட்கார்ந்துகொண்டு அப்பாட்டையில் நடக்கப்பட்டவர்களுக்கு இது இன்ன ஊருக்குப்போகிற வழியென்றும், இது இன்னின்ன தன்மையதென்றும் விபரஞ்சொல்லி பிரயாணத்தை யெளிதாக்குவதற்கு இயலுமாறே எமக்கும் தமிழை இனிமையாயெழுதிக் கொள்ளும் சக்தி இல்லை எனினும் ஏனையோருக்கேனும் அச்சக்தி யுண்டாக வேண்டுமென்னும் ஆசையைப்பற்றி இந்நூலை அறையலுற்றுமென்க.

சொற்றொடர் இலக்கணமென்னும் இம்முதற்பாகமே இவ்வளவு விரிவாகுமெனின், மற்றைய இரண்டும் எவ்வளவு விசாலமாயிருக்கும் நூலுக்கழகு சுருக்கமெனப் பெரியோர் கூறியிருக்க, இவ்வளவு விரிந்த நூலை வாசித்தற்கு யாருக்குச் சாவகாசம் இருக்குமென்று சிலர் ஆட்சேபிக்கவுங்கூடும். அன்னோர்க்கு அறைகுதும்: ஒருவிதியுள் பல பொருளை அடக்கிக் கூறுதல் சுருக்கம் பற்றி அழகு பெற்றாலும், அவ்வாறு கூறினதே நன்னூல் முதலாய நூல்களில் அதிக மலைவுக்கிடமானதுபற்றித, தெளிவையே அதிக முக்கியமாய்க் கருதிய யாம் பொருள் ஒன்றுக்கு விதியொன்றாக்கி உதாரணம் கூறினதுமன்றி, அதிக விளக்கத்தை நாடி சில சில விடங்களில் ஒரு பொருளையே பலவிதிகளாயும் அமைத்து,

“நரர் குழிபறித்து மெள்ள நாட்டிய நெடியகம்பம், உரமுறக் குத்திக்குத்தி உரப்பிக்கும் உபாயம்போல.” [கைவ]

விரித்துவிரித்துக் கூறியிருப்பதினால், பாஷையிலுள்ள சந்தேகங்கள் நிவர்த்தியாகுமென்றும், ஒருவிதியைப் பல சம்பந்தங்களான் எடுத்துக் காட்டுவதினால் கற்போருக்கு அறிவு எளிதில் உண்டாகும் என்றும் கோறினதேயன்றி, இதைப் பெருநூலாயெழுதவேண்டுமென்ற பெருமைக்கன்றென்க.

இந்நூல் வாசக நடைக்கே இலக்கணமாக, இதை முற்றும் வசன நடையானே எழுதுகில்லாது சூத்திர உரையான் எழுதிய தெங்ஙனமென வினவுவோர்க்கு அறைகுதும்:

“சில்வகை எழுத்திற் பல்வகைப்பொருளைச்
செவ்வன் ஆடியிற் செறித்து இனிது விளக்கி
திட்பம் நுட்பம் சிறந்தன சூத்திரம்.” [நன்.]

எனவே, காத்திரமான தேகத்தின் சாயையைத்தானே உருவம் மாறாதும் அழகு பொலியவும் ஒரு சிறிய கண்ணாடியிற் காட்டுமாறே, உரைவசனத்தால் மிக்க விரியோடெழுதவேண்டிய விதிகளைச் சில்லெழுத்தான் அமைந்த சில சொற்களைக்கொண்டு, தெளிவும் அழகும் தோன்ற சூத்திர யாப்பிற்காட்டுதற்கு இயலுமாகையானும்; நன்கமைந்த சூத்திரங்கள் ஞாபக விசேஷத்தான் சிறப்புற்றனவாகையானும்; இந்நூலை ஒருகால் உரையுடன் வாசித்தவர், பின்னர் மூலத்தைமாத்திரம் பார்ப்பரேல், நூற்பொருள் அடங்கலும் எளிதில் அறிந்துகொள்வாராதலானும்; இதுகா

றும் இலக்கணிகள் சூத்திரங்களாலே மாணாக்கருக்கு அறிவுறுத்தி யிருத்தல் தொல்லை வழக்காய் இருத்தலானும், அவ்வழக்கையே யாமும் இங்ஙனம் அனுசரித்தாம் என்க.

அன்றியும், இங்கிலீஷ் இலக்கணநூல் விதிகளுங்கூட சில, இந்நூலில் அங்கங்கே வருகின்றதென்று எவராவது நினைத்திகழுவாராகின் அன்னோர்க் கறைகுதும்: ஒரு பாஷையின் யதார்த்த சொரூபத்தைப்பார்த்து அதன் லட்சணத்தைக் கூறப்புகுந்தவன், வேறு சில பாஷைகளில் தேர்ச்சியுடையவனாயும் அவற்றிற் குற்ற பேதாபேதத்தை கிரகிக்கும் சக்தியுடையவனாயும் இருக்கவேண்டியதென்று மிக்க புகழுடை சாஸ்திரி யொருவர் (Lord Bacon) கூறவந்தவர், சொல்லிய உபமானமை யாதெனில், ஒரு ஸ்தலத்தின் தோற்றத்தைச் செவ்விதாய்ப் பார்க்க விருப்புற்றவன் அவ்விடத்திற்றானே நின்றுகொண்டு பார்ப்பதனாலன்று, அதிலும் உயர்ந்த ஸ்தலத்தில் நின்றுகொண்டு பார்ப்பதினால் மாத்திரம், அது முழுமையும் கண்ணுக்குத் தோற்றுமென்றார். உலகத்திலுள்ள சகலதேசஸ்தரும் ஒரு மூலத்தினின்று உற்பவித்தமையால், அவர்களுக்குள்ள சகல பாஷைகளுக்கும் ஒற்றுமையான விதிகளும் உண்டு. அன்றியும், அவர்களே பல்லாண்டுகளாய்ப் பிரிவுபட்டிருத்தல்பற்றிப் பாஷை பேதங்களும் உண்டு. அதனால் இத்தன்மைய விபரங்களை விசாரணைசெய்தல் எந்தப்பாஷையின் இலக்கணிக்கும் ஒருவாறு பிரயோசனமாம் என்க. அன்றியும், தமிழர் தமிழைப்பார்க்கிலும் இங்கிலீஷையே அபிவிர்த்தி செய்து வருதலால் அவ்விருபாஷைகளுக்கும் உள்ள பேதாபேதங்களை எடுத்துக்கூறுவதில் அதிக பயனுண்டெனினும், இந்நூலில் அத்தன்மையான விதிகளை யாம் காட்டியதில்லை. தமிழுக்கே உரித்தென்று தோன்றிய விதிகள் எவையோ அவற்றையே நிறுத்தி, அவற்றிற்கே திருஷ்டாந்தங்கள் சொல்லுகின்றோம்.

அன்றியும், மறை மறை யென்று வேத முதலாய சகல சாஸ்திரங்களையும் பெரியோர் மறைத்து வைத்தார்களன்றி, ஒன்றையாவது பூரண விலாம்பரமாய் வெளிப்படுத்து வைத்தவரிலர். அது யாது காரணத்தாலெனில், ஒன்றைப் பரிபூரணமாய் வெளிப்படுத்தியபோது, இவ்வளவுதானா இதின் லட்சணம் என்று அவமதிக்கிறது உலகத்தவர்க்கு இயற்கையாயிருத்தலினாலென்க. திரைக்குள் இருக்கும் வரையில் சுவாமியைக் குறித்துப் பலவாறாகச் சிந்தி

த்து மனோராஜ்ஜியம் பண்ணிக்கொள்ளலாம். திரையைக் கிழித்துக் காட்டவே, சுவாமியின் மகிமை இவ்வளவுதானென்று அவனைப்பற்றி ஒருவரும் சிந்திக்கமாட்டார்கள். அதுபோலுமே, நாமும் இந்த நூலில், தமிழினுடைய மர்மங்களை உடைத்து மயக்கமில்லாமல் வெளிப்படை சொருபமாய்க் காட்டியதினாலே, இந்நூலையிட்டுத் தமிழுக்கும் தமிழ் இலக்கணங்களுக்கும் ஓர் ஏழமையுண்டாமென்று அஞ்சியபோதிலும், இலக்கணச்சிக்குகள் அற்று வழக்கு முன்னுக்கு வரவேண்டுமென்பதே நமது கருத்தென்க. அதுவன்றி, சகலராலும் புகழப்படும் மதுர தமிழுக்கு உள்ள பெருமையை யெடுத்துக்கூறுவதற்கு யாமெல்லாம் வல்லேம் அல்லேம்.

மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை.

என, உலகத்திலுள்ளனவற்றை யெல்லாம் உயர்திணைப் பொருள் அஃறிணைப்பொருள் என விதந்தது யாதுகாரணத்தால் எனின், கடவுள் முதல் மனிதர் ஈருயுள்ள சகல வஸ்துக்களுக்கும், ஆத்மாவும் ஆத்ம சக்திகளும் அச்சக்திகளை வெளிப்படுத்தி வைக்கும் முக்கிய கருவியாகிய பாஷையும் இருத்தலால் உயர்திணையென்று பெரியோர் கூறியுளர். ஆதலால் புத்திக்கும் அதன் ஒலி வடிவாகிய பாஷைக்கும் பிறப்பிடம் ஒன்றாகிப் புத்தி விரிவுக்குப் பாஷையினது விரிவும், புத்தி தீட்சணியத்திற்குப் பாஷையினது தேர்ச்சியும், புத்தி நுட்பத்துக்குப் பாஷையினது நுட்பமும் இன்றியமையாத சாதனமா யிருத்தலால், புத்திபலத்தால் மனிதரிடத்துப் பெருமையையும் எண்ணிக்கையையும் பெறவிருப்புற்ற யாவரும், பாஷையை ஆராய்ந்து, சுத்த மொழிகள்கொண்டு தமது கருத்தை வெளிப்படுத்தி "பயனில்சொற் பாராட்டுவானை மக்கட் பதடி" யென்று நாயனார் கூறியவாறே, பயனில்லாத வீண் மொழிகளை நீக்கி, விபரீதப் பொருள் கொள்ளும் சொற்களை ஒருகாலும் அனுசரியாது மனதினது பரிசுத்தத்தைக் காட்டிய நாவின் பரிசுத்தத்தைப் பாதுகாத்துக் கொள்ளுதல், உயர்திணைப் பிறவியான சகல பேருக்குங் கடன் என்க.

"புறந்தூய்மை நீரான் அமையும்.
அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்." [குறள்.]

சொற்றொடர் இலக்கணம்.

1. Invocation.

பூவில்வந்தருளுடை புங்கவன் பொற்பதம்
நாவால் நினைவால் நவின்று போற்றி, யான்
சொற்றொடரிலக்கணம் சுருங்கச் சொல்லுவன்
நற்றொடர் வாசக நடையைநோக்கியே.

மனத்தே கருதிய கருத்தைச் சிதைவுபடாது தகுந்த மொழிகளால் நன்கமைத்து இனியதமிழ்வாசகநடையில் எழுதத்தக்க திறமை யாவருக்கும் எளிதில் உண்டாகும்பொருட்டுச் சொற்றொடர் இலக்கணமென்னும் இந்நூலைச் செய்யத்தொடங்கினும், பூலோகத்தில் அவதரித்து மன்னுயிரைப் புரந்தருளிய காருண்ணிய சற்குருவினது திவ்விய சரணாரவிந்தங்களை ஸ்துதித்து.

2. Design and Plan of the Work.

வாசகநடைக்கே இலக்கணம் என்றமை
முன்னூல் விதிசில மேற்கோளாவரும்:
மாறுகோள் விதிகள் சிற்சிலவாகும்:
நூதனவிதிகள் பற்பலவாகும்:
உதாரணம் இலக்கிய நூல்களேயாகும்:
பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவலகால வகையின் என்றமை,
இந்நூல் இசைமார் முன்னூல் உணர்ந்தோர்.

மாணாக்கருக்கும் தமிழ் பயிலும் ஏனையோருக்கும் சுத்த வாசகநடையைப் பயிற்றுவித்தலே இந்நூலினது நோக்கமென முன் கூறியுளவாகலின், அவற்றிற்கு உபயோகமான விதிகளை நன்னூல் முதலாகிய பல முன்னூல்களினின்றும் மேற்கோளாக இந்நூலில் அனுசரித்தெழுதப்படும். இதுவரையும் செய்யுள் நடையைப்பற்றியே இலக்கணம் உண்டாயிருத்தலால், செய்யுள் வழக்குக்கே உரிய விதிகளை நீக்கி, மாறுகொளக்கூறுதல் என்னும் உத்தியால் வேறு விதிகள் கூறப்படும். இதுவரையும் வாசக நடையைநோக்கி யாதொரு நூலும் எழுதியில்லாமையால், அநேகம் நூதனமான விதிகளும் இந்நூலிற் காட்டப்படும். ஒரு விதி

யை ஏற்படுத்திக்கொண்டு அவ்விதிக்கு அவ்விலக்கணியே உதாரணம் கூறிக்கொள்ளுதல் அழகன்றாகையால், இந்நூலில்வரும் விதிகள் யாவுக்கும் பெரியோர் புகழும் இலக்கிய நூல்களினின்றும் சாமானியமான பழமொழிகளினின்றும் உதாரணங்கள் கூறப்படும். இஃதிங்ஙனம் இந்நூலினது மதமென்று கற்றோர் அறியப்பெறுவாராகின், இஃதை இகழமாட்டார். ஏனெனின், காலவழக்குக்கும் ஒரு நூலிற் கருதிய நோக்குக்கும் ஏலா விதிகளை நீக்கி ஏலும் விதிகளைத் தழுவிக்கொள்ளுதல் வழுவன்று. பெரியோராற் கூறியுள துறையே என்க.

3. For whom Designed.

வயதான் இளைஞர் அறிவான் இளைஞர்
பாடையான் இளைஞர் இவர்பொருட்டிந்நூல்
ஆக்கினன், இதனை முறைநூலுணர்ந்தோர்
நகுவரன்றிமற் றிகழார் என்க.

வயசினால் இளைஞர் எனவும், வயசில் மூப்பினராகினும் கல்வியறிவில் இளைஞர் எனவும், கல்வியறிவில் தேர்ச்சியுடையவராகினும் இதர தேசங்களினின்று இந்நாட்டிற்குவந்து புதிதாய் தமிழ்ப்படிப்பதினால் பாஷையில் இளைஞர் எனவும் இம்முப்பாலினோர்க்கும் பயன்படும்படி கருதியே, சிறுபிள்ளைகளிடத்துச் சிற்றூண் செய்து விளையாடியவண்ணம் இந்நூலைச் செய்திருக்கின்றனன். இலக்கணக் கடலாடிச் சொற்பொருளினது திட்பநுட்பங்களை உணர்ந்த பெரியோர் இதனைப் பார்ப்பரோயாகின், நகைசெய்வரன்றிக் குற்றங் கூறுதற்கு இதனை ஒரு நூலாக மதிக்கமாட்டார் என்க.

4. Syntax Defined.

பெயர்வினை இடை உரி எனவே விதந்த
நால்வகைப் பதங்களும் பொருளை நோக்கி
ஒன்றோடு ஒன்று தழுவுங்காலை
அமையும் விதிகளைத் தொடரியல் என்றாம்.

பெயர்வினை இடை உரி என்று முன்னூலோரால் விதந்து கூறியுள நால்வகைச் சொற்களும் பொருளினால் தொடரப்பெற்று வாக்கியமாக வருமிடத்தில் அச்சொற்கள் ஒன்றை ஒன்று தழுவி நிற்கும் விதிகளைத் தொடரிலக்கணம் என்று கூறினாம் என்க.

I. எழுவாய்.

5. SUBJECT AND PREDICATE.

எழுவாய் பயனிலை இரண்டுங் கூடி
வாக்கியமாகும் எப்பாஷை யுள்ளும்.

ஒரு வாக்கியத்துள் எழுவாய் பயனிலை என இரண்டு உறுப்புகள் உண்டு. பெரும்பான்மை அவையின்றி வாக்கியம் அமையா. ஒரோவழி, எழுவாய் தனியேநின்று வாக்கியமாதற்கும், எழுவாயின்றி வினையே தனித்து நின்று வாக்கியமாதற்கும் அடியிற் கூறும் புறனடை விதிகளைக்காண்க.

எழுவாய்=எழு+வாய்=எழுகின்ற இடம், கருத்து உற்பத்தியாகும் இடம்.

பயனிலை=பயன்+நிலை=எழுவாயினது பயன் முடிவு பெற்று நிற்கும் நிலை:—எவ்வாறெனின்.

உ-ம்:—யானை வந்தது எனின், யான் சொல்லிய கருத்து யானையைப்பற்றி உற்பவித்தலால், அவ்வாக்கியத்திற்கு யானை எழுவாயாகியது. அக்கருத்து, வந்தது என்னும் மொழியில் முடிவு பெறுதலால், அதுவே பயனிலையாகியது. இதனுல் ஒரு வாக்கியத்துள் முதன் மொழி எழுவாயென்பதும், கடைமொழி பயனிலை யென்பதும் பெறப்பட்டது.

6. ETYMOLOGY OF THE SUBJECT AND PREDICATE.

பெயரோ எழுவாய் பயனிலை தானும்
பெயரும் வினையும் இருபாற்று என்க.

வாக்கியத்தைத் தொடங்குஞ்சொல் பெயராய் இருத்தலால் எழுவாயெல்லாம் பெயர்ச்சொல் என்க. அவ்வாக்கியத்தை முடிப்பிக்கும் சொற்கள் பெயராயும் வினையாயும் இருத்தலால், பயனிலையைப் பெயர்ப்பயனிலை என்றும் வினைப்பயனிலை என்றும் இரு கூறுக்குக.

உ-ம்:—சாத்தன் புலவன் [பெயர்ப்பயனிலை.]
சாத்தன் வந்தான் [வினைப்பயனிலை.]

7. INTERROGATIVE PREDICATE REPUDIATED.

என் ஏன் இரண்டும் பயனிலையாமேல்
முன்னோர் கிளரிய வினைப்பயனிலையாம்.
ஆகினும், அவையே உரியா வருமால்,
வினைப்பயனிலை இலை தமிழுக்கு என்க.

ஏன் எவன் என்னும் இரண்டு குறிப்பு வினாவும், என்ன ஏன் என்னும் அவற்றின் விகாரங்களும் எழுவாய் பெற்று வருமாகின் இவற்றையே முன்னூலோர் வினாப்பயனிலை என்றார். ஆகினும், அவ்வாறு முடியும் வாக்கியங்களிலும், அவ்விரு சொற்களையும் உரியாகமாற்றி இலக்கணங் கூறப் பெறுமெனில், தொக்கிநின்ற சொற்களே பயனிலையாகும். அதனால் வினாப்பயனிலையைத் தமிழுக்கு இல்லை என்றாம். மேற்கோள்: "எழுவாயுருபு திரிபில் பெயரே. வினைபெயர் வினாக்கொளல் அதன் பயனிலையே" [நன்] "எழுவாயுருபாம் இயல்பிற்பெயரே. மீண்டதன்பொருளாம் வினைபெயர் வினாவே." [தொல்] எப்பாஷையுள்ளும் இலக்கணிகள் வினாவைப் பயனிலையாக்கியது இல்லை. அஃதிங்ஙனமாக, தொல்காப்பியமுதல் தொன்னூலீறாய் உள்ள சகல இலக்கண நூல்களினும் வினாவைப் பயனிலையாக்கியிருத்தலால், இவ்வாறு அவர் கூறவந்ததற்குக் காரணம் என்னவென்று ஆராய்தலும் நன்றே. இக்காரணம் இன்னதென்று நன்னூலினாகினும் எந்நூலினாகினும் தெரிவிக்கப்படாமையானும், உரையாசிரியரோ பலர் வினாப்பயனிலை இஃதென அறியாராகி மயங்கி வினாப்பயனிலை அல்லனவற்றை அப்பயனிலையாக உதாரணம் கூறி யிருத்தலானும், தமிழில் வினாவைக்கொண்டு முடியும் சகல வாக்கியங்களுக்கும் உதாரணங்கள் காட்டி, பின்னர் அவை சார்பாக, வினாப்பயனிலையை ஸ்தாபிக்கப் பெறுமோ பெறாவோ வென யோசிப்பாம்.

A List of all the Possible forms of Interrogatives.

(I)	நீ வந்தையா. அது வருமா. அவன் போனானா.	இவைபோல்வன தெரிநிலை வினையீற்றில் வி. விகுதி பெற்றுமுடிந்த வி. வாக்கியங்கள்.
(II)	அது கரியதா. அவன் உளனா. சாத்தி பொன்னியா.	இவைபோல்வன குறிப்பு வினையீற்றில் வி. விகுதிபெற்று முடிந்த வி. வாக்கியங்கள்.
(III)	அவன் மனிதனா. ராமன் தம்பியா. கயிலைமோட்சமா.	இவைபோல்வன பெயரீற்றில் வி. விகுதிபெற்று முடிந்த வி. வாக்கியங்கள்.

(IV)	அவன் யாவன். அவள் யாவள். அஃது யாது.	இவைபோல்வன வினாப்பெயர்களைக்கொண்டு முடிந்த வினா வாக்கியங்கள்.
(V)	அவன் எங்கே. அவள் எவண். அஃது யாண்டு.	இவைபோல்வன காலம் இடனைக்காட்டிய வி. இடைச்சொற்களைக்கொண்டு முடிந்த வி. வாக்கியங்கள்.
(VI)	பயன் என். பொருள் ஏன். படித்தால் என்ன. நீ வருவான் ஏன்.	இவைபோல்வன குறிப்பு வினாவைக்கொண்டுமுடிந்த வினா வாக்கியங்கள்.

REMARKS.

இவற்றுள், I, II, III களில், காட்டிய உதாரணங்களை நோக்குங்கால், தெரிநிலை வினைப்பயனிலையாயும் குறிப்பு வினைப்பயனிலையாயும் பெயர்ப்பயனிலையாயும் வந்த வாக்கியங்கள் ஆ என்னும் வினா இடைச்சொல்லைக்கொண்டு முடிந்தனவேயன்றி, அவ்விருபயனிலையை யல்லாது தனி வினாப்பயனிலையாய்வந்தது இல்லை. இவற்றை வினாப்பயனிலை என்று கூறின், நீ வந்தையே, ராமன் தம்பியே, விஷ்ணு கரியனே என்ற வாக்கியங்களைத் தேற்றேகாரப் பயனிலையென்றும், நீ வந்தாய் கொல் முதல்வனவற்றை ஐயப்பயனிலையென்றும் கூறவேண்டி வருமாதலால், மேற் கூறினவற்றையும் வினாப்பயனிலையென்று அறைதலும்கூடா. (IV) ல் காட்டிய உதாரணங்கள் வினாப்பெயரைக்கொண்டு முடிந்தும், அவன் யாவன் என்குற்போலுமே அவன் இவன் சாத்தன் அவன் எனச் சுட்டுப்பெயர்களும் பயனிலையாகி வருதலால், அஃதை வினாப் பயனிலையெனின் இவற்றைச் சுட்டுப்பயனிலையென ஸ்தாபிக்கவேண்டி வரும். அது கூடாமையால், இரண்டிற்கும் பொதுப்பட, பெயர்ப்பயனிலை யென்றே கூறவேண்டியது. (V) ல் காட்டிய உதாரணங்கள் வினா விடைச் சொற்களைக்கொண்டு முடியினும், அவன் அங்கே, அவன் இங்கே, எனச் சுட்டிடைச்சொற்களைக் கொண்டு முடியும் தன்மையால், மேற்கூறிய ஞாயங்களினாலே இவற்றை வினாப்பயனிலையென ஸ்தாபிப்பதுங் கூடா. அன்றியும், அவன் எங்கே என்று கடாவுதல்மாத்திரம் வழக்கன்றி, அவன் இங்கே, அங்கே, என அறைதல்

வழக்கின்று எனினும், இவ்விருதன்மைய வாக்கியங்களினு ள்ளும் பொருளைநோக்கின், அவன் எங்கே உளன், அவ ன் இங்கே உளன் எனக் கருத்துத்தோன்றலான், இவற்றை த்தோன்று வினையைக்கொண்டு முடிந்த வாக்கியங்கள்என இலக்கணம் கூறலாகும். (VI) ல் காட்டிய உதாரணங்க ளை நோக்கின், எவன், ஏன், என், என்ன, என்னும் இந்நா ன்கு சொற்களும் விஞப்பயனிலைபோலும் தோன்றியது. ஆகினும் அவ்வாக்கியங்களை நன்குநோக்கின், அவ் விஞச் சொற்களைப் பெயருரியும் வினையுரியுமாக்கித் தோன்றாப் பயனிலையா வந்த பெயர்களையாகினும் வினைகளையாகினும் வருவித்து வாக்கியம் முற்றுப்பெறும். எவ்வாறெனின்.

பொருளேன் என=பொருளேன் வேண்டும் என வினை தொக்குவந்தது.

நீ வருவானேன் என=நீ வருவான் ஏன் வேண்டும்=நீ ஏன் வருவான் (வர) வேண்டும் என்றாகியது.

கற்றதனால் ஆயபயன் என் என=ஆயபயன் என்னபயன் எனப் பெயர் தொக்குவந்தது.

என் ஒருவன் கல்லாதவாறு=ஒருவன் கல்லாதவாறு என்ன காரணம்.

நீ வந்தது ஏன் (எவன்)=நீ வந்தது என்ன காரணம்.

இப்பாலின ஞாயங்களான் விஞப்பயனிலையைத் தமிழு க்கு இல்லை யென்றும். இனி, எழுவாய் பயனிலைக்குரிய சிறப்பு விதிகள் கூறுதும்.

8. Subject Defined.

வாக்கியத்து எழுவாய் திரிபில்பெயரே.

எழுவாய்ப் பெயரானது வேற்றுமை யுருபுகளையாவது வேறு விகாரங்களையாவது ஏற்காது தனியே நிற்கும். சொ ல்லுருபுகளுக்கு அடியில் இலக்கணம் கூறப்படும்.

9. Nouns Classified.

பொருட்பெயர்தொழிற்பெயர்பண்புப்பெயரொடு வினையாலணைபெயர் எழுவாயாகும்.

இந்நால்வகைப்பெயரும் விகாரமின்றி முதல்வேற்றுமை யில் நின்று வாக்கியத்திற்கு எழுவாயாகும். இங்ஙனம் வி

தந்த நான்கு வகையுள் காரணம் ஆக்கம் இடுகுறி மரபு ஆகுபெயர் என ஏனையோர் கூறிய பெயர்கள் யாவும் அடங்கும் என்க.

உ-ம்:— மரம், கல், பொன், மலை, மரத்தன், கல்லன், பொன்னன்.	இவைபோல்வன பொருட்பெயர்.
ஆடல், சிரிப்பு, வேட்டை, தொழில், யாத்திரை, வரவு,	இவைபோல்வன தொழிற்பெயர்.
கருமை, செம்மை, சிறுமை, கரியன், செவ்வியன், சிறியான்	இவைபோல்வன குணப்பெயர்.
நடந்தவன், கற்றவன், ஈன்றார், பெற்றார், ஆண்டவன்.	இவைபோல்வன வினையாலணையும் பெயர்.

10. Subject Understood.

முதலில் எழுவாய் இல்லையாகின்
முற்றுவினை விகுதியில் விரியும் என்க.

வாக்கியத்தின் முதலில் வரவேண்டிய எழுவாய் வராதொழிகுமேயாகின், முற்றுவினை விகுதியில் அது விரிக்கப் பெறும் என்க. இவ்விதியை அடியில் விரித்துக் கூறுதும்.

11. Predicate Understood.

எழுவாய் தனியே வாக்கியமாகி
உண்மைப் பொருளைச் சுட்டும் ஒரோவழி.

பயனிலையில்லாது எழுவாய் தனியே நின்று வாக்கியமாதலும்உள, இருக்கின்றது என்னும் பொருள்தோன்றப் பெறுமெனின் :—

உ-ம்:—ஒரு தேசத்திலே ஒரு அரசன். அவனுக்கு இரண்டு மந்திரிகள்.	இவற்றுள் இருந்தான் இருந்தனர் எனனும் பொருள்தொக்கியது.

சோற்றிலே கல். மணியின் கண் ஒளி. தீ தீ !! பாம்பு பாம்பு !!

12. Order of the Subject and Predicate.

முதலில் நிற்பது எழுவாயாகினும்
பயனிலை தானும் முதலில் நடக்கும்.

வாக்கியத்து முதல்மொழி எழுவாயென்று முன்னர்கூறினாம். பயனிலைதானும் முதலில் நடக்கினும் வழுவன்றென்க.

உ-ம்:—வந்தான் சாத்தன் = சாத்தன் வந்தான்.
கள்வன் இவன் = இவன் கள்வன்.

இங்ஙனம் சிறப்பின்பொருட்டும் தெளிவின்பொருட்டும் முறைபிறழ்ந்து வரும் என்க.

உ-ம்:—கண்மலரிற் கைபட்டால், அந்தக் கையைத் துணிக்கலாமோ? யுத்தமும் பின்னடி யிருக்கின்றது என்றார் கீர்த்தியையே தரிக்கின்ற தருமபுத்திர மகாராசன். [பார] இவ்வாக்கியத்தை முறைமாற்றி வாசிப்பின்பொருள் மயங்குவதன்றியும் அந்தம்குன்றும்.

13. SUBJECT REPEATED.

விரிவினானே தெளிவு குன்றிடின்
எழுவாய் பலகால் கிளரவும் பெறுமே.

ஒரு வாக்கியமானது மிகப் பெரிதாய் நீளுமிடத்து, கருதிய கருத்து தெளிவில்லாது மயங்குமேயாகின், அம்மயக்கம் நீங்கித் தெளிவுண்டாகும்பொருட்டு, முதல் எழுவாயை வேண்டிய இடங்கள்தோறும் விரித்துக் கூறலாமென்க.

உ-ம்:—ஆலகாலவிஷத்தினை உண்டு மன்னுயிரினைக் காத்தருளிய சிவபிரானார் தமது நுதல் விழிகளினாற் படைத்த தீட்சணியமுள்ள தீப்பொறிகளினது சுவாலைக்குச் சகிக்கப்படாதவளாய்ப் பரமேஸ்பரியானவள் பயந்து திருவடிகளில் தரித்திருந்த சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்கி நவரத்தினங்களும் இறைய, தமது திருமாளிகையை நோக்கி ஓடினவள், அக்காரணங்களை யோசித்து மகாவிஷ்ணு முதலாகிய தேவர்கள் வந்து பரமசிவத்தினை வந்தித்து நமது குறைகள் நிவாரணமாதற்பொருட்டு தேவரீர் கிருபையுற்று ஒரு குமாரனைத் தரவேண்டுமென்று போற்ற, அதற்கு இரங்கித் தமது திருநெற்றி விழிகளினிடமாக அனற்பொறிகளைத் தந்து அவை பிள்ளையுருப்பெறத்தக்கதாகச் சரவணப்பொய்கையிடத்துக்கு அனுப்பினார் என பார்வதியார் தெரிந்துகொண்டவளாய் உடனே அம்மனுக்குக் கோபம் பிறந்தது. [ஸ்கந்த] இதனுள் பரமேஸ்பரியார், பார்வதியார் என ஒரே வாக்கியத்துள் எழுவாய் இரண்டுதரம் மடித்துக் கூறப்பட்டது

II. பயனிலை.

14. NOUN PREDICATES.

பொருட்பெயராதி பெயர்கள் யாவும்
பயனிலையாக வருதலும் வழக்கே.

மேலே விதந்த நால்வகைப்பெயர்களும் பயனிலையாக வரும் என்க.

உ-ம்:—அவன் சாத்தன்:—இது கல்வி.
இது பெருமை:—இவன் வந்தவன்.

15. FORM OF NOUN PREDICATES.

பெயர்ப்பய னிலையெலாம் எழுவாயாக
வழக்கில் வருவது வெளிப்படையாமே.

பெயர்ப் பயனிலைகளெல்லாம் முதலாம்வேற்றுமையில் வருதலுமன்றி, முறைமாற்றிப் பயனிலையை எழுவாயாகக் கூறினும் பொருள் அமையும் என்க.

உ-ம்:—அவன் நல்லவன் = நல்லவன் அவன்.
நெறிநின்றார் நீடுவாழ்வார் = நீடுவாழ்வார் நெறிநி

16. CONCORD OF NOUN PREDICATES.

பாலிற் பொருந்தும் பெயர்ப்பயனிலைகள்.
இடத்தின் பொருத்தம் ஏற்கமாட்டா.

பெயர்ப்பயனிலைகளிற் சில, எழுவாயோடு பாலின்மாத்திரம் பொருந்துமன்றி, இடத்தில் பொருத்தமில்லாமலும் வரும்.

உ-ம்:—நீ நேற்றுவந்தவன், நீயே அவன்.

17. PARTICIPIAL NOUN SUBJECTS AND PREDICATES.

எழுவாய் பயனிலை இரண்டிடத்திலும்
வினைப்பெயர் நடத்தலும் விதியே என்க.

ஒரு வாக்கியத்துள் எழுவாய் பயனிலை இரண்டும் வினையாலணையும் பெயராய் வருதலும் விதியென்க.

உ-ம்:—உலகத்தார் விளக்காவன, ஞாயிறு திங்கள் தீயென்பன. [பரி] உலகத்துக்கு விளக்குகளாவன சூரியன் சந்திரன் அக்கினி யென்பன். [ராமானு] உடம்பு தூய்தாதல் வாலமை நீங்குதல் [பரி] உடம்பு பரிசுத்தமாவது அழுக்கு நீங்குவது. [ராமா.]

18. Concord of Verb Predicates.

பாலினும் இடத்தினும் எழுவாயோடு
வினைமுற்றானது பொருந்தும் என்க.

முற்றுவினையாகிய பயனிலையானது எழுவாயோடு பாலிலும் இடத்திலும் பொருந்தும். ஐம்பாலில் இருதிணையும் அடங்கி நிற்றலால், திணைப்பொருத்தமும் பாற்பொருத்தத்தினுள் அடங்கும்.

உ-ம்:—சாத்தன் வந்தான், நான் வந்தேன்.

19. Exceptions.

சங்கைப் பெயரில் பொருத்தம் பிறழும்.

சங்கையினால், மேற்கூறிய பொருத்தமானது பிறழ்ந்து வந்தாலும் வரலாம்.

உ-ம்:—நாலடியார்முடிந்தது. இந்தச் ஆராத்மா என்ன பண்ணுவாறோ தெரியவில்லை. [பஞ்.]

20. Other Exceptions.

விகுதிப் பெயருள் விரித்து இதைக் கூறுவாம்.

இப்பொருத்தம் இன்னதென்றும், புறனடைவிதிகள் இவையென்றும், அடியில் விகுதிப்பெயர் இலக்கணம் கூறுமிடத்து விரிவாய்க் கூறப்படும்.

21. Several Singular Nominatives.

ஒருமைப் பெயர்பல கூடி ஒருவினை
யேற்பின், பயனிலை பன்மையாகும்.

ஒருமைப்பெயர்கள் எண்ணும்மையைப் பெற்றென்கினும் பெறும லென்கினும் ஒரு வினையை ஏற்குமாயின், அவ்வினை பன்மை விகுதியைப் பெறும் என்க.

உ-ம்:—சாத்தனும் பொம்மனும் வந்தார். சேரசோழ பாண்டியர் வந்தார். வெட்கப்படுகிறவன், பொறுமையுள்ளவன், சந்தோஷப்படாதவன், குரோதமுள்ளவன், திராச்சந்தேகமுள்ளவன், பிறர்பொருளாற் சீவிக்கிறவன் இவ்வாறு பெருந் துக்கத்தையே அனுபவிப்பார்கள். [பஞ்]

22. THE SAME WHEN DISCONNECTED.

ஒருமைப் பெயர்பல தனித்தனி வினையை
நோக்கின், பயனிலை ஒருமையாகும்.

ஒருமைப்பெயர்கள் பல தனித்தனி பிரிந்து உருபை யேற்றென்கிலும், ஏற்காமலென்கிலும் ஒரு பொருளைமாத்திரம் முறை முறையே யுணர்த்துமாகின் பயனிலையும் ஒருமையாகும்.

உ-ம்:—அவனோ இவனோ எவனோ வந்தான். சாத்தனாவது நம்பியாவது வருவான். சாத்தனாகிலும் நம்பியாகிலும் வருவான். கொல்லன் தச்சன் வருவான் "நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை நிலைகலக்கிக் கீழிடுவானும், நிலையினும் மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத் தலையாகச் செய்வானுந் தான்." [நால்]

23. SEVERAL NOMINATIVES TAKING A SINGULAR PREDICATE.

ஒருமைப் பெயர்பல ஒரு பொருள் குறிப்பின்
பயனிலை தானும் ஒருமையாகும்.

ஒருமை எழுவாய்ப்பெயர்கள் பல ஒருபொருளையே குறித்து நடக்குமெனின், பயனிலையானது ஒருமையாகும்.

உ-ம்:—புவனங்களை உண்டாக்கியவன், சகல உயிரையும் இரட்சிக்கும் நாதன் எளியனுக்கு இரங்கனோ? [பார] கொல்லான், புலாலை மறுத்தான், எல்லா உயிர்க்கு இறை. [குற] இடிப்பாரையில்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும். [குற] ஆசிரியன் பேரூர்க்கிழான், இளங்கண்ணன், சாத்தன்வந்தான். [நன்] வழி நோக்கான், வாய்ப்பன செய்யான், பழி நோக்கான், பற்றலர்க்கு இனிது. [குற]

24. SINGULAR NOMINATIVE OF A CLASS NOUN.

ஒருமைப் பெயரோ திணைப்பொருள் உணர்த்தின்
பயனிலை தானும் பன்மையாகும்.

எழுவாய்ப் பெயரானது ஒருமையாயிருந்தும் பொரு

னில் சாதி குலம் திணை கூட்டம் இவற்றை யுணர்த்துமெனின், பயனிலை பன்மையாகும்.

உ-ம்:—எப்புவி நிலைப்பன. எக்கிரி நிற்பன. எக்கடல் நிற்பன. [பார] காதறுந்தன, கண் அவிந்தன. (இவற்றுள், மூன்றுலோகம், அஷ்டகிரிகள், சப்த்த சமுத்திரம், இரண்டுகாது, இரண்டுகண் எனப் பன்மைப் பொருள் பட்டது.) தோள்மிடைந்தன, தாணிமிடைந்தென. வாள் மிடைந்தன, வான்மின் மிடைந்தென. தாள் மிடைந்தன, தம்மின் மிடைந்தென. ஆள் மிடைந்தன, ஆளிமிடைந்தென. [ராமா]

25. NEUT. PLURALS WITH SINGULAR PREDICATES.

அஃறிணை எழுவாய் பன்மை யாகினும்
ஒருமை வினையை ஏற்பதும் உளவே.

அஃறிணைப் பெயர்களில் எழுவாய் பன்மையாயிருந்தும், முற்று வினையானது ஒருமை விகுதியில் முடியுமென்க.

உ-ம்:—மாடுகள் வந்தது, மரங்கள் ஒடிந்தது. செய்யும் செய்கையும் சிந்திக்கும் சிந்தையும் ஐய நின்னது. [தாய்.]

26. RATIONAL AND IRRATIONAL SUBJECTS.

இருதிணைப் பெயர்கள் விரவி வருங்கால்
சிறப்பு நோக்கி உயர்திணை வினையும்
இழிபு நோக்கி அஃறிணை வினையும்
ஏற்று முடியும் என்மனார் புலவர்.

உயர்திணைப் பெயரும் அஃறிணைப் பெயரும் கலந்து எழுவாயாக வருமிடத்தில், சிறப்பினாலே அவ்வாறு கலந்து வருமெனின் வினையை உயர்திணையாகவும்; இழிபினாலே அவ்வாறு கலந்து வருமெனின் வினையை அஃறிணையாகவும் முடித்துக்கொள்க.

உ-ம்:—தாயும் பிள்ளையும் வந்தார்கள். திங்களுஞ் சான்றோரும் ஒப்பர். [நால்] மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா. [நன்] மறைந்த பொருளைப் பிராமணர்கள் வேதத்தினாலேயும், பசு வாசனையினாலேயும், அரசன் வேவுகாரரை அனுப்பியும் மற்றவர்கள் தங்கள் கண்களினாலும், இப்படிப் பதமாய்விலை

அறிகிறார்கள். பற்பிடுங்கின பாம்பும் மதமில்லாத யானையும் இடம்விட்டுப் பெயர்ந்த அரசும் எல்லாராலும் அவமான மடைகின்றன. பறவைகளில் வஞ்சகமுள்ளது காகமும், மனிதரில் நாவிதனும், விலங்குகளில் நரியும், மாதர்களில் பணிப்பெண்ணும் சதுரர்களா யிருக்கிறார்கள். நாய் கோழி சண்டாளன் கழுதையாகிய இவைகளைத் தொடலாகாது ஓர் பிராமணன். [பஞ்]

27. Singular and Plural Nominatives.

ஒருமைப் பெயரும் பன்மைப் பெயரும்
எழுவாயாகின் வினையும் பன்மையே.

ஆண்பால் பெண்பாலோடு பலர்பாலும் கலந்து எழுவாய்கள் ஒரு வினையை ஏற்குமிடத்தில், வினையைப் பன்மை விகுதி கொடுத்து முடிக்க. இதில் ஒருமை எழுவாயை முதலிலும், பன்மை எழுவாயை அடுத்தும் கூறுக.

உ-ம்:—அரசனும் சேனைகளும் வந்தனர். தாயும் பிள்ளைகளும் மடிந்தனர். (தவிர, ஒன்றன்பால் பலவின்பால் விரவிவரின், விதி இல்லையோவெனின், பலவின்பாலெழுவாயும் ஒன்றன்பால் வினைகொண்டு முடியுமென்று மேலே கூறியிருத்தலின், அவ்வாறு விரவிவருமிடத்து, வினையைப் பலவின்பாலினேனும், ஒன்றன்பாலினேனும் முடிக்கப் பெறுமென்க.)

III. எச்சப் பயனிலை.

28. Concord of the Subject and Participles.

எச்ச வினைகள் பயனிலையாங்கால்
முற்றுக்குரிய பொருத்தம் இன்று.

பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் எழுவாயை ஏற்றுவரும். ஆகினும், முற்று வினைக்குரிய பாலிடங்களின் பொருத்தம் எச்சங்களுக்கில்லை, அப்பொருத்தத்தை உணர்த்தும் விகுதிகள் இல்லாமையான் என்க.

29. Subject and the Relative Participle.

தொக்கும் விரியும் பெயரொச்சத்து எழுவாய்.

பெயரொச்ச வினைகளினது எழுவாய் விரிந்தாகினும்தொக்காகினும் வருமென்க.

உ-ம்:—செய்தசெய்கை = (ஒருவன் செய்தசெய்கை) நான்சொல்லிய சொல்.

30. Subject and the Verbal Participle.

செய்தெனும் பயனிலைப் பின்வரும் வினைக்குப்
பிறிதோர் எழுவாய் இல்லென மொழிவர்.

பலவினைகளை ஒரு எழுவாய் ஏற்றுவருமிடத்து, ஈற்று வினையன்றி மற்ற வினைகளெல்லாம் செய்தெனும் எச்சத்தில் நிற்கவேண்டியதுபற்றி, செய்தெனும் பயனிலைக்குப் பின்வரும் வினைக்கு வேறு எழுவாய் வருவது கூடாதென்று பொது விதி கூறியுளர்.

உ-ம்:—நெருப்பில் விழுந்து வெந்து விரிந்து சாம்பலானான் சாத்தன்.

31. Exceptions General.

வாக்கியங்கள் பலவே யாகினும்
கருதிய பொருள்தான் ஒன்றுமாகின்,
ஈற்றைத் தவிர மற்றை வாக்கியங்கள்
செய்தெனும் பயனிலை கொண்டே முடியும்.

வாக்கியங்கள் பலவாகத் தோன்றியும், அவை ஒரேபொருளை யுணர்த்துமாயின், அவற்றை ஒரே வாக்கியமாகக் கருதி, கடைசி வாக்கியத்தையன்றி மற்றை வாக்கியங்களையெல்லாம் செய்தெனும் பயனிலைகொண்டே முடிக்கப்படும்.

உ-ம்:—கோழி கூவிப் பொழுது விடிந்தது. கண்ணவிந்து குருடனானான். ஆறு கரைபுரண்டு போகிறது. மனம் உருகிப் பிள்ளையை எடுத்தாள். அவன் காலொடிந்து நொண்டியானான். கோபம் நீங்கிக் கிருபை செய்தார். [பரா] குண்டுபட்டுச் செத்தான். எருது விழுந்து காலொடிந்து நொண்டியாச்சுது. [பஞ]

(கோழி கூவிப் பொழுது விடிந்தது முதலிய வாக்கியங்களைக் கோழி கூவப் பொழுது விடிந்தது எனக்கூறி, ஒரு வினையெச்சம் ஒரு வினை எச்ச வழுவாயிற்றென அமையாதோ எனின்; ஆறு கரைபுரண்டு போகிறது, குண்டு பட்டுச் சாகிறது என்ற வாக்கியங்களில் அவ்வாறு வருதல் கூடாமையான் அமையாதென்க. அன்றி, கோழி கூவிற்றெனினும், பொழுது விடிந்ததெனினும், கருதின பொருள் ஒன்றாகி, ஒரு வாக்கியத்தை விட்டு ஒரு வாக்கியத்தைக் கூறினே, கருதினபொருள் தோன்றுகையான், யாம் மேற்கூறிய விதியே சிறந்த விதியென்று தெளிக. இன்னும் இவ்விதிக்கு விபரங்களும் பலவாறான உதாரணங்களும் எச்ச இலக்கணத்திற் கூறப்படும்.)

32. Concord of other Participles.

செய்ய, செய்யின், செய்யினும், செய்தும்,
செய்யவும் என்னும் பயனிலைப் பின்னே
வேறு வாக்கியம் வருதலும் விதியே.

மேலே விதந்த ஐந்து வினையெச்சப் பயனிலைக[ளுக்குப்] பின்னும் வேறு எழுவாய் வருதல் விதியாம்.

உ-ம்:—நான் சொல்ல அவன் போனான். நான் [சொல்]லவும் அவன் போனான். நான் சொன்னால் [அவன்] போவான். நான் சொன்னாலும் அவன் போ[கான்.] நான் சொல்லியும் அவன் போக இல்லை.

33. Object Converted into Subject.

செய்வினை படுவினை யாகுங்காலை
செயப்படுபொருளும் எழுவாயாகும்.

செய்வினைகொண்டு முடியும் வாக்கியத்தை ப[...] செயப்பாட்டு வினையைக்கொண்டு முடியும் வாக்கி[...] கூறுமிடத்தில், செய்வினை வாக்கியத்தில் செயப்ப[...]ருளாயிருந்த பெயரைச் செயப்பாட்டுவினை வாக்கி[...] எழுவாயாகக் கூறுக.

உ-ம்:—சாத்தனை அடித்தார்கள் = சாத்தன் [...]டான். ஒருவன் நல்வினையைச் செய்யவே[...] நல்வினை செய்யப்படும். [குற]

இவ்விதியை எழுவாயீற்றில் இன்னும் விரித்து[...]றுதும்.

IV. இரட்டெழுவாய்.

34. PREDICATED NOMINATIVE.

ஆது என் வினைமுன் வரும் ஈரெழுவாய்.

ஆகென்ற வினை பயனிலையாகுமிடத்து அப்பயனிலைக்கு இரண்டெழுவாய் வரும். இதை ஆக்க எழுவாய் என்க.

உ-ம்:—மந்திரி அரசன் ஆனான். தம்பி பெரியவன் ஆனான். (இவ்வினையானது பெயரெச்சமாயும் வினையெச்சமாயும் விகாரப்படுமிடத்தும் இவ்வாறே இரண்டெழுவாய் ஏற்று வருதலால், இதின் பெயரெச்சத்தைக்கொண்டு முடியும் பெயர்ச்சொற்கள் பெயருரிபோலும், வினையெச்சத்தைக்கொண்டு முடியும் பெயர்ச்சொற்கள் வினையுரிபோலும் நடக்கும் என்க. உ-ம்:—அரசனான மந்திரி. பெரியவனான தம்பி.)

[illegible]E SAME.

[illegible]றும் முன் எழுவாய் ஒன்றும் இரண்டும்
[illegible]கும் பொருளும் பேதமாகும்.

[illegible] என்னும் வினை பயனிலையாகுமிடத்து அப்பய[illegible] ஒட்டி ஒரு எழுவாயும் இரண்டு எழுவாயும் [illegible] அவ்விரு வழக்கினும் பொருள் வெவ்வேறாகும்.

[illegible]—நான் கெட்டவன் என்றான் அவன். [எ. ஒன்று.]
[illegible]னைக்கெட்டவன் என்றான் அவன். [எ. இரண்டு.]

[illegible] பொருளில் பேதப்பட்டது எங்ஙனமெனின்: [illegible] திருவேங்கடம் என்னும் இருவருள், சுந்தரத்[illegible]ர்க்கையாயும் திருவேங்கடத்தைத் தன்மையாயும் [illegible] "நான்கெட்டவன் என்றான் சுந்தரம்" எனின், தன் [illegible]ன்று பொருளாயினதும், "என்னைக் கெட்டவன் [illegible] சுந்தரம்" எனின், திருவேங்கடத்தை என்று பொ[illegible]தும் காண்க. இவ்வினை பெயரெச்சமாயும் வி[illegible]சமாயும் வருமிடத்தும் இவ்விதியே அமையுமாத[illegible] அது பெயருரியாயும் வினையுரியாயும் வழங்கும் [illegible]

[illegible]மேற்கூறிய இரண்டு வினைகட்கும் வினையியலிலும் [illegible]யப் பிரிவியலிலும் விரிவிலக்கணம் கூறப்படும்.

36. Reduplicated Nominatives.

ஆதலும் எனலும் எனும் இருவினையால்
அணையும் பெயர்கள் எழுவாய்ப் பின் வரும்.

மேற்கூறிய இரண்டு வினையாலணையும் பெயர்கள் எழுவாயை யடுத்துவந்து பயனிலைக்கு இரட்டெழுவாய் போலத் தோன்றும். இவற்றை எழுவாயுருபென்பர்.

உ-ம்: சாத்தனானவன் வந்தான். சாத்தி என்பவள் வந்தாள். பட்சியானது ஆகாயத்தில் பறக்கப்பட்டது. ஓய்! ராசாவே! நீயாவது தலையோ வயிறோ கையோ காலோ? இந்த அவயவங்களுக்குப் புறம்பான சூட்சுமப் புத்தியினால் உன்னை யாரென்று விசாரித்துப்பார். [சத்] இவ்வாக்கியத்தில் நீயானவன் என்று வரவேண்டிய பதம் பொருள்நோக்கி ஆவது என்றாயிற்று. நீயாவது=நீ யென்ற பெயர்.

37. Their use.

அறிவே வலியே உறுத்தப் படுமெனின்
அறையப்படுமே எழுவாயுருபு.

அறிவுறுத்திய விடத்தும் வலியுறுத்திய விடத்[illegible]
ருபெயரொடு எழுவாயுருபுகள் வருவது எங்ஙனமெ[illegible]
சாத்தனைப்பற்றி ஒன்று சொல்லுமிடத்தில், கேள்க்[illegible]
க்குச் சாத்தனது பெயரும் வரலாறும் ஒன்றும் தெ[illegible]
மல் அவனைப்பற்றிச் சொல்லிய யாவும் முற்றும் நு[illegible]
யிருக்குமேயாகில், சாத்தன் என்பவன், சாத்தன் [illegible]
பட்டவன், சாத்தன் என்ற நாமதேயத்தை யுடைய[illegible]
ருவன் என இவ்வாறு எழுவாயுருபு கொடுத்துக் [illegible]
கும். அன்றி, கேட்கின்றாருக்குச் சாத்தன் அறிமு[illegible]
வனாகியாகினும், முன்னால் கேள்விப்பட்டிருப்பவனா[illegible]
னும் இருப்பானேயாகின், இவ்வுருபுகளில்லாது [illegible]
வந்தான், சாத்தன் இறந்தான் எனக் கூறலாகும். [illegible]
று இடுகுறிப்பெயரொடு எழுவாயுருபு வருமிடத்[illegible]
றுத்தி என்க. மற்றைப்பெயரொடு அவை வருமிட[illegible]
லியுறுத்துமென்க. எங்ஙனமெனின், ஒருவனுக்கு[illegible]
டைமைகளிலெல்லாம் ஊக்கமே சிறப்புற்றதெனயு[illegible]
ற்குமேற்பட்ட உடைமை வேறொன்றும் இல்லையெ[illegible]
பொருள்கருதின திருவள்ளுவர் "உடையான் என[illegible]
து ஊக்கம்" என்றார். ஊனக்கண்ணினும் ஞான[illegible]

ணே மிக்க சிறப்புடைத்தென்று கல்வியினது பெருமையைக் கூறவந்தவர், "கண்ணுடையார் என்பவர் கற்றோர்" என்றார். பொருள் கருவி காலம் வினை இடனொடைந்தும் இருள்தீர எண்ணிச் செய்கின்றவனுக்கு எதுவும் கைகூடும், கைகூடாதது யாதேனும் இல்லை என வலியுறுத்தும் பொருட்டு "அருவினை என்ப உளவோ" என்றார். இல்வாழ்க்கையின் பெருமையைக் கூறவந்தவர், "இல்வாழ்வான் என்பான், இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை." எனவும், "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வான் என்பான் துணை." எனவும் "இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல்வாருள் எல்லாம் தலை." எனவும் "நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த இல்லாண்மை ஆக்கிக்கொளல்." எனவும் கூறினார். "மராமரம் இவையென வலிய தோளினான், அராவணை அமலன் என்று அயிர்க்கும் ஆற்றலான், இராமன் [illegible] பெயர், இளையகோவொடும் பராவரும் முனி [illegible] ்பதிவந்தெய்தினான்." "தாடகை என்பது அச்சழ [illegible] டமே." [கம்.]

[illegible] ிங்ஙனமாக, இடுகுறி சிறப்புப்பெயராய் வழங் [illegible] பெயர்கள் வழக்குப்பெயரெனின் உருபின்றியும், [illegible] ழக்கல்லனவாகின் உருபேற்றும் வருமென்க.

[illegible] —சுந்தரம் வந்தான் எனின் வழக்குப்பெயரான்மை [illegible] ருபின்று. ஆபிரகாரம் லின்கொன் என்பவர் இறந் [illegible] ர் எனின் தமிழில் வழங்காப் பெயரான்மை, உரு [illegible] ற்றது.

[illegible] ன்றியும், அவ்விகுதிப் பெயர்களினீற்றில் உயர்பு இ [illegible] ு முதலிய சங்கை தோன்றுத விடத்து அச்சங்கை [illegible] த் தெரிவிக்கும்பொருட்டு எழுவாயுருபுகள் வரு [illegible] ன்க.

[illegible] —இராமசாமி என்பவர் சொன்ன சொல் (உயர்பு [illegible] ாக்கி.) இராமசாமி என்பவன் சொன்ன சொல் [illegible] ழிபுநோக்கி.) இராமசாமி சொன்னசொல் (இவை [illegible] ண்டும் இல்லாவிடத்து.)

[illegible] பொருளின் குணமும் இயல்பும் இதுவென்று வ [illegible] யறுத்துச் சொல்லுவதும் அறிவுறுத்தும் பொரு [illegible] ணமை அவ்விடங்களிலும் எழுவாயுருபு வரப்பெறு [illegible] ன்க.

உ-ம்:—"அறன் எனப்பட்டதே இல்வொழுக்கை அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று" [குறள்] கண்ணுடியானது ஓர்வகை மண்ணிறைற் செய்யப்படும். சிங்கமானது காட்டு மிருகங்களுக்கெல்லாம் அரசன். [Third Reader.] மண்ணானது இறுகவும், நீரானது பரவவும், தீயானது சுடவும், காற்றுனது சஞ்சரிக்கவும், ஆகாயமானது இவைகளுக்கெல்லாம் இடம் தரவும் செய்தது ஆர். [விநோ]

வேறுதாரணங்கள்:—அப்போது சகல நீதிசாஸ்திரங்களிலும் வல்லவனுகிய சோமசன்மா என்பவன் எழுந்து இவர்களுக்குச் சமானமான அறிவுடையவர்கள் இவ்வுலகத்தில் இல்லையென்று சொல்லும்படி நான் ஆறுமாசத்திற் செய்யமாட்டுவேன் என்று சபதம்பண்ணினுன். அதைக்கேட்டு அரசன் மனமகிழ்ந்து தன்னுடைய பிள்ளைகளை அவன் வசத்தில் ஒப்பித்தான். சோமசன்மா உடனே அந்தப்பிள்ளைகளை அ... கொண்டுபோய் நீதி சாஸ்திரங்களைப் பஞ்சத... தையாகக் சற்பித்து ராஜகுமாரர்களுக்குச் ... த்தொடங்கினுன். [பஞ்] (சோமசன்மாவின ... முதற்றரம் வந்தமை எழுவா யுருபேற்றது ... டாம் தரம் வந்தவிடத்து அஃதின்றித் தனிப்... வந்தது காண்க.)

38. Double Nom. with அல்ல.

அல் எனும் மொழிமுன் வரும் ஈரெழுவா...

அல்லவென்னும் குறிப்பு வினைமுற்று பயனி... மிடத்தில் அதற்குமுன் இரண்டு எழுவாய்க... ன்றும்.

உ-ம்:—கல்லெல்லாம் மாணிக்கக் கல் அல்ல. [... பெற்றவரொல்லாம் பிள்ளைகள் அல்ல. ... ரொல்லாம் பெண்டிருமல்ல. [வெற்]

39. The same with இல்லை.

பால் இட விகுதியில் இல்லை வருமேல்
எழுவாய் இரண்டாம். இல்லை, அல்லவே...

இல்லையென்னும் சொல் ஐம்பால் விகுதிகளையும் மூவிட விகுதிகளையும் பெற்று பயனிலையாக வருமாகில், இரண்டெழுவாய்களைப்பெறும். அதுதவிர, இன்று இல்லை என பொதுவாய் வருமெனில், இரண்டெழுவாய் வரமாட்டா.

உ-ம்:—அவன் பொருள் இலான்; கல்வி இலான் எனவரும். அதுவே, அவனுக்குப்பொருள் இல்லை. கல்வியில்லை எனவும் வரும். இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும். [குற] வாணுதல் சீதையும் வாழ்வு இலள் என்பார் (ஈரெழு) ஞானமுனிக்கு ஒரு நாண் இலை என்பார். (ஓரெழு) பீனதனத்தவள்பேர் இலள் என்பார். (ஈரெழு) [கம்.]

40. THE SAME WITH உள்.

உண்மை வினைக்கும், அதுவே விதியாம்.

இன்மைப்பொருளை யுணர்த்திய குறிப்பு வினைக்கு [illegible] விதியோ அதுவே உண்மைப்பொருளை யுணர்த்திய [illegible]ு வினைக்கும் விதியென்க. எனவே மேற்காட்டிய [illegible]ணங்களையே இதற்கும் ஆக்கிக்கொள்க.

[illegible]:—யான் செல்வமும் பெருமையும் உளன். எனவும் எனக்குச் செல்வமும் பெருமையும் உண்டு எனவும் வருதல் காண்க. செல்வத்தையும் பெருமையையும் உளன் என செயப்படுபொருள் விரித்துக்கூறின் அமையாதோவெனின், இன்மையும் உண்மையும் ஓரியல்பின மொழிகளானமை, இன்மை வினைக்கு எழுவாய் சிறக்குமெனின், அதுவே உண்மை வினைக்கும் சிறப்பென்க.

[illegible]ண்டு இல்லை அல்ல இம்மூன்றும் ஐம்பால் மூவிடங்க[illegible]ம் பொதுவாய் வருதல் வழக்காகினும், அவையே பா[illegible] [illegible]ிகுதிகள் பெற்று பெரும்பான்மை செய்யுளிலும் சி[illegible]ன்மை உலக வழக்கிலும் வரும். அதனால் இவ்விதி [illegible] இவ்விடத்தில் அனுசரித்தாம். இம்மூன்றனுள், அல் [illegible]னும் சொல் விகாரப்பட்டேனும் படாதேனும் இர[illegible]ழுவாய் பெரும். இல்லையெனும் மொழி விகாரப் [illegible] இரண்டெழுவாய் பெறும். உண்டெனும் கிளவி [illegible]ரப்படின் இரண்டெழுவாய் பெறுவதுமன்றி, ஒன் [illegible] செயப்படுபொருளாகக் கூறினும் பொருள் அமை [illegible]

41. THE SAME BEFORE CONJUGATED ADJECTIVES.

பண்படியான குறிப்பு வினையும்
ஏற்கும் எழுவாய் இரண்டென்பாமே.

உரியடியாய்ப் பிறந்த குறிப்பு வினைகளும் பயனிலையாகுமிடத்தில் இரண்டு எழுவாயை ஏற்றுவருமென்க.

உ-ம்:—தம்பி வயிறு பெரியன். நம்பி பொன் பெரியன்.

42. THE SAME WITH PHYSICAL MEMBERS.

முதல் சினை இரண்டும் எழுவாயாகும்.

முதல் சினை எனவும் பிண்டம் உறுப்பெனவும் விதந்த பெயர்ச் சொற்களிலும் இரண்டெழுவாய் ஒரு பயனிலையைக்கொண்டு முடியும்.

உ-ம்:—பிள்ளை கால் நொண்டுகிறது. அவன் மனம் நொந்தான். அவன் மனம் திரும்பினன். அவள் கண் அவிந்தாள். அவள் காதறுந்தாள். அவன் இடுப்பொடிந்தான். கடவுள் திருவாய் மலர்ந்தார். அவள் கால் இடறினள். ஸ்ரீகிஷ்ணதேவர் உலகமெல்லா[illegible] தமது திருமேனி மறுபடியும் அடங்கினர். [illegible] தாமரை வேர் இருந்தால் தண்ணீரோ த[illegible] தாமரைவேர் அறுந்தால் தாயே பகையாகு[illegible] நீ மனம் தடுமாறேல். [ஔவை] இராசன் [illegible] மகிழ்ந்து தன் பிள்ளைகளை அவன் வசத்தில் [illegible] தான். [பஞ்] வீமன்,-வாடி முகம் சோர்ந்து [illegible] முகம் வேறுபட்டான். [புக] கடைசியர் [illegible] போதும் கண் மலர்ந்து ஒளிரும் மாதோ[illegible] குறையெலாம் சோலையாகிக் குழியெலா[illegible] நீர[illegible]கித் துறையெலாம் கமலமான சோணையா[illegible] (சோணை ஆறு துறையெலாம் கமலமாய் இ[illegible] இதனுள் ஐந்து எழுவாய்ப் பெயர்கள் ஒரு வி[illegible]ண்டு முடிந்தது காண்க.)

43. THE SAME WITH GENUS AND SPECIES.

பொதுப்பெயர் சிறப்புடன், எழுவாய் இர[illegible]

பொதுவும் சிறப்பும் என விதந்த பெயர்களி[illegible] இரண்டெழுவாய் ஒரு பயனிலையைக்கொண்டு முடி[illegible]

உ-ம்:—கங்கைநதி இரைகின்றது. சுந்திர பா[illegible] ஆண்டான். தாவீது அரசன் யூதர்க்கரச[illegible] [illegible]ளைப் பாம்பு கடித்தது.

44. THE SAME WITH NUMERAL NOUNS.

எண்ணும் ஏற்கும் எழுவாய் இரண்டை.

எண்ணுப்பெயர்களும் முற்றெண்ணுப்பெயர்களும் இரண்டெழுவாயாக நின்று ஒரு பயனிலையை ஏற்று நடக்கும்.

உ-ம்:—சாட்சிகள் மூன்றுபேர் வந்தார்கள். அரசர் மூவர் கொலுவிருந்தார். யானைகள் ஐம்பது வந்தன. சுதரிசனன் என்னும் இராஜன் ஒருவன் இருந்தான். [பஞ்]	எண்ணுப்பெயர்கள்.
பூலோகத்தில் நிலையாயிருப்பது ஒன்றுமில்லை. அவர்கள் நால்வரும் வந்தார்கள். வீடுகள் மூன்றும் வெந்து போயின. அவர்கள் எல்லாரும் வந்தார்கள். பூலோகம் யாவும் அழியும்.	முற்றெண்ணுப்பெயர்கள்.

45. THE SAME WITH MODIFYING NOUNS.

அளவுப் பெயரிலும் எழுவாய் இரண்டாம்.

அளவைக்காட்டிய பெயர்ச்சொற்களும் உரிச்சொல் [illegible]ல் நடந்து இரண்டெழுவாய்கள் கூடி ஒரு பயனிலை [illegible]கொண்டு முடியும்.

உ-ம்:—சிறிது தூரம் தொலைந்தது. கொஞ்சம் நேரம் கழிந்தது. வீடு எல்லாம் வெந்தது.

46. NOMINATIVE ABSOLUTE.

ஒருபுடை தொடங்கி ஒருபுடை முடியும்
வாக்கியங்களை வகுத்து நோக்கின்
இல்லை பயனிலை, ஓர் எழுவாய்க்கே.

ஒரு பொருளை யுணர்த்தத்தொடங்கிய வாக்கியமானது [illegible]ரு பொருளைக்கொண்டு முடியுமாயின், அவ்வாக்கி[illegible] ஓர் எழுவாயானது பயனிலையில்லாது தனியே [illegible]ம்.

உ-ம்:—சுந்தரம், படுத்து நித்திரை செய்துகொண்டிருந்தவன், திடீலென்று முழித்தான். நீ, சும்மா போகிறவன், இதைக் கையில் எடுத்துக்கொண்டு போகலாமே. அந்தத் துரைசாணி, பிள்ளைகளுக்கு ஆறு

க்கு ஒரு பழம் கொடுத்துக்கொண்டு வந்தவள், சுந்தரத்திற்குமாத்திரம் கொடுக்கவில்லை. (இவற்றுள் இருந்தவன், போகிறவன், வந்தவள் என்னும் பெயர்கள் தனியெழுவாயாக நின்றது.) சிறு குட்டியாய் இருக்கும்போதே இப்படிக் கடுமையாய் ஓட்டம் பிடித்தது, இனிமேல் வளர்ந்து பஞ்சாரமாகிறபோது எப்படிப் பறக்கமாட்டாது. [பரமா] இந்த விகாரங்கள் விகுதிப் புணர்ச்சிக்கும் பொருந்துமென்று சொல்ல வந்தவர், பொதுமையிற் பண்பிற்கியல்பென்றார் நூலுரை யாசிரியர். [நன் உரை] ஆலகால விஷத்தையுண்டு மன்னுயிரைக் காத்தருளிய சிவபிரான் படைத்த தீப்பொறிகளினது சுவாலைக்குச் சகிக்கப்படாதவளாய் பரமேஸ்பரியானவள் பயந்து தமது திருமாளிகையை நோக்கி ஓடினவள் தெரிந்துகொண்டாள். [கந்த.] (இவ்வுதாரணங்களை நோக்குங்கால் இவ்வாறு தனி யெழுவாயாக வ... பெயர்கள் வினையாலணையும் பெயர்கள் எ... தோன்றியது.)

47. DESCRIPTIVE NOMINATIVES.

விசேடண எழுவாய் பலவாகும்மே.

ஒரு பொருளை விசேடித்துக் கூறுமிடத்தில் அநேக எழுவாய்கள் வந்து ஒரு எழுவாய்போல் ஒரு வினை... கொண்டு முடியும் என்க.

உ-ம்:—பந்திபந்தியாய் ஆயிரம் யானை முகங்களைப் பெற்றவன், அத்தொகை புல்லிய நீரை ஒழுக்கியிருக்கும் துதிக்கைகளைப் படைத்தவன், நவரத்ன மயமா... கிம்புரிக்கோடுகள் ஒவ்வொரு பாரிசங்களில் பி... யைப்போல இரட்டையாகப் பெற்றவன், பர... கிருதியாகத் தோற்றும் இரண்டாயிரம் புஜங்க... படைத்தவன், எக்காலத்தும் கோபமே குடிகொண்டு காந்திக்கொண்டிருக்கும் மனதைப்பெற்றவன், மன்னுயிரனைத்தினையும் காலாதிகளிற் கொண்டுபோக வல்ல எமனுக்கும் ஒரு எமனையொத்த கொடிய தொழிலை நடத்தும் பாதகன், கொலைகளாகிய பாதக... களையே எக்காலமும் விரும்பிய கருத்தை யுடை... வன், சண்டை எப்போது கிடைக்குமென்று எண்ணியிருக்கும் மனதைப்படைத்தவன், மதயானை ...

கம் புலி கரடி பன்றி யித்தொகை பாரித்த மிருகங்களை ஒவ்வொரு கரத்தில் ஆயிரக்கணக்கில் எடுப்பித்துப் பிலத்தை ஒத்த வாய்களிற்போட்டு இரு கடையினும் உதிரம் பீரிட்டொழுகத் தின்னும் மிகுந்த பசியுள்ளவன், இத்தகை புஜபல பராக்கிரமசாலியாகிய கெஜமுகன் தனக்கு வாணுள் குறுகி மாய்வதற்குச் சமீபத்தபடியால், ககனமார்க்கமாகப் போகும் வீரவாகு தேவனைக் கண்டவுடன் வடவையைப்போல் பொங்கி எழுந்து அவனைத் தடுப்பதாக இவ்வார்த்தைகளைச் சொல்லுகிறுன். [கந்த] (இதனுள் பத்து எழுவாய் ஒரு எழுவாய்போல, சொல்லுகிறுன் என்னும் பயனிலையைக்கொண்டு முடிந்தது.) அல்லி பெருமாள், அரசாளும் நாயகியாள், ஆயிரம் பாண்டியற்கு அரிய துரைமகளாள், மதுரை நகர் ஆளும் வாழ் பாண்டிநாடு உடையாள், தென் மதுரை யாளுகிற தேன்மொழியாள், அல்லியம்மாள், ஆண் அரசாண்டாலே அழிந்துபோம் சீமை என்று பெண்ணரசு ஆளப் பிறந்தாளே அல்லியம்மாள். [புகழ்] (இதனுள் எட்டு எழுவாய் ஓர் எழுவாய்போல் பிறந்தாள் என்னும் பயனிலையைக்கொண்டு முடிந்தது.) அங்கே சித்திரப் பதுமையைப்போலே நடமாடுகிற தமயந்தியைக்கண்டு வெகு துயரப்பட்டு, பார்த்தையா! ஐயய்யோ! தெய்வமே! சகல லட்சணங்களும் உள்ளவள், தாமரைப் புஷ்பத்தில் வீற்றிருக்கிற மகாலட்சுமியைப் போன்றவள், தன் புருஷனை ஒரு நிமிஷமாகிலும் பிரியாதவள், நவகண்டங்களும் ஆளுகிற நளச்சக்கிரவர்த்தியுடைய பட்டதேவி, அநேகம் ஸ்திரீகள் சூழ்ந்திருக்கப்பட்டவள், இப்போது தன் புருஷனைப்பிரிந்து ஒண்டியாய் அநாதியைப்போலே தலை மயிர்கள் சடைபற்றி யிருக்க, உடம்பெல்லாம் புழுதியடைந்து சரீரம் இளைத்து உருமாறியிருக்க என் கண்ணில் பார்க்கலாச்சுதே என்று வெகுவாகப் பிரலாபித்தான் பிராமணன். [நளச்]

வில்லினர், வாளினர், வெறித்த குஞ்சியர்,
கல்லினை அழித்து உயர் கனகத் தோளினர்,
வல்லியின் மருங்கினர் மருங்கு, மாப்பிடி
புல்லிய களிறு என, மைந்தர் போயினர். [கம்]

47 *A*. ORDER OF THE DESCRIPTIVE NOMINATIVES.

திணை நிலம் சாதி குடியே உடைமை
குணம் தொழில் கல்வி சிறப்பாம் பெயரொடு
இயற்பெயர் ஏற்றிடில் பின்வரல் சிறப்பே.

இவ்வாறு விசேடணமாகப் பல எழுவாய்கள் ஒரு பொருளைத் தழுவி வருமிடத்து, விசேடணவகையான் வந்த எழுவாய்களை முதலினும் இயற்கையாயுள்ள பெயரை ஈற்றினும் நிறுத்திக் கூறுக என்றார் பவணந்தி

உ-ம்:—ஆசிரியன், பேரூர்கிழான், இளங்கண்ணன், சாத்தன் வந்தான். (மேற்காட்டிய உதாரணங்கள் யாவற்றுள்ளும் இவ்விதி அடங்கியிருத்தலைக் காண்க. அன்றியும், ராமாயணத்தில் தாடகை இத்தன்மையள் என்று நான்கு விருத்தங்களிற் சொன்னவர், அவளது பெயரை நான்காம் விருத்தத்தின் கடையடியிற் கூறிய துங்காண்க.)

சூடக அரவுறழ் சூலக் கையினள்,
காடுறை வாழ்க்கையள், (கண்ணிற் காண்பரோல்
ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்!)
தாடகை என்பது அச்சழக்கி நாமமே.

V. எழுவாய் விகாரம்.

48. SUBJECTS IN FORM AND IN SENSE.

பொருளால் எழுவாய் தொடரால் பிறவா...

கருத்தை நோக்கினால் எழுவாய்ப் பொருளா யி... சொற்கள், வாக்கியத்தொடரை நோக்கினால் பிற ... மைகளாயும் வருமென்க.

49. CONVERSION OF THE SUBJECT.

மூன்று நான்கு ஆறினுள் எழுவாய் விரியு...

பொருளினால் எழுவாயாக வரும் பெயர்கள் ... னால் மூன்றும், நான்காம், ஆறும் வேற்றுமை யுரு... ஏற்றுவரும் என்க.

உ-ம்:—அவராற் செய்யப்பட்டது=அவர் செ... (மூன்றில் வந்தது.)

அவர்க்கு முடியும்=அவர் முடிப்பர். } நான்கில்
எனக்குக்கேட்கிறது=நான்கேட்கிறேன். } வந்தது.
என்வரவு=நான்வருதல்—ஆறில் வந்தது.

இவ்விதியை இங்ஙனம் யாம் கூறவேண்டிய காரணம் யாதெனின், இலக்கண நூலாசிரியர் இவ்விசற்பத்தைத் தெரிவியாராகி ஒரு பெயரை ஒருகால் கர்த்தா என்றும் ஒருகால் கருவி என்றும் கூறி மாணுக்கர் மனத்தை மயக்குவித்தலால், அம்மயக்கை நீக்குவிப்பான் கூறினம் என்க. அன்றியும், ஒரு வாக்கியத்தையே பொருள் சிதைவு படாது பலவாருகக் கூறப் பழகுதல் நல்ல அப்பியாசமாகையால், எழுவாய் வாக்கியமானது எவ்வெத்தன்மையாய் மாறுபடும் என்றறிதல் மிக்க பயனுடைத் தென்க. அதனுல், இவ்வாறே ஒவ்வொரு வேற்றுமையியல் ஈற்றினும், அவ்வவ் வேற்றுமைகளே வேறு வேற்றுமைகள் கொண்டுணர்த்திய விதங்களைக் காட்டுதும். ஒரு கருத்தைப் பலவாருக விரித்துச் சொல்லிய சக்தியின்றி, ஒரு வாக்கிய வாசக நடை சிறப்புருதாதலால், அச்சக்தியைப் பெருக்குவித்தற்கு உபயோகமான விதிகளைக் கூறுவதே இ[illegible] கருதிய பொருட்டுப் பொருள் என்றுணர்ந்து, [illegible]நடை சிறப்புற எழுதவேண்டுமென்று விரும்பிய [illegible]க்கர் யாவரும் இவ்விதிகளை நன்காருயக் கடவர்.

VI. இரண்டாம் வேற்றுமை.

50. SECOND CASE: GOVERNMENT.

வினையைத்தழுவும், பெயரைத்தழுவா,
இரண்டாம் வேற்றுமைப் பெயரோ என்க.

இரண்டாம்வேற்றுமை ஒன்றே வினையைமாத்திரம் [illegible] நடக்கும். மற்றவேற்றுமைகள் பெயருக்கும் வினைக்கும் பொதுவாய் நடக்கும்.

51. POSITION.

வினையின்முன்னே செயப்படு பொருள்நிலே.
ஆயினும், வினையும் முதலில் நடக்கும்.

செயப்படுபொருளாகிய இரண்டாம் வேற்றுமைப் பெயர்கள் வினைக்குமுன்னே நடக்கும். ஆகினும், தெளிவு

சிறப்பு முதலிய காரணங்களையிட்டு வினையை முன்னும் செயப்படுபொருளைப் பின்னுமாகக் கூறினும் கூறலாம்.

உ-ம்:—சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராவர் பொறுப்பது கடனே. [வெற்] கண்ண பொறுத்தருள் ! வெண்ணெ அருந்திய கள்வபொறுத்தருள்! நீ, திண்ண மனத்து உணர்வு ஒன்றும் இலாதவர் செய்த பெரும் பிழையை. [பார] அரும்பயன் ஆயும் அறிவினர்சொல்லார், பெரும்பயன் இல்லாதசொல். [குற] முருகென்றது சுப்பிரமணிய சுவாமியை. [திருமு] யாரையெனின் அம்முத்தியைப் பெறுநனாகியும் அதனைப் பெறுதற்கு அபேட்சை உடையானாகியும் உள்ளான் ஒருவனை. [திருமு] அடாபீஷ்மா ! இனி என்னதாமசம். எடுவில்லை. தொடுசரத்தை என்று கூறினார் பரசுராமர். [பாரத]

52. Extension of the term. செயப்படுபொருள்.

கொடுபொருள் விடுபொருள் செய்பொருள் சேர்பொருள் அகப்பொருள் பொறிப்பொருள் ஆம் செயப்படு பொருள்.

மேலே கூறிய சகலவகையான பொருள்களும் செயப்படுபொருளில் அடங்கும் என்க. (விரும்பல் மறத்தல் சிந்தித்தல் சிநேகித்தல் முதலாய மனச்செயல்களுக்கு இடமானவற்றை அகப்பொருள் என்றும்.)

53. Verbal Nouns Governing a Case.

தொழிற்பெயர் வினைப்பெயர் ஏற்கும்: ஏற்கா ஏனைப் பெயர்கள் செயப்படு பொருளை.

தொழிற்பெயர்களும் வினையாலணையும் பெயர்களு மாத்திரம் செயப்படுபொருளை ஏற்றுவரும். பொருட்பெயர் பண்புப்பெயர்கள் என மேலே விதந்த பெயர்கள் ஏற்று வாரா. என்னெனின், வினையடியான இருவகைப் பெயர்களும் வினையின் தன்மையால் செயப்படுபொருள் ஏற்பதன்றிப் பெயரின் தன்மையால் ஏற்பது இல்லை. ஆதலால் வினைகள்மாத்திரம் செயப்படுபொருளை ஏற்குமன்றி, பெயர்கள் ஏற்று இயலாதெனப் பொதுவிதி பெறப்பட்டது.

உ-ம்:—கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ்க்களை கட்டதனொடு நேர். [குற] மலைகளின் சிறகை அறுத்தவன் இந்திரன்.

54. TRANSITIVE VERBS.

வினையே செய்கை யாதலினாலே
வெறுவினை காரிய வினைஎன இரண்டுள்
பின்வினை செய்பொருள் ஏற்கும் என்றார்.

வினையானது ஒருபொருளின் தொழிலை யுணர்த்தியதனால், அத்தொழில் வெறுந்தொழில் எனவும் காரியத்தைச் செய்யும் தொழிலெனவும் இரண்டாக்கி, அவற்றுள் காரிய வினைமாத்திரம் செயப்படுபொருளை ஏற்று நடக்கும் என்று கூறியுள்ளார். இவற்றையே செய்பொருள் குன்றாவினை யெனவும் குன்றிய வினையெனவும் பிறருங் கூறியதுகாண்க.

☞ ஆக்கல்அழித்தல் அடைதல் நீத்தல் ஒத்தல் உடைமை ஆதியென்று பவணந்திமுனிவர் இரண்டாம் வேற்றுமையினது பொருளைக் கூறியிருத்தலால் செயப்படுபொருள் குன்றாவினை இவையென ஒருவாறு காட்டுவான், யாமும் இங்ஙனம் அப்பொருளை விளக்கியும் விரித்தும் கூறுதும்.

55. VERBS OF DOING.

ஆக்கலும் அழித்தலும் ஏற்கும் செய்பொருள்.

ஆக்கும் வினையும் அழிக்கும் வினையும் இவற்றிற்கு இனமான வினைகளும் செயப்படுபொருளை ஏற்று வரும் என்க.

உ-ம்:—உலகம் யாவையும் தாம் உளவாக்கலும், நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா அலகிலா விளையாட்டு உடையார். அவர் தலைவர். அன்னவர்க்கே சரணங்களே. [கம்ப] எந்த வீட்டையும் ஒருவன் கட்டியிருக்கவேண்டியது. அதுபோலும், இவ்வுலகத்தை உண்டாக்கியவரும் கடவுளே.

56. UNION AND DIS-UNION.

சேர்தலும் நீங்கலும் கொள்ளும் செய்பொருள்.

சேரும் வினையும் நீங்கும் வினையும் அவற்றிற்கு இனமான வினைகளும் செயப்படுபொருளை ஏற்றுவரும் என்க.

உ-ம்:—இந்த ஜலஸ்தம்பம் முன்னிருந்த நிலையை விட்டுப் பெயர்ந்து, எங்கள் பக்கமாய் வந்து கப்பலைச் சாடும்போல இருந்தது. [பி. வி] சட்டியை விட்டு நெருப்பில் விழுந்ததுபோல். எனக்குற்ற குறைகளை நிவர்த்தி செய்து காப்பாற்றும்.

57. COMPARISON AND POSSESSION.

ஒப்பும் உடைமையும் உடையது செய்பொருள்.

ஒப்புப் பொருளையும் கிழமைப் பொருளையும் உணர்த்திய வினைகள் செயப்படுபொருளை ஏற்று வருமென்க.

உ-ம்:—பாகு ஒக்கும் சொற் பைங்கிளியோடும் பல பேசிடும். மலையிலுள்ள எல்லாம் கொண்டு மண்டலால் விலையின் மாதரை ஒத்தது அவ்வெள்ளமே. தேக்கெறிந்து வருதலின் தீம்புனல் வாக்குத் தேன் நுகர் மாக்களை மானுமே. என்னை ஆளுடை நாயகிக்கு இசை எடுப்பவள். [கம்ப] எல்லாம் உடையான் குருவாகி ஈங்கு எமது அல்லல் அறுத்தான் என்றும் தீபற. [அவி]

58. GIFT AND ACCEPTANCE.

ஏற்பதும் ஈவதும் ஏற்கும் செய்பொருள்.

வாங்குதலும் கொடுத்தலுமாகிய வினைகளும் அவற்றிற்கு இனமான எல்லா வினைகளும் ஏற்கப்பட்டவற்றையும் கொடுக்கப்பட்டவற்றையும் செயப்படுபொருளாய் ஏற்று வருமென்க.

உ-ம்:—கேட்டதையெல்லாம் கொடுக்கும் காமதேனு. நினைத்ததையெல்லாம் கொடுக்கும் சற்பக விருக்ஷம். என்கொடுக்கினும் இரப்பவர் பெறுவர். என்னத்தைக் கொடுத்தாலும் தரித்திரர் வாங்கிக் கொள்வார்கள்.

59. PHYSICAL ACTIONS.

ஐம்பொறித் தொழிற்கும் ஆகும் செய்பொருள்.

மெய் வாய் கண் மூக்குச் செவியென்ற ஐந்து பொறிகளினால் ஆகிய வினைகளும் செயப்படுபொருளை ஏற்று வரும் என்க.

உ-ம்:—கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்ததுபோல். [பழ] என்னைப்பார்த்து யான் சொல்லியதைக் கேட்டு நட. நம்மை மோருகிறதுபோல வந்து கடிப்பார்கள் நம்முடைய அரசர். [பஞ்]

60. MENTAL ACTIONS.

மனத்துறு தொழிற்கும் வழங்கும் செய்பொருள்.

நினைவு ஞாபகம் அன்பு ஆசை முதலிய மனத்தொழிலை உணர்த்திய வினைகளும் செயப்படுபொருளை ஏற்று வரும் என்க.

உ-ம்:—பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன், என்னை நாடிய என் உயிர் நாதனே. [தாய்]

61. Causal Verbs.

பிறவினைக்கு இன்றி அமையா செய்பொருள்.

நடத்தல் நடப்பித்தல் நடப்பிவித்தல் என வரும் பிறவினைகளுக்குச் செயப்படுபொருளானது இன்றி அமையாது வருமென்க.

உ-ம்:—முழுதும் வேள்வியை முற்றுவித்து அரசனும் முடிந்தான். [கம்ப] மெய்யுணர்ந்தார் பொய்மேல் புலம் போக்கார். [குற]

62. Idiomatic uses of அல் and இல்.

அன்மையும் இன்மையும் அடையுஞ் செய்பொருள்.

அன்மை இன்மை என்ற இரண்டு குறிப்பு வினைஎச்சங்களும் எழுவாயைக்கொண்டு முடிவதுமன்றி அவ்வெழுவாய்ப் பெயர்களே செயப்படுபொருளாய் மாறியும் வருமென்க.

உ-ம்:—என்னையல்லாமல் போகாதே. என்னையல்லாமல் பெரியவன் இல்லை. வித்தல்லாமல் வேறொன்றும் முளையாது. வித்தையன்றி வேறொன்றும் முளையாது. புத்தியில்லாதவன், புத்தியை இல்லாதவன். இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும். [குற] (இக்குறளுள் எழுவாய் செயப்படுபொருள் இரண்டும் உதாரணமா யிருப்பது காண்க.)

63. Cognate Nouns.

தன் தொழில்தானே செயப்படு பொருளா
நிற்பதும் உளவே சிற்சில வினைக்கே.

வெறுவினை காரியவினை என விதந்த வினைகளுள்ளும் சில வேறு செயப்படுபொருளை ஏற்காது தத்தம் தொழிற்பெயரையே செயப்படுபொருளாய் ஏற்று வருதலும் உள.

உ-ம்:—கல்வி கற்றான். ஓட்டம் ஓடினான். பாட்டுப்பாடினான். ஒரு தூக்கம் தூங்கினான். ஆட்டம் ஆடினான். ஒரு வெள்ளை வெளுத்தான். ஒரு கடி கடித்தது. ஒரு வரவு வா. ஒரு பயணம்போ. மதுரைக்கொருபயணம் வாராதிருந்ததென்ன. [புகழ்]

64. In Passive Predicates.

படுவினைக் கெழுவாய், செயப்படு பொருளே.

படுவினைப் பயனிலைக்கு எழுவாயாக நிற்கும் பெயர் செய்வினை வாக்கியத்தில் செயப்படு பொருளா யிருந்தது என்க.

உ-ம்:—அது செய்யப்பட்டது=அதைச் செய்கிறார்கள். அது சொல்லப்படுகிறது=அதைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

65. Idioms.

முதல் சினைப் பெயருள் எழுவாய்ச் சினையும்
செயப்படு பொருளாம் உலக வழக்கே.

முதல் சினை எனவும் பிண்டம் உறுப்பெனவும் வருத்து இரண்டெழுவாய்கள் ஓர் பயனிலையை ஏற்றுவருமென முன்னால் காட்டிய வாக்கியங்களுள், சினையும் உறுப்புமாகிய சொற்கள் எழுவாயாக வருதலுமன்றி உலக வழக்கில் பொருளில்லாத செயப்படுபொருளாயும் வருமென்க.

உ-ம்:—பிள்ளை காலை நொண்டுகிறது. எனக்கு தலையை நோகிறது. பிள்ளைக்குக் கண்ணைச் சொருகுகிறது. வயிற்றை வலிக்கிறது, பசிக்கிறது, பொருமுகிறது, தொண்டையைக் கட்டுகிறது. நாக்கை வறட்டுகிறது. கய்ச்சலாய்க் காய்கிறதும் கண்ணைச் சொருகிறதும், நயனங்கள் பஞ்சடைந்து நாக்கை வறட்டுகிறதும். [புகழ்]

66. The same.

காணல் அறிதல் எனும் இரு வினையில்
எழுவாய் வழக்கில் செய்பொருளாமே.

காணுதல் அறிதல் என்ற இவ்விரண்டு வினைகளுக்கு எழுவாயாக வர வேண்டிய சில பெயர்கள் வழக்கில் செயப்படுபொருளாகவே வரும்.

உ-ம்:—என்னை யறியாமல்போனான்=நான் அறியாமல் போனான். அவனைக் காணாமல் வா=அவன் காணாமல் வா.

67. The same.

ஒன்றைப்பற்றி உணர்த்திய பொருளில்
என் என் வினைக்கு ஓர் செயப்படுபொருளே.

என்னுதல் என்னும் வினையானது ஒரு பொருளைப்பற்றி யாதொரு விசேஷத்தைச்சொல்லி முடியுமிடத்தில் அப் பொருளைச் செயப்படுபொருளாக ஏற்று வரும்.

உ-ம்:—என்னை நல்லவன் என்றான். அவனை இருமாதே என்றேன். உன்னைப் போகவேண்டாம் என்றான். ஊடி யிருந்தேமா? தும்மினர், யாம் தம்மை நீடுவாழ்கு என்பாக்கு அறிந்து. [குற] பயனில்சொல் பாராட்டுவானை மகன் எனல், மக்கள் பதடி எனல். [குற] களித்தானைக் காரணங்காட்டுதல், கீழ் நீர்க் குளித்தானை தீத் துரீஇ அற்று. [குற] சஞ்சலம் கலந்தபோது தையலாரை உய்யவந்து அஞ்சல் அஞ்சல் என்கிலாத ஆண்மை என்ன ஆண்மையே. [கம்] புகழ்ந்தனர். அரச! நின் புதல்வர் போயபின் நிகழ்ந்ததை இதுவென நெடிது கூறினர். [கம்] அவனுக்கிவன் விருந்துசெய்த வுறவு என்கொல் என்று அரசர் எதிர் விதுரனை விளம்புவான். [பார]

இவ்வுதாரணங்களை நோக்குங்கால், சில வினைகள வேறுவினையா யிருந்தும், அவையே வாக்கிய அடை அடுத்து வருமிடத்து, ஒரு செயப்படுபொருளையும் ஏற்று வரப் பெறும் என்று தோன்றியது.

VII. இரட்டுருபுகள்.

உம்மைத்தொகையில் பல செயப்படுபொருளை ஒருவினை ஏற்று நடத்தல் இயல்பாதலின், அஃதை இங்ஙனம் கூறாது, இரண்டு செயப்படுபொருள் உம்மைத் தொகையின்றி ஒன்றிற்கொன்று தழாத்தொடராய் ஒரு வினையைக் கொண்டு முடியும் விதிகளைமாத்திரம் கூறுதும்.

68. Physical Division.

ஒருவினை ஏற்கும் முதலும் சினையும்
செயப்படுபொருளை ஏற்பதும் வழக்கே.

முதல் சினைஎனவும் பிண்டம் உறுப்பெனவும் விதந்து கூறிய பெயர்கள் இரண்டும், செயப்படுபொருளாய் நின்று ஒரு வினையைச் சார்ந்துவரும், செய்யுள் வழக்கினும் உலக வழக்கினு மென்க.

உ-ம்:—பசுவைப் பாலைக்கறந்தான். யானையைக் காலை வெட்டினான். காகத்தை வாலைப்பிடித்தான். கோ

ழியைத் தலையைத் திருகினான். வண்புகழ் சிறிதும் மொழிந்திலன். [பரா] ஐயோ! என்னை மூக்கையறுத்து முனைகுலைத்தாயே. [பஞ்] அந்த நாவிதனைக் கழுத்தைப்பற்றி நெட்டிக்கொண்டுபோய் இராஜாவுக்கு அறிவித்தார்கள். நிரபராதியாய் இருக்கிற என்னை இந்தத் துஷ்டன் மூக்கையறுத்தானே. [பஞ்] இரும்பிடியை இகல் வேழம் பெருங்கையால் வெயில் மறைக்கும் அருஞ்சுரம் இறந்தார்க்கே விரும்பும் என் மனனே காண். [செந்தமிழ்]

இங்ஙனம், யானையைக் காலை வெட்டினான் என இரண்டு செயப்படு பொருள் கொடுத்துக் கூறாது யானையினது காலை வெட்டினான் எனவும் யானையைக் காலின்கண் வெட்டினான் எனவும் கூறின் அமையாதோவெனின், ஆசிரியனைப் பொருள் வினாவினான் என்புழி ஆசிரியனது பொருள் வினாவினான்என ஆறும் வேற்றுமையின் கண்ணும், சாத்தனைக் கையையொடித்தான் என்புழி சாத்தனைக் கையின்கண் ஒடித்தான்என ஏழாம் வேற்றுமையின் கண்ணும் வராமையால், அங்ஙனம் அமையாது என்க. என் எனின் யானையை என்னசெய்தான் என்ற கடாவுக்கு, காலை வெட்டினான்எனல்விடையும்; யானையின் காலை என்ன செய்தான் என்ற கடாவுக்கு, வெட்டினான் எனல் விடையும்; யானையை எவ்வுறுப்பின்கண் வெட்டினான் என்ற கடாவுக்கு, காலின்கண் வெட்டினான் எனல் விடையுமாகி வேறு வேறான மூன்று பொருளைச் சுட்டியது காண்க. அவ்வாறே, சாத்தன் நம்பியைத் தலையை உடைத்தான், குடுமியை அறுத்தான், பாம்பைப் பல்லைப் பிடுங்கினான் என்புழி, தலையின்கண் உடைத்தான், குடுமியின்கண் அறுத்தான், பல்லின்கண் பிடுங்கினான் எனினும், என்னைக்கேள்வி கேட்டான், அவனை மொட்டை அடித்தான், கழுவேற்றினான், சூரவல்லி வீமனை அடிமை கொண்டாள் என்புழி, எனது கேள்வி கேட்டான், அவனது மொட்டை அடித்தான், அவனுடைய கழுவு ஏற்றினான்; விமனின் அடிமை கொண்டாள் எனினும் பொருள்படாமை காண்க. அன்றியும், சாத்தன் நம்பியைத் தலையை உடைத்தான், நம்பியின் தலையை உடைத்தான் என இரண்டுசெயப்படு பொருளும் ஒரு செயப்படு பொருளும் ஏற்றிக்கூறுமிடத்து, முதல் வாக்கியத்தில் நம்பியும் மறுவாக்கியத்தில் நம்பியின் சிரசும் விசேஷப்பட்டு வெவ்வேறு பொருள் உணர்த்தியதூந் தெளிக.

69. Compound Verbs.

பெயர்த்தொடரான வினையின் செய்பொருள்
இரண்டு செயப்படு பொருள்போலுமே.

பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் ஒன்றி ஒரு வினைபோல நடக்குமெனின், அவ்வினைகளுக்கு வேறு செயப்படுபொருளும் வருதலால் இரண்டு செயப்படுபொருள் போலத்தோன்றுமென்க.

உ-ம்:—ஆசிரியனைப் பொருள் வினவினான். நூலைக் குற்றம் கூறினான். குடும்பத்தைக் குற்றமறைப்பான். [குற] நாய் வாலைக் குணக்கெடுக்கலாகுமா? அவ்வித் தழுக்காறு உடையானைச் செய்யவள் தௌவையைக் காட்டிவிடும். [குற] கொலைபாதகனைக் கழுவேற்றினான். தினம் ஒவ்வொன்று உமக்கு இரைகொடுத்துக்கொண்டு வருகிறோம். சிங்கத்தைச் சிநேகம்பண்ணிக்கொள்ளுகிறேன். [பஞ்] பகவானைப் பூசைபண்ணினான். [புகழ்] அமிழ்தினைச் சுவை செய்தென்ன அழகினுக்கு அழகு செய்தார். [கம்ப] இல்லாரை எல்லாரும் எள்ளுவர். செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு. [குற.]

இவ்வாறு நடக்கும் உதாரணங்களில் இரண்டாவது செயப்படுபொருள் உருபு தொக்கியே வருவது சிறப்பு. ஆசிரியனைப் பொருளை வினவினான். நூலைக் குற்றத்தைக் கூறினான் எனல் சிறப்பன்று.

70. Cognate Nouns.

தொழிற்பெயரோடு செயப்படுபொருள்வர
இரண்டு செயப்படு பொருள் போலுமே.

சில வினைகள் தத்தம் தொழிற்பெயரை ஏற்றுவருதலுமன்றி, வேறு செயப்படுபொருளையும் ஏற்றுவருதலால் இரண்டு செயப்படுபொருள் போலத் தோன்றும்.

உ-ம்:—என்னை ஒரு அடி அடித்தான். அவனை ஒரு கேள்வி கேட்டான். என் கையை ஒரு முறுக்கு முறுக்கினான். அவளை ஒரு கிள்ளுக் கிள்ளினாள், ஒரு ஆட்டம் ஆட்டினாள். ஒரு மோது மோதினாள்.

71. Causal Verbs.

பிறவினைக்கு இரு செயப்படுபொருள் ஆகும்.

பிறவினைகள் இரண்டு செயப்படு[illegible] என்றுவரும்

உ-ம்:—இராசன் கலகக்கா[illegible] லையை அடைவித்தான். [கதா] இ[illegible] தேசத்தை ஆளுவித்தான். பச[illegible] ளா அருத்தினர்க்குப் பயன் கொடு[illegible] கொடுத்திடுவர். [இல] அவனை அ[illegible] என்பிள்ளைகளை நீதிசாஸ்திர உ[illegible] மகாபுருஷன் மறுஜனனம் வர[illegible] [illegible] மேகவர்ணராஜன் பிதாவின் ம[illegible] வியைப் பார்த்துக் கும்பிட்டு உம்[illegible] எல்லாவையும்கேட்டு அவர்கள் [illegible] களையும் உம்மைக் கேட்பித்தேன். [illegible] ரு கழியை இரண்டு பரவைகள் [illegible] தை ஆமையைப் பிடிப்பித்துக்[illegible] என்று பேசிக்கொண்டார்கள்[illegible]

72. Government of ஆக்கு.

ஆக்கென் வினைமுன் செ[illegible] ளாடு
எழுவாய் ஒன்று வருவ[illegible]

ஆக்கென்ற பிறவினையானது [illegible] ளை ஏற், பதும தவிர, செயப்படு பொருளு[illegible] வாய்ப்பெயரையும் ஏற்றுவரும். என[illegible] ன்றவினைக்கு இரண்டு எழுவாய் அமை[illegible] கூறியிருப்பதில், ஓர் எழுவாய் அவ்வி[illegible] னமை அதுவே பிறவினையாக மாறுமிடத்[illegible] ப் வேற்றுமைப்படாது எழுவாயாகவே [illegible]

உ-ம்:—ஆசிரியன் மாணாக்கனைக் [illegible] ன்.

73. Government of கேள்.

கேட்கும் வினைக்கு இரு செயப்படுபொருளே.

கேட்டல் வினவல் முதலிய கேள்வி வினைகளுக்கும் இரண்டுசெயப்படுபொருள் இயலுமென்க.

உ-ம்:—என்னைப் பணம் கேட்டான். புனர்தரன் தாயரைப் பவளத்தேர் கேட்டான். [புகழ்]

74. Treble Accusatives.

மூன்று செய்பொருள் வருஉம் ஒரோவழி.

சிலவா[illegible] மூன்று செயப்படுபொருள் வரி னும் வரல[illegible]

உ-ம்:—[illegible]க்கு எடுக்கலாமா? அவனைத் தலை[illegible].

[illegible]பொருள் விகாரம்.

75. Co[illegible]

[illegible]பொருள், பிறவாம் தொடரால்.

பொ[illegible]ல் செயப்படு பொருளாயிருக் கும் செ[illegible]தினது தொடரை நோக்கினால், வேறு [illegible] வருமென்க. வீடு கட்டப் பட்டது எனு[illegible] சொற்றொடரினால் எழுவாயாக வந்த பெ[illegible]ரில் செயப்படு பொருளாகியது. இவ்வி[illegible] கூறியதற்கு ஞாயம் மேலே கூறியுளாம்.

76. [illegible]

[illegible]டும் செயப்படுபொருள் எழும்.

செ[illegible]செயப்படுபொருளாயிருக்கும் சொற்கள் [illegible]ழியொழிந்த) எல்லா வேற்றுமை உருபு[illegible]பெயராய் வருமென்றார், ஈசானதேசிகர். [illegible]ல் எல்லாவுருபுகளினும் செயப்படு பொரு[illegible]பட்டு வருதல் அரிதென்று அடியிற் காட்[illegible]களில் தெரியும்.

உ[illegible]ன் பணத்துக்குக் கொண்டது. இவ் [illegible]கட்டப்பட்டது. இவ்வீடு யான் கட்டியது. [illegible]த்தது இக்காரியம். (எழுவாயில் வந்தது.)

அரிசியால் சோறாக்கினான் = அரிசியைச் சோறாக்கினான். சாணியாற் பிள்ளையார் பிடித்துவைத்தான் = சாணியைப் பிள்ளையார் பிடித்துவைத்தான். கல்லால் எறிந்தான். ஆன்றோரொடு ஒப்பர் நிலத்து. [குற] விலங்கொடு மக்கள் அனையர். இலங்குநூல் கற்றாரொடு ஏனையவர். (மூன்றில் வந்தது.)

இவ்வணிகலத்துக்கு ஆசைவைத்தாள் = இந்நகையை விரும்பினாள். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை = கூழையும் விரும்பினான் மீசையையும் விரும்பினான். (நான்கில் வந்தது.)

பழியின் அஞ்சினான் = பழியை அஞ்சினான். யாதனின் யாதனின் நீங்கியான் = எதை எதை விட்டு நீங்கினானோ. பொன்னில் நகைசெய்தான் = பொன்னை நகைசெய்தான். தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர். நிலையின் இழிந்தக் கடை. [குற] (ஐந்தில் வந்தது.)

நூலது குற்றம் கூறினான் = நூலைக் குற்றம் கூறினான். யானையினது கோட்டைக் குறைத்தான். பசுவினது பாலைக் கறந்தான். (ஆறில் வந்தது.)

தூணில் முட்டினான் = தூணை முட்டினான். வீட்டில் சேர்ந்தான் = வீட்டைச் சேர்ந்தான். (ஏழில் வந்தது.)

இவ்வுதாரணங்களை நோக்குமிடத்து, செயப்படுபொருள் பெரும்பாலும் எழுவாயாக விகாரப்படுதல் இயல்பென்றும், மற்ற வேற்றுமைகளில் வருமிடத்துப் பொருள் சிறிது பேதிக்கும் என்றும் தோன்றியது.

IX. மூன்றும் வேற்றுமை.

77. Instrumental and Social Ablatives.

மூன்றுக்குரிய உருபை நோக்கின்,
காரணம் நிகழ்ச்சி என இரு பாற்றும்.

மூன்றும் வேற்றுமையின் உருபை நோக்குமிடத்து, காரண வேற்றுமை உடனிகழ்ச்சி வேற்றுமை என இரண்டு வேற்றுமை உருபுகள் அதனுள்ளே அடங்கியது. இவ்வேற்றுமைகள் காரணமென்றும், உடனிகழ்ச்சியென்றும் உருபினாலும் பொருளினாலும் வேறுபட்டிருக்க, அவற்றை யாது காரணத்தான் முன்னூலோர் மூன்றும் வேற்றுமை ஒன்றனுள் அடக்கினர் என்று விசாரிக்கு மிடத்து, அதற்குத் தகுந்த காரணம் எமக்குத் தோன்றியது இல்லை. செய்யுளில் இவ்வுருபுகள் மயங்கி, காரண உருபே உடனிகழ்வுப் பொருளையும், உடனிகழ்ச்சி யுருபே காரணப் பொருளையும் தருதலால் எனின்: இவ்வேற்றுமையின் உருபுகள் போலுமே மற்ற வேற்றுமைகளும் ஒன்றோடொன்று மயங்கி வருதல் செய்யுட்கே உரிய இலக்கண மாகையால், அ-

துவும் தகுந்த நியாயமாகத் தோற்றியதில்லை. இவ்வண்ணம் இவ்வேற்றுமையை இரண்டு வேற்றுமைகளாய்ப் பிரிக்கவேண்டியிருந்தும், நூதன இலக்கணம் செய்வது நமது கருத்தாயிராமல், இலக்கண நூல்களில் விடுபட்டனவற்றை மாத்திரம் தழுவி, வழக்குக்கு உபயோகப்படும் படியான சில விதிகளைக் காட்டுவதே நாம் கொண்ட கருத்தாய் இருத்தலால், இங்ஙனம் இவ்வேற்றுமையை மூன்றும் வேற்றுமை யென்றே வைத்து அதனுள் காரணம் உடனிகழ்ச்சியென இரண்டிற்கும் தனித்தனி விதிகள் கூறுதும்.

78. Instrument Governed only by Verbs.

காரணவேற்றுமை வினையையே தழுவும்.

ஆல், ஆன் என்னும் காரண வேற்றுமைகள் பெயரைத்தழுவாமல் வினையை மாத்திரம் தழுவி நடக்கும்.

உ-ம்:—பொன்னாற் செய்தான். அம்பால் எய்தான். இங்ஙனம் காரண உருபுகள் பெயரைத் தழுவா என்றும். பெயரை என்றது, பொருட்பெயர் குணப்பெயர் என்ற இருவகைப் பெயரை யன்றி,தொழிற்பெயர் வினையாலணையும் பெயர்களை யன்று. என்னெனின், பொன்னாற் செய்தல், பொன்னாற் செய்தது எனத் தொழிற்பெயர் வினைப்பெயர் என இரண்டையும் ஏற்றுவருமிடத்து, அவை வினையாம் தன்மை அவ்வாறு ஏற்றதன்றிப் பெயராம் தன்மையால் அன்று. இதுபற்றிப் பெயரைத் தழுவா, காரணஉருபு என்றும். ஏனைய வேற்றுமைகளிலும் பெயர் எனின் இப்பொருளையே கொள்க.

79. When Governed by Nouns.

பெயரைத்தழுவின், பொருளில்லை காரணம்.

மேற்கூறிய காரண உருபுகளை யேற்ற பெயர்ச்சொற்கள் வேறு பெயர்ச்சொற்களைத் தழுவி நிற்குமாகின், அவ்வுருபுகளுக்குக் காரணப் பொருள் இல்லை என்க.

உ-ம்:—ஒரு பதியால் மூன்றே. ஒன்றால் ஒன்று. பொன்னாற் குடம், மண்ணாற் பானை என்று உதாரணங்கள் காட்டி, பெயர்ச்சொல்லையும் காரண வேற்றுமை தழுவுமெனச் சில நூலாசிரியர் கூறியுளர். ஆகினும், இவ்விதியும் உதாரணங்களும் வழக்குக்குப் பொருந்தாமையானும், பொன்குடம் மண்பானை யென்றலுமே

பொருள் தெளிவுபட்டு நிற்றலானும், மேலே விதியைக் கூறினும். அன்றியும், ஊரால்ஓர் ஆலயம் எனின் ஊர்தோறும் ஓர் ஆலயம் எனப் பொருள்பட்டுக் காரணப்பொருள் ஒழிந்து நின்றமை காண்க.

80. Position of the Instrument.

வினையின் பின்னும் வரும் காரணமே.

காரண உருபை யேற்ற பெயர் வினையின்முன்னே வருதல் பொதுவிதியாயினும், சிறுபான்மை வினையின்பின்னேயும் வரும்.

உ-ம்:—அடித்தான் பிரம்பால்.

81. Instrument Extended.

கருவி, கருத்தா, காரணம் வேறது
நிமித்தம், ஞாயம் என்று ஆறும் காரணம்.

மேலே விதந்த ஆறு பொருளையும் காரண உருபுகள் காட்டுமாகையால், அவைகளைக் காரணப்பொருள் என்றும். இவைகளைத் தனித்தனியே அடியில் விரித்துக் காட்டுதும்.

82. Material.

முதல் துணையென இரு கூறும் கருவி.

முதற்கருவி துணைக்கருவியென இரு கருவிப்பொருளையும் காரணவேற்றுமைக் காட்டும்.

உ-ம்:—மண்ணாற்செய்த குடம். (முதற்கருவி) யந்திரத்தினாற்செய்த குடம். (துணைக்கருவி) நீ காலால் இட்ட வேலையை நான் தலையாற் செய்துகொண்டிருக்கிறேன். [பஞ்]

83. Agent.

ஏவும் கர்த்தா, இயற்றும் கர்த்தா
என இரு பொருட்கும் காரண உருபே.

ஏவுதற்கர்த்தா இயற்றுதற்கர்த்தா என்று இருவகைப்பட்ட கர்த்தாப்பொருளையும் காரணஉருபு காட்டும்.

உ-ம்:—அரசனால் அமைந்த மாளிகை. (ஏவுதற்கர்த்தா) சிற்பனாற் சமைந்தமாளிகை. (இயற்றுதற்கர்த்தா) சிங்கத்துக்கும் பிங்கலனுக்கும் உள்ள உறவைக்கெடுக்க யாரால் ஆகும். [பஞ்] இக்காரியம் உன்னால் முடியாது.

84. CAUSE.

இறந்த காரணம், நிகழும் காரணம்
என இரு பொருளும் தரும் காரணமே.

காரியத்துக்கு முன்னால் தோன்றியிருந்த காரணமென்றும், காரியத்தோடுகூட நிகழும் காரணமென்றும் இருவகையான காரணப்பொருளையும் காரண உருபுகாட்டும்.

உ-ம்:—அரசன் கட்டளையால் கொலைபாதகனைக் கழுவேற்றினார்கள். (இறந்தகாரணம்) உபாயத்தினால் ஆகியது பராக்கிரமத்தினால் ஆகுமா? [பஞ்] (நிகழும் காரணம்) ஆய்சுபலத்தினால் பிழைத்திருக்கிறது. [பஞ்] அஞ்ஞானத்தாலும் பொருளாசையாலும் காமமயக்கத்தாலும் பகை வெறியாலும் ஞானக்கண்ணாகிய அறிவு கெட்டு உயிர்க்குருடர் பலரோதிரிந்து புண்ணியநெறியில் வழுவித் தவறி நரகக்குழியில் விழுவதைக்கண்டு மன மிரங்காமல்போவது நல்லதோ? [வேதி] மனத்தான் ஆம், மாந்தர்க்கு உணர்ச்சி. இனத்தான் ஆம், இன்னான் எனப்படும்சொல். [குற]

85. MEANS.

கருதிய ஹேது, கருதா ஹேது என்று
இருவகையாகும் ஹேதுப்பொருளே.

ஒருவனால் முன்னால் கருதப்பட்ட ஹேதென்றும், அவன்கருத்தின்றி கடவுளால் கருதப்பட்ட ஹேதென்றும் இருவகையான ஹேதுப்பொருளையும் காரணவேற்றுமை உணர்த்தும்.

உ-ம்:—மழையினால் பயிர் விளைந்தது. (கருதாஹேது) எருவினால் பயிர்விளைந்தது. (கருதிய ஹேது)

86. PURPOSE.

வேண்டும் நிமித்தம், வேண்டா நிமித்தம்
என்று இருபொருளும் காட்டும் காரணம்.

தனக்கொரு பொருள்வேண்டுமென்று நோக்கிய நிமித்தமும், வேண்டாமென்று நோக்கிய நிமித்தமும் ஆகிய இருவகை நிமித்தப்பொருளையும் காரண உருபானது காட்டும்.

உ-ம்:—பணத்தால் பானைசெய்தான். (வேண்டும்நிமித்தம்) வறுமையால் மனிதர் உழைக்கின்றது. (வேண்டாநிமித்தம்)

87. ARGUMENT.
பிரமாணம் எட்டும் ஞாயகாரணமே.

பிரத்தியட்சம், அனுமானம், சத்தம், அருத்தாபத்தி, உபமானம், அபாவம், ஐதிகம், சம்பவம் எனக் கூறிய அஷ்ட பிரமாணங்களும் காரண உருபுகொண்டு முடியும்.

(1) Demonstration. பிரத்தியட்சம்:—இரண்டும் இரண்டும் நான்கு: இரண்டுவிரலும் இரண்டுவிரலும் கூடி நான்கு விரலாதலால். காக்கையிற் கரிது களம்பழம்: யாவர் கண்ணுக்கும் அவ்வாறு தோன்றுகையான்.

(2) Probability. அனுமானம்:—இவன் பிழைப்பது கஷ்டம்: நல்லபாம்பினுல் கடிபட்டிருத்தலால். நாளையத் தினம் காலமே ஆறுமணிக்குச் சூரியன் உதயமாகும்: உலகமுண்டாகி இதுவரையும் ஒவ்வொரு தினமும் அவ்வாறு உதித்திருக்கையால்.

(3) Traditional Testimony. சத்தப்பிரமாணம்:—ஆறுதினத்துள் பிரபஞ்சம் அமைக்கப்பட்டது: அவ்வாறு வேதாகமங்களில் கூறியிருத்தலால். சீதையைச் சிறையெடுத்தவன் இராவணன்: அவ்வாறு வான்மீகி சொல்லி யிருத்தலால்.

(4) Inference. அருத்தாபத்தி:—இவ்வுத்தியோகஸ்தன் லஞ்சம் வாங்கியதற்குச் சந்தேகமில்லை: வரவுக்கு மிஞ்சிச் செலவுசெய்தலால். இவ்வூரில் குளம் குட்டை பள்ளமெல்லாம் தண்ணீர் ரொம்பி யிருத்தலால்: நல்ல மழை பெய்திருக்கவேண்டும். இவள் கழுத்தில் தாலியில்லாமையினுல் ஒன்று இவளுக்கு விவாகமில்லை: ஒன்று விவாகம் ஆகியிருந்தும் புருஷன் இல்லை.

(5) Similitude. உபமானம்:—இது பனிக்கட்டி யாகவே வேண்டும்: அது தல்லிபமான வெள்ளைக்கல்லைப்போல் இருப்பதினுல். இவன் பலான திருடனுகவே வேண்டும்: அவனைப்பற்றிச் சொல்லிய அடையாளங்கள் எல்லாம் இவனிடத்து உள்ளதால். இவனை ராமஸ்வாமியின் மகன் என்றே நினைக்கிறேன்: இராமஸ்வாமியின் சாயல் இவன் முகத்தில் இருப்பதால். அவனைப் பார்த்தவுடனே அரசன் என்று அறிந்துகொண்டான்: அவ்வரசனின் படத்தை முன்னுல் பார்த்திருந்தமையால். கோமுனியுடன்வரு கொண்டல் என்றபின், தாமரைக்கண்ணினுன் என்ற தன்மையால் ஆம் அவனே கொல் என்று ஐயம் நீங்கினுள். [கம்]

(6) Negation. சுபாவம்:—மனிதர் சிவனைப்போலும் நெற்றிக் கண்ணர் அல்லர்: நெற்றிக்கண்ணை எத்தேசத்திலாகினும் மனிதருக்கு இருப்பதைக் கண்டவர் இல்லாமையால். நித்தியத்துவம் மனிதருக்கு இல்லை: சாகாமல் இருந்தவர் உலகத்தில் ஒருவரும் இல்லை ஆகையால்.

(7) Traditional Belief. ஐதீகம்:—பிடாரி கோயில் அரசமரத்தில் பே யிருந்தாலும் இருக்கலாம்: யாவத்திராளும் அப்படிச் சொல்லிக் கொள்ளுகிறதினால். வால்வெள்ளி தோன்றில், ராஜாக்களுக்கு விபத்துண்டாகும்:அப்படிச் சகலத்திராளும் எண்ணி யிருக்கிறதினால்.

(8) Inclusion. சம்பவம்:—இவன் சாப்பிட்டாயிற்று என்று சொல்லுகிற படியால், தண்ணீரும் குடித்திருக்கவே வேண்டும். குடிகளை இரட்சிப்பவன் அரசனானதால், என்னையும் இரட்சிப்பவன் அவனே. எவ்வுயிரும் காக்கும் ஒரு ஈசன் உண்டாகையால், என்னையும் காப்பான் அவன்.

எனவே இவண் கூறிய அஷ்ட பிரமாணமும், காரண காரியத்தொடர்ச்சியான் ஒருவன் மனத்தே இயற்கையாய் அறிவுண்டாதற் கேற்ற சாதனங்களா யிருந்தும், அவற்றைக் கொண்டும் அவற்றினுள் அடங்கா வேறு சாதனங்களைக் கொண்டும், ஆசிரியன் மாணுக்கனுக்கும் ஞானி அஞ்ஞானிக்கும் கல்வியிற் பெரியோன் கல்வியிற் சிறியோனுக்கும் அறிவுணர்த்திய போதும், ஞாயகாரணமாய் வரப்பட்ட சகல வாக்கியங்களும் இவ்வாறே மூன்றும் வேற்றுமையினது காரண உருபைப் பெற்று வருமென்க. இதனால் காரண காரியத் தொடர்பை விளக்கிய ஆதலால், ஆகையால், ஆனபடியால், இருத்தலால், இல்லாமையால், முதலிய சொல்லுருபுகளும், செய்தலால், செய்யாமையால் முதலிய தொழிற் பெயர்களும் அவ்வாறு உருபு ஏற்று முடிதலும் என்க.

இங்ஙனம் கருவி கருத்தா காரணம் ஹேது நிமித்தம் ஞாயம் என்று விதந்த ஐந்து பொருளையும் பின்னும் தனித்தனி பிரித்துக் காட்டியதில், ஒன்றன் பிரிவு ஒன்றிற்கு இயலமாட்டாது என்று எண்ணற்க. ஏனெனில், கருவியை முதல் துணை என்று பிரித்தவாறே, காரணத்தையும் முதற்காரணம் துணைக்காரணம் என்று பிரிக்கினும் பொருள் அமையும். ஆகினும், இவ்வாறு பிரித்துக் கூறுவதிற் பெரும்பயன் இல்லையாகினும், ஒரு வாக்கியத்தில் வந்த காரண

உருபை மேலே விதந்த பொருட்களில் எப்பொருளில் வந்து நிற்கின்றதென்று விசாரிக்கப் பழகின், யூகமும் விவேகமும் விர்த்தியாகும். வாக்கிய இலக்கண விசாரணையில் இதுவே முதற்பயனா யிருத்தலால், அப்பயனைக் கருதியே மேற் கூறியவாறு விதந்து உதாரணங்களோடு காட்டினும் என்க.

88. INSTRUMENT WITH THE PASSIVE.

படுவினைக்கு உரியது காரணவேற்றுமை.

செய்வினைக்கு எழுவாயாக வரும் பெயர்ச்சொற்கள் படுவினைவாக்கியத்தில் காரணஉருபை ஏற்றுவரும். இன்னனம் படுவினையென்றது உருபினாலும் பொருளினாலும் படுவினையாகியதை என்க. உருபினாலும் பொருளினாலும் படுவினைவருதற்குப் படுவினை இலக்கணத்தைக் காண்க.

உ-ம்:—என்னாற் செய்யப்பட்டது. (உருபாற்படுவினை) என்னால் ஆகும். (பொருளாற்படுவினை)

89. IDIOMS.

இடைச்சொல்லுடனே பொருளிலே காரணம்.

வழக்கில் வருகின்ற சில இடைச்சொற்களில் யாதொரு பொருளின்றியே வரும் காரண உருபுகள் என்க.

உ-ம்:—முன்னாலே போனான். பின்னாலே வந்தான். காலத்தாலே வா. கீழாலே, மேலாலே, பிறகாலே, எனப் பிறவும் காண்க.

90. THE SAME.

தோறும் என்னும் காரண உருபே.

சில சொற்களில் காரணஉருபு சேர்ந்து, தோறும் என்று பொருள்படும்.

உ-ம்:—திக்கால் ஒருவராய்ச் சிதறினார்கள். ஊரால ஓர் ஆலயம்.

X. நிகழ்ச்சி.

91. SOCIAL ABLATIVE : ITS GOVERNMENT.

நிகழ்ச்சி யுருபை நோக்கின் அதுவே
வினையைத் தழுவும், வினைக்குப் பின்வரா.

ஓடு, ஒடு, உடன்முதலிய நிகழ்ச்சியுருபுகள் பெயரைத் தழுவாமல் வினையைமாத்திரம் தழுவியதன்றி, அவ்வுருபு

களையேற்ற பெயர்கள் பெரும்பாலும் வினைக்கு முன்னே நடக்கும். அவை வினைக்குப்பின் வருதல் சிறப்பன்று வாசகநடையை நோக்கின்.

இங்ஙனம் ஆடு ஆட்டோடே, வெள்ளாடு தன்னோடே என்ற பழமொழியில், வினையின்றி வாக்கியம் அமைந்திருக்க, ஆட்டோடே ஆடு என பெயரைக்கொண்டு நிகழ்ச்சி வேற்றுமை நடக்கவில்லையோ வெனின், ஆட்டோடே ஆடு என்பதில் பெயர்ப்பயனிலையாகினும் வினைப்பயனிலையாகினும் இல்லாமையான் அஃது வாக்கியமாகமாட்டாது. சேரும் என்னும் பயனிலையைக்கொண்டு முடிந்தால்மாத்திரம், அது ஒரு வாக்கியம் ஆகும். அப்படி வாக்கியமாவதில், நிகழ்ச்சி வேற்றுமை வினையைக்கொண்டே முடிகின்றதால், மேற்கூறிய விதிக்கு மாறுபடவில்லை என்க.

92. Its use in Poetry.

காரணம் பற்றி நிகழ்ச்சி யுருபைக்
கூறுதல் செய்யுள் வழக்கே என்க.

காரணப்பொருளை உணர்த்தும்பொருட்டு ஒடு முதலிய நிகழ்ச்சியுருபைக் கூறுதல் செய்யுள் வழக்காகுமன்றி வசன நடைக்குப் பொருந்தாதென்க.

உ-ம்:—ஒளிநாக்கொடு வான்சுடர் புகழ, ஒளிநாக்கொடு பன்மணி புகழ, களிநாக்கொடு பற்புள் புகழ, கமழ் நாக்கொடு காமலர் புகழ, தெளிநாக்கொடு நீர்ப்புனல் புகழ, தினமே புகழப்படுவோய் நீ, அளிநாக்கொடு நான் உனைப்புகழ, அறியாமூகை உணர்த்தாயோ. [தேம்]

93. Denoting Coexistance.

உடனிகழ்ச்சியை உணர்த்தும் ஒடே.

ஒரு பொருளொடு கூடத்தோன்றியவேறொரு பொருளை உடனிகழ்ச்சி யுருபு கொடுத்துக் கூறுதல் வழக்காதலான், ஒடு முதலிய உருபுகளுக்கு உடனிகழ்ச்சிப் பொருள் என்றது.

உ-ம்:—பரிவாரங்களுடன் எழுந்தனன் அரசன்.
தாரொடும் சதியொடும் தாவு மாயினும்,
பாரிடை மிதிக்கில, பரியின்பந்தியே. [கம்]

94. UNION.

கூடுதல் உணர்த்திய வினைகளுக்கு ஒடே.

கூடுதல் என்னும் பொருளை உணர்த்திய வினைகளெல்லாம் உடனிகழ்ச்சியுருபை யேற்ற பெயர்களைக்கொண்டு நடக்கும்.

உ-ம்:—பாலொடுதேன் கலந்தற்றே. [குற] மார்போடே அணைத்தான். இனம் இனத்தோடே சேரும். ஒன்ருேடு ஒன்று முட்டிச் சண்டை செய்தது. [பஞ்] மேகத்தோடு மேகமாய் மறைந்தது. ஆட்டோடே ஆடு.

95. CAUSE.

நிகழும் காரணம், நிகழ்ச்சியுருபு ஏற்கும்.

இறந்த காரணம் நிகழும் காரணம் என முன்னல் விதந்தனவற்றுள், நிகழும் காரணப்பெயர்கள் காரண உருபைக்கொண்டு முடிதலுமன்றி, நிகழ்ச்சி யுருபையும் கொண்டு முடியும் என்க.

உ-ம்:—அன்பொடு பேணினன் = அன்பாற் பேணினன். விசனத்தோடு ஆலோசிக்கத் தொடங்கினன். [பஞ்] நான் அந்த முட்டையை மடியிலே வைத்துக்கொண்டு, கையாலே தழுவி, போர்வையாலே மூடி, மார்போடு அணைத்து, அன்போடு பேணி, கண்ணும் கருத்தும் இடைவிடாது அதனிடத்தில் ஊன்றி நிற்கப் பத்திரமாய் அடைகாக்கிறதைவிட, எனக்கு வேறே வேலை என்ன. [பர]

96. ADVERBS.

வினையுரிக்கு இயலும் நிகழ்ச்சி யுருபே.

வினையுரிகளாய் வரப்பட்ட சில பண்புச் சொற்களைப் பெயர்ச்சொற்களாய் மாற்றி, மூன்ரும் வேற்றுமை கொடுத்துக் கூறின் பொருள் சிதைவு படமாட்டா.

உ-ம்:—அன்பாய்ப் பேணினன் = அன்பொடு பேணினன். கோபத்தோடே பேசினன். என்று கூறலும், வியப்பினேடு உவந்தனர். [கம்]

97. Idioms.

விரவிய திணைகளுக்கு இலக்கணம் ஒடே.

ஒரு வாக்கியத்தில் பல எழுவாய்கள் உயர்திணையும் அஃறிணையும் கலந்து வருமாகின், வினைமுற்றை எத்திணையைக்கொண்டு முடிப்பிக்கின்றதென்று சந்தேகம் உண்டாகுமிடத்து, ஒரு திணைப்பெயர்களை நிகழ்ச்சி யுருபினால் வேற்றுமை செய்து, மறுதிணை விகுதியினால் வினைமுற்றை முடிப்பிக்கலாம்.

உ-ம்:—ரதகஜதுரக பதாதிகளுடன் அரசன் வந்தான் தாயும் பிள்ளையும் வந்தார்கள்=பிள்ளையோடு தாயும் வந்தாள். தாயோடு பிள்ளையும் வந்தது.

98. The same.

பலபெயர் ஒருவினை பொருந்துங்காலை
ஈறு தவிர்ந்த எழுவாய் தம்மை
ஒடு கொண்டு விளம்பவும் பெறுமே

பல எழுவாய்கள் ஒரு வினையைக்கொண்டு முடியும் வாக்கியங்களில், ஈற்றிலே நின்ற எழுவாய் ஒன்றை நீக்கி, ஏனையப் பெயர்களை யெல்லாம் ஒடு என்னும் உருபால் வேற்றுமை செய்து கூறினும் பொருள் அமையும்.

உ-ம்:—அவனும் இவனும் வந்தார்கள்=அவனோடு இவனும் வந்தான். நீரும் பாலும் கலந்தது=நீரோடு பால் கலந்தது.

இங்ஙனம் கூறினும் பொருள் சிறிது பேதிக்குமென்க. எவ்வாறெனின், சாத்தனும் நம்பியும் வந்தார் எனினும், சாத்தனொடு நம்பி வந்தான் எனினும், நம்பியொடு சாத்தன் வந்தான் எனினும் பொருள் ஒருவாறு பேதித்தலைக்காண்க. எல்லா வேற்றுமையுள்ளும் முதலது சிறப்புற்றதால், சாத்தனும் நம்பியும் வந்தார் எனின் இருவரும் சிறப்புற்றனர். சாத்தனொடு நம்பிவந்தான் என, சாத்தன் கூடவந்தவனாகமாத்திரமிருத்தலால் நம்பியே சிறந்தனன். அவ்வாறே நம்பியொடு சாத்தன் வந்தான் எனின் சாத்தனே சிறப்புற்றனன். இன்னும் பாலும் நீரும் கலந்ததெனினும், பாலொடு நீர் கலந்ததெனினும், நீரொடு பால் கலந்ததெனினும், பொருள் அமைந்ததும் சிறிது வேறுபட்டதும் காண்க.

99. THE SAME.

முழுமை யுணர்த்திய பொருளுக்கு ஓடே.

முழுதும் என்ற பொருளைக் காட்டவேண்டிய விடத்தில் நிகழ்ச்சியுருபினால் அப்பொருளை யுணர்த்தப்படும்.

உ-ம்:—செடியைத் தூரோடே பிடுங்கினான், மரத்தை அடியோடே வெட்டினான். குலத்தை வேரோடே கெடுத்தான். நெல்லைப் போரோடேகொளுத்தினான். பணத்தைப் பெட்டியோடே எடுத்தான். போரோடே தின்னும் மாட்டுக்குப் பிடுங்கிப்போட்டால் கட்டுமா? [பழ] ஆகையால் இப்பேர்ப்பட்ட மந்திரியை வேரோடே களையவேண்டும். [பஞ்] அலங்கல் முகிலே! அவள் இவ்வலங்க நிலமெங்கும், குலங்களோடு அடங்க நனி கொன்று திரிகின்றாள். [கம்]

இதனைச் சில நூலுரையாசிரியர் பிண்டப்பொருளென்று இலக்கணம் கூறி, நெல்லைப் பொதியோடுகொடுத்தான் எனின், நெல்லது பொதியைக் கொடுத்தான்என ஆறனுருபேற்றிப் பொருள் கூறுவர். ஆகினும், மேற்கூறிய உதாரணங்கள் ஒவ்வொன்றையும் அவ்வாறு ஆறனுருபேற்றிப்பார்க்கின், யாம் கூறியதே சிறந்த விதியென்று தோன்றும். அவ்வாறு ஆறனுருபு கொடுத்தலில், பொருள் சிதைவுபடுதலால் என்க.

100. THE SAME.

உடனிகழுருபோடு உம்மும் வருமே.

ஒடு முதலிய நிகழ்ச்சி உருபுகள் வருமிடத்து அவற்றோடு உம் என்னும் இடைச்சொல்லைப் பொருளின்றித் தனியே இயற்றினும் இயற்றலாம்.

உ-ம்:—புருஷன் அந்தக் கபடத்தை யறிந்து மிகுந்த கோபத்தோடும் போய், அவளை வாய்சலிக்கத்திட்டிக் கை சலிக்கப் புடைத்தான். மிகுந்த விசனத்தோடும் ஆலோசிக்கத் தொடங்கினான். தேவதத்தன் அதைக் கேட்டவுடன் வருத்தத்தோடும் ஆலோசித்துக் கொண்டிருந்தது. [பஞ்]

XI. கருவி விகாரம்.

101. INSTRUMENT IN SENSE AND IN FORM.

பொருளால் கருவி, தொடரால் பிறவாம்.

பொருளை நோக்கினுல் கருவிப்பொருளா யிருக்கும் சில சொற்கள் வாக்கியத்தொடரை நோக்கினுல் வேறு வேற்றுமைப் பெயர்களாயும் வரும். எவ்வாறெனின் கண்காணும் என்ற வாக்கியத்துள், சொற்ருெடரினுல் எழுவாயாக வந்த கண் என்னும் பதமே, பொருளால் கருவி யாகியது, மனத்தது காட்சிக்குக் கண் கருவியாகியதால் என்க.

102. CONVERSION OF THE INSTRUMENT.

ஒன்று நான்கு ஐந்து ஆறு உருபொடுகருவி
வரும் எனக்கிளரினர் ஈசான தேசிகர்.

கருவிப்பொருளானது முதலாம் நான்காம் ஐந்தாம் ஆரும் வேற்றுமைகளில் மாறிவரும் என்று ஈசானதேசிகர் கூறினர்.

உ-ம்:—கண்கண்டகாரியம் = கண்ணுற்கண்ட காரியம். இவ்வெழுத்தாணி யான் எழுதியது=இவ்வெழுத்தாணியால் யான் எழுதினேன். கண்ணுடி செய்வது ஓர் வகைமண்=ஓர்வகைமண்ணுல் கண்ணுடி செய்யப்படும். (எழுவாயில் வந்தகருவி)

கண்ணிற்குகண்ட காரியம் = கண்ணுற்கண்ட காரியம். சொல்லிற்கு அரிய பரம்பொருள் = சொல்லினுல் ஸ்துதித்தற்கு அரிதாகிய பரம்பொருள். இதைச் சொல்வதற்குப் பயன் என்னை = இதைச் சொல்வதினுல் பயன் என்னை. (நான்கில்வந்த கருவி)

உன்னைக் கண்ணில்காணக் கிடைப்பது அரிதா யிருக்கிறது. பொன்னிலே செய்த நகை. என்னபுத்தியால் இதைச்செய்தாய். உம்முடைய அனுக்கிரகத்தில் இதற்குத் தப்பினேன். [பஞ்] (ஐந்தில்வந்த கருவி)

கண்ணின் காட்சி. பொன்னின் குடம் உடைந்தாற் பொருதும், பொருதுமோ மண்ணின் குடம் உடைந்தக்கால். வள்ளுவரின் குறள் = வள்ளுவராற் செய்யப்பட்ட குறள். (ஆறில்வந்த கருவி)

இவற்றிற்கு இன்னும் உதாரணங்கள் அவ்வவ் வேற்றுமைகளிற் கூறப்படும்.

103. CONVERSION OF ஒடு.

நிகழ்ச்சி விகாரம் மேலே நிகழ்த்தினும்.

உடனிகழ்ச்சிவேற்றுமை எழுவாயில் விகாரப்பட்டு வருதற்கு மேலே விதிகளில் உதாரணம் கூறினும். மற்றை வேற்றுமைகளில் வருதல் மிக்கு வழக்கன்று. வரின், வந்தவிடத்து உதாரணம் கண்டுகொள்க.

உ-ம்:—தலையும் தலையும் பொருதினால் மலையும் மலையும் பொருதும். [பழ] விவாகத்தில் தலைச்சன் ஆணும் தலைச்சன் பெண்ணும்வந்து கூடினால், அஷ்ட ஐசுவரியங்களும் வந்து கூடும். தலையோடு தலை பொருதினால் எனினும் அமையும்.

XII. நான்காம் வேற்றுமை.

104. THE DATIVE: ITS GOVERNMENT.

பெயர்வினை இரண்டையும் ஏற்குங் கொடையே.

கொடைவேற்றுமை உருபை ஏற்றுவரும் பெயர்கள், வேறு பெயரினையாகினும் வினையினையாகினும் ஏற்றுவரும். கொடைப்பொருளோடும் வேறு பொருளையும் இவ்வேற்றுமை தருமாயினும் பிற பாஷையினும் இவ்வேற்றுமையென்று சொல்லியிருப்பதினாலும், சில தமிழ் நூலாசிரியரும் இஃதைக் கொள்வோன் என்று கூறியிருத்தலாலும், அவ்வழக்கை யாமும் இங்ஙனம் அனுசரித்தாமென்க. இது வழக்கினால்வந்த பெயரன்றி, தகுந்த காரணத்தினால் வந்தது அன்றென்று அடியிற்காட்டிய விதிகளினாலும், உதாரணங்களினாலும் தெளிவுறும்.

உ-ம்:—எனக்கு முன்னேவா. இதற்குச்சரி. வீட்டுக்குப் போனான். எனக்கு வேண்டும் முதல்வன.

105. ITS POSITION.

வினைபயனிலையேல், பின்னும் வருஉம் கொடை.

வாக்கியத்தின் பயனிலையானால், அவ்வினைக்குமுன் வரவேண்டிய கொடைவேற்றுமை, வலியுறுத்தல் சிறப்புமுதலிய பயனைக்கொண்டு பின்னும் வரலாம். எனவே,பெயர்ப்பயனிலை வாக்கியத்துள் இவ்வாறு வருதல் கூடாதென்பது பெறப்பட்டது.

உ-ம்:—போவீட்டிற்கு; போனான்வீட்டிற்கு எனவரும். மகன் எனக்கு எனவரா.

106. NANNUL'S VIEW.

கொடை பகை நேர்ச்சி தகவு அதுவாதல்
பொருட்டு முறைஎன்றூர் கொடைப்பொருள் தன்னே.

நான்காம் வேற்றுமைப்பொருள் இவையென்று கூறிய பவணந்தி, மேற்கூறிய ஏழுபொருளேயும் தருமென்று கூறியுளர். வேறுபொருளேயும் உரையாசிரியர் எடுத்துக் காட்டியுளர்.

107. OUR VIEW.

ஆகினும், நான்கை ஆய்ந்து நோக்கின்,
ஒன்ருே டொன்றை ஒத்துப் பார்த்தலில்
விளங்கிய பயனே இதுவெனக் கிளர்தல்,
பெயரைத் தழுவிய கொடையது தொழிலாம்.

ஆகினும், தமிழ்ப்பாஷையில் நான்காம்வேற்றுமை பிரயோகப்படும் சகல உதாரணங்களேயும், நன்கு ஆராய்ந்து நோக்கின், பெயரைத்தழுவிய கொடை வினையைத் தழுவிய கொடையென யாம் விதந்தனவற்றுள், பெயரைத் தழுவிய கொடை வேற்றுமையானது, இரண்டு பொருளே ஒன்ருேடொன்று ஒத்துப்பார்க்குமிடத்து, மனத்தே உண்டாகிய கருத்து எதுவோ அஃது இதுவென வெளிப்படுத்தியதென்று தோன்றும். எட்டு வேற்றுமையுள்ளும் நான்காம் வேற்றுமையானது பொருளால் மிக்கு விரிந்தமையானும் அதைப் பிழையற வழங்கியது அருமையாயிருத்தலானும், அடியிற் கூறப்படும் விதிகளுக்கெல்லாம் ஆதாரமான இவ்விதியை அறிந்தால், மற்றை விதிகளெல்லாம் எளிதில் அறியப்படுமென்று கருதி, இஃதை இங்ஙனம் கூறினும். ஆதலால் அடியில் வரும் விதிகள் ஒவ்வொன்றினும் இவ்வாதாரவிதியை அனுசரித்துக்கொள்க.

108. SUPERIORITY AND INFERIORITY.

உயர்வு தாழ்வை உணர்த்தும் கொடையே.

ஒன்ருேடொன்றை ஒத்துப்பார்க்குமிடத்தில், ஒன்று பெரியது அல்லது சிறியது என்று மனத்தே விளங்கிய கருத்தைக் கொடைவேற்றுமை யுணர்த்தும்.

உ-ம்:—எனக்குப் பெரியவன், சின்னவன், மூத்தவன், இளேயவன், தாழ்ந்தவன், மேற்பட்டவன். பூவுக்குத்தாமரையே, பொன்னுக்குச் சாம்புநதம் மாவிற் கருமுனி. [கு. மா]

109. Concord and Discord.

சமனும் பகையும் சாற்றுங் கொடையே.

ஒன்றை யொன்ரோடு ஒத்தப்பார்க்குமிடத்து, ஒன்று சமன் அல்லது சமனல்லவென்று மனத்தே தோன்றிய கருத்தைக் கொடைவேற்றுமை உணர்த்தும்.

உ-ம்:—யானைக்கும் பானைக்கும் சரி. [கதா] மரத்து க்கு நேரேபோ. மன்னுயிரைத் தன்னுயிர்க்குச் சமா னமாய் எண்ணினான். எல்லா மாதருக்கும் இச் சீதா பிராட்டியை உபமானம் சொன்னால், இவருக்கு ஒப்பு எங்கேயிருந்து சொல்வன். [கம்] கூழுக்கு மாங் காய் தோற்குமா. பல்லுக்கு அசையாத தோல். [பஞ்] பாம்புக்கும் கீரிக்கும் பகை. [பழ] வார்த் தைக்கு வார்த்தை மறுவார்த்தை பேசாதே. [புகழ்.]

110. Fitness: Price, &c.

தகுதியும் விலையும் சாற்றும் கொடையே.

ஒன்றை யொன்ரோடு ஒத்துப்பார்க்குமிடத்து, ஒன்று தகுதியது அல்லது தகுதியற்றது என மனத்தினிட த்தே உண்டாகிய கருத்தை யுணர்த்துவதற்கு, அத்தகு திப்பொருளிலும் ஈடு விலை முதலிய அதன் இனப்பொரு ளிலும் கொடைவேற்றுமை நடக்கும்.

உ-ம்:—புருஷனுக்கு ஏற்ற பெண்சாதி. மண்ணாங்கட்டி மாப்பிள்ளைக்கு எருமுட்டை பணியாரம். [பழ] பண த்துக்கு மாடுகொண்டேன். மாட்டுக்கு ஈடு கொடுத் தான். பணத்துக்கு நகையை அடகுவைத்தான். ஒரு காசுக்கு மீன் வாங்கினான். எவ்வளவு தொகை க்கு வாங்கினாய். செலவுக்கு இருக்கிறதா. உனக் குப்பதில் இருவரை அனுப்பினேன்.

அட்டதிக்கும்போற்றும் அறவாழியானவற்கு, சிட்டதிதி சங்காரம் செய்முறையே: பட்டமுள்ள மன்னவர்க்கு, நீதி வளையாச்செங் கோல்முறைமை: மின் அனையார்க்கு, உள்ள கற்பும் மேல் முறையாம்: வன்னியர்க்கு, வேதமொழி ஓதுமுறை: வேளாளர் க்கு, ஈகைமுறை: யாதையும் காப்பாற்றல் அவர்க்காம் முறையே: பேதமிலா நம்பியரை நங்கையரும் நங்கை யரை நம்பியரும் பம்பி ஒன்றாய் வாழும்முறை பத்து. [வித்-சாமி]

111. POSSESSION.

உரிமையும் கிழமையும் உணர்த்தும் கொடையே.

ஒன்றை ஒன்றோடு ஒத்துப்பார்க்குமிடத்து, ஒன்று உரியது அல்லது உரியதல்லவென மனத்தினிடத்தே கருத்துண்டாதலால், அவ்வுரிமையையும், சொந்தம், சம்பந்தம், பற்று, பாசம் முதலிய அதன் இனப்பொருளையும் கொடைவேற்றுமை உணர்த்தும்.

உ-ம்:—தாய்க்குப் பிள்ளை. பொருள் உள்ளவனுக்குச் சுகம். [பஞ்] வைத்தவனுக்குப் பயிர். சோம்பேறிக்கு வாழைப்பழம் தோலோடே. [பழ] அவன் உனக்கு என்ன வேணும். அந்தச் சிங்கத்துக்கு வாய்ப்பேச்சுமாத்திரம் தித்திப்பு. [பஞ்]

112. RELATIONS OF LIFE.

உறவும் முறையும் உணர்த்தும் கொடையே.

இதுவும் மேலைவிதியுள் அடங்குமெனினும், இப்பொருளை எந்நூலாசிரியரும் உரையாசிரியரும் சுட்டிக் காட்டினமையாலும், இம்முறைப்பொருளில நான்காம்வேற்றுமை மிகுந்துவருதல் வழக்கானமையாலும் இவ்விதியை யாமும் கூறினுமென்க.

உ-ம்:—சாத்தனுக்கு மகன். ஒருவனுக்குப் பெற்ற பிள்ளை. நான் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் பிறந்து ஒருவனுக்கு முன்தானை யிட்டவளானல், அறுந்த என் மூகக்கு வளரட்டும். [பஞ்] தில்லிக்கு அரசனானலும் தல்லிக்குப் பிள்ளையே. [பழ] எனக்கு அயலார். எங்கள் வீட்டுக்கு அண்டைவீடு. எனக்குச் சிநேகிதன். எனக்குத் தாயானவள் என்னை ஈங்கிட்டு, தனக்குத் தாய் தேடியே செல்வள். [நால்]

113. SENSATIONS.

உவப்பும் வெறுப்பும் உணர்த்தும் கொடையே.

ஒன்றை ஒன்றோடு ஒத்துப்பார்க்குமிடத்து, மனத்தே உண்டாகிய உணர்ச்சிகளாகிய இன்பம் துன்பம் விருப்பு வெறுப்பு முதலியனவற்றையும் கொடைவேற்றுமை உணர்த்தும்.

உ-ம்:—பொன்னுக்கு ஆசை. தெருச்சண்டை கண்ணுக்கு அழகு. [பழ] பெண்டிர்க்கழகு உண்டி சுருங்குதல். [ஔவை] நாவுக்கு ருசி. உனக்குமங்களம். [பஞ்]

எனக்கு ஆனவர். எல்லார்க்கும் நன்ரும் பணிதல், அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து. [குற] புன்புலால் நரம்பு என்புடைப் பொய்யுடல் அன்பர்யார்க்கும் அருவருப்பல்லவோ? [தாய்]

114. Aim and End.

பொருட்டும் முடிவும் புகலும் கொடையே.

ஒரு தொழிலை அதன்காரணத்தோடு ஒத்துப்பார்க்குமிடத்து அதனால் தோன்றிய பலாபலனைக் கொடைவேற்றுமை உணர்த்தும்.

உ-ம்:—கூலிக்கு வேலைசெய்தான். இன்னகாரியத்துக்கு வந்தேன். வட்டிக்குவிட்டு முதலை இழந்தான். வைத்தவனுக்குப் பயிர். நடந்தவனுக்கு வழி தொலையும். கந்தைக்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான் ஆஷாடபூதி. [பஞ்] யாருக்குக் காத்துக்கொண்டிருக்கிருய். என்னுடைய தம்பி இளைய கயிலாசம் சொன்ன புத்தி கேளாமல் துடியா நான் போனதற்கு, வன்னி பழனி மாபாவி சண்டாளன் கன்னியெந்தன் காதலியைக் கைபிடித்துக் கொண்டானே. [Anon]

115. Metaphor.

ஒப்பும் உவமையும் உணர்த்தும் கொடையே.

ஒன்றை ஒன்றோடு ஒத்துப்பார்க்குமிடத்து, அவ்விரண்டும் விகற்பப்பட்டிருந்தும், உபமானத்தால் ஒத்துவருமாகின், அவ்வுபமானப்பொருளையும் கொடைவேற்றுமை உணர்த்தும்.

உ-ம்:—அரசனுக்குக் கண் அமைச்சன். அடங்காப் பாம்புக்கு ராசன் மூங்கில் தடி. குருடனுக்குக் கண் கோல். அரசனுக்கு விழி செவி. எண்ணென்ப : ஏனை எழுத்தென்ப : இவ்விரண்டும், கண்ணென்ப வாழும் உயிர்க்கு. [குற]

(இவற்றுள் உவமைப்பொருள் தொக்கு நின்றது.)

116. Boundary.

எல்லையும் இறுதியும் இயம்பும் கொடையே.

ஒன்றை ஒன்றோடு ஒத்துப்பார்க்குமிடத்து, இடத்தினால் முன்பின் என்றும மேலது கிழது என்றும் எல்லையை வரையறுத்துக் கூறும் பொருளையும் கொடைவேற்றுமையானது கூறும்,

உ-ம்:—ஊருக்கு அப்புறம். மதுரைக்கு வடக்கு சிதம்பரம். அதற்குமேலே. பூமிக்கடியில். அந்தப்பட்டணத்துக்குக் காதவழிதூரத்தில் இறங்கினுள். [கதா] இரண்டுக்கும் நடுவில் அகப்பட்டுச் செத்தது நரி. [பஞ்] ராமனுக்குப்பின் பிறந்தவன் லட்சுமணன்.

117. Quality.

அருமையும் எளிமையும் அறையும் கொடையே.

ஒன்றை ஒன்றோடு ஒத்துப்பார்க்குமிடத்து, தன்மையினுல் அரிதென்றும் எளிதென்றும் பதார்த்த விசேஷங்களைக் கூறும்பொருளையும் கொடைவேற்றுமையானது கூறும்.

உ-ம்:—சொல்லுதல் யார்க்கும் எளிய. அரியவாம் சொல்லியவண்ணம் செயல். [குற] பிள்ளையின் அருமை பெற்றவட்கு. காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு. [பழ] படித்தவனுக்குச் சுளுவு: படியாதவனுக்குக் கஷ்டம்.

118. Distribution.

தனித்தனிப்பொருளையும் சாற்றும் கொடையே.

பல காரியங்களோடு ஒன்றை ஒத்துப்பார்க்குமிடத்து. ஒத்துப்பார்த்த பொருளானது அக்காரியங்களுள் ஒவ்வொன்றிற்கும் பொருந்தி வருமேயானுல், அக்காரியங்களுக்கும் அதற்கும் உள்ள பொருத்தத்தைக் கொடைவேற்றுமை உணர்த்தும்.

உ-ம் :—தலைக்கு ஒருபணம் வரிபோட்டான். புத்துக்கு ஒரு பாம்பிருக்கும். ஆளுக்கு ஒரு காசு. பேருக்கு ஒரு செம்புநீர் கொடுங்கள். நடைக்கு ஒவ்வொன்ருகக் குளத்தில் இருந்த மீன்களை யெல்லாம் கௌவிக்கொண்டு போயிற்று கொக்கு. [பஞ்]

இது காறும், பெயரைத் தழுவிய கொடைவேற்றுமைப்பொருளைக் கூறினும். பெயரைத் தழுவிய கொடையென்றும், அவ்விதிகளுக்கு அடியிற் கூறிய உதாரணங்களிற் சில, வினைக்கும் ஆனதினுல், சிறுபான்மை அவ்விதிகள் வினையைத்தழுவிய கொடைக்கும் ஆகும் என்றும், அவ்வாறே வினையைத் தழுவிய கொடைப்பொருள் இவையென்று அடியிற் கூறும் விதிகளும் சிறுபான்மை பெயர்க்கும் ஆகும் என்றும் கொள்க.

119. Verbs of Giving.

ஈதலாதி ஏற்கும் துவ்வே.

கொடுத்தல் என்னும் வினையும் அப்பொருளை யுணர்த்தும் சகல வினைகளும் நான்காம் வேற்றுமைப்பெயரை ஏற்கும்.

உ-ம்:—பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சினான். மாட்டுக்குத் தண்ணீர் காட்டினான். பிள்ளைக்குச் சோறூட்டினாள். கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்ததுபோல். [பழ] அடியேனுக்கு ஞானோபதேசம் செய்து என்னைக் கடைத்தேற்ற வேணும். [பஞ்]

120. Going and Coming.

போக்கும் வரவும் ஏற்கும் துவ்வே.

போதல் வருதல் என்ற வினைகளும் அப்பொருளை யுணர்த்தும் எல்லா வினைகளும் நான்காம் வேற்றுமைப் பெயரை ஏற்கும்.

உ-ம்:—என்னை வேறோரிடத்திற்குக்கொண்டுபோ. [பஞ்] அவனிடத்திற்கு அனுப்பு. குதிரையைக் குளத்துக்கு நடத்து. கண்ணுக்கு மறைந்தது. வீட்டிற்குப் போ. கரடகனிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு சிங்கத்தினிடத்திற்போய் தூரத்திலே நின்று தண்டம் பண்ணி அரசன் உத்தரவினாலே உட்கார்ந்தது, தமனகன் என்னும் நரி. [பஞ்]

121. The same.

போக்கும் வரவும் ஏற்கும் பெயருள்
உயிரில பொருட்குத் துகரமென்க
உயிருள பொருளுக்கு இடத்தோடு என்க.

மேலை விதியுள் போக்கும் வரவுமாகிய வினைகள் நான்காம் வேற்றுமைப்பெயரை ஏற்றுவரும் என்று கூறியதில், வழக்கை நோக்கின் உயிரில்லாத பொருட் பெயரோடு தனிக்குகரமும், உயிருள்ள பொருட்பெயரொடு இடத்திற்கு என்னும் சொல்லும் பெரும்பாலும் வரும்.

உ-ம்:—வீட்டுக்கு வந்தான். ஆற்றுக்குப் போனான். உன்னிடத்திற்கு வந்தேன். அவனிடத்திற்குப் போ

னேன். உன்னிடத்தில் வந்தேன் = உன்னிடத்திற்கு வந்தேன். அவனுக்கு அனுப்பு = அவன்பொருட்டு அனுப்பு. அவனிடத்திற்கு அனுப்பு = அவன் வசத்தில் இருக்கும்பொருட்டு அனுப்பு. அவனுக்கு ஆள் அனுப்பு=அவனை அழைக்கும்படி ஒருவனை அனுப்பு. அவனிடத்திற்கு ஆள் அனுப்பு = அவனிடத்தில் இருக்கும்படி ஒருவனை அனுப்பு.

122. OTHER VERBS.

வேண்டும், தெரியும், ஆகும், கூடும்
போதும் முதல்வன வேண்டும் குவ்வே.

மேற்கூறிய வினைகளும் அவற்றிற்கு இனமான வினைகளும் வேறு சில வினைகளும் கொடைவேற்றுமைப்பெயரை ஏற்று வரும்.

உ-ம்:—எனக்கு வேண்டும். சாப்பாட்டுக்கு வேண்டும். எனக்கு ஆகும். உனக்குக் கூடும். வயிற்றுக்குப் போதுமான சாப்பாடு. உனக்கு வேண்டிய காரியத்தைக் கேள்.

123. TENSELESS VERBS.

அல்லை இல்லை உண்டு முதலிய
குறிப்பு வினைசில ஏற்கும் குவ்வே.

மேற்கூறிய மூன்று குறிப்பு வினைகளும் வேறு சில குறிப்பு வினைகளும் நான்காம் வேற்றுமைப்பெயரைக் கொண்டு முடியும்.

உ-ம்:—யானைக்கு இல்லை நீச்சும் நிலையும். [வெற்] சுகமும்பெருமையும் யாருக்கு உண்டு, செல்வம் உள்ளவர்களுக்கே யுண்டு. [பஞ்] இவ்வளவு திரவியமும் எனக்கு அல்ல. எதிரதாக்காக்கும் அறிவினார்க்கு இல்லை, அதிரவருவது ஓர்நோய். தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு, அரும்பொருள் யாதொன்றும் இல். [குற]

இது காறும், நான்காம் வேற்றுமைப்பெயர்களை ஏற்கும் பெயர்கள் வினைகள் இவையென்று கூறினும். இனி அவ்வேற்றுமைஉருபுக்கு உரிய சிற்சில விசேஷ விதிகள் கூறுவாம்.

124. Idioms.

இடத்தினும் பொழுதினும் பொருளிலை கொடைக்கே.

இடப்பெயர்களிலும் காலப்பெயர்களிலும் நான்காம் வேற்றுமை உருபு வழக்கில் விரிந்து வரினும் அவ்வுருபுக்கு யாதொரு பொருளும் இல்லை.

உ-ம்:—இடம்: முன்னுக்கு, பின்னுக்கு, மேலுக்கு, வெளிக்கு, அப்படிக்கு, முதல்வன. வெளிக்கு மினுக்கு, உள்ளுக்குச் சொள்ளை. இப்படிக்கு இல்லாத பிள்ளை. இப்படிக்குத் தங்கள் ஊழியன் ராமசாமி.

காலம்: நாளைக்கு, இன்றைக்கு, மேலைக்கு, பத்து நாளுக்கு. இரண்டு வருஷத்துக்குக் குறைவில்லை. அந்த வேளைக்குத் துவரம் பருப்பு அகப்பட இல்லை. [கதா] அப்போதைக்கு, எப்போதைக்கும், என்றென்றைக்கும், முதல்வன. பசிவேளைக்கு வந்தேன். [பஞ்] மட்டுக்கு மிஞ்சி நடவாதே.

125. The same.

அத்தன்மைத்தே கொடை அடுக்கினிலே.

அடுக்குப் பெயர்களில் சிலவற்றுள் முதற்பெயரோ கொடைவேற்றுமை உருபையேற்றும், சிலவற்றுள் இரண்டாவதுபெயரோ அவ்வுருபை யேற்றும் வருதல் வழக்கே யன்றி அவ்வேற்றுமைக்கு யாதொரு பொருளும் இல்லை.

உ-ம்:—ஒருவருக்கொருவர், ஆளுக்காள், நாளுக்கு நாள், படிக்குப்படி, அப்போதைக்கப்போது, வேளைக்கு வேளை சாப்பாடு. தலைக்குத் தலை மூப்பு, நேருக்கு நேர், வாசலுக்கு வாசல். வீட்டுக்கு வீடு அப்படியே. எனவும், ஊர் ஊருக்கு, ஆள் ஆளாளுக்கு எனவும் வரும்.

126. Local Ablative added to the Dative.

இடத்தின் உருபுகள் ஏற்கும் கொடையும்,
பிரிவுப்பொருளை உணர்த்துமாயின்.

பிரிவுபடத்தக்க பொருள் என்று உணர்த்துமாயின், கொடை வேற்றுமையானது, ஏழாம் வேற்றுமையின்கண் கூறியுள கண் கால் கடை இடை முதலிய இடத்தின் உருபுகளுக்கு முன்னும் வரும்.

உ-ம்:—வீட்டுக்குள், வாசலுக்குமுன், உனக்குப்பின், தலைக்குமேலே தண்டனையில்லை. எழுத்துக்கெல்லாம் அக

ரமானது முதலாயிருக்கிறது எனின் வழு. அகரம் ஓர் எழுத்தல்லவென்று பிரிவுபொருள் படுதலான். குடிகளுக்கு எல்லாம் அரசன் தலை. (இவ்விதியின் நுட்பம் ஏழாம் வேற்றுமையின்கண்ணும் கூறப்படும்.)

127. Idioms.

குறித்து என்றுங் கொடைவேற்றுமையே.

சில வாக்கியங்களில் கொடைவேற்றுமையின் பொருள் என்னவென்று விசாரிக்கின், குறித்தென்று பொருள்படுமேயன்றி வேறுபொருள் படமாட்டாது.

உ-ம்:—எனக்கு வரக்கூடாது=எனக்கானல் வருவதற்குச் சாவகாசம் இல்லை. நான் செய்யும் தொழில் தங்களுக்குத் தெரியுமே, எனக்கு வரக்கூடாது. தாங்களே என்புத்திரியை அழைத்துக்கொண்டுபோய் விவாகத்தை நிறைவேற்றிவையும். [பாரத] பிரகஸ்பதியும் பேச்சில் தவறுவானுனல், மற்றவர்களுக்குக் கேட்பானேன். சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும், மற்றவைகளுக்குக் கேட்பானேன். இந்தப் பேச்சுகளுக்கும் யோசனைகளுக்கும் நாம் ராசகாரியத்தில் இருக்கவில்லை. [பஞ்] வேண்டாப் பெண்டாட்டிக்குக் கால்பட்டாலும் குற்றம் கைபட்டாலும் குற்றம்=தனக்கு இஷ்டமில்லாத பெண்சாதியைக்குறித்து அவள் கால்பட்டாலும் குற்றம் சொல்லுவன், கைபட்டாலும குற்றம் சொல்லுவன் அவள் புருஷன். [பழ]

128. Infinitive=the Dative.

செயஎன் எச்சம் நான்கில் விரியும்.

செய என்ற எச்சத்தை விரித்துக் கூறுமிடத்தில், அதை வினையாலணையும் பெயராக்கி நான்காம் வேற்றுமை உருபுகொடுத்து முடிக்கலாம்.

உ-ம்:—செய்யச்சொன்ஞன்=செய்கிறதற்குச் சொன்ஞன். அரசர்கள் மலைபோல் அனுசரிக்கிறதற்குக் கடினமாயிருக்கிருர்கள். இப்போதாகிலும் முட்டைகளைக் காப்பாற்றுகிறதற்கு என்ன செய்யலாம். [பஞ்]

129. Relative Participle=the Dative.

இடத்தின் உருபுகள் நோக்கிய எச்சமும்
நான்காம் வேற்றுமை உருபில் விரியும்.

மேலேகூறிய இடத்தினுருபுகளைக்கொண்டு முடிகின்ற பெயரெச்சங்களையும் வினையாலணையும் பெயராக மாற்றி நான்காம்வேற்றுமை யுருபுகொடுத்து முடிக்கின் பொருள் சிறக்கும்.

உ-ம்:—செய்தபின் = செய்ததற்குப்பின். செய்யும்முன் = செய்தற்குமுன்.

130. Dative with Causal Particles.

காரண உருபை ஏற்கும் நுவ்வே.

காரணத்தைக்காட்டிய சொல்லுருபுகளாகிய ஆக ஆனால் என்று முதலிய சொற்கள் நான்காம் வேற்றுமை உருபின்மேல் ஏற்றிச் சொல்லப்படும்.

உ-ம்:—அவனுக்காக, அவனுக்கோசரம், அவனுக்கென்று அவனுக்கானால், அவனுக்கென்றால், முதல்வன.

(ஆகினும், நிமித்தம், பற்றி, இட்டு, முதல்வன அவ்வாறு வரா.)

131. Several Datives.

ஒன்று அலாதன கொடையும் வருமே.

நான்காம் வேற்றுமைப்பெயர்கள் இரண்டு மூன்று நான்குவரையில் அடுக்கி ஒரு பயனிலையைக் கொண்டு முடியும்.

உ-ம்:—இரண்டுகோடை: அவனுக்குக் கவலைக்கு இடம் இல்லை. பசித்தவனுக்கு வயிற்றுக்குச் சோறிடு. எனக்குச் செலவுக்கு இல்லை. எனக்குக் கைக்கு மோதிரம் போட்டான். எங்களுக்கு யாருக்கும் தெரியாது.

மூன்றுகோடை: எனக்கு வயிற்றுக்குச் சாப்பாட்டுக்கு ஒன்றும் இல்லை.

நான்குகோடை: இன்றைக்கு எனக்கு வயிற்றுக்குச் சாப்பாட்டுக்கு ஒன்றும் இல்லை. இன்றைக்கு உனக்கு வீணுக்கு வயிற்றுக்கு யான் சோறிட்டது.

XIII. CONVERSION OF THE DATIVE.

132. Dative in Form and in Sense.

பொருளால் கொடையே தொடரால் பிறவாம்.

பொருளை நோக்கினுல் கொடைப்பொருளாய் இருக்கும்சொற்கள், வாக்கியத்தொடரை நோக்கினுல், வேறு வேற்றுமைகளாயும் வரும். சொல் இலக்கணம் எனின் சொற்றொடரினுல் ஆறும் வேற்றுமையாக வந்த சொல் பொருளால் நான்காம் வேற்றுமையாகியது, சொல்லுக்கு இலக்கணம்எனப் பொருள் படுதலால் என்க.

133. Conversion of the Dative.

எல்லா உருபொடும் கொள்வோன் எழுமே.

விளி யொழிந்த மற்ற வேற்றுமைகளில் எல்லாம் நான்காம் வேற்றுமைப்பெயரானது விகாரப்பட்டு வருமென்று ஈசான தேசிகர் கூறியுளர்.

உ-ம்:—எழுவாய்: நான் போனது இவ்வூர்=இவ்வூருக்கு நான் போயிருந்தேன். பயிரை வைத்தவன் பயிரை அனுபவிப்பான்=வைத்தவனுக்குப் பயிர்.

இரண்டாம் வேற்றுமை: மாட்டைத் தண்ணீர்காட்டினுன்=மாட்டுக்குத் தண்ணீர்காட்டினுன். பிள்ளையைச் சோறூட்டினுன். அடியேனை ஞானோபதேசம் செய்து காப்பாற்றவேண்டும். [பஞ்] கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று. [குறள்]=ஒருத்திக்குக் காட்டும்படி சூடினீர் என்று கோபிப்பள். இல்லானை அஞ்சுவான், அஞ்சும் மற்றெஞ்ஞான்றும் நல்லார்க்கு நல்ல செயல். களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க் குளித்தானைத்தீத்துரீஇயற்று. [குற]

மூன்றம் வேற்றுமை: முன்னுலே போனுன்=முன்னுக்குப்போனுன். உன்னுல் முடியாது இக்காரியம்=உனக்கு முடியாது. பெயரால் அரசன். காரியத்தால் ஒன்றும் இல்லை=பெயருக்கு அரசன். காரியத்துக்கு ஒன்றும் இல்லை. இந்நகையை எவ்வளவு பணத்தால் செய்தாய்=எவ்வளவு பணத்துக்கு. எள்ளாத எண்ணிச்செயல் வேண்டும். தம்மோடு கொள்ளாத கொள்ளாது உலகு=தமக்குப் பொருந்தாத காரியங்களை உலகு அங்கிகரிக்கமாட்டாது.

ஐந்தாம் வேற்றுமை : என்னிலும் அவள் மூப்பு—என க்கு அவள் மூப்பு. மதுரையில் வடக்குச் சிதம்ப ரம்—மதுரைக்கு வடக்கே. பழியின் அஞ்சினான்— பழிக்கு. யாதின் நீங்கினான்—யாதுக்கு நீங்கினான். [குற]

ஆறாம் வேற்றுமை: அச்சிங்கத்தினுடைய வாய்ப்பேச் சுமாத்திரம் தித்திப்பு—அச் சிங்கத்துக்கு வாய்ப்பே ச்சுமாத்திரம் ஸ்ரீ-உன்பயம் அவனுக்கு உண்டு—உன க்குப் பயப்படுகிறபயம் ஸ்ரீ-நூலினது குற்றம் கூறி னான்—நூலுக்குக் குற்றம் ஸ்ரீ.

ஏழாம் வேற்றுமை : இதில் நான் செய்யத்தக்கதென் ன—இதற்கு நான் ஸ்ரீ. வட்டியில் ஆசைவையாதே— வட்டிக்கு ஆசை ஸ்ரீ-அதிகத்தில் ஆசை அதிகத்தில் நஷ் டம்—அதிகத்துக்கு ஆசை ஸ்ரீ-என்னிடத்தில்வா—என் னிடத்திற்குவா. நம்மில் ஒருவன்—நமக்குள் ஒருவன் நூறடி அகலத்தில் வெட்டு—நூறடி அகலத்துக்கு வெட்டு.

மேற்காட்டிய உதாரணங்களில் நான்காம் வேற்றுமை யானது பொருளில் விகாரப்படாது மற்றை வேற்றுமைக ளில் வரலாம் என்று தோன்றியது. ஆகினும், ஒரு வேற் றுமையிலுள்ள வாக்கியத்தை ஒரு வேற்றுமை வாக்கிய மாகக் கூறுமிடத்தில் மொத்தப் பொருள் சிதைவுபடாதி ருந்தும் பொருள் நுட்பத்தில் சிறிது பேதம் உண்டாகு மென்று மேலே உதாரணங்களில் கண்டு தெளிக.

XIV. ஐந்தாம் வேற்றுமை.

134. Nouns and Verbs governed by the Ablative.

பெயரைத்தழூஉம், வினையைத்தழூஉம்,
ஐந்தாம் வேற்றுமைப்பெயர்கள் என்க.

ஐந்தாம் வேற்றுமை யுருபுகளை யேற்கும் பெயர்கள் பெயர்ச்சொல்லையாகினும் வினைச்சொல்லையாகினும் தழு வின்று பெயர்த்தொடர் என்றும் வினைத்தொடர் என வும் இருபாற்றாகுமென்க.

உ-ம்:—மதுரையின் வடக்குச் சிதம்பரம் (பெயர்த் தொ டர்). என்னிலும் பெரியவன் (குறிப்பு வினைத்தொ டர்). பொன்னிலே செய்தான் (தெரிநிலை வினைத் தொடர்).

135. Position of the Noun—Ablative.

பெயரைத் தழுவின் பெயர்க்கு முன்னே,
பிறிதினும் பிறழும், வழுவன்றென்க.

ஐந்தாம் வேற்றுமைப்பெயர்கள் பெயரைத்தழுவி வருமாகின், தாம் தழுவிய பெயருக்கு முன்னே வருதல் பெரும்பாலும் வழக்கென்க. அஃது ஒரோவழி பிறழ்ந்து ஈற்றில் வந்தாலும் வழுவன்று. அவ்வாறு வந்தவழிக் கண்டுகொள்க.

136. Position of the Verb—Ablative.

வினையைத் தழுவினும், அதுவே விதியாம்.

மேலே சொன்ன விதியே, ஐந்தாம் வேற்றுமையின் பெயர்கள் வினையைத் தழுவி வருமிடத்தும் பொருந்துமென்க.

137. Uses of the Noun—Ablative.

பெயர்த்தொடர் ஐந்துக்கு எல்லை வழக்கே.

ஐந்தாம் வேற்றுமைப்பெயர்கள் பெயரைத் தழுவி வருமாகின், பெரும்பாலும் எல்லைப்பொருளையே வழக்கினிடத்து உணர்த்தும்.

உ-ம்:—தோன்றலிற் றோன்றாமை நன்று. [குற] மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் [ஔ] காக்கையிற் கரிது களம்பழம் = காக்கையைப் பார்க்கக் கரிது களம்பழம். மதுரையின் வடக்குச் சிதம்பரம். நூறடி உயரத்தில் ஒரு தூக்குமரம் செய்வித்தான். "ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையிற் பேதையார் இல்" [குற] எல்லாத் தவமும் இயற்றி நின்றோனினும், எல்லாக் கலைகளும் கற்றுணர்ந்தோனினும், செல்லாக் கருமம் எல்லாம் செய்தோனினும் நல்லான் யோகியே நீ அதை நண்ணுவாய். [பகவ]

138. Idiomatic use of the Noun—Ablative.

எல்லைப்பொருளில் இல்லெனும் உருபே
உம்மையேற்று வருதலும் வழக்கே.

ஐந்தாம் வேற்றுமைப்பெயர்கள் எல்லைப் பொருளதாய வரும்போது வழக்கில் உம்மெனும் இடைச்சொல்லையேற்று வருமென்க.

உ-ம்:—என்னினும் பெரியவன். சோழனினும் சிறந்தவன் கம்பன். அதினும் இது பெரிது. மதுரையிலும் தெற்கு ராமேஸ்புரம்.

139. Linear Measure.

அளவையாவும் எல்லையெனினும்
நீட்டலொன்றே ஐந்தில் இயலும்.

நால்வகையான அளவைப்பெயர்களும் எல்லைப்பொருளாமெனினும், நீட்டலளவை யொன்றுமாத்திரம் ஐந்தாம வேற்றுமைப்பெயராய் வரும். மற்றை மூன்றளவைகளும் அவ்வாறு வராவென்க.

உ-ம்:—நூறடி உயரத்தில் ஒரு தூக்குமரம் செய்வித்தான். இவ்வளவு அகலத்தில், இவ்வளவுயரத்தில், இவ்வளவு பருமனில், கனத்தில், பிரமாணத்தில், இதைச்செய்.

140. Similitude.

ஒப்புப் பொருளேல் செய்யுள் வழக்கே.

ஐந்தாம் வேற்றுமைப் பெயர்கள் செய்யுள் வழக்கில் மாத்திரம் ஒப்புப்பொருளில் வருமென்க.]

உ-ம்:—காக்கையிற் கரிது களம்பழம்—காக்கையைப் போலும் கரிது களம்பழம். வீறணிந்தவன் மேனியின் மீண்டவே. வள்ளியோரின் வழங்கினமேகமே. [ராமா] குன்றின் அனையாரும் குன்றுவர். குன்றுவ குன்றி யனையசெயின். ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மையுடைத்து. [குற] பஞ்சியின் மெல்லிதேனும் பகை சிறிதென்ன வேண்டாம்.

செல்வமே போற்றலை நிறுவித்தேர்ந்தநூல்
கல்விசேர்மாந்தரின் இறஞ்சிக் காய்த்தவே.[சிந்தாமணி]

141. Uses of the Verb—Ablatives.

நீக்கவினைகள் நீக்கமேற்கும்.

நீங்குதல் என்னும் பொருளை யுணர்த்திய வினைகள் நீங்கப்படுதலம் பொருள் முதலிய பெயர்களை ஐந்தாம் வேற்

றுமை யுருபில் ஏற்றுவருமென்க. இதனால் ஐந்தாம் வேற்றுமைப்பொருளை நீக்கப்பொருளென்றும் அவ்வேற்றுமையை நீக்கமென்றும் இலக்கணநூலாசிரியர் கூறினர். ஆகினும் இப்பொருளை நன்கு நோக்கின் இவ்வுருபுப்பெயரைப் பெற்று முடியும் வினையினால் இப்பொருள் தோன்றியதன்றி உருபினால் தோன்றியதல்லை. ஆதலால் நீக்கவினைகள் நீக்கவினையை ஏற்குமென்றும்.

உ-ம்:—தலையினிழிந்த மயிரனையர், மாந்தர் நிலையினிழிந்தக் கடை. விசும்பிற்றுளி விழினல்லான் மற்றாங்கே பசும்புற் றலைகாண்பரிது. நெடும்புனலுள் வெல்லும் முதலை, அடும்புனலின் நீங்கின் அதனைப்பிற. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன். [குற]

142. Means and Instrument.

வேறதுப் பொருளும், வினையான் நடக்கும்.

ஐந்தாம் வேற்றுமைப்பெயர்கள் வினையைக்கொண்டு முடியுமிடத்தில், அவ்வினையினாலே கருவி காரணம் ஹேது முதலான பொருளையும் உணர்த்துமென்க.

உ-ம்:—பொன்னிலே செய்த நகை கையில் எடுத்தான். மண்ணிலே செய்த பாண்டம். உம்மைக் கண்ணிலே காணக் கிடைக்கவில்லை. உம்முடைய அனுக்கிரகத்தில் இப்பாவத்துக்குத் தப்பினேன். [பஞ்] செடிமறைவில் ஒளிந்துகொண்டிருந்தான். [கதா] அன்பின் விழையார், பொருள் விழையும் ஆய்தொடியார் இன்சொல் இழுக்குத் தரும். [குற] பாலினூட்டுவர் செங்கைப் பங்கயம் வானிலாவுறக் குவிவ மானுமே. [ரா] பொற்பில் நின்றன பொலிவு. பொய்யிலா நிற்பில் நின்றன நீதி. மாதரார் அற்பில் நின்றன அறங்கள். அன்னவர் கற்பில் நின்றன காலமாரியே. [ரா] கல்லின் மாரியைக் கைவகுத்தாள். அது வில்லின் மாரியின் வீரன் விலக்கினன். [ரா] பண்ணிய பயிரில் புண்ணியந் தெரியும்.

மூன்றும் வேற்றுமையுருபு வரவேண்டிய விடங்களிலெல்லாம் மயக்கமில்லையாகின் ஐந்தாம் வேற்றுமையுருபை வழங்கியது சிறப்பென்க. அவ்வாறு வழங்குமிடத்து மயக்கு எங்ஙனமெனின், ஏழாம் வேற்றுமைக்கும் ஐந்தாம் வேற்றுமைக்கும் இல் உருபு பொதுமையாய் நிற்றலான்

இடப்பொருளோ ஏதுப்பொருளோ என ஐயந் தோன்றலாகான் என்க. அவ்வையம் நீங்குதற்குப் பொருளை உன்னிப்பார்க்க. நம்மிற்பெரியன் எனில் ஐந்தாம் வேற்றுமை. நம்மிலொருவன்எனில் ஏழாம் வேற்றுமை. கல்வியிற் பெரியன் கம்பன்எனவே ஏதுப்பொருள். அதுவே கல்வியாற் பெரியன் கம்பன்எனவும் வரலான். இவ்வாறு பொருளை நுட்பப்படுத்திப்பார்ப்பதிற் பயனுண்டானமை மாணாக்கருக்கு இது நல்ல அப்பியாசமென்க.

XV. நீக்கவிகாரம்.

143. Conversion of the Fifth Case.

பொருளால் நீக்கம், தொடரால் பிறவாம்.

பொருளை நோக்கின் ஐந்தாம் வேற்றுமைப்பொருளாயும், தொடரைநோக்கின் வேறு வேற்றுமைத்தொடராயும், சில வாக்கியங்கள் அமையுமென்க. இஃது பொது விதியாக, சிறப்புவிதியும் உதாரணங்களும் அடியிற் கூறுதும்.

144. The same.

இரண்டில் மூன்றில் நான்கில் எழுமே
நீக்கப்பொருளை விரிக்குங்காலே.

ஐந்தாம் வேற்றுமைப் பொருளை இரண்டாம் வேற்றுமையானும் மூன்றும் நான்காம் வேற்றுமையானும் விரித்துக் கூறப்படுமென்க.

உ-ம்:—

2 { மதுரையை நீங்கினான்=மதுரையினின்று நீங்கினான்.

3 { பொன்னாற் செய்த குடம்=பொன்னிற் செய்த குடம்.

4 { மதுரைக்கு வடக்குச் சிதம்பரம்=மதுரையின் வடக்குச் சிதம்பரம்.
அவளுக்கிவள் மூப்பு=அவளினும் இவள் மூப்பு.

XVI. ஆறாம் வேற்றுமை.

145. Possessives govern only Nouns.

பெயரையன்றி, வினையைத் தழுவா
ஆறாம் வேற்றுமை எல்லா வழக்கினும்.

செய்யுள்நடை வாசகநடையெனும் இருவழக்கினுள்ளும் ஆறும் வேற்றுமைப்பெயர்கள் வேறு பெயரையே தழுவுமன்றி வினையைத் தழுவமாட்டா. இஃதொரு வேற்றுமையே பெயரைமாத்திரம் தழுவுமென்க.

146. Position of the Possessive.

முதற்றே வேற்றுமை, முறைபிறழ்வு இன்றால்.

ஆறும் வேற்றுமைப்பெயரானது முதலிலும் அதனால் தழுவப்பட்ட பெயரானது பின்னுமாய் நடக்கும். இந்த முறை எவ்வழக்கினும் பிறழமாட்டாதென்க.

147. Relation.

உரிமையுணர்த்தல் குறையதுபொதுப்பொருள்.

குறைவேற்றுமையென்னும் ஆறும் வேற்றுமைப்பெயர்கள் வேறு பெயர்களைத் தழுவுமிடத்தில் அவ்விருபெயருக்கும் இருக்கும் உரிமை சம்பந்தத்தைக் காட்டியது, ஆறும வேற்றுமையினது பொதுப்பொருளென்க. அவ்வுரிமை எவ்வெவ்வாறு வருமென அடியிற் கூறுதும்.

148. Possession.

உடைமையானே, உரிமையென்க.

ஒருபொருள் வேறொருபொருளுக்குள்ளபோது அவ்வுடைமைபற்றியே உரிமையுண்டென்க. அவ்வுரிமை ஆறும் வேற்றுமையான் கிளரப்படுமென அடியில் வரும் விதிகடோறும் அமைத்துக்கொள்க.

உ-ம்:—சாத்தன் தோட்டம். சாத்தன் பூமி. சாத்தன் சட்டை. சந்திரன் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிக்கிறான். [பஞ்] அந்த உருத்திராட்சப்பூனை பட்சிகளின் குஞ்சுகளை நாடோறும் தின்றுகொண்டிருந்தது

149. Property.

தன்மையானே உரிமையென்க.

ஒருபொருளுக்குள்ள குணம் இயல்பு தன்மை முதலிய பண்புகளாலும் அவ்வுரிமை தோன்றுமென்க.

உ-ம்:—சாத்தனது குணம். நிலத்தினியல்பு. ஒருவனுடைய குணம் தெரியாமல் அவனுக்கிடங் கொடுக்கலாகாது. [பஞ்] அண்டர்கள் துயரமும் அரசர் ஆற்றலும் விண்டிட. [ரா]

150. ACTION.

செய்கையானே உரிமையென்க.

ஒரு பொருள் ஒருசெய்கைக்குக் கர்த்தாவாகும்போது அச்செய்கையாலாகிய பயனுக்கு அதுவே சுதந்தரமுடையதாகலின், செய்கைபற்றியும் உரிமை யுண்டெனக.

உ-ம்:—வள்ளுவர் குறள். அரசன் மாளிகை. சாத்தன் பாட்டு. ஆற்றுப் போக்கு. கள்ளர் வரவு.

151. PLACE.

இடத்தினானே உரிமை யென்க.

ஒரு பொருளுக்கு ஒரு ஸ்தலமே சம்பந்தப்பட்டபோது அப்பொருளுக்கும் ஸ்தலத்திற்குமுள்ள உரிமையை ஆறும் வேற்றுமை யுணர்த்துமென்க.

உ-ம்:—பட்டணத்துப் பிள்ளை. கும்பகோணம் ராமஸ்வாமி. மாங்குடி மருதனார். ஆலங்குடி வங்கனார். ஆற்றுச்சலம். காட்டு மிருகங்கள். வேலிப் பருத்தி. பேய்த் துவரை. பேய் முருங்கை. (இம்மொழிகளில் பேய்=காடு எனப் பொருள்பட்டது.)

152. TIME.

காலத்தானே உரிமையென்க.

ஒரு பொருளுக்குங் காலத்துக்குஞ் சம்பந்தந் தோன்றியபோது, அச்சம்பந்தம் நீங்கமாட்டாமையான் அத்தன்மைய உரிமையையும் ஆறும் வேற்றுமை யுணர்த்துமென்க

உ-ம்:—ஒருநாள் உணவு. பருவமழை. மாசமும்மாரி. ஆடிப் பெருக்கு.

153. MEANS.

கருவியானே உரிமையென்க.

ஒரு பொருளை ஒரு கருவியினாற் செய்யும்போது அக்கருவிக்கும் அப்பொருளுக்கும் இருக்கும் சம்பந்த உரிமையை ஆறும் வேற்றுமைப்பெயர்கள் தெரிவிக்குமென்க.

உ-ம்:—மண்ணின் பண்டம். பொன்னின் குடம். கருப்பு வில். ஓலைச் சுருள். இருப்புத்தூணைக் கரையான் அரிக்குமா. சற்குடம். வெள்ளிக் கிண்ணி. பொன்னுலகம். பொன் சரிகை.

154. MEASURE.

அளவினானே உரிமையென்க.

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டலாகிய நால்வகையளவுக்கும் அளக்கப்படுபொருளுக்கும் சம்பந்த முண்டாகியபோது அவ்வுரிமையை ஆறாம் வேற்றுமைப்பெயர்களால் தெரிவிக்கப்படுமென்க. எனவே அளவுப்பெயருக்கும் அளக்கப்படுபொருளுக்கும் உரிமைப்பொருள் உண்டாமெனினும் உருபு தோன்றலின்றியே பெயர்கள் தொடர்ந்து வருமென்க. இதை உருபுத்தொகை என்னும் இயலில் விரித்துக் கூறப்படும்.

உ-ம்:—ஒரு பிடி யன்னம். ஒரு படி அரிசி. ஒரு செம்பு நீர். இரண்டு வீசைச் சர்க்கரை. பத்துப் பணம்.

155. COMPREHENSION OR INCLUSION.

முதலுக்கு உறுப்பான் உரிமையென்க.

முதல் சினை பிண்டம் உறுப்பு என முன்னர்க்கூறிய பெயருள், சினையும் உறுப்புமாகிய பெயர்கள் முதலும் பிண்டமுமாகிய பெயர்களுக்கு உரிமையாகுமெனப.

உ-ம்:—சாத்தன் கை. சாத்தன் கால். மரக்கொம்பு. தம்மக்கள் சிறுகையளாவியகூழ் அமிழ்தினும் இனிது.

156. AGGREGATION.

தொகுதியானே உரிமையென்க.

ஒரு பொருள் பலசேர்ந்து, கூட்டம் இனம் குழு எனவும், மந்தை படை சேனை கும்பு குவியல் எனவும், தோப்பு சோலை கொத்து பொதி போர் எனவும், தொகுதிப்பொருளாமிடத்தும், முதற்பொருளுக்கும் தொகுதிப்பெயருக்கும் உள்ள உரிமையையும் ஆறாம்வேற்றுமை உணர்த்துமென்க.

உ-ம்:—ஆட்டு மந்தை. மாஞ் சோலை. இலுப்பைத் தோப்பு. பெரியோர் சபை. மல்லிகைச் செண்டு.

157. MUTATION.

விகாரத்தானே உரிமையென்க.

ஒரு பொருள் வேறுபொருளா மாறியவிடத்தும் அவை யிரண்டிற்கும் ஓர் ஒற்றுமை யிருக்குமாதலான், அவ்வொற்றுமையையும் ஆறாம் வேற்றுமைகொண்டு தெரிவிக்கப் படுமென்க.

உ-ம்:—நெற் பொரி. மஞ்சள் பொடி. கரித்தூள். பருத்தி நூல். தினைமா. களிமண் நிலம். மணல் நிலம்.

158. QUALIFICATION.

பண்புப் பெயரான் உரிமையென்க.

செம்மை சிறுமை சேய்மை தீமை முதலிய பண்புப் பெயர்கள் வேறு பெயர்களைத் தொடர்ந்து விகாரப்படாது நிற்குமிடத்தும் அத்தன்மைய தொடரையும் ஆறும் வேற்றுமைத்தொடரென்று சொல்லுதல் இலக்கண சம்பந்தத்தினாலென்க.

உ-ம்:—கறுப்புக் குதிரை. சிகப்பு வர்ணம். வெள்ளை மேகம்.

இவ்வுதாரணங்களைப் பண்புத்தொகை எனல் பொருட்டொடராலெனவும், ஆறும் வேற்றுமைத்தொடர் எனல் சொற்றொடராலெனவும் காண்க. அன்றியும், கறுப்புக் குதிரை என வேற்றுமைத்தொடராயது எங்ஙனமெனின், இக்குதிரை எந்நிறத்தினது என வினவுழி, கறுப்பு நிறத்தினது என விடை கூறியக்கண், ஆறாம்வேற்றுமை அமைந்ததைக்காண்க. கறுப்பு வெளுப்பு சிகப்பு முதலிய ஐந்து வர்ணங்களையும் அவற்றின் பேதத்தையும் விசேஷப் பெயராக்கி, கறுப்பு நிறத்தில் பல பொருள்கள் வரப்பெறுமாகையான், அப்பல பொருள்களுள் குதிரை ஒன்றுஎனச் சுட்டிக்காட்டுமிடத்து, கறுப்பு நிறத்தினது குதிரையெனப் பொருள்படுதலானும் வேற்றுமைத்தொடரானதுங்காண்க.

159. METAPHOR.

உவமத் தொகையான் உரிமையென்க.

இரண்டு பொருளுக்கு உபமான உவமேயத்தினாலே பொருத்தமுண்டாகியபோது, அப்பொருத்தத்தைக் காண்பிக்கும் உவமைச்சொற்களின்றி ஆறும் வேற்றுமைத்தொடரான் அப்பெயர்கள் தொடரப்படுமென்க.

உ-ம்:—மதிமுகம். சட்டித்தலை. யானைக்கால். கிளிமூக்கு மாம்பழம்.

இற்றுள் ஆறும் வேற்றுமைத்தொடர் எங்ஙனமெனின் நங்கைமுகம் எவ்வுவமானத்தது, மதியின் உவமானத்தது. இவ்விடலையின் தலை எவ்வுவமானத்தது, சட்டியின் உவமானத்தது. இப்புருடன் கால் எவ்வுவமானத்தது, யானையின் உவமானத்தது. இம்மாவின் கனி எவ்வுவமானத்தது, கிளிமூக்கின் உவமானத்தது என வருதலும் அவற்றிற்குள்ள உரிமை தோன்றலுங்காண்க.

160. Separable and Inseparable Adjuncts.

தற்கிழமையும் பிறிதின் கிழமையும்
ஆயிரு கிழமையும ஆறுக்கு என்றனர்.
ஆயினும், அவரோ கூறிய உதாரணம்
பயனில வாகலின், மாறுகோள் கூறுதும்.

ஆறும் வேற்றுமைப்பொருளைத் தற்கிழமை பிறிதின் கிழமை என நூலாசிரியர் வகுத்த நியமத்திற்கு உரையாசிரியர் பலரும் கையின் விரல் எனின் கையை விட்டுப் பிரிக்கப்படாமையான தற்கிழமை என்றும், விரலின் மோதிரம் எனின் விரலைவிட்டு நீக்கப்படும் தன்மையான் பிறிதின் கிழமையென்றும் உதாரணம் சொல்வதை நோக்கின், இலக்கண சம்பந்தமான யாதொரு பயனும் தோன்றாமையான், அவ்விருவகைப் பொருளுக்கும் யாம் வேறு கருத்தைக் கூறுதுமென்க.

161. Attributive and Objective Genitives.

தன்னதுகிழமை எழுவாய்ப் பொருளாம்.
பிறிதின்கிழமை வேற்றுமைப் பொருளாம்.

இரண்டு பெயர்கள் ஆறும் வேற்றுமையில் தொடர்ந்து நிற்குமிடத்து, பொருளை நோக்க அத்தொடர் எழுவாய்ச் சம்பந்தமாயிருக்குமெனின், அதைத் தற்கிழமையென்க. வேறு வேற்றுமைச் சம்பந்தமாகி வேறொரு எழுவாய் தொடருமெனின், அதைப் பிறிதின் கிழமையென்க. எவ்வாறெனின், உன்பயமெனின், நீ பயப்படும் பயமென தற்கிழமை: அப்பயம் தன்னதாகலான். உனக்குப் பயப்படும் பயமெனப் பிறிதின்கிழமை: அப்பயம் வேறொருவனதாகலான். தற்கிழமை பிறிதின்கிழமையென நூலாசிரியர் கூறிய நியமத்திற்கு யாம் இங்ஙனம் கூறிய பொருளால் பயனென்னையெனின் கூறுதும். பல வேற்றுமைப்பொருள்களும் உருபுகளும் ஆறும் வேற்றுமைத்தொடராய் எஞ்சி வருதலான், கருதினபொருள் இதுவோ அதுவோவெனக் கேட்கின்றவனின் மனது ஐயுறுவண்ணம் இன்ன வேற்றுமைதொக்கு, இன்னசொல எஞ்சி, இன்ன பொருளாமென்று கூறின் பயனுண்டென்க. என்னை எனின், உன்பயமெனின், நீ பயப்படும் பயமெனவும், உனக்கொருவன் பயப்

படும் பயமெனவும் பலபொருள் படுதலான், இவற்றுள் கருத்தினபொருள் இதுவென ஒருபொருளை வரையறுத்துக் கூறுவிடின், மனது தேற்றமின்றி மயங்குகையான், தற்கிழமையென நீ பயப்படும் பயமெனவும், பிறிதின் கிழமையென உனக்கு வேறொருவன் பயப்படும் பயமெனவும பொருள் பிரிவுபட்டு ஐயம் நீங்கியது காண்க.

EXAMPLES OF THE ATTRIBUTIVE GENITIVE.

உ-ம்:— தற்கிழமை. { தெய்வன்பு=தெய்வம் மன்னுயிரிடத்தில் வைத்த அன்பு. மண்பானை. வான்சிறப்பு. வள்ளுவர் குறள். முள்வேலி. சாத்தன்பாட்டு=சாத்தன் பாடியபாட்டு. கம்பன்ராமாயணம்.

OF THE OBJECTIVE GENITIVE.

பிறிதின்கிழமை. { தெய்வவணக்கம்=தெய்வத்தை வணங்கிய வணக்கம். சொல்லிலக்கணம்=சொல்லைப்பற்றிச் சொல்லிய இலக்கணம். சாத்தன்பாட்டு=சாத்தன்மீது பாடிய பாட்டு. தெய்வன்பு=தெய்வத்தினிடத்து அடியார்வைக்கும் அன்பு. இராஜபக்தி. பிள்ளையார் ஸ்துதி. கடவுள் வாழ்த்து. கரும்புவேலி. சரஸ்பதி ஸ்துதி. நரஸ்துதி. முகஸ்துதி. குருத்துரோகம். இவ்வழியில் திருடர் பயமில்லை. இவனுக்கு எழுத்து வாசனை தெரியாது.

162. GENITIVES OF THE VERBAL NOUNS.

பெயரோ குறையாம் வினைதொழிலாமேல்.

முற்றுவினைகொண்டு முடியும் வாக்கியங்களை ஒரு கருத்தாக்குமிடத்தில் முற்றுவினையைத் தொழிற்பெயராக மாற்றினால், எழுவாயை ஆறாம் வேற்றுமைப்பெயராகவும் மாற்றலாமென்க. (குறை=ஆறாம்வேற்றுமை.) எனவே எழுவாய் ஆறாம்வேற்றுமையாக வருதலுமன்றி முற்றுவினை தொழிற்பெயரானவிடத்தும் எழுவாய்ப்பெயர் எழுவாயாகவே நிற்றலுமுண்டென்க. (நான் வந்தேன் என இரண்டு கருத்து. என்வரவு என ஒரு கருத்தாகியது.)

உ-ம்:—நான் வந்தேன்=நான் வருதல்=என்வரவு; வருகை. கண் காணும்=கண் காணல்=கண்ணின் காட்சி.

163. Local Particles with the Genitive.

இடப்பொருளுருபை ஏற்கும் ஆறும்
ஒற்றுமைப்பொருளை யுணர்த்துமாயின்

கண் கால் கடை இடை என ஏழாம் வேற்றுமை யுருபுகளாகக் கூறியுள சொற்களெல்லாம் ஆறாம் வேற்றுமைப் பெயரை ஏற்பதுமுள. அவ்வாறு ஏற்றுவரும் இடத்தில் ஒற்றுமைப்பொருளை உணர்த்துமென்க. இவ்வுருபுச்சொற்கள் நான்காம வேற்றுமைப்பெயரோடு வருமிடத்துப் பிரிவுப்பொருளை யுணர்த்துமென்றும்.

உ-ம்:—மரத்தின்மேல் (ஒற்றுமை). மரத்துக்குமேல்(பிரிவு). தலையின்மேல்(ஒற்றுமை). தலைக்குமேலே தண்டனை யில்லை (பிரிவு). எழுத்துக்கெல்லாம் அகரமுதல் (பிரிவு பொருளாதலான வழு). எழுத்துகளிலெல்லாம் அகரமுதல் (ஒற்றுமை யானதால் சரி). தலைக்குள் மூளை, தலையினுள் மூளை யெனினும் பொருள் ஒன்றே யெனின் அன்றென்க. தலைக்குள் மூளையெனுமிடத்துத் தலையோட்டை (கபாலம்) தலையெனவும், தலையினுள் மூளை யெனுமிடத்து, ஓடு, மூளை முதலிய உறுப்புகள் யாவும் பொருந்திய சிரசைத் தலை யெனவும் பொருள்படுதல் காண்க.

ஓட்டுக்குள் புளி (எனின் சரி. ஓடும் புளியும் வேறாதலான், பிரிவு). ஓட்டினுள் புளி (எனின் வழு. ஓடும் புளியும் ஒன்றல்லாமையான்). சேற்றினுள் விலாங்கு. (சரி. சேறும் விலாங்கும் ஒன்றா யிருத்தலான்). சேற்றுக்குள் விலாங்கு. (சரி. சேறும் விலாங்கும் வேறா யிருத்தலான்.)

தலையின்மேல், தலையினுள், தலையின்கண், தலையினிடத்தில், தலையினகத்து, தலையின்புறத்து, தலையின்மீது, தலையின் அடியில், தலையின்கீழ், தலையின்முன், தலையின்பின், எனப் பிறவருதலுங் காண்க.

உ-ம்:—தவளைகளெல்லாம் தங்கள் அரசனுடனே மந்தவிஷ சர்ப்பத்தின்மேல் உள்கார்ந்தன. மேகவர்ணன் மரத்தின்மேற் சுகமாய் அரசு செய்துகொண்டிருந்தது. பனையின் மேல், வற்றிய ஓலை கலகலக்கும். எஞ்ஞான்றும், பச்சோலைக் கில்லை ஒலி. [நால்]

164. Genitive admits of no Particles after it.

ஆறைத்தொடர்வது பெயரே யாதலின்
இடைச்சொல் ஒன்றுந் தொடராதென்க.

ஆறாம் வேற்றுமைப்பெயர்களை வேறு பெயர்கள்மாத்திரம தொடர்ந்து வருமென்றும் வினைச்சொல் தொடராதென்றும் கூறிய விதியான் இடைச்சொற்களும் தொடராதென்க. எனவே, எண்ணும்மை தேற்றேகார முதலிய இடைச்சொற்கள் மற்ற வேற்றுமைப்பெயர்களுக்குப் பின் நடக்குமாறு இவ்வேற்றுமைப் பெயரில் நடவாதென்க. எங்ஙனமெனின், தாயும் பிள்ளையும் வந்தனர், தாயையும் பிள்ளையையும் கண்டனர், தாயாலும் பிள்ளையாலும் நடந்த சண்டை. தாய்க்கும் பிள்ளைக்கும் சண்டை. தாயிலும் பிள்ளையிலும் பெரியவர். தாயினிடத்திலும் பிள்ளையினிடத்திலும் இருக்குந்தன்மை எனவருமாறு, தாயுடையவும் பிள்ளையுடையவும் கையென வராதென்க. அன்றியும் தாயே வந்தாள், தாயையே கண்டாள், தாயினாலே வந்தாள், தாய்க்கே தகுந்தது, தாயிலே பெரியவள், தாயினிடத்திலே வந்தாள் என வருமாறு தாயுடையவே பிள்ளை எனவராதென்க. மற்றை இடைச்சொற்களையும் இவ்வாறே மற்ற வேற்றுமைகளிலும் ஆறாம் வேற்றுமையிலும் ஏற்றி, பொருள்படுவதும் படாமையும் காண்க. அன்றியும், சொல்லுருபுகளாய் வரும் சொற்களுக்கும் இதுவே விதியென்க. என்னுடையவாவது உன்னுடையவாவது கை எனவும், எனதென்கினும் உனதென்கினும் கை எனவும் வராதென்க.

165. Accusatives changed into Genitives.

இரண்டு செய்பொருள் ஏற்கும் வினையில்
ஒன்றை ஆறாய் இயம்பவும் பெறுமே.

இரண்டு செயப்படுபொருளை ஏற்றுவருமென்று இரண்டாம் வேற்றுமையுள் விரித்துக் காட்டியுள சில முற்று வாக்கியங்களில், முதல் பிண்டமென வரும் பெயர்களை ஆறாம் வேற்றுமையாக மாற்றிக் கூறினும் பொருள் அமையுமென்க. அவ்வாறு கூறியவிடத்துப் பொருள் சிறிது பேதிக்குமென்றும் முன்னரே காட்டியுளம்.

உ-ம்:—நூலைக் குற்றம் கூறினான் = நூலினது குற்றம் கூறினான். பசுவைப் பாலைக் கறந்தான்=பசுவினது

பாலைக் கறந்தான். இவ்வுதாரணங்களுள் நூலும் பசுவும் முதற்பொருளானமை இவ்வாறு வேற்றுமைப் பட்டது. எனவே, தாயைப் பணங்கேட்டான் எனின் முதற்பொருள் இல்லாமையான், தாயினது பணத்தைக் கேட்டான் எனவரா. இவ்வாறே வேறு வாக்கியங்களையும் எடுத்து இலக்கணங் கூறிக்கொள்க.

166. SEVERAL GENITIVES ENDING WITH ONE NOUN.

இரண்டும் பலவுமாத் தொடரும் ஆறே.

ஆறும் வேற்றுமைப் பெயர்கள் இரண்டும் பலவுங்கூடி ஒரு பெயரை தழுவி நிற்பதும் உண்டென்க.

உ-ம்:—சாத்தன் கைவிரல், பெங்களூர்க் கோதுமைமா, வேலூர் மூங்கிற்றடி. கருவூர் இலுப்பைத் தோப்பு. என் தலைமயிர் (இரண்டு வேற்றுமை). ஒரு படிகோதுமை அரிசி மா (மூன்று வேற்றுமை). ஒரு குடம் காவேறியாற்று ஊற்றுநீர் (நான்கு வேற்றுமை). இந்த வருஷத்துத் தஞ்சாவூர் மேலைத்தோப்பு மாம்பழக் கொட்டை. (ஐந்து வேற்றுமை.)

XVII. ஆறின் விகாரம்.

167. CONVERSION OF THE GENITIVE.

பொருளால் ஆறும் தொடரால் பிறவாம்.

பொருளை நோக்கின் ஆறும் வேற்றுமை உரிமைப் பொருளாயிருக்க, தொடரை நோக்கின் வேறு வேற்றுமைத்தொடராயும் நடக்குமென்க. இஃது பொதுவிதியாக, சிறப்புவிதியும் உதாரணங்களும் அடியிற் கூறுதும்.

168. THE SAME :

எல்லா வேற்றுமைத் தொடராம் குறையே.

ஆறும் வேற்றுமைப்பெயர்களை எஃலா வேற்றுமைகளிலும் விரிக்கப் பெறுமென்க.

உ-ம்:—நான்வருதல் = என் வருகை.

1. நீ போதல் = உன் போக்கு.
2. தேசத்தை ஆளுதல் = தேசத்தின் ஆளுகை.
3. மண்ணாற்பானை = மண்ணின் பானை.
4. சாத்தனுக்கு மகன் = சாத்தனுடைய மகன்.
5. மரத்தினீங்கின கொம்பு = மரக்கொம்பு.
6. உயிரின்கண் உணர்வு = உயிரினுணர்வு.

XVIII. ஏழாம் வேற்றுமை.

169. LOCAL ABLATIVE:

பெயரான் வினையான் முடியும் ஏழே.

ஏழாம் வேற்றுமைப்பெயர்கள் பெயரைக்கொண்டே னினும் வினையைக்கொண்டேனினும் முடியுமென்க.

உ-ம்:—சோற்றிலேகல். ஆற்றிலே மணல். (பெயர்த்தொடர்.) வீட்டிலிருக்கிறன் சாத்தன். (வினைத்தொடர்.)

170. ITS POSITION.

பின்னுமாகும் ஏழன் பெயர்கள்.

ஏழாம் வேற்றுமைப்பெயர்கள் தம்மால் தழுவப்பட்டு வரும் சொற்களுக்கு முன்னே நடப்பதுமுறை. அம்முறை பிறழ்ந்து பின்னேவரினும் வரலாமென்க.

உ-ம்:—மீன் நீரிலே. படித்தவனுக்கின்பம் கல்வியிலே.

171. ITS GENERAL SIGNIFICANCE.

இடத்தை யுணர்த்தல் ஏழன்பொருளே.

ஏழாம் வேற்றுமைப்பெயர்கள் இடப்பொருள் ஒன்றைமாத்திரம் உணர்த்தும், பெயர்த்தொடராகினும் வினைத்தொடராகினு மென்க.

172. EXISTENCE.

உண்மைப் பொருளை யுணர்த்துங்காலை
எல்லாப் பெயரும் ஏற்கும் ஏழை.

இருக்கின்றதென்னும் பொருள் தோன்றுமேயாகின் எல்லாப்பெயர்களும் ஏழன் வேற்றுமை யுருபைப்பெற்று வேறு பெயர்களைக்கொண்டு முடியுமென்க. எனவே இஃது ஏழாம் வேற்றுமைப் பெயர்த்தொடருக்கு இலக்கணமென்க.

உ-ம்:—பனையில் அன்றில் = பனையிலிருப்பது அன்றில். சோற்றிலே கல் = சோற்றிலிருப்பது கல். மணியின்கண் ஒளி.

173. BY DESIGN OR NOT.

கருத்தினுனே உண்மையென்க.

ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதனவற்றைச் சம்பந்தப்படுத்துமிடத்தில் அச்சம்பந்தம் தன் கருத்தினுலாகி

னும் பிறன் கருத்தினாலாகினும் இருவர் கருத்தையின்றியேனும் தோன்றி, ஏழாம்வேற்றுமைப் பெயர்த்தொடரா முடியுமென்க.

உ-ம்:—கையில் மோதிரம் என, அணிகின்றானுடைய கருத்தால் அம்மோதிரம் விரலில் வந்தது. கழுத்திற்றாலி என, கொண்டவனுடைய கருத்தினால் தாலி பெண்ணின்கழுத்தில் வந்தது. ஆற்றிற்சலம் என, கடவுளுடைய அமைப்பால் அச்சலம் ஆற்றின்கண் உண்டாகியது. இவை யாவையும் பிறிதின் கிழமையென்பர்.

174. By Comparison.

ஒப்பினானே உண்மை யென்க.

ஒரு பொருளைப் பலபொருளோடு ஒத்துப்பார்க்கும் பொருட்டு ஒருங்கே கொண்டுவந்து நிறுத்திப்பார்க்குமிடத்தும், முற்கூறிய உண்மைப்பொருள் தொக்குநிற்க, ஏழாம் வேற்றுமைப்பெயர்த்தொடர் நடக்குமென்க.

உ-ம்:—விலங்குகளுக்குள் மக்கள் எப்படியோ, அப்படியே கல்லாதவர்க்குள் கற்றவர் என்றார் [நாயனார்]. படை குடி கூழமைச்சு நட்பரணாறும் உடையான் அரசருள் ஏறு. எழுத்தினுள்ளெல்லாம் அகர முதலாயிருக்கிறது. கொக்குப்படையில் அரசாளி போலும்.

175. By Comprehension and Inclusion.

முதல்சினைப் பொருளான் உண்மை யென்க.

முதலும் சினையுமாகிய பொருளில், சினைப்பொருளானது பிரிவுபடாது முதற்பொருளைத் தழுவி நிற்குமெனின், மேலைக்கூறிய உண்மைப்பொருள் தொக்கு நிற்க, ஏழாம் வேற்றுமைப் பெயர்த்தொடர் நடக்குமென்க இஃதை ஏனையோர் தற்கிழமை என்பர்.

உ-ம்:—கையில் விரல் = கையிலிருப்பது விரல். தலையில் மயிர் = தலையிலிருப்பது மயிர்.

176. By Separation.

குழுப்பெயர் பிரியின் குழுவுக்கேழே.

குழு, கூட்டம், தொகுதியென முன்னால் எடுத்துக்கூறிய பெயர்கள் பிளவுபடுமேயாகின், குழுப்பெயரை ஏழாம் வேற்றுமைப்பெயராக்கிப் பெயர்த்தொடர் நடக்குமென்க.

உ-ம்:—நம்மிலொருவன் = நமக்குள் ஒருவன். அவர்களில் நால்வர் சுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் நாளில் ஒரு நாள். அத்தோப்பில் ஒரு மரம் காற்றால் விழுந்தது. வினைக்கண் வினை கெடல் ஓம்புக. செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம். அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை.

இவ்விதியுள் காட்டிய உதாரணங்கள்மாத்திரம் வினையின்றிப் பெயரையே தொடரப்பெற்றது. மற்றைய உதாரணங்களெல்லாம், உண்டு, இருக்கிறது, என உண்மை வினைப்பொருளின்றிப் பொருள் முடிவுபெறுமையான் பெரும்பாலும் ஏழாம் வேற்றுமைப்பெயர்கள் வினையையே தொடர்ந்து நிற்குமென்று தோன்றியது. இனி ஏழாம் வேற்றுமை வினைத்தொடருக்கு இலக்கணம் கூறுதும்.

177. VERB-ABLATIVES: DENOTING PLACE.

எல்லா வினையும் ஏற்கும் ஏழை
இடத்தின் பொருளை ஏற்குமாயின்.

இ-ப்பொருளை யுணர்த்தியவிடத்து எல்லாவினைகளும் ஏழாம் வேற்றுமைப்பெயரைக்கொண்டு முடியுமென்க.

உ-ம்:—காலில் விழுந்தான் = காலினிடத்தே விழுந்தான். தூணில் கட்டினன். மரத்தில் இறங்கினன். அவன் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்தான். செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் அவயினும் வாழினுமென். [குற]

178. CONDITION OR STATE.

நிலையான் ஏழன் வினைத்தொடரொன்க.

ஏழாம் வேற்றுமை வினைத்தொடர்கள் நிலையைக் காட்டிய பொருளில் நடக்குமென்க.

உ-ம்:—இரைதேடும் யத்தனத்தில் (முயற்சியில்=தொழிலில்—வேலையில் = செய்கையில்—கிரியையில்—ஸ்திதியில்—நிலையில்) இருக்கிறோம். உன் அடைக்கலத்தில் (தஞ்சத்தில்—ஆதரவில்) இருக்கிறேன். அப்படி அவன் போய்வருகிறதுக்குள் ஆசிரமத்திலிருந்த அவன் மனைவி பாம்பினால் கடியுண்டு விஷம் தலைக்கேறிக் கைகால்களை யுதறிக்கொண்டு மரணாவஸ்தையிலிருந்தாள். [பாரத]

179. Time: Point and Order of Time.

காலமும் கால முறைக்கும் ஏழே.

காலப்பொருளையும் கால முறைப்பொருளையும் உணர்த்திய பெயர்கள் ஏழாம் வேற்றுமையுருபை ஏற்று வருமென்க.

உ-ம்:—ஒரு தரத்தில்வருமா? இன்ன வருஷத்தில், இன்ன மாதத்தில், இது நடக்கும். இதோ ஒரு நொடியளவில் வருகிறேன். இதைக் கேட்ட அளவில் (மாத்திரத்தில்) வந்தான். இந்தத் தள்ளாமையான காலத்தில் பரோபகாரியென்கிற பெயர்வரும். [பஞ்]

180. Confusion of இல் and உள்:

இல்லும் உள்ளும் பொருள்மயக்கு ஒரோவழி.

இல் என்னும் உருபு மேல் கீழ் அடி முடி முன் பின் அகம் புறம் என்னும் பொருள் யாவையும் உணர்த்துமெனவும், உள் என்பது அகமென்னும் ஒரு பொருளைமாத்திரம் உணர்த்துமெனவும், வழக்கினுட் பொதுப்பொருளைச் சிறப்புமொழியானும் சிறப்புப்பொருளைப் பொதுமொழியானுங் கூறுவர் எனவும், அப்பேதத்தை நன்குணர்ந்து வழுவின்றிக் கருதினபொருளைத் தகுந்த மொழியானே கூறுதல் சற்றோருக் கியல்பெனவும் கொள்க. என்னையெனின தலையில் மயிர், தலையில் மூளை என வழக்கின்கண் வருமிடத்து, தலையின்மேல் மயிர் எனவும் தலையினுள் மூளை எனவும் கூறின் மயக்கும் வழுவும் நீங்கிற்றென்க. நமமிற் பெரியவன் எனவே, நம்மிலும் பெரியவன், நமக்குள் பெரியவன் என இரண்டுபொருள் படுகின்றமை, மயக்கு நீங்க, கருதினபொருளைத் தகுந்த மொழியினாற் கூறுக.

181. What is really the Seventh Case.

ஏழாம் வேற்றுமைக்கு இல்லே உருபாம்
மற்றவை யெல்லாம் பொருளிடையாகி
ஆறும் வேற்றுமைப் பெயர்த்தொடர் என்க,

ஏழாம் வேற்றுமைக்கு இல்லே உருபாக, கண் கால் கடை யிடை தலை வாய் திசை வயின் முன் சார் வல மிடம் மேல் கீழ் புடை முதல் பின் பாடளை தேம் உழை வழி யுழி உளி உள்ளகம் புறமில் இடப்பொருளுருபே என, நன்னூலார் கூறிய உருபுகளில் இல் ஒழிய மற்றைய உருபுகள் யாவும் தத்தம் பொருளைக்காட்டிய இடைச்சொற்களா

யும் பெயர்ச்சொற்களாயும் வர, ஆறும் வேற்றுமைப் பெயர்த்தொடராய் முடியுமென்க. இது காறும் உருபால் ஏழாம் வேற்றுமைப்பெயர் இவையெனவும், பொருளால் ஏழாம் வேற்றுமைப்பெயர் இவையெனவும் உரையாசிரியர் வகுத்துக் கூறாமை இரண்டையும் ஒருங்கே கூறினமை, மயக்கமுண்டாக்கியுளர். அம்மயக்கம் நீக்குவான் இங்ஙனம் இவ்விதியை எடுத்துக் கூறினம். எங்ஙனமெனின், மரத்தின்கண் என, பொருளைநோக்கின் ஏழாம் வேற்றுமை எனவும், சொற்றொடரைநோக்கின் ஆறும் வேற்றுமைப் பெயர்த்தொடர் எனவும் காண்க. மரத்தில் எனப் பொருள்படுதலான் ஏழாம் வேற்றுமை. மரத்தினுடைய இடம் என விரிதலான், ஆறும் வேற்றுமைத்தொடர் என்க, இஃதை யின்னும் அடியில் விரித்துக் கூறுதும்.

182. Several Ablatives with one Word.

காலமும் இடமும் அவற்றின் பேதமும்
ஒருவினைத் தொடரான் ஒருங்கே முடியும்.

காலப்பெயர்களும் இடப்பெயர்களும் அவற்றின் விகற்பத்தைக்காட்டிய பெயர்களும் தனித்தனி ஏழாம் வேற்றுமை யுருபையேற்று யாவும் ஒன்றாய் நின்று ஒரு வினைகொண்டு முடியுந் தன்மையினுன், ஏழாம் வேற்றுமைக்கு ஒரு அளவில்லை.

உ-ம்:—இன்ன யுகத்தில், இன்ன ஆண்டில், இன்ன திங்களில், இன்ன தினத்தில், இன்ன தேசத்தில், இன்ன பட்டணத்தில், இன்ன வீதியில், இன்ன வீட்டில், இன்ன அரசாட்சியில், இன்னுனது துரைத்தனத்தில், இன்ன குலத்தில், இன்னுள் வயற்றில், இன்னுனுக்கு இன்ன மகாத்துமபுருஷன் பிறந்தான்.

XIX. இடத்தின் விகாரம்.

183. Conversion of the Seventh Case.

பொருளான் ஏழே தொடரான் பிறவாம்.

பொருளைநோக்கினல் இடப்பொருளாயும் தொடரைநோக்கினல் வேறு வேற்றுமைத் தொடராயும் நடக்குமென்க. இஃது பொதுவிதியாகவே, சிறப்புவிதியம் உதாரணங்களும் அடியிற் கூறுதும்.

184. THE SAME:

ஒன்று இரண்டு நான்கு ஆறினும் இடமாம்.

பொருளை நோக்கினால் ஏழாம் வேற்றுமையினது இடப்பொருளாய் வரும் சொற்கள், தொடரை நோக்கினால் முதலாம் இரண்டாம் நான்காம் ஆறும் வேற்றுமைத் தோடராய் விரிந்து வருமென்க.

உ-ம்:—

1. தூண் பொதிகை தொட்டது=தூணிற் பொதிகை தொட்டது.
2. தூணைச் சார்ந்தான்=தூணிற் சார்ந்தான்.
4. வீட்டுக்கு வந்தான்=வீட்டில் வந்தான். இன்றைக்குவா=இன்றையத் தினத்தில் வா. ஊர்க்கு வந்தான்=ஊரில் வந்தான்.
6. மரத்தின்மேல் ஏறினான்=மரத்தில் ஏறினான். கரையின் மீதிருந்தான் = கரையிலிருந்தான். வீட்டினுள்ளே = வீட்டில் = வீட்டினுடைய உட்புறத்தில்.

XX. விளி.

185. VOCATIVE.

விளிவேற்றுமைக்குப் பந்தனம் இல்லை.

விளிப்பெயர்கள் தனியேநின்று பொருள்பட்டும் முன் பின் நடக்கும் சொற்களோடு தொடர்ச்சி யின்றியும் வருதலான், விளிக்குத் தொடரிலக்கணம் இல்லையென்று பொருவிதிகூறினும். என்னையெனின், சாத்தாவா எனின் சாத்தா நீ வா எனப்பொருள்படுதலால், விளி தனியே நின்றது என்க. அன்றியும், தேவா என்னைக்கா எனினும், என்னைத் தேவாகா எனினும், என்னைக் காதேவா எனினும விளி முதல் இடை கடை மூவிடத்தும் வந்தும், பொருள் வேறுபடாமை காண்க.

186. ANTECEDENT CONNEXION.

விளிக்குமுன்னே தொடர்உண்டெனினும்
விளித்தபின்னர் தொடர்இன்றென்க.

பெயர்களின் ஈற்றில் விளி யுருபேற்றி விளிக்கப்படுதலினால், அவ்விளிப்பெயர்களுக்கு முன்மொழிகளைக்கொ

ண்டு தொடர்பு தோன்றி வருமெனினும் பின் மொழிகளினால் தொடர் இல்லை என்க.

உ-ம்:—எல்லா உயிரையும் இரட்சித்த தேவா. என் ஐயனே! எமையாளுடை வானவனே! முனியேல்! மருளால் மடிகின்ற பாவிகாள்! நாண்மலர்காள்! அரும்புதிரோ. [தேம்] பிடியின் மென்னடைப் பெண்ணோடு என்றால் எனைச்சுடுதியோ? கடற்றோன்றிய திங்களே. [சம்] வாவும் இளமான்காள்! மயில்காள்! மடப்பிடிகாள்! கூவும் கரிய குயில்காள்! மென்புள்ளினங்காள்! ஆவினை மேவி அகலேம் என அகன்ற காவலன்தான் போன வழி எனக்குக் காட்டீரோ. [நை] நேரலார் போர் ஏறெதிடத்தார் கோமானே! ஆர வரைமார்பா. அளியேன் உயிர்க்கு உயிரோ! [லை]

187. In Verbal Nouns.

வினைப்பெயர் விளியெனில் வினையால் தொடரோ.

வினையாலணையும் பெயர்களை விளிக்கின், அவை வினையாம் தன்மை தொடராகுமேயன்றி, விளியாம் தன்மையான் வேறுசொற்களைத் தொடராதென்க.

உ-ம்:—என்னைக்காத்து இரட்சித்தோய்! என்னைப்புரந்தோய்! இதயத்தில் இருப்பவனே! முனியேல். மதிவெங்கனல் ஆனவனே! முனியேல். [பார] நளிகடல் தண்சேர்ப்ப! நல்கூர்ந்த மக்கட்கு அணிகலம் ஆவது அடக்கம். [நால்]

188. Interjections.

விளியிடைகளுக்கும் அதுவே விதியாம்.

விளியைப்போல வந்தும் விளிப்பொருளைத் தராத இடைச்சொற்களும் வாக்கியத்திலுள்ள வேறு சொற்களோடு பொருத்தமின்றித் தனியே நடக்கும்.

உ-ம்:—அதைக்கண்டு இவர்கள் அடடா! எங்கள் குருக்களுக்கும் குதிரையிருந்தால், அவரும் அவரைச்சார்ந்த நாங்களும் அச்சமில்லாமல் ஆற்றில் இறங்கலாமே என்றார்கள். [பரமா] அம்மம்மா! இந்தப் புண்ணியவதிக்கு ஒப்பாக யாரைச்சொல்லலாம்? இவளுடைய நன்னடைக்கை மற்றப்பெண்களுக்குத் தவம் செய்தாலும் வருமா? [விநோ]

XXI. வேற்றுமைப் பொதுவியல்.

எல்லா வேற்றுமைகளுக்கும் பொதுவான சில விதிகளை இங்ஙனம் அறைகின்றாம்.

189. CASES AND PREDICATE.

ஆறும் விளியும் அல்லனபெயர்கள்
பலவே விரவி ஒருவினை ஏற்று
முடிதல் பெருமிதம் வழக்காகும்மே.

ஆறும் விளியும் நீங்க மற்ற ஆறு வேற்றுமைப்பெயர்களும் கலந்து ஒருவினையைக்கொண்டு முடிதல் பெரும்பாலும் வழக்காகும். வினைத்தொடர்பான முடிபு ஆரும் வேற்றுமைக்கும் விளி வேற்றுமைக்கும் இல்லை என முன்னரோ காட்டியுளம்.

உ-ம்:—முன்னோர் யுகத்தில் (7) தேவர் (1) விஷ்ணுவின் ஆக்கினையினால் (3) அமுதத்துக்கு (4) பாற்கடலை (2) மந்தரத்தில் (5) கடைந்தனர்.

190. THE SAME CASE REPEATED.

ஓர் உருபுஏற்ற பெயர்கள் பலவே
எண்ணும்மையானே தழுவும் ஓர்வினையை.

எண்ணும்மைத்தொடராய் ஒரோ வேற்றுமை உருபை ஏற்றுவரும் பெயர்சொற்கள் ஒரோ வினையைக்கொண்டு முடிவதும் வழக்காகும்.

உ-ம்:—நானும் அவனும் வந்தோம். என்னையும் அவனையும் அழைத்தான். என்னாலும் அவனாலும் ஆகியது. எனக்கும் அவனுக்கும் தந்தான். மற்றவைகளுக்கும் இவ்வாறே. இத்தனை சொற்கள் இவ்வாறு ஒரோ வேற்றுமையில் தொடர்ந்து வரவேண்டுமென்று விதியில்லையால், பொருளுக் கிசைந்தவாறு தொடர்விக்கலாம் என்க.

191. DOUBLE CASES.

இரட்டுருபு ஆட்சியும் இயம்பினும் முதலே.

இரட்டு வேற்றுமைகளாய் சில பெயர்ச்சொற்கள் ஒரு வினையைக்கொண்டு முடிதற்கு உதாரணங்களும் காட்டினும். இது 1-ம் 2-ம் 4-ம் வேற்றுமைகளில்மாத்திரம் வரும், அவைகாண்க.

192. In Explanatory Clauses.

ஒருபொருள் உணர்த்திப் பலபெயர் வருங்கால்
தனித்தனி பிரிந்தே வினையைத் தழுவும்.

சிறப்பினானும் விரிவினானும் ஒரு பொருளை உணர்த்தப் பல பெயர்களை அடுக்கிக் கூறுமிடத்து, அப்பெயர்கள் தனித்தனி பிரிந்தே இறுதி வினையைத் தழுவி நிற்கும் என்க.

உ-ம்:—

1. புவனங்களை உண்டாக்கியவன், சகல உயிரையும் இரட்சிக்கும் நாதன், எளியனுக்கு இரங்கானோ?
2. கண்ணனை, மாயன்றன்னை, கடல் கடைந்து அமுதம் கொண்ட அண்ணலை, அச்சுதனை, அனந்தனை அனந்தன்மேல் நண்ணி நன்குறைகின்றானை, ஞாலம் உண்டு உமிழ்ந்தமாலை, எண்ணுமாறு அறியமாட்டேன். யாவையும் எவரும் தானே [திருவாய்]. முப்பரம் பொருளிற்கு முதலை மூலத்தை, இப்பரம் துடைத்தவர் எய்தும் இன்பத்தை, அப்பனை, அப்பினுள் அமிர்தம் தன்னையே, ஒப்பனை ஒப்பனை உரைக்க ஒண்ணுமோ. [ரா]
3. என்னை நேசித்தவனால், என்னோடு ஒரு கலத்தில் உண்டவனால், எனனிடத்தில் அத்தியந்த விசுவாசமாயிருந்தவனால், எனக்கு இப்பேர்ப்பட்ட துன்பமுண்டானால், என் சத்துருவால் எனக்கு என்ன துன்பம் உண்டாகமாட்டாது.
4. மட்டியென்பவன் எதற்காயினு மெவ்வின சமயத்தில் கடைக்கு, சந்தைக்கு, பேட்டைக்குப் போகிறவனல்லவோ. [பரமா]
7. ஆணிலே பெண்ணிலே என்போல ஒரு பேதை அகிலமிசை உண்டோசொலாய். [தாய்]
8. ஆரணனே! யரனே! புவனங்கள் அனைத்தையும் அன்றுதவும், காரணனே! கருணாகரனே! கமலாசனி காதலனே! வாரணமே! பொதுவாய் ஒரு பேரிடவர் தருளும் புயலே! நாரணனே! முனியேல் முனியேல் என நாகர் பணிந்தனரோ. [பார]

193. In Disjunctive Clauses.

ஒருவினைப்பொருளில் பலபெயர் வருங்கால்
தனித்தனி பிரிந்தே வினையைத் தழுவும்.

எழுவாய் செயப்படுபொருள் முதலிய பல வேற்றுமைப்பொருள்களை அடுக்கிக் கூறுமிடத்து, பயனிலையைப் பற்றிவந்தது இன்னதென்று நிச்சயப்படுத்திக் கூறாது சந்தேகத்தில் கூறின், அப்பொருளில் வந்த பெயர்கள் பிரிந்து தனித்தனியே பயனிலையைக்கொண்டு முடியும்.

உ-ம்:— 1. அவனாவது இவனாவது செய்வான்.
2. அவனையாவது இவனையாவது அழைப்பி.
3. அவனாலாகினும் இவனாலாகினும் ஆகும்.
4. அவனுக்கென்கினும் இவனுக்கென்கினும் கொடு.
7. ஆணிலே பெண்ணிலே என்போல ஒரு பேதை அகிலமிசை உண்டோ சொலாய்.

194. Construction of Nouns in the same Case.

ஒரு வேற்றுமையில் பலபெயர் வருமேல்
முதல்வேற்றுமையில் அவற்றைத் தொடர்வித்து
ஈற்றை ஒன்றை வேற்றுமைப்படுத்தினும்,
எண்ணை எண்ணி வேற்றுமைப்படுத்தினும்,
இவைமுதல்கிளவியில் வேற்றுமைப்படுத்தினும்,
இயலும் இம்முத் திறத்தினானே.

ஒரு வேற்றுமைப்பொருளில் பல பெயர்கள் எண்ணும்மையாய் அடுத்து வருமிடத்து அப்பெயரினையெல்லாம் முதல் வேற்றுமையில் தொடர்வித்து, ஈற்றுப் பெயரைமாத்திரம் வேண்டிய வேற்றுமையில் விரிப்பதன்றியும், இத்தனை என எண்ணி அவ்வெண்ணில் உருபேற்றிக் கூறுவதன்றியும், இவைகள், என்பன, ஆவன, முதல்வன, முதலிய, ஆதி, இன்னன, இப்பேர்ப்பட்ட, என்று இத்தன்மைய சொற்களில் ஒன்றைக் கொடுத்து அதன்மேல் உருபேற்றிக் கூறவும் பெறும்.

உ-ம்:—படை குடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு=படையையும் குடியையும் கூழையும் அமைச்சையும் நடபையும் அரணையும் உடையவன் அரசருள் ஏறு=படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் இவைகளை உடையவன் அரசருள் ஏறு=படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் இவ்வாறும் உடையவன் அரசருள் ஏறு.

அஞ்சாமை ஈகை அறிவுடைமை ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமைவேந்தற்கு இயல்பு.

XXII. உருபுத் தொகை.

பெரும்பாலும் தமிழில் வேற்றுமை உருபுகள் தொக்கி நின்று வாக்கிய சம்பந்தத்தினால் இன்ன வேற்றுமையென்று யூகிக்கப் படுகின்றமையால், வாசக வழக்குக்கு ஏற்க எவ்விடத்தில் வேற்றுமை யுருபுகள் தொக்கியும் எவ்விடத்தில் தொகாதும் வருமென்று இவ்வியலிற் கூறுதும்.

195. General Principle of the Ellipsis.

வழுவே! வழுவே! பொருள்மயக்கெல்லாம்
பொருள்மயக்கில்லேல், தொகையே நன்றாம்.

எனவே, தமிழ்ப்பாஷை வாசக நடைக்கெல்லாம் இன்றியமையாது இயலும் பொதுவிதி இங்ஙனம் உணர்த்தப்பட்டது. இவ்விதி வேற்றுமைத் தொடருக்கன்றியும் எல்லாத் தொடருக்கும் அமையும் என்க. எங்ஙனமெனின் ஒருவன் மனத்தே நிகழும் நினைவை பிறனுக்கு வெளிப்படுத்தி வைக்கும் கருவி பாஷையாகவே, அந்நினைவை மயக்கமின்றி வெளிப்படுத்தி வைப்பதே பாஷைக்கழகென்க. அன்றியும் சில மொழிகளான் அந்நினைவைத் தெளிவுற வெளிப்படுத்த இயலுமெனின் பல வார்த்தைகள் தொடுத்தல் குற்றமென்க. இஃது எல்லாப் பாஷைக்கும் பொதுவான இலக்கணமாக, வேற்றுமைத் தொடருள்ளும் இவ்விதி அடங்கி நிற்கின்றதென்று உய்த்து உணர்கின்றாருக்கு எளிதில் புலப்படும். அஃதெங்ஙனமெனின், ஒரு வாக்கியத்தில் நடக்கும் பெயர்ச் சொற்களின் வேற்றுமை உருபுகள் தொக்குழி, சொல்லுகின்றவன் கருதின பொருளோதுவோ அதனை விட்டுக் கேட்கின்றான் வேறொரு பொருளைக் கருதலானும், அதுவோ இதுவோ எதுவோ என மயங்குதலானும், உருபுகள் விரிந்தே வரல் தகுதியென்க. அன்றியும், உருபுகள் தொக்கியும், கருதின பொருள் மயக்கமில்லையாகின், தொகையே சிறப்பென்னவுங் கொள்க. மரத்தை வெட்டினான்: இதில் உருபு தொகின் பொருள்படும். சாத்தனை வெட்டினான், சாத்தனுக்குக் கொடுத்தான்: இவற்றுள் உருபுகள் தொகின்பொருள் வேறுபட்டது. தேவனிடத் தன்பு: இதில் தேவ அன்பு என உருபு தொகின் பொருள் மயக்குற்றது. அன்றியும், கரும்புவேலி எனின், கரும்புக்கு வேலி, கரும்பினாலாய வேலி எனவும்; பேய்க்கரும்பு வேலியெனின் பேய்க்கரும்புக்கு வேலி, பேய்க்கரும்பினாலாய வேலி எனவும், இரு பொருளாகுமெனி

னும், கரும்பினுல் வேலி செய்வதில்லாமையானும், பேய்க்கரும்பினுல் வேலி செய்தல் வழக்கமாதலினுனும், பொருள் மயக்கில்லையென்க. யாருக்கெனின், இவ்வழக்கையுணர்ந்தார்க்கே. அவ்வழக்கு அறியாதார்க்குப் பொருள் மயக்கமாகுமாகையான், அதுவே வழுவாமென்க. ஆகையான், கேட்கின்ருனுடைய முன்னறிவினுனும், உலக வழக்கினுனும், வாக்கியத்து முன்பின் தொடர்ச்சியினுனும் தெளியத் தக்கனவற்றை வழுவாகினும் அமைதி எனக் கொள்வர் சான்ருேர். அஃதின்றி இலக்கண நடையேயாயினும், பொருள் தெளிவின்றேல், அஃதையும் கொள்ளார் அறிவோர்.

195 *A*. Ellipsis of the Nominative.

பொருள்மயக்கில்லேல் மறையும் எழுவாய்.

பொருள் மயக்கம் இல்லையாகின் எழுவாய் தொகாநிலையாகவே வரும்.

உ-ம் :—வந்தான் எனவே, அவன் என வெளிப்படை.

196. When Nominative is expressed.

சிறப்பின்பொருட்டே முற்றுக்கு எழுவாய்.

முற்று வினையோடு எழுவாயை விரித்துக் கூறியது எங்ஙனமெனின், உறுதி சிறப்பு தெளிவு இவைமுதலிய பொருள் தோன்றுமிடத்தென்க.

உ-ம் :—நான் வந்தேன் = நானே வந்தேன் = நான் தான் வந்தேன் என வேருெருவன் அல்ல எனல் பொருள்.

197. Nom. suppressed with Participles.

எச்சங்களிலும் மறையும் எழுவாய்.

பெயரெச்சங்களிலும் வினையெச்சங்களிலும் எழுவாய் மறைந்து வரினும் வரலாம். விரியின் பொருள் பேதித்தற்கு உதாரணம் எச்சவியலிற் கூறப்படும்.

உ-ம் :— 1. நடந்த மனிதன். வந்த சாத்தன்.
2. விழுந்து புரண்டு எழுந்தான்.

198. The same in Questions and Answers.

மறுமொழி மறைக்கும் எழுவாய் பயனிலே.

வினாவியவிடத்து விடை கூறுங்கால், எழுவாயின்றிப் பயனிலையும் பயனிலையின்றி எழுவாயும் வருமென்க.

உ-ம்:—என்ன செய்கிறாய்? படித்துக்கொண்டிருக்கிறேன். இதைச் செய்தவன் யார்? நான்தான்.

199. General Rule for the other Cases.

பெரும்பால் ஐயும் அதுவும் தொகும்,
மற்றுருபெல்லாம் சிறுபால் சிறுபால்.

பெரும்பாலும் இரண்டாம் வேற்றுமையுருபும் ஆறும் வேற்றுமையுருபும் தொகும். மற்ற வேற்றுமை யுருபுகளெல்லாம் ஒரோவழி தொகும். அவை தொக்கி வருதலும் பொருளால்மாத்திரம் அறியப்பெறும். என்னெனின், இரண்டாம் வேற்றுமைப்பெயர் வினையைக்கொண்டு முடிதலானும், ஆறும் வேற்றுமைப்பெயர் வேறு பெயரைக் கொண்டே முடிதலானும், முடிவிக்கும் வினையினானும் பெயரினானும் அப்பெயர்களின் வேற்றுமை வெளிப்படையாகியதால், அவ்விரு வேற்றுமைகளிலும் பெரும்பாலும் உருபு விரிதல் வேண்டா. ஏனைய வேற்றுமைப்பெயர்கள் உருபு தோன்றுதலின்றிப் பொருள் வெளிப்படுதல் இன்மையால், அவ்வுருபுகளைப் பெரும்பாலும் விரித்தலே வேண்டும். எங்ஙனமெனின், மாடு கொண்டான், சாத்தன் கால் எனவே, செயப்படுபொருளும் கிழமைப்பொருளும் வெளிப்படை. விலைக்குக் கொடுத்தான், வீட்டுக்குப் போயிற்று என உருபு விரித்தும், விலை கொடுத்தான், வீடு போயிற்று என உருபு தொக்கியும் கூறின், பொருள் ஒன்றாகாது வேறுபட்டது.

200. Second Case with Rational Nouns.

உயர்திணைப் பெயர்கள் செய்பொருள் குன்றா.

இரண்டாம் வேற்றுமை உயர்திணைப்பெயர்கள் பெரும்பாலும் விரிந்தே வரும் என்க.

உ-ம்:—மரம் வெட்டினான் எனின் மரத்தை வெட்டினான் எனப் பொருளாம். சாத்தன் வெட்டினான் எனின் சாத்தனை வெட்டினான் எனப் பொருளாகா,

எனவே, செய்யுளில் உயர்திணைப்பெயர்களிடத்தும் இரண்டனுருபு தொக்கிவருமெனினும், அவை புணர்ச்சி விகாரங்களான் வெளிப்படையாகும். இங்ஙனம் கூறிய விதிகள் முற்றும் வாசகநடைக்கு ஆனமைபற்றி அவ்விதியை விடுத்தனம்.

201. THE SAME WITH IRRATIONAL NOUNS.

அஃறிணைப்பெயருட் செய்பொருள் குன்றும்.
குன்றா. அதுவும் பொருள்வேறாகும்.

அஃறிணைப்பெயர்களினிடத்து இரண்டனுருபு விரிந்தாகினும் தொக்கியாகினும் வருமென்க. அவ்வாறு வருமிடத்துப் பொருளும் ஒருவாறு பேதிக்கும் என்க. என்னெனின், உருபின்றிச் செயப்படுபொருட்பெயரோடு முற்றுவினையைத் தொடர்விக்குமிடத்து, அவ் விருமொழியும் கூடி ஒரு தொடர்வினைபோல் நடந்து ஒரு பொருளை யுணர்த்துவதினாலும், செயப்படுபொருளை விரிக்குமிடத்துப் பெயரும் வினையும் தனித் தனி பிரிந்து இரண்டுபொருளை யுணர்த்துவதினாலும் என்க. இதனால், செயப்படுபொருட்பெயரை வேறு சொற்கள் தழுவி வருமிடத்தும், சுட்டி வருமிடத்தும், வலியுறுத்துமிடத்தும், உருபை விரித்துக் கூறுதலும், அவை யில்லாதவிடத்து உருபின்றியே கூறுதலும் வழக்கென்க. உ-ம்:—வீடு கட்டினான் என, ஒருவன் செல்வமுடையவனாயினான் என ஒரு பொதுப்பொருளை உணர்த்துமெனின், உருபுதொக்கியே கூறப்படும். அந்த வீட்டைக் கட்டினான் என, அப் பொதுப்பொருளை யுணர்த்தாது ஒரு வீட்டை விசேஷப்படுத்தியதினாலும், வீட்டைக் கட்டினான் என வேறு சத்திரம் சாவடி முதல்வன கட்டாது, குடியிருக்க ஓர் வீட்டைக் கட்டினான் என வீட்டையே விசேஷப்படுத்தியனாலும், உருபை விரித்தே கூறப்படும்.

உ-ம்:—(1) கைகட்டி நின்றான் (வணக்கக்குறிப்பை யுணர்த்தியதால் பொதுப்பொருள்.) கையைக் கட்டிக்கொண்டு நின்றான். (கையை நீட்டிக்கொண்டு நில்லாது கட்டிக்கொண்டு நின்றான் எனக் கையின் தொழிலை விசேஷப்படுத்தியது.) (2) பல் விளக்கிக்கொண்டிருந்தான். (தந்தசுத்தி செய்யும் தொழிலில் இருந்தான் எனப் பொதுப்பொருள்.) பல்லை விளக்கிக்கொண்டிருந்தான் என, நகமுதலிய வேறு உறுப்புகளையன்று, பல்லையே விளக்கிக்கொண்டிருந்தான் எனப் பல்லை விசேஷப்படுத்தியது. (3) நாற்காலி கொண்டுவா என, உட்கார ஆசனம் கொண்டுவா எனப் பொதுப்பொருள். நாற்காலியைக் கொண்டுவா என, மேசைமுதலிய வேறு சாமானையல்ல என நாற்காலியை விசேஷப்படுத்தியது.

202. EXCEPTIONS.

செயப்படுபொருளும் எழுவாய் தானும்,
ஒருபாலாகின் உருபு தொகாவாம்.

ஒரு வினையைக்கொண்டு முடிகின்ற எழுவாயும் செயப்படுபொருளும் ஒரு பாலாகும்போது, பொருள் மயக்கம்நீங்கச் செயப்படுபொருளை விரித்துக் கூறுதலும் தகுதியே. மாடு கொண்டான் எனினும் மாட்டைக் கொண்டான் எனினும் பொருள் ஒன்றாகியவாறு, மாடு முட்டிற்று, மாட்டை முட்டிற்று என ஒரு பொருள் படமாட்டா.

203. ELLIPSIS OF THE THIRD CASE.

வினைச்சொல் தானே விரியாதாகின்
கருவியும் கருத்தனும் காரணம் மறைக்கும்.

மூன்றும் வேற்றுமைப் பெயர்த்தொடருள், வினை மறைந்துவருமேயாகின், கருத்தா, கருவிமுதலிய பொருளில் மூன்றும் வேற்றுமையுருபு தொகும் என்க.

உ-ம்:—மண் பானை = மண்ணாற் பானை. திருவள்ளுவா குறள் = திருவள்ளுவராற் குறள்.

எனவே, இவ்வகை யுதாரணங்களை மூன்றும் வேற்றுமையாக வென்கினும் ஆறும் வேற்றுமையாக வென்கினும் கருதின், பொருள் ஒன்றே என்க.

204. NONE WITH THE SOCIAL ABLATIVE.

நிகழ்ச்சியுருபை நீங்கக் கண்டிலம்.

205. NONE WITH THE FOURTH CASE.

நான்கன் உருபை நையக் கண்டிலம்.

206. NONE WITH FIFTH CASE.

ஐந்தன் உருபை அழியக்கண்டிலம்.

207. ELLIPSIS OF THE SIXTH CASE.

சுருங்கச்சொல்லுதல் சொற்கழகு என்பரால்
ஆறுக்கழகு தொகையே என்பாம்.

ஆறும் வேற்றுமையுருபு தொகினும் பொருள் மயங்கமாட்டாவென முதலே காட்டினோம். அதனால், சொற்சுருக்கம் பாஷைக்கு அழகென்று எண்ணப்படுதலால், ஆறும் வேற்றுமைத் தொகையை விரிவினும் சிறப்பென்று எண்ணுக.

208. FORMS OF THE SIXTH CASE.

உருபுக்கிடனாய்த் திரியும் பெயரெலாம்
ஆறும் வேற்றுமைத் தொகையே யாகும்.

வேற்றுமைப் படுமிடத்தில் சில பெயர்கள் விகாரமின்றி உருபுகளை யேற்றும், சில பெயர்கள் விகாரப்பட்டு உருபுகளை யேற்பதும் வழக்கானதால், அவ்வாறு விகாரப்படும் சொற்களையெல்லாம் ஆறும் வேற்றுமைத் தொகையாகவே கருதப்படுமென்க. எங்ஙனமெனின், நான், நீ, நாம், நீர், முதலிய இடப்பெயர்கள் வேற்றுமைப் படுமிடத்தில், என், உன், நம், உம் எனத் திரிதலால் இவற்றையும், மரம், மாடு, ஆறு என மகர, டுகர, றுகர ஈற்றுப்பெயர்கள் வேற்றுமை உருபுகளை யேற்கும் முன்னர், மரத்து, மாட்டு, ஆற்று என விகாரப்படுதலால் இவற்றையும் ஆறும் வேற்றுமைத்தொகைஎன்க. கணக்கன், இடையன் முதல்வன சொற்கள் விகாரப்படுதலின்றியே உருபுகளை யேற்று வேற்றுமைப் படுதலால், வேற்றுமைக்கிடனாய் நிற்கும் அந்நிர் விகாரப்பெயர்களே ஆறும் வேற்றுமைத் தொகையாகும்.

உ-ம்:—என்கை. மரத்துவேர். ஆற்றுச் சலம். எங்கள்வீடு. மாட்டுக்கொம்பு. வீட்டுவேலை. (இவை விகாரப் பெயர்கள்) அவன் கால். கணக்கன் வீடு. இடையன் புத்தி பிடரியிலே. பசும்புற் றலைகாண் பரிது. (இவை நிர்விகாரப்பெயர்கள்) இதுகாரியம்=இதின் காரியம். (இந்தக்காரியம் எனப் பொருள்படுத்தல் கூடா.)

209. OMISSION OF THE FINAL ம்.

ஈற்றுமகரம் கெட்ட பெயர்கள்
ஆறும் வேற்றுமைத் தொகையே யாகும்.

மகரவீற்றுச் சொற்களில் அம்மகரத்தை நீக்கி வேறு பெயரொடு தொடர்விக்குமிடத்தில், மகரம்கெட்ட அப்பெயர்களையும் ஆறும் வேற்றுமைத் தொகை என்றே கொள்க.

உ-ம்:—மரவேர்=மரத்தினுடைய வேர்.
ஆலவிழுது=ஆலத்தினுடைய விழுது.

210 CHANGE OF THE PENULTIMATE.

வன்றொடரான மென்றொடர்ப்பெயர்கள்
ஆறும் வேற்றுமைத் தொகையேயாகும்.

மென்றொடர்க் குற்றியலுகரப்பெயர்களை வன்றொடர்க் குற்றியலுகரப் பெயர்களாக்கி வேறு பெயர்களோடு தொடர்விக்குமிடத்தில், அவ் வன்றொடர்க்குற்றியலுகரப் பெயர்களையும் ஆறும் வேற்றுமைத் தொகை என்றே கூறுக.

உ-ம்:—மருந்துப்பை = மருத்துப்பை = மருந்தினது பை.

211. COMBINATION OF SANSCRIT AND TAMIL WORDS.

வடமொழியோடு வடமொழி கூடியும்,
தமிழ்மொழியோடு வடமொழி கூடியும்,
நிலைமொழியிறுதி நீங்கியும் நின்றும்
ஆறும் வேற்றுமைத் தொகை பலவாறும்.

ஆறும் வேற்றுமைச்சந்தியில் வரும் பெயர்கள் இரண்டும் சமஸ்கிருத பதங்களாயேனும், அவற்றுள் ஒன்று தமிழ்மொழியாகவேனும் வருதல் வழக்கானதால், முதல் மொழி யீற்றுத் திரிந்தென்கினும் திரியாமலென்கினும் புணர்ந்து ஆறும் வேற்றுமைத்தொகை பலவாறுகும்.

உ-ம்:—சபாமண்டபம்=சபையினது மண்டபம். கதாமஞ்சரி=கதையினது மஞ்சரி. அறிவானந்தம். சிவஞானி. ஆநந்த பூர்த்தி. சொற்பிரகாசத்தனி. நிஷ்பிரபஞ்சப்பொருள். பிரமாதி. ஆதிநூல். மந்திரகுருவே! யோக தந்திரகுருவே! மூலன் மரபில் வரு மௌனகுருவே! கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு கருணாகரக்கடவுளே! வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச் சித்தர்கணமே! சர்வபரிபூரண அகண்ட தத்துவமான சச்சிதானந்த சிவமே! [தாய்.]

வடமொழியும் தமிழ்மொழியும் விரவிப் புணர்தல் கூடாதென்று சிலர் விதி கூறுவர். ஆகினும், அவ்விதிக்கு வழக்கினிடத்து யாதோர் ஆதாரத்தையும் காண்கிலம்.

212. WHEN ELLIPSIS IS INDISPENSABLE.

காலம் கருவி செயல் இடம் பண்பொடு
உவமை அளபெனப் பலவா விதந்த
பொருளுக்கெல்லாம் தொகையே உரிமை.

ஆறும் வேற்றுமை யியலில் காலப்பொருள், கருவிப்பொருள், செய்கைப்பொருள், இடப்பொருள், பண்புப்

பொருள், உவமைப்பொருள், அளவுப்பொருள் என விதந்து கூறிய பொருள்களில் வரும் வேற்றுமைத் தொடருக்கெல்லாம் தொகையே சிறப்பென்க. எனவே, அவற்றுள் விரிந்து வாராதென்க. உதாரணங்களை அவ்வவ் விதியின் அடியிற்காண்க.

213. Ellipsis of the Seventh Case: Nouns of Time.

காலமும் கால முறையும் ஏழை
மறையப் பெறுவதும் வழக்காகும்மே.

காலப்பெயர்களும் கால முறையைக்காட்டிய பெயர்களும் ஏழாம் வேற்றுமையில் நின்று வினையைக்கொண்டு முடியுமிடத்துப் பெரும்பாலும் உருபு தொக்கியே வருதல் வழக்கென்க.

உ-ம்:—இன்னவருஷம், மாசம், தேதி, இத்தனைதரம், நடைவை, நடந்தது. ஒருநாள் ராத்திரி இரண்டுமணி வேளை இது சம்பவித்தது. அந்தி சந்தியும் வேதம் ஓதிய பிராமணன். ஆயிரம்வருஷம் பிழைத்திருக்கிறது. சிறிதுநேரம் இருந்தான். நீங்களும வெகுகாலம் பிழைத்திருப்பீர்கள். [பஞ்]

214. The same: Nouns of Place.

இடனை உணர்த்திய பெயரும் சிறுபால்
ஏழைமறையப் பெறுவதும் வழக்கே.

இடத்தை உணர்த்திய பெயர்களும் சிறுபான்மை ஏழாம் வேற்றுமையுருபு விரிதலின்றி வருமென்க.

உ-ம்:—அவனிடம் போ. என்வசம் சேர்ந்தது. வைகுண்டம் சேர்ந்தார். தெய்வலோகம் போனார்.

215. The same by change of the Penultimate.

டகர றகர மகர வீற்றுப்
பெயர்கள் திரிந்தும் தேற்றம் பெற்றும்
உருபு வேறின்றி ஏழாகும்மே.

மேற்கூறிய மூன்றீற்றுப்பெயர்களும் வேற்றுமைக்கிடனாய் விகாரப்பட்டும், ஏகார இடைச்சொல்லை ஏற்றும் ஏழாம் வேற்றுமைத்தொகையாய் வருமென்க.

உ-ம்:—ஒரு நிலத்து உள்ள பொருளை ஒரு நிலத்திற்கொண்டுபோய் விட்டது. வீட்டே வந்தான். காட்

டேபோனான். காட்டகத்தே நிற்கும் மரம். [ஔவை] புறத்தே போனான். எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காய் தெங்காகா. [நால்]

மேலே உதாரணங்களை நோக்கின், பொருள் வெளிப்படையா யிருக்குமிடத்தில் உருபுகள் தொக்கிவருதல் சிறப்பென்றும், பொருள் பேதிக்குமிடத்தில் உருபை விரித்துக் கூறுதலே தகுதியென்றும் தோன்றியது. இவையே, உருபுதொகைக்கு ஆதாரமான விதிகள் என்க.

XXIII. விகுதிப் பெயர்.

முற்று வினையீற்றில் உருபாய்நின்று பாலையும் இடனையும் விளக்கிய விகுதிகள் பூர்வம் இடப்பெயராய் இருந்தவை பின்பு விகுதிகளாய்த் திரிந்தமையினால், அவ்விகுதிகளாய்த் திரிந்த பெயர் எவையோ, அவற்றையும் அவற்றிற்கு இனமானவற்றையும் விகுதிப்பெயர் என்னும். விகுதிப்பெயர்களாவன: நான், நாம், நீ, நீர், அவன், அவள், அது, அவர், அவை, யெனவும், நாங்கள், நீங்கள், அவர்கள், அதுகள், அவைகள் எனக் கள் உருபேற்றும், தான், தாம், தாங்கள் எனவும் வரும் சொற்கள் என்க. இவ்விகுதிப் பெயர்களுக்கு வேற்றுமையியலிற் சொல்லிய விதிகள்யாவும் பொருந்தியதுந்தவிர, இவற்றிற்கே உரிய சிறப்பு விதிகள் எவையோ, அவற்றை இங்ஙனம் கூறுதும்.

216. Verbal Inflections are Pronouns.

விகுதிப் பெயர்கள் விகுதியில் உளவால்,
எழுவாயாக வரின், பொருள் வேண்டும்.

முற்றுவினை விகுதியே இடப்பெயராய் இருத்தலினால் எழுவாய் விரியாமலே முற்றுவினைகள் பொருளாகுமிடத்து, அவ்வெழுவாயை விரிக்கவேண்டுமெனின் யாதாவதொரு பொருள் வேண்டும். அப்பொருள், சிறப்பு, தெளிவு, வலியுறுத்தலென்று உருபுத்தொகையியலிற் காட்டியுளாம்.

217. Person and Gender of Eminence.

இடனிற் சிறந்தது தன்மை என்க.
பாலிற் சிறந்தது ஆண்பால் என்க.

தமிழ்ப்பாஷையினுள் மூவிடங்களினும் தன்மையையும், ஆண் பெண் ஒன்றன்பால்களினும் ஆண்பாலையும்

சிறப்பாய் மதிக்கப்படும் என்க. அதனால், இடப்பெயர்கள் பல அடுக்கிவரின், தன்மைப்பெயரை முதலினும், பாற்பெயர்கள் பல அடுக்கிவரின் ஆண்பாலை முதலினும் கூறுதல் வழக்கென்க.

உ-ம்:—நானும் நீயும் வந்தோம். அவனும் அவளும் வந்தார்.

218. The Greater contains the Less.

இடங்கள் மூன்றும் விரவுங்காலை
தன்மையாகும் பயனிலை வினையே.

தன்மைப்பெயரொடு முன்னிலையாகினும் படர்க்கையாகினும் அவ்விரு இடப்பெயரொன்கினும் கூடி எழுவாயாக வருமெனின், பயனிலைவினையானது தன்மையாகும் என்க.

உ-ம்:—நானும் நீயும் செய்தோம். நானும் அவனும் செய்தோம். நானும் நீயும் அவனும் செய்வோம். நாமும் நீங்களும் அவர்களும் செய்வோம்.

219. Omne continet in se Minus.

முன்னிலை படர்க்கை விரவுங்காலை
முன்னிலையாகும் பயனிலை வினையே.

உ-ம்:—நீயும் அவனும் வந்தீர்கள். நீங்களும் அவர்களும் வந்தீர்கள்.

220. நாம் and நாங்கள் distinquished.

முன்னிலையோரைத் தழுவும், தழுவா,
நாமே, நாங்கள் திராவடமனைத்தினும்.

நாம் நாங்கள் என்னும் இருமொழிகளும் தன்மைப் பன்மையாய் இருந்தும், திராவடபாஷை வழக்கை நோக்குமிடத்தில், முன்னிலையோரைத் தழுவி நாம் என்றும், தழுவாமல் நாங்கள் என்றும் கூறப்படும் என்க.

உ-ம்:—நாம் செய்தோம் = நீயும் நானும், நீங்களும் நாங்களும் செய்தோம். நாங்கள் செய்தோம்=நீங்கள் அல்ல, நாங்களே செய்தோம். நாங்கள் பாவம் செய்தால் நரகில் விழுவோம் எனின் நீங்கள் செய்தால் விழுவீர்கள் என்று பொருள் கொள்ளாது.

221. WHEN நாம் USED FOR நான்.

சங்கையானும் அன்பினானும்.
நானும் நாமர்ய் வருதலும் உளவே.

சங்கைப்பொருளை உணர்த்தும்போதும், அன்பைக் குறிக்கும்போதும் தன்மை ஒருமையைப் பன்மையாயும் வழங்கலாமென்க.

உ-ம்:—நாம் வருவோம் எனப் பெரியோர் சொல்லுவது சங்கையால். நம்முடைய வீட்டுக்கு வா என ஒருவன் வேறொருவனைப் பார்த்துச் சொல்லுதல் அன்பினால்.

222. நாம் IN SOLILOQUY.

தன்னொடுதானே கிளர்வோன் தன்னை
நம்மையெனவே கூறிக்கொள்ளுதல்
மனத்தொடு சித்தம் வாதிடல் போலும்.

ஒருவன் தனியே பேசிக்கொள்ளும்போதும் நினைத்துக்கொள்ளும்போதும், தன்னைத்தானே நாம், நம்மையென்று சொல்லிக்கொள்ளும் வழக்கை யோசிக்கும்போது, மனதும் சித்தமும் வாதுசெய்து சம்பாஷணை செய்வது போலும் என்க.

உ-ம்:—அங்கே போவோமானால் மோசம் நேரிடும், ஆகையினால் போகக்கூடாதென்று நின்றுபோனான். துஷ்டியந்த மகராஜன் நமஸ்காரம்செய்த சகுந்தலையையும் புத்திரனையும் உய்த்து நோக்கி ஆ! ஆ! நாம் வேட்டையாடி வனத்திற் சென்றபோது, கண்ணுவர் ஆசிரமத்தில் இவளைக்கண்டு காந்தருவ மணம் புரிந்துகொண்டு, மந்திரிகளால் அழைத்துக்கொள்ளுகிறேம் என்று சொல்லி வந்துவிட்டு இதுவரைக்கும் நாம் அழைக்காதிருந்ததினாலே, இவளே வந்துவிட்டாள்: இனி நாம் இவள்கருத்துக்கு விரோதம்வாராமல் அழைத்துக்கொண்டோமாகில், இதோ இருக்கிற நமது புத்திரனுக்கு நமக்குப்பின், நமது மந்திரி முதலானவர்கள் பட்டம் கட்டிவிக்கமாட்டார்கள். அல்லது, நீக்கிவிடுவோமாகில், இவள்மனம் நோகும்: அதனால் நமது அரசுக்குக் கெடுதிநேரிடும்: அதற்கு என்னசெய்கிறது என்று சற்றுநேரம் ஆலோசித்து, இவளை நிராகரிப்போம். அப்போது நாம் சாக்ஷியை

த்த ஆகாயவாணி வந்து இந்தச்சபையில் இருக்கிறவர்கள் யாவரும் ஒத்துக்கொள்ள, அக்காலத்தில் நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லுவாள். அப்போது அழைத்துக்கொண்டு நம்மால் அடைந்த வருத்தத்தை மாற்றுவோம் என்று மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டு சகுந்தலையைப்பார்த்துச் சொல்லுகிறுன். [பார]

பம்பி மேகம் பரந்தது, பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்
அம்பின் ஆட்டுதும் என்று அகன்குன்றின்மேல்
இம்பர்வாரி எழுந்தது போன்றதே. [கம்]

223. Plural Pronoun used for the Singular.

மூவிடத்தினும் ஒருமை பன்மை ஆம்
சங்கைப்பொருளை உணர்த்துமாயின்.

சங்கை மேன்மை மரியாதை முதலிய பொருளையிட்டு மூன்றிடங்களிலும் ஒருமைப்பொருளைப் பன்மைப்பெயராய்க் கூறலாமெனக.

உ-ம்:—நீ சொன்னாய்=நீர் சொன்னீர்=நீங்கள் சொன்னீர்கள். அவன் சொன்னான்=அவர் சொன்னார்=அவர்கள் சொன்னார்கள். முதலி வந்தான்=முதலியார் வந்தார்=முதலியாரவர்கள் வந்தார்கள். பிள்ளை வந்தார்=பிள்ளையவர்கள் வந்தார்கள். (பிள்ளையார் எனவரா.)

224. Similar use of தாம் and தாங்கள்.

தாமும் தாங்களும் முன்னிலை ஒருமையே.

மேற் சொன்ன பொருளையிட்டு, தாம், தாங்கள் என்ற இவ்விருபெயரும் முன்னிலை ஒருமைப்பொருளை உணர்த்தும் எனக.

உ-ம்:—நீ சொன்னாய்=தாம் சொன்னீர்=தாங்கள் சொன்னீர்கள்-

225. Use of தான் and அவன்.

எழுவாய்ப்பெயரைச் சுட்டில் தானே.
ஏனைப்பெயரைச் சுட்டில் அவனே.

அவன், தான் என்னும் இவ்விரு படர்க்கை ஒருமைப் பெயர்களில் வாக்கியத்திலேனது எழுவாய்ப்பெயரை அடுத்து

நிற்பது தான் என்றும், வேறுபெயரை அடுத்துநிற்பது அவன் என்றும் கொள்க.

உ-ம்:—சுந்தரம் தன்னை நல்லவன் என்றான் எனின் தான் என்னும் பெயர் சுந்தரத்தைத் தழுவியது. சுந்தரம் அவனை நல்லவன் என்றான் எனின், அவன் என்னும் சொல் வேறொருவனைத் தழுவிநின்றது.

226. தான் USED ABSOLUTELY.

தனியேவரும் தான் சிறப்பின் பொருட்டே.

வேறு சொற்களுக்குப்பின் சிறப்பினாலே ஓர் அடைமொழிபோலும் தான் என்னும் பெயர் வருமென்க

உ-ம்:—அவன்தான் வந்தான். என்னைத்தான் அடித்தான். ஏன்தான் சொன்னாயோ. செய்யத்தான் போனான். வந்தாற்றான் கொடுப்பேன். கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா ? இல்லைத்தான் பசியாமலிருக்கத்தான் பதுமத்தான் எழுதினானா? பல்லைத்தான் விரித்து இரந்தால் நெல்லைத்தான் வரகைத்தான் பரிந்து ஆர் ஈவார் ? முல்லைத் தாண்டவராய கங்கைகுலம் விளங்க வந்த முதன்மையோனே ! [விநோ]

227. USE OF THE PREDICATE செய்யும்.

அவனும் அவளும் செய்யும் எனினும்
அஃறிணை ஒன்றே அவ்வாறியலும்.

அவன்செய்யும் அவள்செய்யும் எனச் செய்யுள் நடையில் வருமெனினும், வசனநடையில் அவ்வாறு வரா. அது செய்யும், அவைசெய்யும் என அஃறிணையில்மாத்திரம் அவ்வாறு நடக்கும்.

228. BY ETIQUETTE, WOMAN IS A THING.

பெண்ணை ஒன்றாய்ப் பேசலும் வழக்கே.

பெண்பாலை மரியாதைநோக்கி ஒன்றன்பால் விகுதியிற்கூறுதல் வழக்கென்க. சுந்தரம் வந்தாள் எனின் இலக்கணமாகினும் மரியாதை யின்மையால் சுந்தரம் வந்தது என்று சொல்லுவதே வழக்கு.

உ-ம்:—ஓய் ! நளமகாராஜரோ ! இந்தப் பெண்ணினுடைய தாயும் நானும் முனியீஸ்பரரைச் சேவித்து அவர் வரப்பிரசாதத்தினாலே வந்த பெண் இது. [நளச்]

10

பெண்ணே பெருமையுடைத்து. [குற] தன்னை உணர்த்தினும் காயும் (காய்வள்) பிறர்க்கு நீர் இந்நீரர் ஆகுதி என்று. [குற] கோட்டுப் பூச்சூடினும் காயும் ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று. முட்டைக்கும் (முள் தைக்கும்) குஞ்சிக்கும் (குந்திக்கொள்வாள்) கூடுகொண்டேகும் என் மொய்குழலே. சிரஞ்சீவி துரைசாமிக்குக் கேட்ட பெண் மிகுந்த லட்சணமுள்ளது. வயசு, ஒன்பது. பார்வைக்குப் பெரிய பெண்ணாய்த் தோன்றும்.

229. PREDICATE ENDING WITH கள்.

பன்மை விகுதி கள்ளேயாகின்
வினைக்கும் கள்ளாம் வழக்கினுள்ளே.

பலர்பாற்பெயரும் பலவின்பெயரும் கள் இறுதிபெற்று எழுவாயாகுமெனின், பயனிலை வினையும் கள் இறுதி பெறுமென்க.

உ-ம்:—அவர்கள் வந்தார்கள். அதுகள் வந்ததுகள். காரியங்கள் இப்படி இருக்கிறதுகள். ஐயா! இது நல்ல சமயம். சுலபத்திலே சாதிக்குதிரைகள் கிடைக்கின்றதுகள். [பர] எனக்கு, எட்சணி, மோசனி, குட்டிச்சாத்தான் முதலானதுகளும் வசியப்பட்டிருக்கின்றதுகள். அதுகள் நான் சொன்னபடி ஆடுகிறதுகள். [பர] தமயந்தி அந்தக் காடுகளிலே திரிகிறபோது, அவ்விடத்திலே இருக்கிற மிருகங்கள் கையிலேயாகிலும் அகப்பட்டுச் சாவோம் என்று எண்ணிக்கொண்டு போகச்சே, வேங்கை புலிகளைக்கண்டு அதுகளண்டையிலே போனாள். அதுகளும் பயந்து ஓடிப்போச்சுதுகள். அப்புறம் போகிறபோது, காட்டெருமைகளைக்கண்டு அதுகளண்டையிலேபோய்க் கொம்பைப் பிடித்திழுத்தாள். அதுகளும் பயந்துமுறித்துக்கொண்டு ஓடிப்போச்சுதுகள். அப்புறம்போகிறபோது, சிங்கங்களண்டையிலேபோய்க் கொர்ச்சித்து நின்றாள். அதுகளும் பயந்து ஓடிப்போச்சுதுகள். [நள]

230. NEUTER PREDICATES WITH INTERROGATIVES.

பொதுமைப் பயனிலை ஏற்கும் வினாவே.

வினாப்பெயர்கள் ஆண் பெண் பலர்பால் மூன்றுக்கும் பொதுவாய் நிற்றலால், பயனிலைவினையையும் பொதுவாகவே கூறுதல் வழக்கென்க.

உ-ம்:—எவன் வந்தான், எவள் வந்தாள், எவர் வந்தார் (இவை சிறப்பன்று)=யார் வந்தது (சிறப்பு). இதைக் கொடுத்தவன் யாவன், கொடுத்தவள் யாவள், கொடுத்தவர் யாவர் (இவை சிறப்பன்று)=இதைக் கொடுத்தது யார் (சிறப்பு).

231. NEUTER PREDICATES WITH INDETERMINATE INTERROGATIVES.

ஐயம் திணைபால் அணையும் பொதுவே.

உயர்திணையோ அஃறிணையோ என்றும், ஐம்பாலில் எதுவோ என்றும் சந்தேகம் உண்டாகியபோது, இருதிணைக்கும் ஐம்பாலுக்கும் பொதுவாகிய ஒன்றன்பால் வினையில் வினவப்பெறும் என்க.

உ-ம்:—மனிதனோ, சிலையோ, அங்கு தோன்றுகிறது என்ன? அவனோ அவளோ யார் வந்தது.

232. FORMS OF ADDRESS UNDER DOUBTFUL CASES.

ஒருவர்க்கொருவர் அறிமுகமில்லாது
உரிய சங்கை தெரிகிலராகின்,
ஐயம் ஒழியும்வரையும் அவரோ
பொதுப்பாலிடனுப் பேசவும் பெறுமே.

அறிமுகமில்லாத இருவர் பேசப்புகின், அவரவர்க்குரிய சங்கையை அறியும்வரையில், பொதுப்பாலிலும் பொதுவிடத்திலும் பேசிக்கொள்ளுதல் தமிழ் வழக்கென்க.

உ-ம்:—என்ன காரியத்தையிட்டு வந்தாய் = என்ன காரியம், வந்த காரியம் என்ன, என்ன காரியத்தைக் கோரி வந்திருக்கிறது, எனவும்: எவ்வளவு தூரம் போகிறாய் = எவ்வளவுதூரம் எனவும் வரும்.

233. PRONOUNS PRECEDED BY REL. PARTICIPLES.

எச்சவிறுதி விகுதிப்பெயர்கள்
வேற்றுமைப்படினே மயக்குத் தோன்றும்.

பெயரொச்சத்தை ஏற்றுவரும் இடப்பெயர்கள் எழுவாயாக வருமெனில் மயக்கமில்லை. வேற்றுமைப்படின் மயக்கந் தோன்றுமென்க.

உ-ம்:—நடந்த நான், நடந்த நீ, நடந்த அவன் (இவற்றுள் மயக்கமில்லை). படியாத என் பிள்ளைகள் எனவே, நான் படியாதவன் எனவோ பிள்ளைகள் படியாதவர் எனவோ மயக்குத் தோன்றியது.

வான நாடரும் அறியொணாத நீ! மறையில் ஈறும் உன் தொடரொணாத நீ! ஏனை நாடரும் தெரியொணாத நீ என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா! ஊனை நாடகம் ஆடுவித்தவா! உருகி நான் உனைப் பருக வைத்தவா! ஞான நாடகம் ஆடுவித்தவா! நைய வையகத்துடைய இச்சையே! [திருச்]

234. PECULIARITIES OF THE DESCRIPTIVE NOMINATIVES.

தன்மைப்பெயரும் படர்க்கைப்பெயரும்
ஒருபொருள் குறிப்பின் பயனிலை தன்மையாம்.

ஒரு பொருளை உணர்த்தித் தன்மைப்பெயரும் படர்க்கைப்பெயரும் கூடி விசேடண எழுவாயாக வருமிடத்தில், பயனிலை தன்மையாகும்.

உ-ம்:—சாத்தன் தாய் இதைச் செய்வனோ? = சாத்தன் தாயாகிய யான் இதைச் செய்வனோ? உன்னில் இன்னம் உளது ஒன்று. பஞ்சவர் உரைக்க வந்ததொரு தூதன், யான், இன்னலின் அடிசில் உண்டு நின்னுடன்வெறுக்க எண்ணுவது நீதியோ? = பஞ்சபாண்டவர்கள் சொல்லைச் சொல்ல வந்த ஒரு தூதன், யான் உன்னிடத்திலே இனிமையுள்ள அன்னத்தை உண்பனோ? உண்டு உன்னோடேதானே வெறுக்க நினைப்பது நீதியோ என்றார் ஸ்ரீ கிருஷ்ணசுவாமி. [பார]

XXIV. எண்ணுப்பெயர்.

235. NUMERAL NOUNS: ONE.

ஒருவன் ஒருவள் ஒருவர் அன்றியும்,
ஒருத்தன் ஒருத்தி ஒருத்தர் என்றும்
வழங்கும் வினையும் விகுதி தழுவும்.

ஒன்று என்னும் எண்ணுப்பெயர் ஒருமை விகுதியை என்கினும் டன்மை விகுதியைஎன்கினும் ஏற்கும். அப்பெயரின் விகுதி எதுவோ அதுவே பயனிலைவினைக்கும் நடக்கும்.

உ-ம்:—ஒருவன் வந்தான், ஒருத்தன் வந்தான், ஒருவர் வந்தார், ஒருத்தர் வந்தார். ஒருவள் வந்தாள், ஒருத்திவந்தாள், ஒன்று வந்தது.

236. Other Numeral Nouns.

ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை,
ஒன்றலாதன எண்ணுக்கு எல்லாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட எண்களெல்லாம் பலர்பால் விகுதியைமாத்திரம் ஏற்பதன்றி, ஆண்பால் பெண்பால் விகுதிகளை ஏற்கமாட்டா.

உ-ம்:—ஐவர் வந்தார்.

237. Cardinal and Ordinal Numbers.

பொதுவும் சிறப்பும் ஆகிய எண்ணுள்
பொதுவுக்கு இயல்வது பன்மை வினையாம்.
சிறப்புக்கு இயல்வது ஒருமை வினையாம்.

ஒன்றலாத எண்களில் பொதுவெண்பெயர்கள் எழுவாயாகுமிடத்துப் பயனிலைவினையைப் பன்மையிலும், சிறப்பெண்பெயர்கள் எழுவாயாகுமிடத்துப் பயனிலை வினையை ஒருமையிலும் கூறுக.

உ-ம்:—இரண்டு மனிதர் வந்தார் (பொது). இரண்டாவது மனிதன் வந்தான் (சிறப்பு). எத்தனை (பொது பன்மை). எத்தனையாவது (சிறப்பு. ஒருமை).

238. Numerals with the Predicate.

எழுவாய்ப்பின் எண் வருதலுமன்றி,
பயனிலையடையா வரவும் பெறுமே.

எண் பெயர்கள் எழுவாயடையாய் வருதலுமன்றி அவற்றையே பயனிலையடையாய்க் கூறினும் கூறலாமென்க.

உ-ம்:—அவர்கள் நாலுபேரும் வந்தார்கள் (எழுவாயடை). அவர்கள் நாலுபேருமாய் வந்தார்கள் (பயனிலையடை).

239. Repeated Numerals.

அடுக்கெண்ணுகின் பயனிலையடையே.

எண்கள் அடுக்கிவருமிடத்தில் அவற்றைப் பயனிலையடையாய்க் கூறுதல் பெரும்பாலும் வழக்கென்க.

உ-ம்:—அவர்கள் ஒவ்வொருவராய் வந்தார்கள். இவற்றை மும்மூன்றாய் வை.

240. NUMERALS SUPPRESS PLURAL TERMINATION.

எண்ணே விரியின் பன்மை வேண்டா,
அஃறிணையோடு சிறுபால் உயர்திணை.

எண்கள் விரிந்து எழுவாய்ப்பெயர்களைத் தழுவி நிற்குமிடத்து, பெரும்பான்மை அஃறிணைப்பெயர்களும் சிறுபான்மை உயர்திணைப்பெயர்களும் பன்மைவிகுதி ஏற்காமலே வருமென்க. ஆகினும், உயர்திணையில் னகரம் ரகரமாய்த் திரியும் பலர்பாற்பெயர்களுக்கு இவ்விதி பொருந்தாதென்க.

உ-ம்:—நூறு தேர், நூறு காலாள், பத்துச் சிற்றாள், ஆயிரம் யானை, நாலு தென்னம் பிள்ளை.

XXV. வினைப்பெயர்.

241. TWO CLASSES OF INTERROGATIVES.

சொல்லால் வினாவும் உருபால் வினாவும்
ஆய் இருவினாக்கள் உண்டென்பாமே.

என், ஏன் முதலிய வினாச்சொற்களே நின்று ஒரு வாக்கியத்தை வினாவாக்கியதுமன்றி, ஆ, ஓ, முதலிய உருபுகளாலும் வினாவாக்கியம் முடியுமென்க.

உ-ம்:—எவன் வந்தான் (சொல்லால் வினா). அவன் வந்தானா (உருபால் வினா).

242. INTERROGATIVE PROPOSITIONS.

சொல்லால் வினாவே உம்மடை பெற்று
முற்றுப்பொருளை உணர்த்தியது உளவே.

சொல்லால் வினாவாகிய வாக்கியங்களில், வினாவுடன் உம் இடைச்சொல்லைக் கூட்ட, முற்றுப்பொருளை உணர்த்திய வாக்கியங்களாகும்.

உ-ம்:—அவர்களில் எவன் கெட்டவன்? அவர்களில் எவனும் கெட்டவன்.

243. HYPOTHETICAL PROPOSITIONS.

உருபு வினாவால் வாக்கியம் முடியுமேல்
அவாநிலை வாக்கியம் ஆதலும் உளவே.

வினா உருபைக்கொண்டு முடிந்த வினாவாகிய வாக்கியங்கள், பொருளில் அவாநிலை வாக்கியங்களாகினும் ஆகலாம் என்க.

உ-ம்:—அவனா? வெகு கெட்டவன்=அவனைக் குறித்து கேட்பாயானால், வெகு கெட்டவன் இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனா? கண்ணிறை நீர் கொண்டனள் [குற]=இம்மையில் உன்னைவிட்டு நான் பிரியமாட்டேன் என்றேனா (என்று சொல்வேனானால்) மறுமையிற் பிரிந்து போவீரோ என்று கண்ணீர் உகுத்தாள்.

244. MODAL PROPOSITIONS.

எவ்வாறவ்வாறு, எப்படி அப்படி,
எவையோ அவையே, எங்ஙன மங்ஙனம்,
எனும் இத்தொடருள், முதலுக்கு ஓ வர,
இரண்டொன்றாகும் வாக்கியம் என்க.

மேற் காட்டியவாறு, இரண்டாய் மடித்துவரும் சொற்களைக்கொண்டு முடியும் இரண்டு வாக்கியங்கள், முதல் மொழி யீற்றில் ஓகாரத்தை இணைப்பதினால், ஒரே வாக்கியம்போல் முடியுமென்க. அவ்வாறு வரும் சொற்களாவன.

உ-ம்:—எவ்வாறோ: அவ்வாறே. எப்படியோ, அப்படியே: எத்தன்மையோ, அத்தன்மையே: எற்றோ, அற்றே: எங்கேயோ, அங்கேயே: எவனோ, அவனே: எவையோ, அவையே: எங்ஙனம், அங்ஙனம்: எப்பாலதோ அப்பாலதே: எந்நீரதோ, அந்நீரதே: யாதோ, அஃதே; எத்தனையோ, அத்தனை: எவ்வளவோ, அவ்வளவு:

கங்குல் பகல் அறநின்றது எது அது. கருத்திற்கு இசைந்தது [தாய்]. அலகிலா விளையாட்டு உடையார் அவர் தலைவர் [கம்]. எவ்வது உறைவது உலகம், உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு. [குற]

XXVI. பண்புப்பெயர்.

245. ABSTRACT AND CONCRETE NOUNS.

உரியொடு பெயர்வரின் ஒருசொல் என்க.
உரிப்பெயராகின் இருசொல் என்க. அதனால்,
உரிச்சொல் உணர்த்தும் பொதுப்பொருள் என்க.
உரிப்பெயர் உணர்த்தும் தனிப்பெயர் என்க.

உரிச்சொல்லை ஏற்றுவரும் பெயரை ஒரு சொல்லாயும் பண்புப்பெயரை ஏற்றுவரும் பெயரை இருசொல்

தொடராகவும் கருதுக. அதனால்,உரித்தொடர் ஒருபொது ப்பொருளை உணர்த்தியது என்றும், பண்புப் பெயர்த்தொடர் ஒரு தனிப்பொருளை உணர்த்தியது என்றும் கொள்க. எங்ஙனமெனின், கருங்கோழிஎன உரித்தொடராய் வரவே, பல்வகைப்பட்ட கோழி இனங்களில் ஓர் இனத்தை மாத்திரம் காட்டியது. கறுப்புக்கோழி எனவே, ஒரு இனத்தை உணர்த்தாமல் ஒரு கோழியின் நிறத்தைமாத்திரம் காட்டியது. இதனால் கருங்கோழியைப் பொதுப் பொருள் என்றும், கறுப்புக் கோழியை தனிப்பொருள் என்றும், கூறினும். இனத்தைக் கூறியது பொதுவென்றும், ஒன்றைச் சுட்டியது தனிமை என்றுங்கொள்க.

உ-ம்:—Class Names:—சிறுபயர், சிறுநாகம், சிறுகீரை, சிற்ருள், சிற்றப்பன், கருங்கோழி, கருஞ்சோழம், கருங்காலி, கரும்பாம்பு, செங்கீரை, செந்தினை, செங்காறை, செம்மறி, செம்பழம், செங்காய், முக்காலி, நாற்காலி, வெண்கலம். (இவை, பொதுப்பெயர்)

Individual Names:—சின்னப்பயர், கறுப்புக்கோழி, செகப்புத்தினை, சின்னமலை, பெரியமலை, வெள்ளைக்குதிரை. (இவை, தனிப்பெயர்)

246. Importance of this Distinction.

குணனே சிறப்பின் பண்புப்பெயரடை.
பெயரோ சிறப்பின் உரியடை என்க.

ஒரு பெயரின் குணத்தைச் சிறப்பிக்குமிடத்துப் பண்புப்பெயரடை கொடுத்தும், அப்பெயரையே சிறப்பிக்குமிடத்து உரியடை கொடுத்தும் கூறுதல் வழக்கென்க.

உ-ம்:—தண்ணீர், செந்தினை, கருங்கோழி (இவற்றில், பொதுப்பெயர் சிறந்தனவன்றி, குணம் சிறந்தனவல்ல). குளுந்த ஜலம், செகப்புத்தினை, கறுப்புக்கோழி (இவற்றுள், தனிப்பொருளின் குணம் சிறந்தது).

247. Other ways of marking this Distinction.

உரிக்கே உரிய பெயர் இலையாகின்
பொருளால் வேருெரு கிளவியும் உளவே.

ஒரு உரிச்சொல்லுக்கு அதன் அடியாய்ப் பிறந்த பெயர்ச்சொல் இல்லையாகின், அப்பொருளையே உணர்த்தும் வேருெரு பெயரினையாகினும், வினையினையாகினும் குறி

ப்பு வினையினையாகினும் கொண்டு மேலே கூறிய பேதத்தைக் காட்டப் பெறும் என்க.

உ-ம்:—சிறுவிரல் (பொது). சின்னவிரல், சிறியவிரல், சிறிதானவிரல் (தனி). வெந்நீர் (பொது). வெம்மையாகிய நீர், கொதிக்கிற நீர், சுடுகிற நீர் (தனி). இன்சொல் (பொது). இனியசொல், இனிமையான சொல், மதுரமான சொல் (தனி).

248. Verbs derived from Adjectives.

எதிரது தழுவும் தெரிநிலை உரியே.

உரியடியாய்த் தோன்றிய தெரிநிலை வினைகள் பண்பை உணர்த்தியதுமன்றி, அப்பண்புக்கு எதிரிடையான பண்பையும் சுட்டும் என்க. எங்ஙனமெனின், வெளுத்தமுகம் எனின், அம்முகத்தில் முன் ஒளி இருந்தது எனவும், வெளுத்த சீலை எனின், அச்சீலையில் முன் அழுக்குப் படிந்திருந்தது எனவும், கறுத்த நெஞ்சன் எனின் முன்னால் அவன் கிருபையை உடையவன் எனவும், சிவந்த காய் எனின் முன் அது பச்சையாய் இருந்தது எனவும் பொருள் படுதலால் என்க.

249. Mode of Enlarging Adjuncts.

ஆவும் எனவும் பண்பை விரிக்கும்.

பண்பை விரித்துக் கூறவேண்டுமெனின், ஆதலால், எனல் என்ற இவ்விரண்டு வினைகளின் உதவியால் ஆகுமென்க.

உ-ம்:—கருங்குதிரை=கருமையாகிய குதிரை. கறுத்த மேகம்=கரேல் என்றிருக்கும் மேகம். செங்காய்=செம்மையாகிய காய்=சிவேலென்று சிவந்த காய்.

250. Repeating Adjectives.

உரியை அடுக்கப் பொருள்மிகச் சிறக்கும்.

பண்பை அதிகமாய்ச் சிறப்பித்துக் கூறவேண்டியவிடத்து, அப்பண்பை அடுக்கிக் கூறினால் அமையுமென்க.

உ-ம்:—கன்னம் கரிய, சின்னம் சிறியோர்கள், பென்னம் பெரிய, புத்தப் புதிய, நட்ட நடுவே, பச்சைப் பசிய, செக்கச் சிவந்த, தன்னம் தனியே, வெள்ளை வெளேரென, வெட்ட வெளியே. கன்னம் கரிய நிறக் காமாதி ராக்ஷசப்பேய்க்கு என்னை இலக்காக வைத்

தது என்னை பராபரமே! வெட்டவெளிப் பேதையன் யான் வேறு கபடு ஒன்று அறியேன். சின்னம் சிறியேன்றன் சிந்தை கவர்ந்தார் இறைவர், தன்னந் தனியே தவிப்பேனே பைங்கிளியே. பஞ்சப் பொறியை உயிர் என்னும் அந்தப் பஞ்சம் அறச் செஞ்செவே எம்மைத் தெரிசிப்பது எந்நாளோ? [தாய்]

251. VERBAL ADJECTIVES.

பொதுப்பெயர் தனிப்பெயர் உணர்த்துமாற்றான்
உரிச்சொற்கு உரிப்பெயர் எற்றோ அற்றே
வினைத்தொகை தனக்குப் பெயரொச்சம்மே.

பொதுப்பெயரை உரிச்சொல்லும் தனிப்பெயரைப் பண்புப்பெயரும் தழுவியவாறே, பொதுப்பெயரை வினைத்தொகையும் தனிப்பெயரைப் பெயரொச்சமும் தழுவும் என்க. இஃதை வினையியலில் விரித்துக்கூறுதும்.

உ-ம்:—இனப்பெயர்: சுடுநீர், ஆடுகால், இடிசுவர், படுகாயம், வாடா மல்லிகை.

தனிப்பெயர்: சுடுகிற நீர், ஆடுகிற கால், இடிந்த சுவர், பட்ட காயம், வாடாத மல்லிகை.

252. ADJECTIVES DISTINGUISHING A CLASS.

இனப்பண்பு இனமிலாப் பண்பு என்றாக
வகுத்தனர் பண்பை இருகூறாக.

பண்படையாய் வரப்பட்ட சொற்களை இனப்பண்பென்றும், இனமிலாப் பண்பென்றும் இருகூறாக வகுத்துளர் பெரியோர். வெண் கரும்பு எனவே, இனப்பண்பு: எங்ஙனமெனின் செங் கரும்பு, ரஸ்தாளிக் கரும்பு, பேய்க்கரும்பு எனப் பல இனம் இருத்தலால் என்க. வெண் நிலா என, இனமிலாப் பண்பு: எங்ஙனமெனின், கருநிலா, செந்நிலா என வேறு நிறம் இல்லாமையான் என்க.

253. ADJECTIVES DESCRIBING AN OBJECT.

இனத்தைப் பிரித்தலே பண்புக்கு இயற்கை.
இனமிலாப்பெயரின் பண்பை விரிக்கை,
குணனை விளக்கிக் காட்டற்கு என்க.

பல இனங்களில் ஓர் இனத்தைப் பிரித்துக் காட்டுதற்காகவே பண்புச்சொற்கள் உபயோகப்படுமெனினும், ஒரு பொருளின் குணத்தைத் தெளிவுபட விரிக்கவேண்டிய வி

டத்தில், இனமில்லாத பெயர்களிடத்தும் பண்பை விரிக்கலாம் என்க.

உ-ம்:—செந்தினை, செங்கரும்பு எனவே, பல்வகைப்பட்ட இனங்களில், இன்ன தினை, இன்ன கரும்பு என இனத்தைக்காட்டியது. வட்டமதிவெண்டிங்கள் எனில், வட்டமில்லாத மதியும் வெண்மையில்லாத நிலவும் இல்லையெனினும், அதன் உருவையும் நிறத்தையும் சுட்டிக் காட்டவேண்டியவிடத்தில், அவ்வாறு அடைகொடுத்துக் கூறுதல் இருவழக்கினும் அமையும் என்க

254. ADJUNCTS MODIFYING OTHER ADJUNCTS.

முதற்பெயருக்கு அடையும் அடைக்கே அடையும்
ஒன்றும் பலவும் ஆம் இரு நடையும்.

முதற்பெயருக்கு அடையாய்ப் பண்புச்சொற்கள் வருதலுமன்றி, அடைக்கே வேறடைகள் வருதலும் அவ்வடைகள் ஒன்றும் பலவுமாய் வருதலும் செய்யுள் வாசகம் என இரு வழக்கினுள்ளும் அமையும் என்க.

உ-ம்:—முதலடை: சிறுகாக்கை (ஓரடை). சிறு கருங்காக்கை, செங்காரை, நெட்டிலைத்தேங்கு, (ஈரடை). அடைக்கடை: கருங்கட்பேதை (ஓரடை). கரு நெடுங்கட்பேதை (ஈரடை).

முவிமுலை கயவாய்ச் செங்கட் குடம்புரை செருத்தன் மேதி. [நைட]

255. WHEN EMPHASIS IS INDISPENSABLE.

முதலடை அடையடை விரவுங்காலை
இசைத்திரிபானே தெளிவுறும் என்க.

அடைகள் சில முதலையும் சில வேறடையையும் தழுவி வருமிடத்து, இஃது முதலைச்சாரும் எனவும், இஃது அடையைச்சாரும் எனவும் விளக்கமின்றி விரவி மயங்குமிடத்து இசைத் திரிபானே அம்மயக்கம் நீங்குமென்க.

உ-ம்:—குளிர்ந்த (ஆற்றுச்) சலம், தெளிந்த (காவேரி ஆற்றுச்) சலம். இவற்றுள், குளிர்ந்தசலம், தெளிந்தசலம் என அடை வந்தமையான், ஆறு, காவேரியாறு என்ற மொழிகள் தழாத்தொடராய் நிற்றலை ஓசையினாலே குறிக்கப்படும் என்க. ஆகினும், பொருள் மயக்கமின்றித் தொடுப்பதே சிறப்பென்க. எங்ஙனமெனின், காவேரியாற்றினது குளிர்ந்த சலம் எனவே சிக்கறுந்தது.

வினை இயல்.

XXVII. முற்று.

256. FINITE VERB.

முற்றுக்கு இலக்கணம் முதலே கூறினும்.

257. ELLIPSIS OF THE SUBJECT.

எழுவாய்த் தொகையும் இவைஎனக் கூறினும்.

258. IMPERSONAL PREDICATES.

வினையே பொருளாய்த் தோன்றுங்காலை
எழுவாய் இலாத வினைகளும் உளவே.

ஒரு வாக்கியத்தில் உணர்த்தப்படும் பொருள் வினையாகவே மாத்திரம் தோன்றுமெனின், அவ்வாக்கியங்கள் எழுவாயின்றியே வரும்.

உ-ம்:—எனக்குப் பசிக்கிறது. எனக்கு வயிற்றைப் பசிக்கிறது. எனவே, பசித்தல் என்னும் தொழிலே இவ்வாக்கியங்களில் உணர்த்தப்பட்ட பொருளானதால், அத்தொழிலே எழுவாயும் பயனிலையுமாய் நின்றது. பின்னும், நிலம்தெளிந்து வருகிறது எனின், தெளிதல் என்னும் பொருளே வாக்கியப் பொருளானதால் அதுவே எழுவாயும் பயனிலையும் ஆகியது. இருட்டிக்கொண்டு வருகிறது, கம்மிக்கொண்டிருக்கிறது, கப்பிக்கொண்டு வருகிறது, தொண்டையைப் புகைந்து கொண்டிருக்கிறது, வயற்றைப் பொருமிக்கொண்டிருக்கிறது முதல்வனவும் இவ்வாறே.

259. THE INFINITIVE IS SOMETIMES THE NOMINATIVE.

செயவென் எச்சம் தழுவிய முற்றுக்கு
எழுவாய் இலவாம் எல்லா வழக்கினும்.

சில முற்றுவினைகள் செயவென் வாய்பாட்டு எச்சத்தைத் தழுவிநின்று ஒரு தொழிற்பொருளை உணர்த்தும் எனின், அம்முற்று வினைகளுக்கும் மேற்கூறிய விதியே பொருந்துமென்க.

உ-ம்:—வஞ்சனை அஞ்சப்படும் [குற] = வஞ்சனை அஞ்சுதல் வேண்டும். மெய் சொல்லப்படும்=மெய்யைச்

சொல்லுதல் வேண்டும். ஆசை நீக்கப்படும் = ஆசையை நீக்குதல் வேண்டும். நீ இதைச் செய்யவேண்டும் = நீ இதைச் செய்தல் வேண்டும். அவன் இதைச் செய்யத் தரும் = அவன் இதைச் செய்தல் தரும். தீயவை தீய பயத்தலால், தீயவை (தீயனவற்றை) தீயினும் அஞ்சப்படும் (அஞ்சுதல் வேண்டும்.) நாச் செற்று விக்குள் மேல் வாரா முன் நல்வினை மேற்சென்று செய்யப்படும். முகத்தின் இனிய நகா, அகத்து இன்னா வஞ்சரை அஞ்சப்படும். நலத்தின்கண் நாரின்மை தோன்றின், அவனைக் குலத்தின்கண் ஐயப்படும் = நலமுடையவனிடத்து அன்பில்லாமை உண்டாயின் அவனைக் குலமுடையவன் அல்லன் என்று ஐயப்பாட்டில் வைக்கப்படும் என்பதாம் [பரி]. பூர்வ கர்ம சங்கியமான தேகங்களில் பிரவேசித்த ஜீவனை ஸ்ரீ என்றும் புருஷன் என்றும் யானை என்றும் குதிரை என்றும் பசு என்றும் பட்சி என்றும் சொல்லப்படுகிறது [சத்]. ஆனபடியினால் நான் இப்படிப் பட்டவன் என்று எப்படிச் சொல்லப்படும்.

XXVIII. பெயரெச்சம்.

260. Concord of Nouns and Relative Participles.

பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என
விதந்த அப்பெயர்கள் யாவையும் தழூஉம்
பெயரெச்சங்களின் தொடர்பு நோக்கின்.

பெயர்களுக்கும் பெயரெச்சங்களுக்கும் உள்ள தொடர்ச்சியைப் பார்க்குமிடத்தில் பொருள் முதலாக விதந்த அறுவகைப் பெயர்களையும் அவை தழுவி வருமென்க.

உ-ம்:—பொருள்: மலர்ந்த தாமரை, நடந்த சாத்தன்.
இடம்: தாமரை மலர்ந்த குளம், சாத்தன் நடந்த நாடு.
காலம்: தாமரை மலர்ந்த போது, சாத்தன் நடந்த வேளை.
சினை: மலர்ந்த பூ, நடந்த கால்.
குணம்: தாமரை மலர்ந்த தன்மை, சாத்தன் நடந்த கோலம்.
தொழில்: தாமரை மலர்ந்த மலர்ச்சி, சாத்தன் நடந்த நடக்கை.

எனவே, எல்லாவகைப் பெயர்களும் பெயரெச்சங்களைத் தழுவும் என்க.

261. A Proposition becomes a Relative Clause.

வாக்கியம் சுருங்க எச்சத் தொடராம்,
ஒன்றை இன்றி மற்றொன்று பொருள்படா.

பெயரெச்சத் தொடரை வாக்கியச் சுருக்கமென்க. எழுவாய் பயனிலை கூடிய ஒரு வாக்கியமானது சுருங்கிப் பெயரெச்சத் தொடராவதால், மறைந்துநின்ற அவ்வாக்கியத்தை யின்றி இவ் வெச்சத்தொடரும் பொருள்படமாட்டா. எங்ஙனமெனின், ஒரு மனிதன் வந்தான் என்னும் வாக்கியமே சுருங்கி, வந்த மனிதன் என்றாகியது. அன்றியும், இறந்த நாள் எனின், நாள் இறந்தது எனவும் இன்ன நாளில் ஒருவன் இறந்தான் எனவும் இரண்டு வாக்கியங்கள் மறைந்து நிற்றலால், மறைந்த வாக்கியம் இதுவென நிச்சயிக்கப்பட்டாலன்றி, எச்சத்தொடரின் பொருளும் வெளிப்படமாட்டா.

262. All Cases suppressed in the Relative Participle.

பெயரெச்சங்கள் தழுவிய பெயருள்
எல்லாவேற்றுமைப் பொருளும் மறைவே.

வினையைக்கொண்டு முடியும் சகல வேற்றுமைப்பொருள்களும் பெயரெச்சங்களால் தழுவப்பட்டு நடக்கும் பெயர்களில் மறைந்து நிற்கும் என்க. வினையைக்கொண்டு முடியும் வேற்றுமை என்றது என்னையெனின், வாக்கியம் சுருங்கி எச்சத்தொடராம் என்று கூறியவாங்கே, ஒரு வாக்கியத்தில் முடிக்கும் சொல் பெயராயிருப்பின் அது பெயரெச்சத்தொடர் ஆகாது என்று காட்டும்பொருட்டென்க.

உ-ம் :—First Case : நடந்த மனிதன், வந்த சாத்தன். வாக்: மனிதன் நடந்தான், சாத்தன் வந்தான்.

Second Case : செய்த காரியம், கொடுத்த பொருள். வாக்: ஒருவன் அக்காரியத்தைச் செய்தான். ஒருவன் அப்பொருளைக் கொடுத்தான்.

Third Case : சோறாக்கின அரிசி. காடு வெட்டும் கோடாலி. வாக்: ஒருவன் அரிசியாற் சோறாக்கினான். ஒருவன் கோடாலியால் காடு வெட்டினான்.

Fourth Case: *போகும் வீடு, வரும் இடம். வாக்: ஒருவன் அவ்வீட்டுக்குப் போவான், ஒருவன் அந்த இடத்திற்கு வருவான்.*
Fifth Case: *இறங்கின மரம், நகைசெய்த பொன். வாக்: ஒருவன் அம்மரத்திலிருந்து இறங்கினான். ஒருவன் பொன்னிலே நகை செய்தான்.*
Seventh Case: *பூவிருக்கும் மரம், நீருள்ள குளம். வாக்: மரத்தில் பூ இருக்கிறது. குளத்தில் நீர் உண்டு. வந்தவழியில் ஒரு பொல்லாத சிங்கத்தைக்கண்டு பயந்து ஒளித்திருந்தேன் [பஞ்]. நிறை பரம் சொரிந்து வங்கம் நெடுமுதுகு ஆற்றும் நெய்தல் (நெய்தலிடத்து). பாலுண்டு துயிலப் பச்சைத்தேரை தாலாட்டும் பண்ணை (பண்ணையில்) [சம்]. செய்த காரணம்=செய்ததுக்குக் காரணம். ஓ! மகாத்மாவே! இன்னும் நீ கிலேசப்படவேண்டிய காரணம் என்ன. [பார].*

263. THE USE OF SUCH ENQUIRY.

எச்சப்பெயரை வேற்றுமைப் பொருள்செயக்
கருதிய பொருளும் வெளிப்படை யாமே.

பெயரெச்சங்களால் தழுவப்பட்ட பெயர்களில், பொருள் மலைவுற்றவிடத்தில், இன்ன வேற்றுமை மறைந்து கிடக்கின்றது என்று யூகித்துப்பார்த்தால் வாக்கியத்தில் கருதிய பொருளும் வெளிப்படையாகும் என்க. எங்ஙனமெனின், இறந்த நாள் என, எழுவாய்ப் பொருளாமேல் நாள் இறந்தது எனவும், ஏழாம் வேற்றுமைப்பொருளாமேல் ஒருவன் இறந்ததினம் எனவும் பொருள்பட்டு மலைவு நீங்கியது.

264. ADJECTIVAL PARTICIPLE.

செய்யும் என் எச்சம் முக்காலப் பொதுவாம்.

செய்யும் என்ற வாய்ப்பாட்டுப் பெயரெச்சமானது மூன்றுகாலத்துக்கும் பொதுவான ஒரு குணத்தொழிலை உணர்த்தும் என்க. எனவே, உரிமை கிழமை உண்மை முதலிய பொருளையும் நித்தியம் எனும் பொருளையும் உணர்த்திய வாய்பாடு இதுவே என்க. எங்ஙனமெனின், ஊரிலிருக்கும் வைத்தியன் எனின், முன் இருந்தவன் என்றாகிலும் இன்று இருப்பவன் என்றாகிலும், இனி இருப்பவன்

என்றாகினும் ஒரு காலத்தை உணர்த்தாது ஊருக்கு உரிய வைத்தியன் எனக் கிழமைப்பொருளையும் உண்மைப்பொருளையுமாத்திரம் உணர்த்தியது என்க. மரத்தில் இருக்கும் கனி என, மரத்தில் இருந்தது, இருக்கிறது, இருப்பது எனப் பொருள்படாது, மரத்துக்குரிய கனி எனவும், இவ்வாற்றில் வரும் சலம் எனின் இவ்வாற்றுக்கு உரிய சலம் எனவும் பிறவற்றிற்கும் இவ்வாறே பொருள்படுதலும் காண்க.

உ-ம்:—ஆம் காலம் = ஆகுதற்குரிய காலம் = அதிஷ்ட காலம். போங்காலம் = போதற்குரிய காலம் = நம்மைவிட்டு லட்சுமி போகுங் காலம். விளையும் பயிர் முளையிலே = விளைவதற்குத் தகுதியான பயிர் முளைக்கும்போதே தெரியும்.

265. Abstract Verbal Adjectives.

காலம் கரந்த பெயர் எச்சம் வினைத்தொகை.

வினைத்தொகைகளில் காலத்தைக்காட்டிய இடைநிலைகள் மறைந்ததும் அன்றி, காலப்பொருளும் அவற்றிற்கு இல்லை. அதனால், வினைத்தொகையை எக்காலத்திலும் விரித்தல் கூடா. விரிக்கின், பொருள் வேறாம் என்று அடியிற் காட்டுதும்.

உ-ம்:—சுடுசாதம், ஆடுகால், சுடுதண்ணீர், பெருவயிறு, புகையிலை, திறவுகோல் முதல்வன.

266. Use of தொகை and எச்சம் Distinguished.

வினைத்தொகை தொடரின் பொதுப்பெயர் என்க.
எச்சமாமேல் தனிப்பெயர் என்க.

வினைத்தொகைக்கும் அவ்வினைத்தொகையே திரிந்த பெயரெச்சங்களுக்கும் உள்ள பொருட்பேதத்தை இவ்விதியுள்காட்டினாம். அஃதென்னையெனின், வினைத்தொகையால் தழுவப்படும் பெயரைப் பொதுப்பெயர் என்க. அவ்வினைத்தொகையே எச்சமாய் விரியுமெனின் தனிப்பெயர் என்க. எங்ஙனமெனின், சுடுசாதம் எனவே அச்சாதம் சுட்டதென்றாவது, சுடுகிறதென்றாவது, இனிச் சுடும் என்றாவது பொருள்படாது, பழையது புதியது என இருவகையான அமுதுள் ஒன்றைமாத்திரம் உணர்த்தலான் பொதுப்பெயர் என்றும், சுடுகிற சாதம் எனவே இச்சாதம் சுடுகிறது என்றொரு தனிப்பொருளை விசேடிக்

தலால் தனிப்பெயர் என்றும் கொள்க புதிய அமுது குளிர்ந்துபோனவிடத்தும், அதைச் சுடுசாதம் எனலும், பழையதைச் சுடவைத்தாலும் அதைப் பழையதென்றே கூறலும் வழக்கானமை எனக. இவ்வாறே அடியிற்காட்டிய உதாரணங்கள் தோறும் இப்பேதத்தைக்காண்க.

உ-ம்:—

Class Nouns. (பொதுப்பெயர்.)	Individual Nouns. (தனிப்பெயர்.)
கொதிநீர்.	கொதிக்கிற நீர்.
புகையிலை.	புகைகிற இலை.
இடிசுவர்.	இடிகிற சுவர்.
பெருவயறு.	பெருக்கிற வயறு.
சுருளோலை.	சுருளுகிற ஓலை.
ஓடுகாலி.	ஓடுகிற காலி.
படுபாவி.	படுகிற பாவி.

267. SEVERAL PARTICIPLES REFERRING TO THE SAME OBJECT.

பலபெயரொச்சம் ஒரு பெயர் தழுவும்.

பல பெயரொச்சங்கள் கூடி ஒரு பெயரைத் தழுவிநிற்கும்.

உ-ம்:—உதிர்ந்த உலர்ந்த இலைகள். சகலகுண சம்பன்னரான, அகண்டித லட்சுமி பிரசன்னரான, அன்னதான பரிபாலகரான, அண்டினபேரை ஆதரிக்க வல்லவரான, மகமேரு தீரரான, நற்குணலங்கிருதரான, கல்வி சாகரரான, இராஜமான்ய இராஜஸ்ரீ அண்ணு அவர்களுடைய திவ்விய சரணாரவிந்தங்களுக்கு. ஆன்மாக்கள் மகிழும்படி எழுந்து மகாமேருகிரியைப் பிரதக்கணஞ்செய்யும், பலசமயத்தாரும் புகழும் சூரியன் கடலினிடத்தே காணப்பட்டாற்போல், திரு முருகக்கடவுள் மயில்வாகனத்தின்மீது தோன்றினார் [திருமுரு].

268. DOUBLE CONSTRUCTION OF THE REL. PARTICIPLE.

பகுதிநோக்கும் எழுவாய் என்க.
விகுதிநோக்கும் பெயரை என்க.

பெயரொச்சங்களினது பகுதி, வினையாம் தன்மையால், முன்னிற்கும் எழுவாய்க்குப் பயனிலையாயும், விகுதியானது பின்னிற்கும் பெயரைத் தழுவியதாயும் வருமென்க.

உ-ம்:—நான் பார்த்த வீடு. இதனுள், பார் என்னும் பகுதி நான் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக

வந்தது. அ என்னும் விகுதி வீடு என்னும் பெயரொடு பொருந்தியது. வந்த மனிதன் என்பதில், மனிதன் என்னும் பதமே அவ்வினைக்குக் கருத்தாவும், எச்சத்தால் தழுவப்பட்ட பெயராயும் நின்று இரண்டு தன்மையையும் பெற்றது.

XXIX. வினையெச்சம்.

(*a*) செய்து.

269. ORDINARY CONSTRUCTION OF செய்து.

எழுவாய் ஒன்றைப் பலவினை அடுக்கின்
ஈற்றையன்றி மற்றைய வினைபோலாம்
செய்து என்றாகும் வாக்கியத் தொடருள்.

பல வினைகள் ஒரு எழுவாயைக்கொண்டு முடியுமிடத்து, ஈற்றுவினை ஒன்று முற்றாக, மற்றைய வினைகளெல்லாம் செய்தென்னும் வாய்பாட்டை ஏற்குமென்க.

உ-ம்:—குழந்தை நகர்ந்து தவழ்ந்து எழுந்து நடந்து ஓடி விளையாடுகின்றது. குழந்தை விளையாடிக்கொண்டிருக்கின்றது.

270. ITS MEANING MODIFIED BY THE FINITE VERB.

ஈற்றுவினையது தன்மை எதுவோ
அதுவே ஏனைய வினைக்கும் என்க.

அவ்வாறு பல வினைகள் ஒரு எழுவாயைக்கொண்டு முடியுமிடத்தில், ஈற்று வினையை உடன்பாடாயேனும் எதிர்மறையாயேனும் வியங்கோளாயேனும் ஏவலாயேனும் எச்சமாயேனும் கூறப்படுமெனின், ஏனைய செய்தென்னும் வாய்பாட்டு எச்சங்களையும் அத்தன்மையானே பொருள் செய்க.

உ-ம்:—வந்து சொன்னான் = வந்தான், சொன்னான்.
வந்து சொல்லான் = வரான், சொல்லான்.
வந்து சொல்க = வருக, சொல்க.
வந்து சொல் = வா, சொல்.
வந்து சொல்ல வேண்டும் = வரவேண்டும்.
எண்ணித் துணிக = எண்ணுக, துணிக.

உதிர்ந்து காய்ந்து உலர்ந்த சருகு = உதிர்ந்த சருகு, காய்ந்த சருகு, உலர்ந்த சருகு. மரத்தைவைத்து மனுவாக்கிக் கனிபறித்துப் போசிப்பவன் = மரத்தை வைப்பவன், மனுவாக்குபவன், கனிபறிப்பவன், போசிப்பவன்.

271. செய்து FOLLOWED BY உம்.

எண்ணும் ஏற்கும் செய்தெனும் வினைகள்
ஒன்றுக் கொன்று தழாத்தொடராகி
ஒவ்வொரு வினையா ஈற்றெருடு முடியும்.

செய்து என்னும் எச்சங்கள் பலது எண்ணும்மை ஏற்றுவருமெனின், ஒன்றுக்கொன்று பொருத்தமின்றித் தனித்தனி பிரிந்து இறுதி வினையைத் தழுவிநிற்கும் என்க.

உ-ம்:—அவன் அக்கனியைப் பறித்தும் தின்றும் இருக்கிறான் = அவன் அக்கனியைப் பறித்திருக்கிறான், தின்றிருக்கிறான்.

272. HOW AFFIRMATIVE AND NEGATIVE VERBS ARE CONNECTED.

உடன்பாடு எதிர்மறை வினைகள் அடுக்கின்
தனித்தனி முற்றா சாற்றப் பெறுமே.

உடன்பாட்டு வினைகளும் எதிர்மறை வினைகளும் ஒரு எழுவாயைக்கொண்டு முடியுமெனின் ஒவ்வொன்றையும் முற்றாக்கி வேறுவேறு வாக்கியங்கள் ஆக்க வேண்டியதன்றி, செய்தெனும் வாய்பாடு அமையா.

உ-ம்:—அவன் படியான், விளையாடுவான். அவன் படிப்பான், விளையாடான். நீ போகாதே, சொல். நீ போ, சொல்லாதே. (இவற்றுள் முதல் வினையைச் செய்து என்று கூறின் பொருள் அமையா.)

273. NOMINATIVES OF செய்து.

செய்து எனும் பயனிலைப் பின் வரும் வினைக்குப்
பிறிதோர் எழுவாய் இல்லென மொழிவர்.

இதற்கு உரையும் உதாரணமும் 30-ல் காண்க.

274. INDEPENDENT NOMINATIVES OF செய்து.

முதல் சினையான பெயர்கடம்மில்
முதற்கு முற்றெனில் சினைக்குச் செய்தே.

முதற்பெயர் சினைப்பெயர் என வகுத்த பெயர்களில் முதற்பெயரானது முற்று வினையைக்கொண்டு முடியுமா

இன், வினைப்பெயர்களும் எழுவாயாக நின்று செய்தெனும் எச்சப் பயனிலைகளை ஏற்று முதற்பெயருக்கும் முற்று வினைக்கும் மத்தியில் இடைப்பிறவரலான வாக்கியங்களாய் வருமென்க.

உ-ம்:—அவன் (காதறுந்து கை ஒடிந்து, கண் அவிந்து) குருபியானான். அம்பட்டத்தி (மூக்கு அறுபட்டு) மூளைகுலைந்தாள் [பஞ்]. சாத்தனை (கண் அவிந்து) குருடனானான். எருது விழுந்து (கால் ஒடிந்து) நொண்டியாச்சுது [பஞ்]. தாய் (மனம் உருகிப்) பிள்ளையை எடுத்தாள். புல்லுமுதலிய மேய்ச்சலாலே மிகவும் பெருத்துக் கொழுத்து (ஒடிந்த காலும் கூடி) அந்தக்காட்டிலே எதேச்சையாகத் திரிந்து கொண்டிருந்தது [பஞ்ச]. அவர் (திருவாய் மலர்ந்து) மொழிந்தார். குடை (கால் விரிந்து) எழுந்தது. விண் (தோல் உரிந்து) உகுந்தது.

கால் விரிந்து எழுகுடை கணக்கில். ஓதிமம்
பால் விரிந்தது எனப் பறப்ப போன்றன.
மேல் விரிந்து எழுகொடிப்படலை, விண்ணெலாம்
தோல் உரிந்து உகுவன போன்று தோன்றுமால் [கம்].

275. THE SAME: SECOND EXCEPTION.

வாக்கியம் ஒன்றே பலவா விரிந்தும்
அடைபோல் தோன்றியும் வருமேல் செய்து
பிறிதோர் எழுவாய் ஏற்கவும் பெறுமே.

கருதின கருத்து ஒன்றாக, அதையே பலவாறாக விரித்துக் கூறவேண்டுமெனின், முதல் வாக்கியத்துக்கு இடையிலாவது முன்னாலாவது அடைவாக்கியங்களை ஒப்பப் பல வாக்கியங்களை விரித்து அவற்றைச் செய்து எனும் எச்சப் பயனிலையைக்கொண்டு முடிக்கப் பெறும் என்க.

உ-ம்:—கோழி கூவிப் பொழுது விடிந்தது. கண் அவிந்து குருடனானான். கால் ஒடிந்து நொண்டியானான். புருஷன் செத்து விதவையானாள். கோபம் நீங்கிக் கிருபைசெய்தார் [பார].

276. THE SAME: THIRD EXCEPTION.

காரண காரியத் தொடர்பினானே
பிறிதோர் எழுவாய் ஏற்கும் செய்தே.

ஒரு பொருளுக்குள்ள காரண காரியத்தொடர்பு மிகவும் வெளிப்படையாய் லோகப் பிரசித்தமாயிருக்குமிடத்

தும், காரண வாக்கியத்தைச் செய்தெனும் பயனிலைகொண்டுமுடிக்கப் பெறுமென்க. அக்காரணகாரிய சம்பந்தம் மிக்க வெளிப்படையாய் இருத்தலினால், காரணவாக்கியத்தை இன்றியே காரியவாக்கியம் நடக்குமாகையால், அக்காரண வாக்கியத்தை, விரிவுநோக்கி வந்த அடைவாக்கியம் எனினும் அமையும்.

உ-ம்:—மழைபெய்து குளம் நிரம்பிற்று = மழை பெய்ததினாலே குளம் நிரம்பிற்று. குண்டுபட்டுச் செத்தான். முள் தைத்துக் கால் வீங்கிற்று. பால் கொடாத எருமைகளைக் காப்பாற்றிப் பலன் உண்டா [பஞ்]. மயிர் சுட்டுக் கரி ஆகுமா [பழ]. கடல்வற்றிக் கருவாடு தின்னலாமென்று குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு [பழ]. மழைபெய்து குளம் நிரம்பும், பனிபெய்து நிரம்புமா [பழ]. வாய்த்தவிடும்போய் அடுப்பு நெருப்பும் அவிந்ததுபோல் [பழ] முல்லையைக் குறிஞ்சியாக்கி, மருதத்தை முல்லையாக்கி, புல்லிய நெய்தல் தன்னைப் பொரு அரு மருதம் ஆக்கி, எல்லையில் பொருள்களெல்லாம் இடைதடுமாறும் நீரால் செல்லுறு கதியிற் செல்லும வினைஎனச் சென்றது அன்றே [கம்].

277. செய்து FOLLOWED BY என்ன.

வினையைத் தழூஉம் செய்து என் எச்சம்
தனியே வருமேல் காரணம் வினவும்.

செய்து என்னும் எச்சம் வினையெச்சம் ஆனமை வேறு வினையைத் தழுவி நிற்கும். அவ்வாறு தழுவாது தனியே நின்று என்ன, ஏன் என்னும் மொழிகளைக்கொண்டு முடியுமெனின் காரணத்தை வினவி நிற்கும் என்க.

உ-ம்:—செய்தென்ன = செய்வதினால் பயன் என்னை. படியாத பிள்ளைகள் இருந்தென்ன ? வாழ்ந்தென்ன [பஞ்]. புலன்களை வென்று விழிகளை மூடிக்கொண்டு நிஷ்டையில் இருப்பவர்களுக்குச் சமுத்திரம் புளித்தமோராய் இருந்தென்ன ? புத்துருக்கு நெய்யாய் இருந்தென்ன [தாய்].

278. செய்து CONVERTED TO A FINITE VERB.

செய்து முற்றாவது சிறப்பினானே.

செய்து என்னும் எச்சமாய் வரவேண்டிய வினைகளை முற்று வினைகள் ஆக்கிக் கூறுதல் வாசக நடைச் சிறப்பை நோக்கி என்க.

உ-ம்:—நினைத்தான்: நினைத்து மன முருகினான்: எழுந்திருந்து துள்ளினான்: கீழே விழுந்து இரண்டு பாதங்களையும் சிரசிலே சூடினான்: துன்பத்தை நீங்கினான்: தாமரை மலர்போன்ற விசாலமாகிய கையினால் தத்துவாமிர்தத்தை அள்ளினவன் என்னும்படி கண்களால் பகவான் அழகை உண்டான், விதுரன் [பார]. நின்றான், இருந்தான், கிடந்தான், தன் கேள் அலறச் சென்றான் எனப்படுதலால் [நால்]. உண்ணான், ஒளிநிறான், ஓங்கு புகழ்செல்வம் துன்னரும் கேளிர் துயர்களையான் கொன்னே வழங்கான், பொருள் காத்திருப்பானேல் ஆஅ! இழந்தான் என்று எண்ணப்படும் [நால்].

279. Adverbial use of செய்து.

உரியா வருமே செய்து என் எச்சம்.

இவ் வாய்பாட்டு எச்சமானது வேறு பொருளை உணர்த்தாது உரிச்சொல்லாய் மாத்திரம் வருதலும் உண்டென்க.

உ-ம்:—நடந்து வந்தான் = கால் நடையாய் வந்தான் என்பது பொருளன்றி, நடந்தான் வந்தான் என்று இரண்டு வாக்கியம் அல்ல. குதிரையில் ஏறிவந்தான் = குதிரைச் சவ்வாரி வந்தான்.

காலத்தினாலும் செய்கையினாலும் பிரிவு படாமல் ஒரு தொழிலினது குணத்தைமாத்திரம் காட்டுமேல், அவ்வினையை உரியென்க. எங்ஙனமெனின், நடந்துவந்தான் என இன்ன தன்மையான் வந்தான் என்று வினையின் தன்மையைக் காட்டியதன்றி, நடந்தான் வந்தான் என்று காலத்தாலும் செய்கையாலும் பிரிவுபட்ட இரண்டு தொழிலைக் காட்டவில்லை என்க.

உ-ம்:—அடங்கி யிருக்கிறான், பணிந்து பேசினான், படிந்து நடந்தான், அணுகி வந்தான், கொழுத்திருக்கிறது, அவனைக்கண்டு பேசினேன், ஒரு புதையல் கண்டெடுத்தேன்.

280. Repetition of செய்து.

செய்து செய்து என்று அடுக்கிக் கூறின்
தொழிலின் மிகுதியை விளக்கிக் கூறுமால்.

ஒரு தொழிலை மிகுதிப்பொருளில் கூறவேண்டுமாகின் செய்து என்னும் எச்சத்தை மடித்துக்கூறின், அப்பொருள் அமையும் என்க.

உ-ம்:—அள்ளி அள்ளிக் கொடுத்தான். துள்ளித் துள்ளி விழுந்தது. இரந்து இரந்து உருக என் மனத்துள்ளே எழுகின்ற ஜோதியே! இமையோர் சிரந்தனிற் பொலியும் கமலச்சேவடியாய்! திருப்பெருந்துறையுறை சிவனே! [திருவா]. என்பு உருகி நெஞ்சம் இளகிக் கரைந்து கரைந்து அன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே [தாய்]. எழுந்தனர்: கறைமிடற்று இறையும், தாமரைச்செழும் தவிசு உகந்த அத்தேவும், சென்று எதிர் விழுந்தனர் அடிமிசை விண்ணுளோரொடும். தொழுந்தொறும் தொழுந்தொறும் களிதுளங்குவார் [கம்]. மாசித் திங்கள், மாசின சின்னத் துணி முள்ளின் ஊசித்துன்னம் மூசிய ஆடை உடையாக, பேசிப் பாவாய்! பிச்சை! எனக் கை அகல் ஏந்திக் கூசிக் கூசி நிற்பர்: கொடுத்து உண்டு அறியாதார். [சிர்] =மாசிமாசத்துக் குளிரில் வெளியே நின்றுகொண்டு, அழுக்குப் படிந்த சிறு சிறு கந்தைகளை முள்ளாகிய ஊசியினால் தைத்த துர்க்கந்தம் நாறிய போர்வையை ஆடையாகப் போர்த்துக்கொண்டு அம்மா! தாயே! பிச்சை என்று கையை அகல ஏந்திக்கொண்டு கூவிக் கூவிக், கெஞ்சுவார்கள்: பிச்சையிட்டுச் சாப்பிடாதவர்கள்.

281. செய்தும் IMPLIES NAGATION.

செய்தும் தனியே பயனிலையாகின்
எதிர்மறைப் பொருளையே தழுவும் இறப்பில்.

செய்தும் என்னும் வாய்பாட்டு எச்சமானது தனியே பயனிலையாய் வரின் இறந்த காலத்து இன்மைப் பொருளையே உணர்த்தும் என்க.

உ-ம்:—நான் சொல்லியும் அவன் செய்யவில்லை.

282. செய்தும் FOLLOWED BY என்.

செய்தும் தழுவும் என் என் வினைவை
விடையும் எதிர்மறைப் பொருளதாகும்.

என், என்ன என்னும் வினாவைக்கொண்டும் செய்தும் என்னும் வாய்பாட்டு எச்சம் முடியும். அதற்கு உரிய விடையும் எதிர்மறைப்பொருளையே உணர்த்தும்.

உ-ம்:—எவ்வளவு படித்தும் என்ன? பயனில்லை. அவனுக்கு எவ்வளவு சொல்லியும் என்ன? கேட்கமாட்டான். கசடு அறக் கற்றும் என்ன? கற்றவாறு நிற்கத்தெரியா தானால்.

(b) செயின், செய்தால்.

283. How these Forms are used.

செய்தால் வழக்கு, செயினே செய்யுள்
ஆகினும் அவை பொருள் ஒன்றேயென்க.

284. Use of செயின்.

தனதும் பிறிதுமாய் இரு முதனிலை
ஏற்றே எதிர்வுப் பொருளை உணர்த்தி
வரவும் பெறுமே செயின் என் எச்சம்.

தனக்கே உரிய எழுவாயையேனும் வேறு வினையினது எழுவாயையேனும் ஏற்று எதிர்காலப்பொருளை உணர்த்திவரும் செயின் என்ற எச்சம் என்க.

உ-ம்:—அவன் வரின் நான் போவேன் (தன் எழுவாய்).
அவன் வரின் இதைப் பெறுவான் (பிறிதின் எழுவாய்).

285. Use of செய்தால்.

தனதும் பிறிதுமாய் இரு முதனிலை
ஏற்பதுமன்றி எதிர்வு பற்றியும்
நிகழ்வுபற்றியும் வருமே செய்தால்.

தனக்கே உரிய எழுவாயையேனும் வேறு வினையினது எழுவாயையேனும் ஏற்று எதிர்காலத்தையும் நிகழ்காலத்தையும் தழுவி வரும் என்க.

உ-ம்:—படித்தால் கெட்டிக்காரனாவாய் (தன் எழு). அவன் வந்தால் நான் போவேன் (பிறி. எழு). வாவென்றால் போகிறான் (நிகழ்காலம்).

286. செய்தால் followed by என்.

என் என் வினாவை ஏற்கும் செய்தால்.

இவ்வாய்பாட் டெச்சவினைகள் வினாச்சொல்லைக்கொண்டு முடியும் என்க.

உ-ம்:—நீ வந்தால் என்ன? = நீ ஏன் வரல் ஆகாது. இன்னும் என்னை இடர் உறக் கூட்டினால், பின்னையுய்கில் என் பேதையன் ஆவியே [தாய்]. செவியிற் சுவை உணரா வாயுணர்வின் மாக்கள் அவியினும்வாழினும் என் [குற]. வண்ணான் வீட்டுக்கழுதைக்கு முன்கால் ஒடிந்தால் என்ன? பின்கால் ஒடிந்தால் என்ன.

287. WHEN செயினும் MAY BE REPEATED.

ஐயம் உறுமேல் செய்யினும் செய்யும்.

உறுதி கூற இயலாத வாக்கியங்களுள், அப்படியானாலும் ஆகும் இப்படியானாலும் ஆகும் என்று ஓர் ஐயத்தை வலியுறுத்துமிடத்து, செயினும் செய்யும், செய்தாலும் செய்யும் என்னும் வாய்பாடு தோன்றுமென்க.

உ-ம்:—இன்றைக்குள்ளே வரமாட்டான். ஒருவேளை வந்தாலும் வருவான். இது அப்படிக்கு நடக்கமாட்டாது. நடந்தாலும் நடக்கும்.

குடை நிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்,
நடை மெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்.
சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்,
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
அறத்திடு பிச்சை கூவி இரப்போர்,
அரசோடு இருந்து ஆளினும் ஆளுவர்.
குன்று அத்தனை இரு நிதியைப் படைத்தோர்,
அன்றைப்பகலே அழியினும் அழிவர்.
எழுநிலை மாடம், கால் சாய்ந்து உக்குக்,
கழுதை மேய்பாழ் ஆகினும் ஆகும் [வெற்].

288. செயின் FOLLOWED BY A NOUN.

வினையெச்சமாயினும் வினையின்றி முடிதல்
செயின் என் எச்சத்து இயல்பு என்பாமே.

வினையெச்சமானதால்வேறுவினையைத்தழுவிநிற்றல்வழக்காகினும்,பெயர்ச்சொற்களையுங்கொண்டுமுடிதல்செயின் செயினும்என்னும்வாய்பாட்டுஎச்சங்களுக்குஇயல்பென்க.

உ-ம்:—கடித்தால் தேள். கடியாவிட்டால் பிள்ளைப்பூச்சியா [பழ]. வைத்தால் குடுமி சிறைத்தால் மொட்டை. கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே, சங்கு சுட்டாலும் வெண்மை தரும் [ஔ].

(c) செய.

289. CONSTRUCTION OF செய.

தனதும் பொதுவும் ஆய் இரு முதனிலை
தழுவும் செயவென் வாய்பாட்டெச்சம்.

தனக்கே உரிய எழுவாயையேனும் தன்னால் தழுவப்பட்ட வினையினது எழுவாயையேனும் ஏற்று வருதல் செயவென் எச்சத்திற்கு இயல்பென்க.

உ-ம்:—விழப்போனான் (பொது எழுவாய்).
கொடுக்கச் சொன்னான் (தன எழுவாய்).

290. THE SAME:

பொதுமுதனிலையேல் தழுவு தொடராம்.
தன்முதனிலையேல் தழாத் தொடரென்க.

செயவென் எச்சத்திற்கும் அது தழுவிநிற்கும் வினைக்கும் முதனிலை ஒன்றுயிருக்குமிடத்து அதைத் தழுவு தொடரெனவும், வெவ்வேறு முதனிலை தோன்றி நடக்குமிடத்து, அதைத் தழாத் தொடர் எனவும் கொள்க.

உ-ம்:—தழுவுதொடர்: விழப்போனான், படிக்கவந்தான், நடப்போனான், அழிக்க நினைத்தான்.
தாழாத்தொடர்: கொடுக்கச் சொன்னான், குடிக்கக்கொடுத்தான், விழச்செய்தான், குப்புறத் தள்ளினான்.

291. செய IS EQUAL TO செய்தல்.

செய என் எச்சம் ஒரோவழி தொழிற்பெயர்.

எழுவாயின்றி வாக்கியங்கள் வரப் பெறும் என்று மேலே கூறிய விதியுள் செய என் எச்சத்தைத் தழுவி நடக்கும் முற்றுவினை வாக்கியங்களில் எல்லாம் அவ்வெச்சத்தைத் தொழிற்பெயராகக் கூறினும் பொருள் அமையும் என்க.

உ-ம:—நீ வரவேண்டும = நீ வருதல் வேண்டும். சொல்லத்தகும் = சொல்லுதல் தகும். குற்றத்தைக் கூறப்படும் = குற்றத்தைக் கூறுதல் படும். இழந்தானென்று எண்ணப்படும் = என்று எண்ணுதல் படும். நீ வரக்கூடும் = நீ வருதல் கூடும். நீ சொல்லலாம் = நீ சொல்லுதல் ஆகும்.

291 A. SUBJECTIVE AND OBJECTIVE INFINITIVE.

எழுவாய்த் தொழிலாய் இயல்வதுமன்றி
செயப்படுதொழிலும் ஆகும் செயவே.

செய என்னும் எச்சம் தொழிற்பெயர் ஒப்ப ஒரு வாக்கியத்துக்கு எழுவாயாக நடக்கும் என்று முன் கூறினும், அப்படி நடப்பதன்றியும், செயப்படுதொழில் ஒத்து ஒரு வாக்கியத்தில் பயனிலைகொண்டு முடிதலும் உள. தகும், வேண்டும், படும், கூடும், போகும், பெறும் ஆகிய இவ்வாறு முற்றுவினைகளும் அவற்றின் எதிர்மறையும், ஆகும் என்னும் முற்றைப்போலும் பொருளில் எழுவாய்த் தொழிலான செய என்னும் எச்சத்தைக்கொண்டு பயனிலையாகும். செயப்படுபொருளில் வரும் செய என்னும் எச்சத்தை எவ்வினையும் கொண்டு முடியும்.

உ-ம் :—எழுவாய்த் தொழில்: நீவரத்தகும்=நீவருதல் தகும். நீ வரவேண்டும்=நீ வருதல்வேண்டும். நீ வரப்படும்=நீ வருதல் படும். நீ வரக்கூடும்=நீ வருதல் கூடும். நீ வரப்போகும் = நீ வருதல் போகும். நீ வரப்பெறும்=நீ வருதல் பெறும். நீ வரலாம்=நீ வருதல் ஆகும்.

செயப்படுதொழில்: அவன் வரக்கண்டேன்=அவன் வருதலைக்கண்டேன். எலி வளைதோண்டக்கண்டேன். புற்றின்மேல் ஆந்தை திருதிரென்று விழிக்கக் கண்டேன். நெட்டைப் பனைமரம் நிற்கக்கண்டேன். மான் ஓடக்கண்டேன் [தும்ம].

☞ அவனை வரக்கண்டேன் எனினும் அவன் வரக்கண்டேன் எனினும் பொருள் ஒன்றன்று. எங்ஙனமெனின், அவனை வரக்கண்டேன்=அவனை வருகிற தொழிலிற்கண்டேன் என வர என்னும் வினை இடைப்பிற வரலாய்ச் செயப்படுபொருளுக்கும் பயனிலைக்கும் மத்தியில் வந்தது. அவன் வரக்கண்டேன் எனின், கண்டேன் என்னும் பயனிலைக்கு வேறு செயப்படுபொருளின்றி தொழிற்பெயராய்ப் பொருள்பட்ட எச்சமே செயப்படுபொருள் ஆகியது.

292. Seven uses of the Infinitive.

காரணம் நோக்கு உரி பொழுது உடனிகழ்ச்சி
வியங்கோள் நிலை என எழுபொருள் செயக்கே.

தமிழ்ப்பாஷையில் செயவென் எச்சம் வழங்கிய வழக்கை நோக்கின், காரணப்பொருள், கருத்துப்பொருள், உரிப்பொருள், காலப்பொருள், உடனிகழ்ச்சிப் பொருள்,

வியங்கோட்பொருள், நிலைப்பொருள், ஆக இவ்வேழு வகைப் பொருளும் உண்டென்க. இவ்வெழுவகைப் பொருளையும் ஒரு எச்சம் உணர்த்துவதால், முன் பின் தொடர்ச்சியான் அப்பொருள் வெளிப்படை யாகாவிடின், கருதின பொருளுக்கு ஏற்ப அவ்வெச்சத்தை விரித்துக் கூறுமாறும் அடியிற் கூறுதும்.

293. INSTRUMENTAL INFINITIVE.

காரணச் செயவை மூன்றில் காண்க.

காரணப்பொருளை உணர்த்தும் செய என் எச்சத்தை வினையாலணையும் பெயராக்கி மூன்றும் வேற்றுமை உருபு கொடுத்துக் கூறினால் பொருள் அமையும் என்க.

உ-ம்:—மழை பெய்யக் குளம் நிறையும் = மழைபெய்வதினால் குளம் நிறையும்.

294. INFINITIVE OF PURPOSE.

நோக்கச் செயவை நான்கில் நோக்க.

கருத்துப்பொருளை உணர்த்தும் எச்சத்தை அவ்வாறே பெயராக்கி நான்காம் வேற்றுமை உருபு கொடுத்துக் கூறினால், பொருள் அமையும் என்க.

உ-ம்:—குடிக்கக் குளம் வெட்டினான் = குடிக்கிறதற்கு. செல்ல வேறொரு திக்கறியேன் [தாய்] = செல்லுகிறதற்கு.

295. ADVERBIAL INFINITIVE.

உரிச் செய விரியும் வினையுரிக்கிளவியில்.

உரிப்பொருளை யுணர்த்தும் செய வென் எச்சத்தை வினையுரிச்சொல்லாய் மாற்றப் பொருள் அமையும் என்க.

உ-ம்:—மிகச்சொன்னான் = மிகுதியாய்ச் சொன்னான்.

296. ANTECEDENT INFINITIVE.

காலச் செயவைப் பின் எனக் கழற.

காலப்பொருளை உணர்த்திய எச்சத்தையும் நான்காம் வேற்றுமை வினையாலணையும் பெயர் ஆக்கிப் பின் என்னும் சொல்லைக்கொண்டு முடிப்பின் பொருள் அமையும் என்க.

உ-ம்:—அவன்வர, இவன் போனான் = அவன் வந்ததற்குப் பின் இவன்போனான். அவன் வரப் பொழுதுவிடியும்=அவன் வருவதற்கு முன் பொழுது விடியாது.

297. Co-ordinate Infinitive.

நிகழ்ச்சிச் செயவை முற்று நிகழ்த்த.

உடனிகழ்ச்சிப்பொருளை உணர்த்தும் எச்சத்தை முற்றாக மாற்றிக் கூறின் பொருள் அமையும் என்க.

உ-ம்:—தர்மர் கொலுவிருக்க, தம்பிமார் வீற்றிருந்தார்=தர்மர் கொலுவிருந்தார், தம்பிமார் வீற்றிருந்தார் [பு.]. தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க, கொண்டல்கள் முழவின ஓங்க, குவளைகண் விழித்து நோக்க, தெண்டிரை எழினிகாட்ட, தேம்பிழி மகரயாழின் வண்டுகள் இனிதுபாட, மருதம் வீற்றிருந்த மாதோ [கம்].

298. Infinitive of Entreaty.

வியங்கோட் செயவை ஒட்டு எனவிரிக்க.

வியங்கோட்பொருளை உணர்த்தும் எச்சத்தை, ஒட்டும் கடவது என்ற மொழிகளைக் கொண்டு முடித்துக் கூறினால் பொருள் அமையும் என்க.

உ-ம்:—நீ வர=நீ வரக்கடவை. சுவாமி எழுந்தருள=எழுந்தருளக்கடவீர். இது நிற்க=இது நிற்கக்கடவது=நிற்கட்டும்.

299. Infinitive of Rest.

செயவே நிலையெனில் செய்கையில் என்றாம்.

நிலைப்பொருளை உணர்த்திய எச்சத்தை, செய்கையில் என்னும் தொழிற்பெயராய் விரித்துக்கூறின் பொருள் அமையும் என்க.

உ-ம்:—இது இப்படியிருக்க அது அப்படியாயிற்று=இது இப்படியிருக்கையில் (=இருக்கக்கொள்ள=இருக்கும்போது) அது அப்படி ஆயிற்று. எனக்குள்ளே உயிர் என்ன இருக்க (இருக்கையில்), நீ மனக்கிலேசத்தை மாற்றல் வழக்கன்றோ [தாய்].

300. Infinitive of Expedition.

காலச் செயவுக்கு உம்மை கொடுப்பின்
விரைவுப் பொருளை விளக்கிக் காட்டும்.

காலப்பொருளை உணர்த்திய எச்சத்தோடு உம்மை கொடுத்துக்கூறின் விரைவுப் பொருளை உணர்த்துமென்க.

உ-ம்:—அவன் வரவும் இவன் போனான்=வந்தவுடனே வந்தமாத்திரத்தில்,

301. ADVERBIAL INFINITIVE WITH உம்.

உரிச்செய உம்மை பெறினும் பொருள் இலை.

உரிப்பொருளை உணர்த்திய எச்சத்தோடே உம்மை கொடுத்துக் கூறினும் பொருள் இல்லை.

உ-ம்:—மிகச்சொன்னான்—மிகவும் சொன்னான்.

302. INTERROGATIVE INFINITIVE.

வானும் பானும் வழக்கில் வரினே
வினாவைக்கொண்டு முடியும். அன்றியும்,
வினையைத் தீவினை எனவும் பகரும்.

வானும் பானும் எச்ச விகுதிகளாய் வழக்கில் வரும்போது, ஏன் என்னும் வினாவைக்கொண்டு முடிவதன்றியும செய்யப்பட்ட தொழிலை தீத்தொழில் எனவும் தீயனவற்றைப பிறப்பித்தது எனவும பொருள்கொண்டு நிற்கும்.

உ-ம்:—இதைச் செய்வான் ஏன்—இதை ஏன் செய்யவேண்டும், செய்ததினால் தீங்கு விளைந்தது. தூங்கும சிறுத்தையைத் தாண்டிவிடுவானேன் [சிங். பழ]. சும்மாபோகும் தேளைப் பிடிப்பானேன், இராவெல்லாம் கிடந்து அனத்துவானேன்? இத்தனை உபாயமான வார்த்தைகளை என்னுடனே சொல்லவேண்டாம். பின்னே வருகிற காரியங்களை எண்ணுவானேன் [நள].

XXX. தொழிற்பெயர்.

பெயருக்கு உரிய இலக்கணங்கள் யாவும் தொழிற் பெயருக்கும் ஏற்பதனால், தொழிற் பெயருக்குமாத்திரம் பொருந்திய சில விதிகளை இங்ஙனம் கூறுதும்.

303. VERBAL NOUNS TAKE A NOMINATIVE.

தொழிற்பெயர் தொழிலின் எழுவாய் ஏற்கும்.

தொழிற் பெயருக்கு வினையினது தன்மை உளவாதலின், அவ்வினைக்குரிய எழுவாயும் தொழிற் பெயரோடு நடக்கும்.

உ-ம்:—நான் வருதல் வேண்டும். மனிதர் போக்குவரவு அற்றகாடு.

304. NOMINATIVE BECOMING GENITIVE.

சில தொழிற்பெயருக்கு எழுவாய் ஆறாம்.

சிலதொழிற்பெயர்களில் தத்தமக்கே உரிய தொழில் முதனிலையை ஆறாம் வேற்றுமையாக மாற்றிக் கூறினும் பொருள் அமையும், வழக்கினால் தொழிற்பெயர் இயற்பெயர்போல் நடக்குமிடத்தென்க.

உ-ம்:—என் வரவு, ஆற்றுப் போக்கு, உன் கல்வி. (இவற்றுள், வரவு, போக்கு, கல்வி யென்னும் இப்பெயர்கள் இயற்பெயர்போல் வழங்கியதைக் காண்க.)

305. PECULIAR CONSTRUCTION OF செய்யல்.

செய்யல் பெயரை ஆதல் புணரின்
பால் இடம் விரிந்தும் நீங்கியும் வருமே.

செய்யல் என்னும் தொழிற்பெயர் ஆதல் வினையைக் கொண்டு முடியுமாயின், எழுவாயானது பாலிடப் பொருத்தம் பெற்றும் பெறாதும் வரும் என்க.

உ-ம்:—நான் எழுதிக்கொள்ளலானேன்=நான் எழுதிக் கொள்ளலாயிற்று. அவர்கள் வரலானார்கள்=அவர்கள் வரலாயிற்று. நான் படிக்கலாம்=நான் படிக்கல் ஆகும். இச் சம்சார சாகரத்தில் க்ஷணமாகிலும் இருக்கலாகாதென்றும், சத்திய பரமானந்த அத்துவித சுகஸ்வரூபமாய் இருக்கப்பட்ட சாம்பிராச்சியத்தை எந்தப் பெரியோர்களால் அடையலாகுமோ என்றும் விசாரத்தினால் தவித்துக்கொண்டிருக்கிறதே முமுட்சுத்துவம் என்று சொல்லப்படும் [சத].

☞ இவற்றுள், பாலிடம் விரியாமல் வருதல் இலக்கணம் என்றும், விரிந்து வருதல் வழக்கென்றும் காண்க.

306. CONSTRUCTION OF செய்கை.

செய்கைப் பெயரே ஏழைப்பெற்று
காலப்பொருளில் வருவதும் வழக்கே.

செய்கை என்னும் தொழிற்பெயரானது இல் உருபை ஏற்று காலப்பொருளை உணர்த்துவதும் வழக்கென்க.

உ-ம்:—நான் வருகையில்=வரும்போது.

307. CONSTRUCTION OF செய்யாமை.

செய்யாமைப் பெயரே மூன்றை ஏற்று
காரணப்பொருளைக் காட்டுதல் வழக்கே.

செப்பாமை என்னுந் தொழிற்பெயர் மூன்றும் வேற்றுமை உருபை ஏற்று காரணத்தொழிலைக் காட்டுதலும் வழக்கென்க.

உ-ம்:—படியாமையால் அடிபட்டான்.

XXXI. வினையாலணையும்பெயர்.

308. Double construction of these Nouns.

முன்னும் நோக்கும் பின்னும் நோக்கும்
வேற்றுமைப்படியே வினையாலணைபெயர்.

வினையாலணையும் பெயருக்கு வினையின் தன்மையும் பெயரின தன்மையும் உளவாதலால், வினைபற்றி முன்சொல்லைத் தழுவியதும், வேற்றுமைபற்றி பின்சொல்லைத் தழுவியதுமாகிய இவ்விருகூறும் அதற்கு உண்டென்க.

உ-ம்:—சாத்தன் வருவதைப்பார். (இதனுள், வருதல் தொழிற்குச் சாத்தன் எழுவாயாகி, வருவதை என்னும் செயப்படுபொருள் பார் என்னும் வினையைக்கொண்டு முடிந்தது.) அந்தணனைக் கொன்றானை அரசன் கொன்றான். திக்கற்றோரைக் கெடுத்தோரைத் தெய்வம் கெடுக்கும். மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் [குற].

☞ முன்னும் பின்னும் நோக்கிய இலக்கணம் தொழிற்பெயருக்கும் உண்டென்று தெளிக. உ-ம்:—சாத்தன் வருதலாற் பயன் என்னை.

309. Peculiar construction of these Nouns.

வினையாலணையும் பெயர் பயனிலையேல்,
விளியும் குறையும் ஒழிந்த வேற்றுமைகள்
எழுவாயாக வருதலும் வழக்கே.

வினையாலணையும் பெயரைப் பயனிலையாகக் கூறின் ஆரும் எட்டாம் வேற்றுமைகள் தவிர மற்ற ஆறுவேற்றுமைகளையும் எழுவாயாகக் கூறப்படும் என்க.

உ-ம்:—1. நேற்றுவந்தவன் இம்மனிதன்=இம்மனிதன் நேற்றுவந்தான்.

2. இம்மாடு யான் பணத்துக்குக் கொண்டது. (செய்பொருள்).

3. யான் காடுவெட்டியது இக்கோடாலி (கருவி).

4. என் கூடவந்தவன் இம்மனிதன் (உடனிகழ்ச்சி).
5. நாளைக்கு நான்போவது பட்டணம் (4-வேற்).
6. நான் இறங்கியது இம்மலை (நீக்கம்).
7. நான் சலம் உண்ணுவது இக்குளம் (7-வேற்).
சூத்திரத்தைச் சுட்டு சுகம்பெறுவது எக்காலம் (தாய்).
தள்ளாவிளையுளும், தக்காரும், தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு [குற]. உறுபசியும், ஓவாப் பிணியும், செறுப்கையும், சேராது இயல்வது நாடு [குற].

310. செய்கிறது EQUIVALENT TO A NOUN.

ஒன்றன் வினைப்பெயர் தொழிலை உணர்த்தலான்,
உயர்திணைப்பொருளும் அதனுள் அமையும்.

செய்தது, செய்கிறது, செய்வது என்னும் ஒன்றன்பால் வினையாலணையும் பெயர்கள் செய்தல் என்னும் தொழிற்பொருளை உணர்த்துமாகையான், அவை உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் நடக்கும் என்க.

உ-ம்:—நேற்றுவந்தது இம்மனிதன்=நேற்றுவந்தவன் இம்மனிதன்.

XXXII. காலப்பிறழ்ச்சி.

311. THE INDEFINITE TENSE.

முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத்தானே. [நன்]

தம்தொழில்இடையறுது முக்காலத்தினும் ஒரு தன்மையாய் இயலும் பொருள்களை நிகழ்காலத்தாற் கூறுவர் புலவர்.

உ-ம்:—இந்த ஊரில் இருக்கிற வைத்தியன்=ஊருக்குரிய வைத்தியன். பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே [தாய்]. கங்குல் பகல் அற நின்ற எல்லையுளது எது, அது கருத்திற்கு இசைந்தது [தாய்].

312. TENSE OF PROMPTITUDE.

எதிர்வும் இறப்பாம் விரைவுப் பொருளால்.

விரைவுநோக்கி எதிர்காலத்தை இறந்தகாலத்திற் கூறுதலும் உள. சாப்பிடுகிறவனை நோக்கி சாப்பிட்டாயிற்று

என, ஆயிற்று என்பதும், ஒரு வேலையைப்பற்றி ஒருவனை ஏவினவிடத்தில் வர்தையா என, வந்துவிட்டேன் என்பதும், இவை முதல்வன விரைவினாலே இறந்தகால வினையைக்கொண்டு எதிர்கால வினையை உணர்த்தியது.

313. Tense of Procrastination.

எதிர்வும் நிகழ்வாம் தாமதப் பொருளால்.

தாமதத் தொழிலை உணர்த்தியவிடத்தில் எதிர்காலவினையை நிகழ்காலத்தில் கூறுதலும் உள. வந்தையா என்று கேழ்க்குமிடத்தில், வருகிறேன் (சற்றேபொறு) எனவும், அந்தப் பணத்தை ஏன் கொடுக்கவில்லை என்போனுக்கு, கொடுக்கிறேன் (என்ன அவசரம்?) எனவும் இவ்வாறு வரும் வாக்கியங்களில் அப்பேதத்தைக் காண்க.

314. Tense of Assurance.

எதிர்வும் நிகழ்வாம் உறுதிப் பொருளால்.

உறுதிபற்றி எதிர்காலத்தை நிகழ்காலத்தில் கூறப்பெறும்.

உ-ம்:—ஓ தேவராஜனே! நீ ஏன் கிலேசப்படுகிறாய். இதோ நான்போய் மந்திரகிரியைக் கொண்டுவருகிறேன் என்று உறுதி கூறி அதிவேகமாய்ச் சென்றான் [ஸ்கந்]. இன்னும் சில காலம் நீர் அரசு செலுத்தவேண்டும். அப்போது என்னிலும் எண்மணங்கு அதிகமான மாதை மணம்புரிகிறீர். அவள் வயற்றில் சந்திரகுல மரபுக்குப் புத்திரன் உண்டாகிறார் [பார].

315. Tense of Frequency.

இறப்பும் எதிர்வாம் வழக்குப் பொருளால்.

அதிகம், மிகுதி, வழக்கு முதலிய பொருள்களை உணர்த்துமிடத்தில் இறந்த காலவினையை எதிர்காலத்தில் கூறுதல் வழக்கென்க.

உ-ம்:—கல்லினும் வலியதோ, கவலும் நெஞ்சென்பார்.
நண்ணரும் கானிடை நடத்தல் காணவோ
கண்ணிணைப் படைத்தனன் கமலத்தோன் என்பார்.
தாயினும் அருள்புரி தரணி மன்னவன்
போயினன் கானிடை என்ற போழ்தினின்
மாய்வுறப் பெற்றிலேம். மன்னன் மன்னன்டால்
ஏயபேர் அன்பினர் எம்மில் யார் என்பார் [லை.—].

316. HISTORICAL TENSE.

இறப்பும் நிகழ்வாம் சரித்திரத் தொடரான்.

சரித்திர சம்பந்தத்தில் இறந்தகால வினைகளை நிகழ் காலத்திற் கூறப்படும் என்க.

உ-ம் :—ஓய் ! சனீஸ்பரரே ! இந்த வரம்தான் எனக்கு வேணடுமென்று கேட்டதற்கு, சனீஸ்பரன் சந்தோஷப்பட்டு நளமகராஜாவைப்பார்த்துச் சொல்லுகிறான். ஓய் சத்திய சந்தனரே! இப்போது நீர் கேட்ட வரப்படியே கெட்டியாக நான் கொடுக்கிறேன் [நள]. மடவரல் தன்னொடும் மதுகைவேந்தனை கடிமுரசு அருத கோமறுகிற் காண்டலும் இடியுறும் அரவு என ஏங்கி ஏங்கி நின்று, உடல் வெறுத்து உயிர் உக உழல்கின்றார் சிலர் [நை].

317. CHANGE OF TENSE.

இடத்தின் ஆகும் காலப் பிறழ்வு.

தன்மை முன்னிலை முதலிய இடங்களில் ஒரு காலப் பொருளை உணர்த்திய வினைகள் இடத்துக்கேற்ப பிறழ்ந்து வரும் எனக.

உ-ம் :—நான் நாளைக்கு வருகிறேன், நீ நாளைக்கு வருவாய், அவன் நாளைக்கு வருவான்.

XXXIII. எதிர்மறை.

318. CONSTRUCTION OF THE NEGATIVE.

மறைவினை பலவே அடுக்கி வரினே
ஈறே மறைவினை, மற்றவை விதி வினை.

எதிர்மறை வினைகள் பல ஒரு எழுவாயைக்கொண்டு முடியுமெனின், இறுதிவினை ஒன்றையே மறைவினையாக்கி மற்றவற்றையெல்லாம் விதிவினையாகக் கூறுக.

உ-ம் :—அவன் படியான் + பெருமை அடையான் + வாழான் = படித்துப் பெருமை அடைந்து வாழான். எனவே, எதிர்மறை வினைகள் பல எழுவாய் பெற்று பல வாக்கியங்கள் ஆகுமிடத்து இவ்விதி இயலாது. கோழி கூவாது + பொழுது விடியாது என மறை பலகாலும் விரிவதன்றி, கோழி கூவிப் பொழுது

விடியாது எனின் பொருள் வேறுபடும். கோழி கூவிப் பொழுது விடியும். காக்கை கூவிப் பொழுது விடியாது. மழைபெய்து குளம் நிறையும். பனிப் பெய்து குளம் நிறையாது.

319. Its Tense modifications.

மறைக்குப் பொழுது இலதாதல் பற்றி
இன்மை கொடுத்து விளக்கப் பொழுதை.

மறை வினைகளில் காலம் காட்டும் இடைச்சொற்கள் இல்லாமையால், காலத்தை விரித்துக் கூறவேண்டுமெனின், ஒன்றன் வினையாலணையும் பெயரில் இல்லை எனும் குறிப்பு வினையை ஏற்றிக்கூறின் காலம் தோன்றுமென்க.

உ-ம்:—அவன் படிக்கிறதில்லை. படித்ததில்லை, படிப்பதில்லை.

320. Past Negative.

செய்து வினையோடு இல்லை தொடரின்
இறந்தகால எதிர்மறை வினையாம்.

செய்ய என்னும் எச்ச வினையோடு இல்லையென்னும் சொல்லைச் சேர்க்க, இறந்தகால எதிர்மறைப் பொருளை உணர்த்தும் என்க.

உ-ம்:—அவன் நடக்கவில்லை. செய்யவில்லை.

321. Past Negative: Another form.

செய்து வினையைப் பால் இட் இல்லை
தொடரின் ஆகும் எதிர்மறை இறப்பே.

செய்தெனும் எச்சத்தோடு மூவிட ஐம்பால் விகுதியில் இல்லை எனும் வினையை முடிக்க, இறந்தகால எதிர்மறை வினையை உணர்த்துமென்க.

உ-ம்:—நடந்திலன், நடந்திலள், நடந்திலம்.

322. இல்லை and அல்ல distinguished.

எழுவாய் மறுக்கும் இல்லை என்க.
பயனிலை மறுக்கும் அல்ல வென்க.

முதனிலைப்பொருளை இல்லை என்னும் சொல் மறுக்கும். பயனிலைப்பொருளை அல்ல என்னும் சொல் மறுக்கும், மேற்கோள் :

ஒன்றன் இயல்பு மறுப்பது அன்று.
ஒன்றன் இருப்பு மறுப்பது இன்று. [தொன்].

உ-ம்:—பிள்ளை இல்லை. (முதனிலை மறுக்கப்பட்டது.)
அவள் பிள்ளையல்ல (பயனிலை மறுக்கப்பட்டது.)

323. இல்லை FOLLOWING A FINITE VERB.

முற்றை இல்லை தொடரினும் தொடரும்.

முற்று வினையின்பின் இல்லை என்று கூறினும் கூறலாம். இஃது ஈழவநாட்டு வழக்கென்க.

உ-ம்:—படித்தேன் இல்லை. எழுதினேம் இல்லை.

324. Double Negatives.

நிலைமொழி வருமொழி இருமொழி மறையேல்
உறுதி விதிவினைப் பொருளதாகும்.

நிலைமொழியும் வருமொழியும் எதிர்மறையாய்க்கூறப்படுமெனின், அவை ஒன்றை ஒன்று மறுத்துக்கொண்டு உறுதிப்பொருளான விதிவினையை உணர்த்தும்.

உ-ம்:—வராமற் றீராது, இன்றி அமையாது, வராமற் போகான், அள்ளாமற் குறையாது, சொல்லாமற் பிறவாது. நீரின்று அமையாது உலகு எனின், யார் யார்க்கும் வான் இன்று அமையாது ஒழுக்கு [குற]. அவனுடன் எதிர்த்துப் போர்கொடுத்து வெல்லுவோம் என்றால், வீஷ்மன் இருக்கிறான்: அவன் வில் எடுத்தால், நமது உயிரைக் கொள்ளை கொள்ளாமல் விடான் [பார]. பாரும் ஓடாது, நீடாது எனும் பாலதே: சூரும் ஓடாது கூடாது அரோ: சூரியன் தேரும் ஓடாது: மாமாகம்மீ (தேரின்,) நேர் காரும் ஓடாது: நீள் காலும் ஓடாதரோ [கம்].

325. Negative in Sense.

பொருளால் எதிர்மறை கூறலும் உளவே.

உருபினால் மறைவினை வருதலுமன்றி, பொருளினாலும் மறைவினை நடக்கும் என்க.

உ-ம்:—வாழான்=கெடுவான். உண்ணாத சாத்தன்=பசித்த சாத்தன். நடவாது வந்தான் = வாகனத்தில் வந்தான். உண்ணாமை=பட்டினி.

326. NEGATIVE CONJUNCTIONS.

தனிமொழியாக வரும் எதிர் மறைகளில்

A. அல்லது எதிர்மறைப் பயனிலை அவாவும்.

B. அல்லதும் அன்றியும் வாக்கியம் அடுக்கும்.

C. அல்ல பிரிநிலைப் பெயரை அவாவும்.

D. அலவோ என்ன நிச்சயம உணர்த்தும்.

E. இல்லாது என்னக் காரணம் நிகழ்த்தும்.

உ-ம்:—A. அவன் வந்தானே அல்லது (அல்லாது, அன்றி, அல்லாமல், அல்லால்) அவள் வர இல்லை. உன்பவிசுக்கு விருந்து ஒரு கேடா? உனக்குத் தொலைக்கிறதல்லாமல், ஊர்க்கும் தொலைக்கவா என்று வாயில் வந்தபடி பேசி ஏசிக் கழுநீர்ப்பானையை எடுத்து அவன் தலையில் அபிஷேகம் செய்தாள் [விநோ].

B. அவன் வந்தது அன்றியும் என்னைக்கண்டும் பேசினான். அவர்கள் கும்புகூடித் துர்ராலோசனை செய்துகொண்டதுமல்லாமல், அது நிறைவேறுகிறதற்கு வேண்டிய பிரயத்தனங்களையும் செய்து வருகிறார்கள்.

C. வந்தவன் சாத்தன் அல்ல பொம்மன். (வேறொருவன் எனப் பிரித்துக் கூறியதால் பிரிநிலை). மழையல்ல, இடியல்ல, எப்படியும் போகவேண்டியது. ஆறல்ல, நூறல்ல, எவ்வளவு செலவானாலும் ஆகட்டும். ஓ! அண்ணா! நான் தேவதா ஸ்திரீயுமல்ல, ராக்ஷதியுமல்ல, லட்சுமி தேவியும் அல்ல, மிருத்தியு தேவதையும் அல்ல, இந்த வனத்திலே இருக்கிற துர்க்கையும் அல்ல, நான் மநுஷ ஸ்திரீதான். நவகண்டங்களும் ஆளப்பட்ட நளச்சக்கிரவர்த்தி மகாராஜருடைய பெண்சாதி நான் [நள]. ஒரு பொழுதும் வாழ்வது அறியார் கருதுப கோடியும் அல்ல, பல [குற].

D. இவனல்லவோ நேற்றையத்தினம் வந்தவன். உன் அழகு அல்லோ உனக்கு அழகு. அந்த உன் அழகே உனக்கு இல்லாட்டால், பின் அழகால் உனைப் பேண நினைப்பது பேதைமை அலலவோ ஞானப்பெண்ணே [வேத]. சாதியாவது ஏதடா? ஜலம் திரண்ட நீர் அல்லோ [பட்].

E. மழையில்லாமல் குடிகள் வருத்தப்படுகிறார்கள். யாதொரு உதவியுமின்றித் துனபப்படுகிறான். வித்தில்லாமல் மரம் உண்டாகுமா. வித்திலலாத சம்பிரதாயம் மேலும் இல்லை. கீழும் இல்லை.

XXXIV. படுவினை.

327. Sign of the Passive Voice.

படுவினைக்கு உருபு படுவினை என்க.

செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்குவது பெரும்பாலும் படுதல் என்னும் வினையானமை இஃதைச் செயப்பாட்டு வினைக்கு உருபென்றாம்.

328. படு an Independent Verb.

படு என் வினையே செய்வினை தனியே.

படுதல் என்னும் வினை தனியே வருமாகின் அது செய்வினைப்பொருளையே கொடுக்கும். எனவே, தன் தொழிலை உணர்தாது வேறு வினையைத் தழுவி வரும் இடத்தில் மாத்திரம் அதைச் செயப்பாட்டு வினைக்கு உருபு என்க.

உ-ம்:—குருவி வலையிற் பட்டது. வெகு பாடு பட்டான். (இவை பொருளினால் மாத்திரம் படுவினை ஆகியதன்றி, தொழிலால் படுவினையன்று.)

329. How the Passive may be superceded.

பொருளாற் படுவினை கூறப்படுமெனின்,
உருபாற் படுவினை சிறப்பு அன்று என்பாம்.

பொருளால் செயப்பாட்டு வினையை வேறு வகையில் கூறக் கூடுமெனின் உருபு கொடுத்துக் கூறுதல் சிறப்பன்று.

உ-ம்:—

சிறப்பு			சிறப்பு இல்
	உதையுண்டான்.	உதைக்கப்பட்டான்.	
	அறுபட்டான்.	அறுக்கப்பட்டான்.	
	மூக்குஅறுந்தது.	மூக்கறுக்கப்பட்டது.	

330. ONE METHOD.

பகுதியிற் படுவே படுவினைக்கு அழகு.

வினையினது பகுதியோடு படுவினையைக் கூட்டக் கூடும் எனின் அதுவே சிறந்த செயப்பாட்டு வினை என்க.

உ-ம்:—

சிறப்.		சிறப்பன்று.
	அறுபட்டது.	அறுக்கப்பட்டது.
	விடுபட்டது.	விடுக்கப்பட்டது.
	கொடுபட்டது.	கொடுக்கப்பட்டது.
	எடுபட்டது.	எடுக்கப்பட்டது.
	உதைபட்டது.	உதைக்கப்பட்டது.
	கடிப்பட்டது.	கடிக்கப்பட்டது.

331. ANOTHER METHOD.

செய்பொருள் குன்று வினைகள் யாவும்
குன்றிய வினையாப் படுபொருள் உணர்த்தும்.

செயப்படுபொருள் குன்றுவினைகள் குன்றிய வினையாகக் கூடுமெனின், அவற்றைச் செயப்பாட்டுவினை பொருளில் கூறுதல் சிறந்த வழக்கு என்க.

உ-ம்:—

சிறப்.		சிறப்பன்று.
	அறுந்தது.	அறுக்கப்பட்டது.
	கிடைத்தது.	கொடுக்கப்பட்டது.
	வளர்ந்தது.	வளர்க்கப்பட்டது.
	விழுந்தது.	விழ்த்தப்பட்டது.

332. PASSIVE FORMS TO BE AVOIDED.

படுவினை தன்னைச் செய்வினையாகப்
பகரப்பெறினே அது சிறப்பென்க.

செயப்பாட்டுவினை வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாக மாற்றிக் கூறக்கூடும் எனின், அதுவே சிறந்த வழக்கென்க.

உ-ம்:—

சிறப்பன்று.		சிறப்.
	இது சொல்லப்பட்டது.	இதைச் சொல்லுகிறுள்.
	ஆபரணம் கழற்றப்பட்டு வைக்கப்பட்டிருக்கும்.	ஆபரணம் கழற்றிவைத்திருக்கும் [பஞ்].
	இந்த மேசை தச்சனுற்செய்யப்பட்டது.	இந்த மேசை தச்சன் செய்தது.
	காயிதம் எழுதப்பட்டிருக்கும்.	காகிதம் எழுதியிருக்கும்.

333. எனல் REQUIRES NO PASSIVE.

படுவினை நீங்கியே வரும் எனல் வினையே.

எனல் வினையானது செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தாலும் உருபின்றிச் செய்வினையாகவே கூறப்படும்.

உ-ம்:—இல்வாழ்வான் என்பான்=என்னப்பட்டவன். சுந்திரம் என்பவன்=என்று சொல்லப்பட்டவன். பெண் எனப்படுப கேண்மோ. பீடில, பிறப்பு நோக்கா, உள் நிறை உடைய அல்ல, ஓர் ஆயிரம் மனத்த ஆகும். எண்ணிப் பத்து அங்கை இட்டால், இந்திரன் மகளும் ஆங்கே, வெண்ணைக்குன்று எரி உற்றுற் போல், மெலிந்து பின் நிற்கும் அன்றே [சிந்].

334. PARTICIPLES REQUIRE NO PASSIVE.

பெயரெச்சங்கள் வினையெச்சங்கள்
வினைத்தொகை இவற்றில் உருபில படுவினை.

இருவகை எச்சங்களிலும் வினைத்தொகையிலும் செயப்பாட்டுப்பொருள் வினைகள் உருபின்றிச் செய்வினையாகவே வரும் என்க.

உ-ம்:—எழுதி வந்த ஓலை=எழுதப்பட்டு அனுப்பப்பட்ட ஓலை. ஊருணி நீர்=ஊரால் உண்ணப்படும் நீர். செய்குன்று=செய்யப்பட்ட குன்று.

335. UNMEANING PASSIVE FORMS.

தொழிலை இயல்பை உணர்த்தும் ஆயின்,
உருபு தோன்றியும் படுபொருள் இல்லை.

சில வாக்கியங்களில் படுவினை தோன்றியும் செயப்பாட்டு வினைப்பொருள் இல்லை. அங்ஙனம் வருமிடத்து, தொழிலையாகினும் இயல்பையாகினும் உணர்த்தும் என்க.

உ-ம்:—இவன் திருவாரூரில் மீன் விற்கப்பட்டவன். எழுத்தாணி எழுதப்பட்டது [இல]. இங்கே வரப்பட்ட மனிதர். அங்கே போகப்பட்டவர்கள் யார். ஓ மன்மதன் தேவிபோலே இருக்கப்பட்ட ஸ்திரியே துஷ்ட மிருகங்களினாலே பயங்கரமாய் இருக்கப்பட்ட காட்டிலே நீ ஒண்டியாய் அலைந்துகொண்டு ஆரைத் தேடுகிறாய் [நள]. அவரை நான் எங்கும் தேடுகிறேன். என் கண்ணிலே காணேன். அவர் மன்மதனைப்போலே சொரூபமும், தாமரை இதழ்களைப்போலே கண்க,

ளும், சந்திர விம்பம் போலே வதனமும் உடையவர். இந்தப் பூலோகத்திலே இருக்கிற நவகண்டங்களையும் ஆளப்பட்டவர் [நள]

சிதலை தினப்பட்ட ஆலம் மரத்தை
மதலையாய் மற்றதன் வீழ் ஊன்றியாங்கு [நால்].
தமர் என்று தாம் கொள்ளப்பட்டவர் தமமை
தமர் அன்மை தாம் அறிந்தாராயின் [நால்].

336. ACTIVE USED FOR THE PASSIVE.

செய்வினை தானே படுவினைப் பொருள்தரும்
மூன்றாம் வேற்றுமை விரியும் ஆயின்.

செயப்பாட்டுவினை வாக்கியங்களில் கருத்தாவை மூன்றாம் வேற்றுமையில் மாற்றிக் கூறுதல் வழக்காளமை, அம்மூன்றாம் வேற்றுமையில் கர்த்தா எங்ஙனம் விரிக்கப்பட்டதோ அங்ஙனம் செய்வினையே செயப்பாட்டு வினையாகப் பொருள்படும் என்க.

உ-ம்:—சகலராலும் புகழ்ந்து களிக்கும் வெள்ளியம் கிரி = சகலராலும் புகழப்பட்டுக் களிக்கப்படும் வெள்ளியங்கிரி [ஸ்கந்]. வினையாலணையும் பெயர் = வினையால் அணையப்படும் பெயர். இந்தக்குடை அநேக மூங்கிற் பிளாச்சுகளினாலே குறுக்கும் நெடுக்குமாகப் போட்டுக் கட்டிக் குடை என்று சொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றது [சத்].

XXXV. தொடர்வினை.

பெயரைத் தொடர்ந்தும் உரியைத்தொடர்ந்தும் வினையைத்தொடர்ந்தும் இடைச்சொல்லைத் தொடர்ந்தும் ஒரு வினைபோல் நடக்கும் வினைகளைத் தொடர்வினை என்றது. அடியிற் கூறிய விதிகளானே இன்னவை தொடர்வினை என்றும் இன்னவை அன்றென்றும் தோன்றும்.

337. IN COMPOUND VERBS, THE FIRST IS THE EMPHATIC.

தொடர்வினையுள்ளே நிலைமொழி இசைநிலை.

மேல் விரித்து காட்டிய நால்வகைத் தொடர்வினையுள்ளும் நிலைமொழியே ஊன்றி உச்சரிக்கப்படும் என்க.

உ-ம்:—இதைக் கொண்டுபோ. என்னைப் பின்செல். அவனை மொட்டை அடி. முருகனைப் பூசைபண்ணு. ஊருக்குப் போய் வருகிறேன்.

338. Compound Verbs may govern a Case.

தொடர்வினைதானே ஒருவினையாகி
தொழிலுக்கு ஏற்க வேற்றுமை வருமே.

தொடர்வினைகளெல்லாம் ஒருவினையான தன்மையால், அவ்வினையினது பொருளுக்கு ஏற்கச் செயப்படுபொருள் விரிந்தும் தொக்கும் வரும் என்க.

உ-ம்:—இதைக் கொண்டுவா.

339. Verbs compounded with Nouns.

பெயர்த்தொடர்வினையுள் பெயர்க்கிலைசெய்பொருள்.

பெயரும் வினையும் தொடர்ந்து ஒரு வினையாகிய வழங்கிய சில வினைகளில் நிலைமொழிப்பெயரைச் செயப்படுபொருளாக விரிக்கப்பெறா. விரிக்கப்பெறினும் வேண்டா.

உ-ம்:—

செய்பொருள்விரியா.	செய்பொருள் வேண்டா.
உறவாவாதல்,	கேள்விகேட்டல்,
மொட்டையடித்தல்,	பொருள்வினவல்,
சிநேகம்பண்ணுதல்,	அடி அடித்தல்,
குணக்கெடுத்தல்,	ஓட்டம் ஓடுதல்,
கழுவேற்றல்,	கத்துக்கத்துதல்,
ஆக்குப்போடுதல்,	குதிகுதித்தல்,
ஆட்கொள்ளுதல்,	நடவு நடுதல்,
கன்னமிடுதல்,	பாட்டுப்பாடுதல்,
சூடுபோடுதல் ஷ.	ஷ.

340. Verbs compounded with Adjectives.

உரித்தொடர்வினைக்குச் செய்பொருள் இல்லை.

உரிச்சொல்லைத் தொடர்ந்துவரும் வினைகளெல்லாம் யாதாவதோர் பண்பைமாத்திரம் உணர்த்துந் தன்மையீயால், செயப்படுபொருளை ஏற்கமாட்டா.

உ-ம்:—வெடுவெடுக்கிறது, நடுநடுங்கிறது, தேகம் விடவிடக்கிறது, உடம்பு வெலவெலிக்கிறது.

341. Two Verbs compounded together.

வினைத்தொடர்வினையின் தொழிற்கேசெய்பொருள்.

வினையும் வினையும் தொடர்ந்து ஒரு வினையாகுங்கால், அஃது ஒரு வினையான தன்மையால் செய்பொருளைக் கூற

வேண்டியதன்றி, அதைப் பிரித்துப் பிரித்துக் கூறின் அமையாதென்க.

உ-ம்:—சாகடித்தல், போக்கடித்தல், கொண்டாடுதல், கொண்டுபோதல், கொண்டுவருதல், கண்டெடுத்தல், கண்டுபிடித்தல், செலவழித்தல் சுற்றிவருதல் ஞு.

342. Verbs compounded with Particles.

இடைத்தொடர்வினையில் இடைக்கொரு செயல் இலை.

இடையைத் தொடர்ந்துவரும் தொடர்வினைகளில் இடையினால் யாதொரு வேற்றுமையும் நடவாது. அப்படி நடக்குமெனின் அது தொடர்வினை அன்று.

உ-ம்:—அவனைப் பின்செல் எனின் தொடர்வினை. அவனுக்குப் பின்செல் எனின் தனிவினை. இதை முன்னிட்டுக்கொண்டு சிங்கத்தினிடத்திற்குப் போகிறேன். [பஞ்].

XXXVI. இறுதி வினை.

தன் தொழிலை உணர்த்தாது வேறு வினைகளுக்கு ஈற்றில் வெறுவினையாக வருகின்றவைகளை இறுதிவினை என்றது. இவை, இருத்தல், கொள்ளல், கொண்டிருத்தல், விடல், போதல், போடல், வைத்தல், இடல், அருளல், உணல், ஆதல், வருதல், எனப் பன்னிரண்டு வினைகளாம். அவை வேறு வினைகளின் ஈற்றில் வரின், அவ்வினைகளுக்கு என்னென்ன பொருளைப் பொருந்திவைக்கும் என்று அடியிற் கூறுதும்.

343. First Auxiliary: இரு.

காலபேதம் காட்டியது இருப்பு.

தெரிநிலை வினைகளோடு இரு என்னும் வினையை முக்காலத்தினும் கூட்ட, மூன்றுகாலத்தையன்றி வேறு மூன்றுகால பேதத்தையும் காட்டும்.

உ-ம்:—படித்தேன், படித்திருந்தேன்.
படிக்கிறேன், படித்திருக்கிறேன்.
படிப்பேன், படித்திருப்பேன்.

344. CASES IN WHICH IT IS INDISPENSABLE.

ஈற்றிருப்பின்றி இயலா சில வினைகள்.

இருத்தல் என்னும் இறுதிவினை யில்லாமல், சில வினைகள் வழக்கில் நடக்கமாட்டாது. அப்படி வருமிடத்தில் காலபேதத்தை உணர்த்தமாட்டாது.

உ-ம்:—எழுந்திருக்கிறது, பயந்திருக்கிறது.

☞ இவற்றிற்கு எழுகிறது, பயக்கிறது என முதல்வினை வழக்கில் இல்லை.

345. SECOND AUXILIARY: கோள்.

பயனையும் வழக்கையும் கோளுங் கொள்ளும்.

கொள்ளல் என்னும் இறுதிவினை வழக்கை உணர்த்தியதும் தவிர, வினையாலாகிய பயன் எழுவாய்க்கே உரித்தென்றும் காட்டும்.

உ-ம்:—சாத்தன் எழுதிக்கொண்டான் (தனக்காக). சொல்லிக் கொள்ளுகிறார்கள் (வழக்கு).

346. THIRD AUXILIARY: கோண்டிரு.

தொழில் முடிவு இல்லையேல் கோண்டிரு கொள்ளும்.

தொடங்கிய ஒரு தொழில் இன்னம் முடிவுபெறாது நடந்துகொண்டிருக்கின்றது என்று காட்ட, கொண்டிரு என்னும் இறுதி வினையைக்கொண்டு முடிக்க.

உ-ம்:—சாத்தன் நித்திரை செய்துகொண்டிருக்கிறான். அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வீடு கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

347. FOURTH AUXILIARY: விடு.

உறுதியை உணர்த்தும் விடு என் வினையே.

ஒரு வினையின் ஈற்றில் விடு என்னும் வினையைக் கொடுத்துக் கூறின், உறுதிப்பொருள் தோன்றும்.

உ-ம்:—ஒரு நொடியில் வந்து விடுகிறேன். இதைச் சொந்தக்காரனுக்குக் கொடுத்துவிடு.

348. FIFTH AUXILIARY: போ.

இறுதியை உணர்த்தும் போ என் வினையே.

ஒரு வினையின் ஈற்றில் போதல் என்னும் வினையைக் கொடுத்துக் கூடின், முடிவுப்பொருளை உணர்த்தும் என்க.

உ-ம்:—மரித்துப்போனான். புண் ஆறிப்போயிற்று.

349. SIXTH AUXILIARY: போடு.

முற்றை உறுதியாய் உணர்த்தும் போடே.

ஒரு வினையின் ஈற்றில் போடு என்னும் வினை கொடுத்துக் கூறின், அது முடிவுப்பொருளை உறுதி கூறும் என்க.

உ-ம்:—பாம்பை அடித்துப் போட்டேன் (கொன்றேன்).
நாய் பூனையைக் கடித்துப் போட்டது (கொன்றது).

350. SEVENTH AUXILIARY: வை.

பதனம் உணர்த்தும் வை என் வினையே.

வை என்னும் இறுதிவினை எச்சரிக்கைப் பொருளை உணர்த்தும்.

உ-ம்:—அவனை அனுப்பிவை. மீனைக் குளத்திலே விட்டுவை. கதவைச் சாத்திவை. காரியத்தை மூடிவை.

351. EIGHTH AUXILIARY: இடு.

பொருளே இல்லை இடு என் வினைக்கே.

இறுதி வினையாய் வரும் இடு என் வினைக்கு விசேஷித்தப் பொருளைக் காண்கிலம். அதனால் அதனை உபயோகித்தல் சிறந்த வழக்கன்று.

உ-ம்:—தந்திட்டான் = தந்தான்.

352. NINTH AUXILIARY: அருள்.

கிருபை உணர்த்தும் அருள் என் வினையே.

இறுதி வினையாய் வரும் அருள் என்னும் வினை கிருபைப்பொருளை உணர்த்தும் என்க.

உ-ம்:—திருவாய் மலர்ந்தருளினார். எழுந்தருளினார். கண்ண! பொருத்தருள். வெண்ணெ அருந்திய கள்வ! பொருத்தருள். கார்வண்ண! பொருத்தருள் [பார].

353. TENTH AUXILIARY: உண்.

படுவினைப் பொருளில் வருமே உண்ணல்.

இறுதிவினையாய் வரும் உண்ணல் என்னும் வினை செயப்பாட்டு வினைப் பொருளை உணர்த்தும் என்க.

உ-ம்:—கொட்டுண்டது, உதையுண்டான், வெட்டுண்டான் அலையுண்டு திரிந்தான். மோதுண்டான்.

☞ இவ்விறுதிவினை வேறு வினைகளில் பகுதிகளோடுமாத்திரம் சேர்ந்துவரும். மற்றவைபோல, செய்து என்னும் எச்சத்தைச் சேர்ந்துவரா.

354. ELEVENTH AUXILIARY : ஆது.

முற்றுப்பொருளை உணர்த்தும் ஆவே.

இறுதி வினையாய் வரும் ஆவென்னும் வினையானது முடிவுப் பொருளை உணர்த்தும்.

உ-ம்:—செய்தாயிற்று, வந்தாயிற்று. செய்தான காரியம். தூங்கியாச்சு=தூங்கி முடிந்தது. குரு சீஷனுக்கு உபதேசித்தான வுடனே சீஷா எல்லாம் நுழைந்ததா என்றார் [கதா].

355. TWELTH AUXILIARY : வரு.

மங்கலப் பொருளில் வருவதன்றியும்,
வழக்கை உணர்த்தும் வருமென் வினையே.

இறுதி வினையாய் வரும் வருதல் என்னும் வினை மங்கலப் பொருளையும் வழக்கப்பொருளையும் உணர்த்துமென்க.

உ-ம்:—மங்கலம்; போய்வருகிறேன்=போகிறேன் போய்வாரும்=போம். அழைத்துவா=போய் அழை. வழக்கு: நடந்து வருகிறது, செய்து வருகிறார்கள். பயிருக்குத் தண்ணீர் இறைத்து வருகிறார்கள்.

XXXVII. இடைவினை.

356. PREDICABLE VERBS : ஆது AND என்.

ஆதலும் எனலும் இடையடி வினையால்
அவைக்கு ஒரு தொழிற் பொருள் இல்லை எனினும்,
எச்சத்தாலே பொருள் உண்டு என்க.
வினையின் விகாரம் குன்றாது என்க.

இவ்விரண்டு வினைகளும் இடையடியாய்த் தோன்றின வினைகளானதால், அவற்றிற்குத் தொழிற்பொருள் யாதும் இல்லை. தொழிற் பொருள் உண்டே எனின், சொல் எச்சத்தினால் அவற்றிற்கு அப்பொருள் உண்டாகியது என்க. எங்ஙனமெனின், மாறுதல் சொல்லுதல் முதலிய வேறு வினைகள் எஞ்சி நின்று பொருள்பட்டு என்க. இஃது ஆயிற்று என, இஃது உண்டாயிற்று, முடிந்தது எனவும், நல்லோன் கொடியன் ஆனான் என, கொடியனாய் மாறினான் எனவும், இப்படி என்றான் என, இப்படியென்று சொன்,

னுன் எனவும் வேறு சொற்கள் எஞ்சினமை அவை சொல்லெச்சத்தால் பொருள்பட்டதென்க. இஃதன்றியும், அவை தெரிநிலைவினையானமை, தெரிநிலைக்குரிய சகல இலக்கணங்களும் விகாரங்களும் அவற்றிற்கும் உண்டென்க.

(*A*) THEIR USE IN THE LANGUAGE.

அவை,
இடைவினை யானமை பயனிலைப்பொருட்டே.

அவ்விருவினைகளும் இடைவினைகளாகியது யாது காரணத்தால் எனின், உருபாயும், விரிவாயும், அடையாயும் பலவகையில் ஒரு வாக்கியத்தின் பயனிலையை விசேடிக்கும் பொருட்டு என்க.

உ-ம்:—அவள் (பெண்ணுப்) பிறந்தாள். அது (திடல் என்று) விழுந்தது.

(*B*) THEY MODIFY SUBJECTS:

அவை, முதனிலை தனையும் விரிக்கும் எச்சமாய்.

அவ் விருவினைகளும் முக்காலப் பெயரொச்சங்களில் எழுவாய்ப் பெயர்களையும் விசேடித்து வரும்.

உ-ம்:—நல்லவன் (ஆன, ஆம்) மனிதன். செய (என், என்னும்) எச்சம்.

(*C*) THEY BECOME REDUNDENT NOMINATIVES.

அவை, தனியே பெயராய் எழுவா யுருபாம்.

அவ் விருவினைகளும் வினையாலணையும் பெயராய் மாறி வேறெழுவாய்ப் பெயர்களோடு சொல்லுருபாய் நடக்கும்.

உ-ம்:—ஓ! முனிநாதா! பெற்ற மாதாவானவள் பிள்ளைகளுக்குக் கர்ன கடூரமான சாப மிடவேண்டிய காரணம் என்ன [பார].

(*D*) THEY FORM CONJUNCTIONS.

அவற்றின், பற்பல விகாரம் தளைமொழி யாகும்.

அவ் விருவினைகளும் பற்பல விகாரமாகி இரண்டு வாக்கியங்களை இணைவிக்கும் தளைமொழிகளாய் வரும்.

உ-ம் :— ஆ.

ஆனால், ஆகில், ஆயின்,
ஆனாலும், ஆகிலும், ஆயினும்,
ஆதலால், ஆகையால், ஆக,
ஆய், ஆவது, ஆனபோதிலும்,
ஆயிருந்தாலும், ஆனாற்கால்,
ஆகக்கொள்ள ௸

என்.

என்றால், எனில், எனின்,
என்றாக்கால், என,
என்றபோதிலும், எனவே,
என்று, என்றே, என்கிலும்.
எனும், ஏன் எனின், என்ன
மென்றால் ௸.

இங்கே வருவாயானால் அந்தப் பணத்தை உனக்குக் கொடுப்பேன். ஆனால், என்ன? என் மீசையிலே மண்பட இல்லை. இரண்டாவது மூன்றாவது கொடு. யாராவது வருவார்கள். அவனென்கிலும் இவனென்கிலும் வருவான். கீழோராயினும் தாழ உரை [ஔ].

(*E*) THEY ENLARGE WORDS AND SENTENCES.

அவற்றுள், சொல்லை விரிப்பது ஆவே என்க.
வாக்கியம் தொடுப்பது எனவே என்க.

அவற்றுள், ஆ என்னும் வினை ஒரு சொல்லைப் பெயருரியாயும் வினையுரியாயும் விரித்துக் கூறுதலும், எனல் என்னும் வினை ஒரு வாக்கியத்தை ஒரு வாக்கியத்துள் தொடர்விப்பதும் பெருமிதம் வழக்கென்க.

உ-ம் :—கறுப்பாய் இருக்கின்றது காக்கை. அவன் நல்லவனாய் இருக்கிறான் என்றான் சாத்தன்.

(*F*) ஆய் MAY BE SUBSTITUTED FOR என்று.

அவற்றுள், என்றும் ஆயும் ஒரு வழக்கு என்க.

அவற்றுள் என்று என்னும் எச்சமும் ஆய் என்னும் எச்சமும் ஒன்றிற்குப் பதில் ஒன்று வழங்கும்.

உ-ம்:—விறுவிறென் றிருக்கிறது = விறுவிறுப்பா யிருக்கிறது. வந்தேன் என்று சொன்னான் = வந்ததாய்ச் சொன்னான்.

(*G*) VERBAL NOUNS FOLLOWED BY ஆ.

எழுவாய்த் தொழிற்பெயருக்கு இறுதியில்வருமே காரணப்பொருளை உணர்த்தும் ஆவே.

ஆதல் என்னும் வினை எழுவாயைத் தழுவிய தொழிற்பெயர் கொண்டு முடியுமெனில், ஒரு காரணத்தால் வந்த காரியம் எனப் பொருள்படும் என்க.

உ-ம்:—என் காரியம் இப்படி யிருக்கிறதால், இதைத் தங்களுக்கு எழுதிக்கொள்ளலானேன். தங்களுக்கு ஒரு சேவகன் வேண்டி யிருக்கிறதென்று சேழ்விப்பட்டுத் தங்களிடத்திற்கு வரலானேன்.

(H) VERBAL PARTICIPLES FOLLOWED BY ஆ.

செய்தென் எச்சம் தொடர்ந்து வருமேல்
முற்றுப் பொருளை மொழியும் ஆவே.

ஆதல் வினையானது செய்தென்னும் எச்சத்தைத் தொடர்ந்து வருமெனின் முற்றுப்பொருளை உணர்த்தும்.

உ-ம்:—நான் படித்தாயிற்று. செய்தாயிற்று.

(I) FIRST USE OF ஆம்: CERTAINTY.

கேட்போன் சொல்லுக்கு உறுதி வேண்டுமேல்
ஆம் என்று அறைகுதல் வழக்காகும்மே.

ஒரு வாக்கியத்தின் உண்மையை உறுதி கூற வேண்டுமாகின் ஆமென்ற சொல்லால் நடக்கும் என்க.

உ-ம்:—அவன் நல்லவனு? ஆம், நல்லவன்.

(J) SECOND USE OF ஆம்: UNCERTAINTY.

தனிப்பெயர் ஒன்றைத் தழுவி வரினும்,
முற்று வினையைத் தொடர்ந்து வரினும்,
கதைப்பொருள் என்று கழறும் ஆமே.

முற்று வினையின்றித் தனியே நின்று வாக்கியமாகும் பெயர்களைத் தொடர்ந்து வரும் ஆம் என்னும் சொல் கதைப்பொருள் என்று பொருள் கொள்ளும். அதுவே ஒரு வாக்கியத்தின் முற்றுவினைப் பயனிலையைத்தொடர்ந்து வருமெனில், கேள்விப் பொருள் என்று பொருள் கொள்ளும்.

உ-ம்:—கதைப்பொருள்:—ஒரு தேசத்திலே ஒரு ராஜாவாம். அவனுக்கு இரண்டு மந்திரிகளாம். பட்டணமாம் பட்டணமாம், இந்திர பட்டணமாம் [புகழ்].

கேள்விப்பொருள்:—அவன் வந்தானும். அவன் சொன்னுனும். நீ வருவாயாம். ஓய்! தேவராஜரே! கேளும். பூலோகத்தில் வீமராஜன் குமாரத்தியான தமயந்தி என்கிற பெண்ணுக்குச் சுயம்வரம் நாட்டி வைத்தான் என்று கேள்விப்பட்டேன். அரம்பை ஊர்வசி முதலான தேவதா ஸ்திரீகளும் அழகிலே அவளுக்கு ஒப்பில்லையாம் [நள].

அன்னையானவரும் இருவராம். முதல் அளித்த தந்தைகள் ஐவராம். பின்னை ஆசைகொடு குருகுலத்துரிமை பெறுவராம். ஒரு பிறப்பிலாம் மின்னையாம் முடி இல் ஐவரும் பரிவினொடு தனித்தனி விரும்புவார். என்னையாம் அவரோடு ஒரு குலத்தரசர் என்பது ஆண்மை இது என்கொலோ [பார].

(*K*) THIRD USE OF ஆம் : FITNESS.

நான்காம் வேற்றுமைப் பெயரொடுபுணரின்
தகுதிப்பொருளை உணர்த்தும் ஆமே.

நான்காம் வேற்றுமைப் பெயரைத்தழுவி வருமிடத்தில் ஆம் என்னும் முற்றுவினை தகுதிப்பொருளை உணர்த்தும்.

உ-ம்:—உழுது கிடந்த நிலத்தைப் பார்த்த மூன்று ஸ்திரீகளில் ஒருத்தி இது முகத்துக்காம் என்றாள்: ஒருத்தி வாய்க்காம் என்றாள்: ஒருத்தி பிள்ளைக்காம் என்றாள்.

(*L*) ALL THE ADVERBIAL FORMS OF ஆ.

ஆவும் ஆயும் ஆகவும் என்று இம்
மூன்றும் பயனிலைக்கு உரியே என்க,

ஆ, ஆய், ஆக, இம்மூன்றும் பயனிலைக்கு வினை யுரியாக வழங்கும். ஆகி எனின் தன் தொழிலை யுணர்த்தும் வினையாகும்.

உ-ம்:—நல்லவனாய் இருக்கிறான், பெண்ணாய்ப் பிறந்தவள், பெண்ணாகப் பிறந்தவள். நல்லவன் ஆகியிருக்கிறான்=நல்லவனாக மாறினான்.

☞ ஆ, தனியே வினையுரியாதல் சிறந்த வழக்கு என்பதற்கு உ.தாரணம்: சூட்டி எனது என்றிடும் சுமையைச் சுமத்திச் சுமையாளாக் கூட்டிப் பிடித்து வினைவழியே கூத்தாட்டினையே. சற்பனையாப் பாடுகின்றேன், கண்ணீரும் கம்பலையும், சொப்பனத்தும் காணேன் என் சொல்வேன் பராபரமே. பஞ்சாப்பறக்கும் நெஞ்சப்பாவியை நீ கூவி ஐயா! அஞ்சாதே என்று இன்னருள் செயவும் காண்பேனோ [தாய்]. தம்மிற்பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாம் தலை. சிற்றினம் அஞ்சும், பெருமை சிறுமை தான், சுற்றமாச் சூழ்ந்து விடும் [குற]. உடையார் இவர் என்று ஒரு தலையாப்பற்றிக் கடையாயார் பின்சென்று வாழ்வர் [நால்].

(*M*) USE OF THE PARTICLE ஆகிலும் : PAUCITY.

பெயரைத் தழுவிய இடைச்சொல்லாமேல்
வறுமைப் பொருளை உணர்த்தும் ஆகிலும்.

ஆகிலும் என்னும் சொல் பெயரைத்தழுவி வருமாகில் வறுமைப் பொருளை உணர்த்தும்.

உ-ம்:—ஐயனே உலகத்தை ஆளும் அரசர் இட்ட சாபத்துக்கு மறுசாபம் கொடுப்பதை எங்கே யாகிலும் கேட்டதுண்டா [பார]. சூழாது வண்டினம் சண்பகப் பூவைத் தொடாது. வெறும் பாழான நத்தத்து எருக்கினிற் பூ மணம் பற்றிப் புல்லும். தாழாத நட்பின் உறவு கொண்டாடத் தக்கார் மனையில், கூழாகிலும் இனிதே அச்சுதானந்த சோவிந்தனே [சோவி].

(*N*) USE OF THE PARTICLE ஆவது : SEPERATION.

மடிக்கின் ஆவது பிரிவுப்பொருள் உணர்த்தும்
எண்ணொடு கூடின் சுட்டெண்ணாகும்.

உ-ம்:—நானாவது வருவேன், அவனாவது வருவான். பத்தாவது புஸ்தகம்.

(*O*) USE OF THE PARTICLE ஆகட்டும் : HYPOTHESIS.

ஆகட்டும் என அவாநிலை முடிபே.

சில அவாநிலை வாக்கியங்கள் ஆகட்டும் என்று முடிந்து வரும்.

உ-ம்:—எந்தவஸ்து ஆகட்டும், காலாந்திரப் பிறவியாய் பேரிடப்பட்டிருக்கின்றதோ அந்த வஸ்துவுக்குச் சத்து என்று சொல்லப்பட்டது [சத்]. இன்றைக்கு ஆகட்டும் நாளைக்கு ஆகட்டும் என்று அலைக்கடிக்கிறான்.

(*P*) OTHER PARTICLES DERIVED FROM ஆ.

ஆவின் இடைகள் அளப்பிலவாகும்.

ஆதல் வினையால் தோன்றிய வேறு இடைச்சொற்களுக்கு அளவில்லை என்க.

உ-ம்:— ஆக்தும்:—நான் நேற்று வந்தவனுக்கும். அப்பா நான் கிழவனுக்கும். அப்படிப்பட்ட வாயுவேகக் குதிரை பணமில்லாமல் வந்தாலும் எனக்கு வேண்டாம் என்றார் பரமார்த்தகுரு. ஓகோ இந்த உத்தமசாதிக்குதிரை முட்டையை நீங்கள் விலை கொடுத்து வாங்

கத்தக்கவர்களா? இது வெகு விலைபெற்ற தாக்கும் [பர]. உடுக்கையிழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு (களைவதாக்கும் நட்பு).

(Q) VERBAL PARTICIPLES OF என் INTERCHANGEABLE.

செய்தும் செயவும் ஒன்றே எனற்கு.

எனல் வினையில், செய்து, செய, என்னும் ஈரெச்சங்களும் ஒரே பொருளை உணர்த்தும்.

உ-ம்:—திடீரென விழுந்தது = திடீரென்று விழுந்தது.

(R) VERBAL AND RELATIVE PARTICIPLES INTERCHANGEABLE.

ஈரெச்சங்களும் விரவும் எனற்கே.

எனல் வினையினது பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் விரவி ஒரு பொருளில் நடக்கும்.

உ-ம்:—கல்விப் பொருளிலும் செல்வப் பொருளிலும் குறைவில்லாதவர்களுக்கு உறைவிடமான பாடலி புரம் என்று ஒரு பட்டணம் இருந்தது [பஞ்]. இல்லறம் துறவறம் என (என்ற) இவ்விரண்டினுள்ளும் அடங்கி நிற்கும் எல்லா அறங்களும் மனத்தின் தூய்மையால் பேரும் பெருமையும் அடையும் [தொன்].

(S) PECULIAR USE OF என்க.

வாக்கியத்திறுதியில் என்க வானல்
அவ்வாறு அறைக என்பது பொருளாம்.

ஒரு வாக்கியத்தை என்க வென்று முடிக்குமிடத்தில் அவ்வாறு சொல்லவேண்டும் என்பது பொருளாம்.

உ-ம் :—எளிய விதிகளை யாவரும் அறிவர்.
அறிய விதிகளை அறையின் அறிவார் இல்லை.
அதனால், அவையால் பயனில்லை அதனால்
பயன்படு சிலவிதி பகர்ந்தனன் என்க [இலக்].

ஒரு பொருளைப் பெற்றவனைப் பெறுதி என வழிப்படுத்தல் வேண்டாமையானும் அதனைப் பெறுதற்கு அபேட்சையில்லாதானை வழிப்படுத்தல் கூடாமையானும் என்க [திருமு].

(*T*) PECULIAR USE OF என.

வாக்கிய முதலின் எனவே யானல்
சுழறிய யாவும் காரணம் என்ரும்.

ஒரு வாக்கியத்தின் முதலில் எனவே என்னும் தனி மொழி வருமாயின், மேலே கூறிய யாவையும் காரணமாகக்கொண்டு வேறு சில காரியம் சொல்லத் தொடங்கியதாகும்.

உ-ம் :—எனவே, திருமுருகாற்றுப்படை என்பதற்கு முத்தியைப் பெற்றவன் ஒருவன், பெறுதற்குப் பக்குவஞகிய ஓர் இரவலனைப் பெறும்பொருட்டு ஸ்ரீ சுப்பிரமண்ணிய சுவாமியிடத்தே வழிப்படுத்தலையுடைய பிரபந்தமெனப் பொருள் கூறுக.

(*U*) FURTHER USE OF என்று.

குணம் இசை குறிப்பென நன்னூல் கிளரிய
மொழிகளைத் தொடரும் என்றே என்க.

உ-ம்:—வெள்ளெனவிளங்கிற்று, திடீர் என்று விழுந்தது.

(*V*) THE SAME:

இரட்டைக் கிளவிக்கு என்றே என்க.

உ-ம் :—உலை தள தள வென்று கொதிக்கிறது.

இரட்டைக் கிளவிகள் : (க). பகபக, தகதக, திகுதிகு, மொகு மொகு. (ச). கச கச, பச பச, மொச மொச, குசு குசு, கொசு கொசு, புசு புசு, பொசு பொசு. (ட). கட கட, கொட கொட, சட சட, தட தட, தொட தொட, பட பட, மட மட, லொட லொட, விட விட, கடு கடு, கிடு கிடு, குடு குடு, கொடு கொடு, சிடு சிடு, திடு திடு, பொடு பொடு, வெடு வெடு, (ண.) கண கண, கொண கொண, தொண தொண, முணு முணு. (த). கத கத, சொத சொத, பொத பொத, குது குது, கொது கொது, வெது வெது, மொது மொது. (ம). கம கம, (ர). சர சர, குரு குரு, சுரு சுரு, துரு துரு, (ல). கல கல, கொல கொல, பல பல, பொல பொல, மல மல, வெல வெல, குலு குலு, சிலு சிலு, பிலு பிலு, மொலு மொலு. (ழ). கழ கழ, கொழ கொழ, வழ வழ, வாழ் வாழ். (ள). சள

சள, சொள சொள, தள தள, தொள தொள, நொள நொள, பள பள, மள மள, குளு குளு. (ற). கற கற, கொற கொற, சொற சொற, நற நற, பற பற, வற வற, கிறு கிறு, குறு குறு, சுறு சுறு, திறு திறு, நெறு நெறு, மொறு மொறு, விறுவிறு. (ன). மினு மினு.

நெடிலடுத்து: காழ் காழ், வாழ் வாழ்,

ஒற்றடுத்து: கெக்கு கெக்கு, சங்கு சங்கு, விண்ணு விண்ணு.

☞ இச்சொற்கள் ஒவ்வொன்றிற்கும் தகுந்த உதாரணங்கள் எடுத்துக் கூறுக.

இடைச் சொல்லியல்.

XXXVIII. உம்.

357. CONJUNCTIVE உம்:

எண்ணும்மானல் ஒருகால் இயலா.

ஒன்று, இரண்டு, பலவென்று அடுக்கிக் கூறுதல் எண்ணும்மையினது தன்மையாதலால், ஒரு வாக்கியத்தில் அது ஒரே இடத்தில் மாத்திரம் விரிதல் பெரும்பாலும் கூடா.

உ-ம்:—அவன் இவனும் வந்தார்கள் என வரா.

358. NOUNS AND SENTENCES MAY BE CONNECTED.

பெயரை அன்றி வாக்கியம் தம்மையும்
அடுக்கும் உம்மே, ஒருகால் விரியும்.

பெயர்ச்சொற்களை அடுக்கிக் கூறுவதன்றியும், ஒருகால் விரிந்தும் வாக்கியங்களையும் அடுக்கும், உம் இடை என்க.

உ-ம்:—நான் வந்தேன். அவனும் வந்தான் = நானும் அவனும் வந்தோம் = நானும் வந்தேன், அவனும் வந்தான்.

359. OBJECT AND ATTRIBUTE CANNOT BE CONNECTED.

பொருட்பெயரொடு குணப்பெயர் அடுக்கி
உம்மை கொடுத்துக் கூறுதல் கூடா.

பெரும்பாலும், பொருட்பெயரையும் குணப்பெயரையும் உம் இடையினல் இணைத்தல் கூடாது.

உ-ம்:—குதிரையும் குணமும் தெரியும் என வரா.

360. DIFFERENT CASES CANNOT BE CONNECTED.

வேற்றுமை வெவ்வேருக வருமேல்
உம்மை கொடுத்துக் கூறுதல் கூடா.

வேறு வேறு வேற்றுமைகளை உம் இடையால் இணைப்பதும் தமிழ்வழக்கல்ல.

உ-ம்:—அவனுலும் எனக்கும் ஆனகாரியம் என வரா.

361. NOUNS OF THE SAME CASE MAY BE CONNECTED.

ஆறையன்றி வேற்றுமை யனைத்தும்
அடுக்கிக் கூறற்கு அமையும் உம்மே.

ஆரும் வேற்றுமை ஒழிய மற்ற ஆறு வேற்றுமைகளையும் அடுக்கிக் கூறுமிடத்து உம் இடை நடக்கும் என்க.

உ-ம்:—என்னையும் அவனையும் கண்டான்.

362. உம் CANNOT GO WITH FINITE VERB.

முற்ருேடு இயலாது உம்மை என்க.

உம் இடை வினைமுற்ருேடு நடவாது.

363. NOR WITH RELATIVE PARTICIPLES.

பெயரொச்சங்களோடு இல்லை எண்ணும்மை.

உம் இடைச்சொல் முக்காலப் பெயரொச்சங்களோடும் நடவாது.

364. BUT IT MAY WITH VERBAL PARTICIPLES.

வினையெச்சங்களுக்கு உண்டு எண்ணும்மை.

செய்து, செய்ய, செய்யின் முதலிய வினையெச்சங்களோடு எண்ணும்மை கூடி நடக்கும் என்க.

365. EXPLETIVE உம் WITH THE ABLATIVE.

உடனிகழ் உருபோடு இயலும் உம்மே.

மூன்ரும் வேற்றுமையினது உடனிகழ்ச்சி யுருபோடு ஒன்றி யாதொரு பொருளுமின்றியே வரும் உம் என்க.

உ-ம்:—புருஷன் அந்தக் கபடத்தை அறிந்து மிகுந்த கோபத்தோடும் போய் அவளை வாய்சலிக்கத் திட்டி கைசலிக்கப் புடைத்தான் [பஞ்].

366. THE SAME WITH THE FIFTH CASE.

ஐந்தன் எல்லைக்கும் அமையும் உம்மே.

ஐந்தாம் வேற்றுமை எல்லைப்பொருளிலும் வேறு பொருளின்றி இல் உருபோடு ஒன்றிவரும் உம் என்க.

உ-ம்:—என்னிலும் பெரியன்.

367. THE SAME WITH PARTICIPLES.

நிச்சயம் பற்றிச் செய்தும் என்க.
ஐயம்பற்றிச் செய்தாலும் என்க.

செய்து என்னும் எச்சத்தில் உம்மை ஏற்றும்போது நிஸ்சயமான காரியத்தையும் நிகழ்ந்தனவாகிய சங்கதிகளையும் உணர்த்தும். செய்தால் என்னும் எச்சத்தில் ஏற்றிக் கூறும்போது, ஐயப்பொருளையும் எதிர்காலத்தில் நடப்பனவற்றையும் உணர்த்தும்.

உ-ம்:—முன் அடைப்பட்டிருந்தவர்களெல்லாரும் நக்கீரதேவரைப்பார்த்து, நாங்களெல்லாரும் நெடுங்காலமாக இப்பூதத்தின் சிறையில் அகப்பட்டிருந்தும், இப்பூதத்தாலே உணவு முதலிய பெற்றுப் பிழைத்திருந்தோம். இன்றைக்கு உம்மாலே இப்பூதத்துக்கு இரையாகும் காலம் சமீபத்தது என்று அழுதார்கள் [திருமு]. ஓய் சத்திய சந்தரோ! நீர் கேட்ட வரப்படியே கெட்டியாக நான் கொடுக்கிறேன். இதற்குச் சந்தேகமில்லை. சமுத்திரங்கள் கரைபுரண்டாலும், நட்சத்திரங்களெல்லாம் உதிர்ந்து போனாலும், நவக்கிரகங்கள் கதிதப்பி நடந்தாலும், மகமேருகிரி அசைந்திட்டாலும், உன்னுடைய பாக்கியம் தப்புகிறதேஇல்லை [நளச்]. திருக்குறள் என்னும் இந்நூலுக்குத் தருமர் முதலாகிய பதின்மர் உரைசெய்தார். அப்பத்து உரைக்குள்ளும், பரிமேலழகராலே செய்யப்பட்ட உரையானது, மற்றெல்லா, உரைகளினும் சிறந்ததா யிருந்தாலும், அதனை அறிதற்கு உரியவர் கற்றுவல்லுவர் சிலரோ யாவர்[விசா]. (இதனுள், இருந்தாலும் என்னும் எச்சம் வழுப்போலும்). இன்னம், முட்டைக்குள் கிடக்கும் குட்டியா யிருந்தாலும், இருசெவியும் விரித்துக்கொண்டு மீ [விநோ]. (இதனுள்ளும், அவ்வெச்சம் வழுவே).

368. The same with the Infinitive.

செய்யவும் எனவே உடனே என்க.

செய்ய என்னும் எச்சத்தோடு உம்மிடைச்சொல்லைக் கூட்டில், உடனே என்னு விரைவுப்பொருளை உணர்த்தும்.

உ-ம்:—என்னைக் காணவும் அவன் ஓடிப்போனான் = என்னைக் கண்டவுடனே ஓடிப்போனான்.

369. The same with other Conjunctions.

வாக்கியத் தலைமொழி எவையோ அவற்றோடு
உம்மை தனியே வருதலும் உளவே.

அன்றி, அல்லாமல், பின், முன், மேல், ஆனால், முதலிய சொற்கள் இரண்டு வாக்கியங்களை ஒன்றாக்கி வைக்கும் தலைமொழிகளாய் வருமிடத்தில், அம்மொழிகளோடு உம்மை தனியே வரும் என்க.

370. உம்s of different meaning.

முற்றும் ஒன்றும் எண்ணும் ஒன்றும்
இரண்டுங் கூடி வருதலும் கூடா.

எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை தெரிநிலை, ஆக்கம் என எண்வகையான உம்மைப்பொருளில் ஒருபொருளை ஒரு பொருளோடு விரவிக் கூறுதல் கூடாதென்க.

உ-ம்:—அவனும், நாங்களெல்லாரும் இதைச் செய்தோம் எனவரா. எவ்வகையும் எந்நிலைமையும் உள்ள மனிதர்களுக்காக நாங்கள் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம் [செப]. (இதில் முற்றெண் இல்லாமையால், வழு).

371. உம் with Interrogatives.

வினாவியபெயரின் ஈற்றில் வருமேல்
முற்றுப் பொருளை உணர்த்தும் உம்மே.

சொல்லால் வினாவென முன் காட்டிய வினாச்சொற்களோடு ஒன்றி வருமெனின் முற்றுப்பொருளை உணர்த்தும் உம்மை என்க.

உ-ம்:—எவன் வருவான்? எவனும் வருவான்.
யார் வருவார்கள்? யாரும் வருவார்கள்.

372. உம் WITH NUMERAL NOUNS.

எண்ணியபெயரின் ஈற்றில் வருமேல்
முற்றுப் பொருளை உணர்த்தும் உம்மே.

எண்பெயர்களின் இறுதியிலும் உம்மை நடக்குமெனின், முற்றுப்பொருளை உணர்த்தும் என்க.

உ-ம்:—பத்துப்பேர் வந்தார்கள், பத்துப்பேரும் வந்தார்கள்.

373. உம் WITH UNIVERSALS.

அடங்கலுக்கு இனமொழி அனைத்தின் ஈற்றிலும்
முற்றுப்பொருளை உணர்த்தும் உம்மே.

சகல, அனைத்து, அடங்கல், முழுமை முதலிய முற்றுப்பொருளை உணர்த்திய சொற்களோடெல்லாம் உம்மை நடக்கும் என்க.

உ-ம்:—எல்லாரும் வந்தார்கள், சகலமும் தெரியும், அடங்கலும் தெரியும், முழுதும் கொடுத்தான்.

374. உம் WITH UNIVERSAL NEGATIVES.

எதிர்மறை வாக்கியம் முற்றும் ஏற்பின்,
ஒருவழி உடன்பாடு உணர்த்தும் என்க.

மேலை விதியிற் கூறிய முற்றுப்பொருளை உணர்த்திய சொற்களோடு எதிர்மறை வினை வந்து முடியுமேயாகின், ஒருவகையில் உடன்பாட்டுப் பொருளை உணர்த்துமென்க.

உ-ம்:—எல்லாரும் வாரார்கள் = சிலர் வருவார்கள்.
ஊர் அடங்கலுக்கும் இது தெரியாது = சிலருக்குத் தெரியும்.

XXXIX. ஏ.

375. EXPLETIVE AND EMPHATIC ஏ.

மூன்று ஐந்து ஏழில் ஏ பொருளில்லையே
மற்றை வேற்றுமைகளில் தேற்றம் அதுவே.

ஏகார இடைச்சொல்லானது மூன்றாம் ஐந்தாம் ஏழாம் வேற்றுமைகளில் பொருளில்லாமலே உருபுகளோடு ஒ,

ன்றி வரும். மற்ற வேற்றுமைகளின் உருபுகளோடு கூடி நடக்குமிடத்தில், தேற்றப்பொருளை உணர்த்துமென்க.

உ-ம்:—கல்லால் அடித்தான் = கல்லாலே அடித்தான். பொன்னிலே செய்த நகை. காட்டகத்தே நிற்கும் மரம். நானே வந்தேன், அவனையே அடித்தேன். அவனுக்கே கொடுத்தேன்.

376. The same.

மூன்று ஐந்து ஏழில் தேற்றமானல்
ஏயை மடித்துக் கூறுதல் வழக்கே.

மூன்றும் ஐந்தாம் ஏழாம் வேற்றுமைகளில் தேற்றப் பொருளை ஏற்றிக் கூறவேண்டுமெனில், ஏகாரத்தை மடித்துக் கூறுதல் வழக்கென்க.

உ-ம்:—கல்லாலேயே அடித்தான், பொன்னிலேயே செய்த நகை, காட்டிலேயே நிற்கும் மரம்.

377. Expletive, in other instances.

இடப்பெயர் திசைப்பெயர் சிற்றிலக்கப் பெயர்
இவற்றின் ஈற்றில் பொருள் இலை ஏயே.

இடப்பெயர்களிலும் திசைப் பெயர்களிலும் சிற்றெண்களைத் தழுவி வரும் பேரெண்களிலும் இறுதியாய் வரும் ஏகாரத்திற்குப் பொருள் இல்லை என்க.

உ-ம்:—எங்கே இருக்கிறன். முன்னே போனன். தெற்கே போனன். கலனே தூணி, அறையே அறைக்கால், மூன்றேகால். ஒன்றுக்குக் கீழ்ப்பட்டதைச் சிற்றெண் என்றது. அதனல், பத்தே ஒன்று என வரா.

378. ஏ with Finite Verbs.

ஏயைக்கொண்டு முற்றை முடிப்பின்
நிற்குத் தெரியும் என்றற் போலும்.

முற்றுவினைப் பயனிலையில் வரும் வாக்கியங்களில் வினைமுற்றோடு ஏகாரத்தைக் கூட்டிச் சொல்லுதல் யாது காரணத்தாலெனில், அவ்வாக்கியத்தின் பொருள் முன்னிலையோருக்கு முன்னமே தெரிந்திருந்த விசேஷமன்றி நூதனமல்ல என்று காட்டுவான் என்க.

உ-ம்:—நேற்று வந்தானே மனிதன், அவன் பெயர் என்ன ? நீ சொல்லியிருக்கலாமே = அதைச் சொல்ல வேண்டிய ஞாயம் உனக்குத் தெரிந்திருக்கிறதல்ல

வா? அதுவு மல்லாமல், இந்தக் குடை யிருக்கின்றதே: அஃது அனேக மூங்கிற் பிளாச்சுகளால் குறுக்கும் நெடுக்குமாக போட்டுக் கட்டிக் குடை யென்றும் சொல்லப் பட்டுக்கொண்டிருக்கின்றது [சத்].

பிரகஸ்பதி பகவான் ஒரு பிராமணப் பிள்ளையாக வடிவு கொண்டு எதிரே வந்து, கட்டைமேல் வைக்கப்பட்டிருக்கிறதே இது என்னவென்று கேட்க, சாஸ்திரி சோதிஷ புஸ்தகம் என்று சொன்னான் [விநோ].

379. ஏ WITH PARTICIPLES.

எல்லாவினை எச்சங்களிலும்
இயலும் ஏயைத் தேற்றம் என்க.

எல்லா வினையெச்சங்களின் இறுதியில் நடக்கும் ஏகாரமானது தேற்றப் பொருளையே தரும் என்க.

உ-ம்:—செய்யவே போனான், செய்தே போனான் செய்தாலே போதும்.

380. ஏ EMPHATIC, BY PRONUNCIATION.

இசைத்திரிபானும் தேற்றம் ஏயே.

சில வாக்கியங்களில் ஏகாரம் பொருளில்லாத இடைச்சொல்லாகவே வரினும், உச்சரிப்பினுடைய பேதத்தினாலே தேற்றப்பொருள் பெற்று நடக்கும் என்க.

உ-ம்:—அப்படியே சொன்னான்.

XL. ஆ AND ஓ.

381. ஆ, AN INTERROGATIVE PARTICLE.

உருபால் வினாவுக்கு ஆவே வழக்காம்.

சொல்லால் வினா, உருபால் வினா என விதந்த இருவகை வினாக்களில் உருபால் வினாச்சொற்களும் உருபால் வினாவாக்கியங்களும் ஆகாரத்தையேகொண்டு முடிதல் தற்காலவழக்கென்க. மற்றை உருபுகளில் ஏகாரம் செய்யுட்கே அமையும். ஓகாரம் மிகுதியாய் வழக்கில் வரமாட்டா என்று அடியிற் காட்டுதும்.

உ-ம்:—ஓ தேவர்களே! நளமகராஜா நம்மைப்பார்க்கிலும் அதிக ரூபமுள்ளவனா? நம்முடைய சௌரிய பராக்கிரமங்களிலேயும் அதிகமானவனா? அதை ந

ண்ணிப் பாராமல் அந்தப்பெண் செய்ததைப் பார்த்தீர்களா? மனுஷர்கள் முன்னே உங்களைப் பங்கப்படுத்திவைத்து நளமகராஜாவைத்தானே கலியாணம் பண்ணினாளல்லவா? உங்கள் மனோபாவம் அறிந்திருந்தும், இப்படிச்செய்தாள் பார்த்தீர்களா. அந்த நளன் அத்தனை அதிகாரமுள்ளவனோ? அவன் பிடித்ததே தனுசா? அவன் பிடித்ததே குடையா? நல்லது, ஆகட்டும். என்னுடைய பராக்கிரமத்தை அவன் அறியானோ? [நள].

382. ஒ, AN ALTERNATIVE PARTICLE.

ஒவின் வழக்கை ஊன்றிப் பார்க்கின்
ஐயப்பொருளே மிகுவழக்கு என்க
வினாப்பொருள் தன்னைப் பழம்பொருள் என்க.

ஓகாரத்திற்குக் கூறப்பட்ட பொருளில், வழக்குக்கு உரியது ஐயப்பொருளும் வினாப்பொருளுமாகும். அவற்றுள் வினாப்பொருள் பழமை வழக்காகும், தற்கால வழக்குக்குப் பொருந்தாது என்க.

உ-ம்:—அதுவோ, இதுவோ, எதுவோ என்று மயங்கினான். அவனோ சொன்னான்=அவனா சொன்னான்.

383. WHEN IT IS AN INTERROGATIVE.

கடவுளைத் தன்னை முன்னிலையாக
வினாவின் ஒவே பெருவழக்கு என்க.

ஆகினும், கடவுளையாகினும் தன்னையாகினும் முன்னிலையாகவைத்துப் பேசுமிடத்தில், ஓவே சிறந்த வினா விகுதி என்க.

உ-ம்:—ஈங்கு ஆர் எனக்கு நிகர் என்னப் பிரதாபித்து இராவணாகாரமாகி, இதையவெளி எங்கணும் தன்னரசு நாடு செய்திருக்கும் இதனோடு எநேரமும் வாங்கா விலா அடிமை போராடமுடியுமோ மௌனோபதேச குருவே! மந்தரகுருவே யோக தந்திரகுருவே மூலன் மரபில்வரு மௌனகுருவே [தாய்].

384. ஒ WITH ALL THE CASES.

எல்லா வேற்றுமை உருபோடு இயலும்
ஐயப் பொருளை உணர்த்தும் ஒவே.

ஐயப் பொருளை உணர்த்துமாகின் ஆறும் விளியும் ஒழிந்த எல்லா வேற்றுமை உருபுகளோடும் நடக்கும் ஓகாரம் என்க.

உ-ம்:—நானோ வந்தேன், என்னையோ சொன்னான், அவனுக்கோ கொடுத்தான். உன்னாலேயோ முடியும்.

385. ஓ IN MODAL PROPOSITIONS.

எவ்வாறு அவ்வாறு, எப்படி அப்படி
எவையோ அவையே, எங்ஙனம் அங்ஙனம்,
எனும் இத்தொடருள்முதலுக்கு ஓ வர
இரண்டொன்றாகும் வாக்கியம் என்க.

இதற்கு உரையும் உதாரணமும் 244 - ல் காண்க. இவைகளில், ஓகாரமானது வினாவின் ஈற்றில் வருதலுமன்றி முதல் வாக்கியத்தின் ஈற்றிலும் வரும் என்க.

உ-ம்:—அதுகள் நாம் எப்படி வளர்க்கின்றோமோ, எப்படி பழக்குகின்றோமோ, அப்படிக்கெல்லாம் இணங்கத்தக்கவைகள் ஆகும் என்று மட்டி சொன்னான் [பரமா]. சத்த விஷயத்தினால் மானுக்கு எப்படி ஹானி வந்ததோ, பரிச விஷயத்தால் யானைக்கு எப்படி ஹானி வந்ததோ, ரூப விஷயத்தால் விட்டிற்பூச்சிக்கு எப்படி ஹானி வந்ததோ, கந்த விஷயத்தினால் வண்டுக்கு எப்படி ஹானி வந்ததோ, இப்படியே இந்தப் பாகியேந்திரியங்கள் விஷயங்களிற் சென்றால், மகத்தான ஹானி வருமான படியினாலே, இந்தப் பாகியேந்திரியங்கள் விஷயங்களிற்போய் விழாமல், அவஸ்ஸியம் நிற்கிரகம் செய்யவேண்டியது சித்தம் [சத்த].

386. ஓ WITH FINITE VERBS.

முற்றொடு கூடினும் ஐயம் மிகுபொருள்.

முற்றை யடுத்துவரினும் ஓகாரத்திற்கு மிகுதியாய் வழக்கில் வருகின்ற பொருள் ஐயப்பொருள் என்க.

உ-ம்:—ஓ அண்ணா! நீ ஒரு நாளாகிலும் நீதி சாஸ்திரங்களைக் கேட்க இல்லையோ? பெரியோர்கள் சகவாசம் பண்ண இல்லையோ? நீ பெண்களுடன் பிறக்க இல்லையோ? நான் உனக்குத் தங்கை, மகா பதிவிரதை. ஆகையினாலே, உனக்கு இப்பேர்ப்பட்ட துர்ப்புத்தி வேண்டாம் [நள].

387. OTHER USES OF ஒ.

முற்றிலும் வினை எச்சங்களிலும்
அவாநிலைப்பொருளாய் வரும் ஒ என்க.

வினைமுற்றின் ஈற்றிலும் வினையெச்சங்களின் ஈற்றிலும் ஒகாரத்தை ஏற்றிக் கூறின் தொகைநிலையாயுள்ள வேறு வாக்கியங்களை அவாவி நிற்கும் வாக்கியங்களாகும் என்க.

உ-ம்:—நான் வந்தேனோ (பயமுறுத்தியது). அங்கே போனேனோ (ஏதோ ஒருகாரியம் நேரிடும்). பார்க்கவோ (வெகு அழகாயிருக்கும்). வந்தையோ (அடிபடுவாய்).

விண்ணகத்து அமரர் அளப்பிலர் என்கோ! விஞ்சையர் அளப்பிலர் என்கோ! மண்ணகத்து அரசர் அளப்பிலர் என்கோ! வனிதையர் அளப்பிலர் என்கோ! பண்ணமை களிறு கூந்தல் மான் தடந்தேர் பதாதிமற்று அளப்பிலர் என்கோ! எண்ணமுற்று உரைக்கின், இத்துணை என்ன எம்மனோர்க்கு இயலு மாறு அரிதே [நை]. பங்கயக்கண்ணன் என்கோ! பவளச் செவ்வாயன் என்கோ! செங்கதிர் முடியன் என்கோ! திருமரு மார்பன் என்கோ! சங்கு சக்கரத்தான் என்கோ! சாதி மாணிக்கத்தையே [திருவாய்].

388. ஒ WITH INTERROGATIVES.

வினாப்பெயர் ஈற்றில் இயலும் ஒவே
ஐயப்பெயராய் அறையும் என்க.

சொல்லால் வினாவென்று காட்டிய சொற்களின் ஈற்றிலும் ஒகாரம் வந்து ஐயப்பெயரை உணர்த்தும் என்க.

உ-ம்:—எவனோ வந்தான். எங்கேயோ போனான். யாரையோ கேட்டான்.

XLI. வேறு இடைகள்.

389. LOCAL PARTICLES.

இடமும் பொழுதும் உணர்த்திய இடைகள்
சிற்சில வேற்றுமை உருபை ஏற்பதும்,
நான்கின்பெயரையும் ஆறன்பெயரையும்
எச்சங்களையும் தழுவலும் உளவே.

இடத்தையும் காலத்தையும் காட்டிய தத்தம்பொருளுடை இடைச்சொற்கள் பயனில்லாது வேற்றுமை உருபு

களை அடைதலுமன்றி, நான்காம் வேற்றுமைப்பெயரையும் ஆரும் வேற்றுமைப்பெயரையும் தழுவியும், பெயரையொப்ப முக்காலப்பெயரெச்சங்களை ஏற்றும் நடக்கும் என்க.

உ-ம்:—முன், முன்னால், முன்னுக்கு, முன்னிலும் (வேற்றுமைப்பட்டது). அதற்குமுன், அதன்முன் (வேற்றுமைப்பெயரைத் தழுவியது). வரும்முன், வந்தபின் வருகிறபோது (பெயரெச்சங்களைத் தழுவியது).

390. Their Participial Construction.

எல்லா எச்சத்து இயலா சில இடைகள்.

சில இடைச்சொற்கள் ஒரு காலத்து எச்சத்தைமாத்திரம் தழுவுமன்றி, எல்லா எச்சங்களிலும் நடவா.

உ-ம்:—வரும்முன் (வந்தமுன், வருகிறமுன் எனவரா). வந்தபின் (வருகிறபின் எனவரா). தொழும்தொறும் (தொழுததோறும், தொழுகிறதோறும் எனவரா).

391. The same.

வெவ்வேறு எச்சத்து இயலுமாகின்
வெவ்வேறாகும் இடையுடை பொருளும்.

ஒரு இடைச்சொல்லே பல பெயரெச்சத்தைத் தழுவி நடக்கப் பெறுமெனின், எச்ச விகற்பத்தோடு பொருளும் விகற்பமாகும்.

உ-ம்:—

(*A*) படி with the Present Participle.

நிகழ்வின் எச்சம் ஏற்று வருமேல்
விதத்தை உணர்த்தும் படி என் இடையே.

உ-ம்:—நான் சொல்லுகிற படி செய்.

(*B*) படி with the Past Participle.

இறப்பின் எச்சம் ஏற்றுவருமேல்,
நிலையை உணர்த்தும் படிஎன் இடையே.

உ-ம்:—நின்றபடியே சொன்னான்=நின்ற நிலையில் இருந்துகொண்டு சொன்னான். சந்தனுமகாராஜன் கங்கையை நினைத்துக்கொண்டு நதியருகில் நிற்கும்போது, கங்கையின் மத்தியில் ஒரு வாலிபன் வில் பிடித்தபடி அம்பு தொடுத்தபடி தோன்றினான் [பார]. வீஷ்மன் தேரில் இருந்தபடிபரசுராமமூர்த்திக்கு அஞ்சலி செய்து சொல்லுகிறான் [பார].

(C) படி WITH THE FUTURE PARTICIPLE.

எதிர்வின் எச்சம் ஏற்றுவருமேல்
காரணம் நிகழ்த்தும் படிஎன் இடையே.

உ-ம்:—நினைக்கும்படி இருந்தது. வரும்படி ஆச்சுது. அப்போது நமது கவர்னர்அவர்களுடைய துணைவராகிய (Aide Camp Captain H. Roberts) காப்டன் ராபர்ட்ஸ் துரையவர்கள் பாடும்பொழுது, அவர் குரலோசையானது மணியோசையோ, மகடிக்குழலோசையோ, சிலம்போசையோ, சங்கோசையோ, என்று கருதும்படி இருந்தது [விநோ].

392. EXCEPTIONS.

இடையினாலே தழுவியபெயர்கள்
வேற்றுமைப்படாஅ சிற்சிலவழக்கே.

சில இடைச்சொற்கள் வேறுபெயரைத் தழுவி நிற்பதில், தழுவப்பட்ட பெயர்கள் வேற்றுமைப்படாமல் எழுவாய்ச் சந்தியாகவே நடக்கும்.

உ-ம்:—நாள்தோறும். தாதுகு சோலைதோறும், சண்பகக் காடுதோறும், போது அவிழ் பொய்கைதோறும், புதுமணல் தடங்கள்தோறும், மாதவி வேலிப்பூகவனந்தொறும், வயல்கள்தோறும், ஓதிய உடம்புதோறும் உயிரென, உலாயதன்றே [கம்].

XLII. வாக்கியத் தனிமொழிகள்.

393. CONJUNCTIONS: THREEFOLD.

முதல் இடை கடை என தனி முப்பாற்றே.

தனிமொழிகளாகிய இடைச்சொற்கள் முதற் றனிமொழி என்றும் இடைத் தனிமொழி என்றும் இறுதித் தனிமொழி என்றும், மூன்று வகைப்படும்.

394. MEDIAL CONJUNCTIONS.

சொற்களை இணைப்பது இடைத்தனி என்க.

பெயர்ச்சொற்களையேனும் வினைச்சொற்களையேனும் இரண்டு சொல்லை இணைப்பிப்பது இடைத்தனிமொழியாம்.

உ-ம்:—அவனும் இவனும் வந்தார். கற்கவும் கேட்கவும் போனான்.

395. Final Conjunctions.

வாக்கியத்து இறுதியில் வரும் கடைத்தலையே.

இரண்டு வாக்கியங்களை ஒன்றாய்த் தொடர்விக்குமிடத்தில் அவைகளைத் தொடர்விக்கும் தலைமொழி முதல் வாக்கியத்தின் இறுதியில் வருமானால், அதை இறுதித் தலைமொழி என்க.

உ-ம்:—அவன் வருவானானால் இதைக் கொடுப்பேன்.

396. Initial Conjunctions.

வாக்கியத் தொடக்கமாம் முதற்றலையே.

இரண்டு வாக்கியங்களைப் பொருள் நோக்கி ஒன்றாய்த் தொடர்விக்குமிடத்து, அவைகளைத் தொடர்விக்கும் மொழி, இரண்டாவது வாக்கியத்தின் தொடக்கத்தில் வருமானால், அதை முதற் றலைமொழி என்க.

உ-ம்:—அவன் வருவான். ஆனால், இதைச் செய்யான்.

397. Further Classification of Conjunctions.

கூட்டும் பிரிப்பும் விரோதமும் என்று,
ஞாயமும் முடிவுமாம் விவகாரம் என்று,
முதற்றலை, கடைத்தலை, நாற்பாற்று என்க,

மேற் கூறிய முதற்றலை கடைத்தலை என்ற இருவகைத் தலைமொழிகளும் கூட்டுத்தலை, பிரிப்புத்தலை, விரோதத் தலை, விவகாரத்தலை என ஒவ்வொன்றும் நான்குபகுதியி னையுடையது. அதனுள், விவகாரத் தலையானது ஞாயம் தீர்மானம் என இரண்டு கூறினையுடையது.

உ-ம்:—முதற்றலை.

(1) கூட்டு: அவன் வந்தான், அன்றியும் இதைச் செய்தான்.

(2) பிரிப்பு: அவன் வருவான், அல்லது போவான்.

(3) விரோதம்: அவன் வருவான், ஆகிலும் இதைச் செய்யான்.

(4) விவகாரம்:
- காரணம்: குளம் நிறைந்திருக்கும். ஏனென்றால், மழை பெய்திருக்கிறது.
- தீர்மானம்: மழை பெய்திருக்கிறது. ஆதலால் குளம் நிறைந்திருக்கும்.

ஏற்றுத்தளை.

(1) கூட்டு: அவன் வந்ததுமல்லாமல், இதையும் சொன்னான்.

(2) பிரிப்பு: அவன் வருவானோ போவானோ.

(3) விரோதம்: அவன் வருவானேயன்றி இதைச்செய்யான்.

(4) விவகாரம்: { காரணம்: குளம் நிரம்பி யிருப்பதேனென்றால் மழை பெய்திருப்பதால். தீர்மானம்: மழை பெய்திருப்பதால், குளம் நிரம்பி யிருக்கும்.

398. DIFFERENT USES OF THE SAME CONJUNCTION.

முதலுக்காகும், இடைக்கும் ஆகும்,
கடைக்கும் ஆகும் சில தளைமொழியே.

அடியிற்கூறிய தளைமொழிகளிற் சில வாக்கியங்களின் முதலிலும், சில முதலிலும் இடையிலும், சில முதல் இடை கடை மூவிடங்களிலும் பிரயோகமாகுமென்க.

உ-ம்:—உம்: அவனும் இவனும் வந்தார் [இடைத்தளை]. அவன் சொல்லவும் இவன் போனான் [இறுதித்தளை]. ஆனால்: அவன் சொல்வான். ஆனால் செய்யான் [முதல்]. அவன் சொல்வானானால், இதைச் செய்வேன். [இறுதி]. என்றாலும்: அவன் என்றாலும் இவனென்றாலும் இதைச் செய்யத்தகும் [இடை]. அவன் நல்லவன்தான். என்றாலும் இதைச் செய்யத்தகாது [முதல்]. அப்படிக்கு இருக்குமென்றாலும், நன்றாய் யோசிக்கவேண்டியது [இறுதி].

399. EXAMPLES OF CONJUNCTIONS.

தளைமொழி சிலபல அறைகுனன் கேணீ, அவற்றை,
முதலிடைகடையினும் வழங்கிப் பார் நீ.

தளைமொழி இப்பாலினவென்று காட்டுவான் சில பல உதாரணங்கள் கூறுகின்றாம். அவற்றை மேற் கூறியவாறு ஒவ்வொன்றையும் முத லிடை கடை மூவிடங்களினும் தளைமொழியா வழங்கி பார்த்துக்கொள்க.

(1) ஆல்: யாதானும் நாடாமால் ஊராமல் என் ஒருவன். சாந்துணையும் கல்லாதவாறு.

(2) ஆகில், ஆகிலும்; ஆனால், ஆனாலும், ஆனபடியினால் ஆனபோதிலும், ஆனபோதைக்கும், ஆகட்டும், ஆக, ஆகவே, ஆய், ஆகி, ஆனதாய் ஷை.
(3) என, எனின், என்றாலும், என்க, என்னினும், என்கிலும், எனவே, என்னவே, என்றபோதிலும், என்றபோதைக்கும், ஏன் என்றால், ஏன் எனில், ஏனென்றுகேட்டால், ஷை
(4) இருக்க, இருக்கவே, இருந்தும், இருந்தாலும், இருந்தபோதிலும், அப்படி இருக்க, ஷை.
(5) அன்றி, அன்றியும், அல்லாமலும், அல்லவென்றால், அல்லவானால் ஷை.
(6) இன்றி, இன்றியும், இல்லாமலும், இல்லையானால், இல்லாதேபோனால், இல்லாவிட்டால், இல்லையா, ஷை.
(7) ஒழிய, தவிர, கூட, போல், போல, ஷை.
(8) அப்பால், அதன்பின், இன்னும், இனி, இனிமேல், அதற்குமேல், மேலும், ஷை

XLIII. அவாநிலை வாக்கியங்கள்.

இவ்வியலை வாக்கிய இலக்கணத்திற் கூறவேண்டியதாயினும், தமிழ்ப்பாஷையின் வினை எச்சங்களும் தனிமொழிகளும் பலவாயும் பல பொருளிலும் வருதலினால், அவை தெளிவுறுமாறு இதனை இவ்விடத்திற் கூட்டி எழுதினமென்க.

400. Dependent and Principal Sentences.

ஒன்றேடொன்று பொருளால் ஒன்றி
இரண்டு வாக்கியம் வருமேல், அவற்றுள்
முதலில் நடப்பது அவாநிலை என்க.
ஈற்றில் நடப்பது பொருள்நிலை என்க.

இரண்டு வாக்கியங்கள் கூடி ஒன்றையன்றி ஒன்று பொருள் முற்றுகாது வருமிடத்தில் முதல் வாக்கியத்தை அவாநிலை என்றும் அது தழுவி நிற்கும் வாக்கியத்தைப் பொருள் நிலை வாக்கியமென்றும் கூறுக.

உ-ம்:—மழை பெய்தால் நதி பெருகும் என, மழை பெய்தால் என்றும் நதி பெருகும் என்றும் வந்த இ

ண்டு வாக்கியங்களில் முதல் வாக்கியம் தனியே நின்று பொருள் முற்றாகாமல் வேறு வாக்கியத்தை அவாவிநிற்றலால் அதை அவாநிலை என்றும், அவ்வாக்கியத்தின் பொருள் இரண்டாம் வாக்கியத்தில் முற்றுப்பெற்று நிற்றலால் அதைப் பொருள்நிலை வாக்கியம் என்றும் கூறினும்.

401. FIVE CLASSES OF DEPENDENT SENTENCES.

காரணம் பாவனை எதிர்மறை சபதம்
உபமானம் என்ன அவாநிலை ஐந்தே.

காரண அவாநிலை, பாவனை அவாநிலை, எதிர்மறை அவாநிலை, சபத அவாநிலை, உபமான அவாநிலை என்று அவாநிலையை ஐந்தாக்குக.

402. CAUSE.

இறந்தகாரணம் எதிர்வுகாரணம் என
காரண அவாநிலை இருபாற்றென்க.

இறந்த காலத்தைப்பற்றி வரும் காரணமும் எதிர்காலத்தைப்பற்றி வரும் காரணமும் என காரண அவாநிலை வாக்கியங்கள் இருவகையாகும்.

உ-ம்:—இறந்தகாரணம்: மழைபெய்து குளம் நிரம்பியது. மழைபெய்யக் குளம் நிரம்பியது.

எதிர்வுகாரணம்: மழைபெய்தால் குளம் நிரம்பும், மழைபெய்யின் குளம் நிரம்பும். மழைபெய்து குளம் நிரம்பும். மழைபெய்யக் குளம் நிரம்பும். மழை பெய்யுமானால் குளம் நிரம்பும். மழை பெய்யுமாகின் குளம் நிரம்பும். மழை பெய்யுமேல் குளம் நிரம்பும். மழை பெய்யுமெனில் குளம் நிரம்பும் ௸.

403. HYPOTHESIS.

பாவனையானும் அவாநிலை உளவே.

ஒன்றை ஒன்றாய்ப் பாவிக்குமிடத்தில் மற்றொன்று என்னவாகும் என்று கருதிய வாக்கியத் தொடரில் முதல் வாக்கியத்தை பாவனை வாக்கியம் என்று கூறலாகும். உலக்கை உரலானால், உரல் என்னவாம் என்ற பழமொழியுள் உரலாயிற்று என்று இறந்தகாலத்தையாவது, உரலாகு

மென்று எதிர்காலத்தையாவது உணர்த்தாது உலக்கை உரலாகிறதென்று பாவித்தால் உரல் என்னமாகுமென்று பாவிக்கவேண்டியதென்று பொருள்பட்டு நிற்பதால் பாவனை அவாநிலை என்றது.

உ-ம்:—இரண்டு குதிரை முன்னூறு ரூபாயானால், மூன்று குதிரையின் விலை என்ன. நான்கு பழத்தை இரண்டு பேருக்குக் கொடுத்தால், எட்டுப்பழம் எத்தனை பேருக்கு வரும். அவன் இவ்விடத்திலிருந்தால் இன்னின்னபடி சொல்வேன். சிறு குட்டியாய் இருக்கும்போதே இப்படிக் கடுமையாய் ஓட்டம் பிடித்தால், இனிமேல் வளர்ந்து பஞ்சாரமாகிறபோது எப்படிப் பறக்கமாட்டாது [பரமா]. இக்கோணம் அக்கோணத்திற்குச் சரியில்லையாகின், ஒன்று சிறிதாயிருக்கவேண்டும், ஒன்று பெரிதாயிருக்கவேண்டும். விளா ஒன்றுபோடச் சுளை ஒன்று முளைக்குமா [பழ]. ஆமணக்கு விதைத்தால் ஆச்சா முளைக்குமா? [பழ]. நீட்டிய சடையுமாகி, நீர்மூழ்கி நிலத்தில் சேர்ந்து, வாட்டிய உடம்பின் யாங்கள் வரகதி விளைக்கும் என்னில், காட்டிடைக் கரடிபோகிக் கயம் மூழ்கிக் காட்டுள் நின்றும் வீட்டினை விளைக்கவேண்டும் வெளிற்றுரை விடுமின் என்றான் [சிந்]=சடைகளை வளர்த்தும் ஸ்நானம் செய்தும் காட்டில் நுழைந்து உடம்பை ஒறுத்து வாட்டியதினால், நாங்கள் வீட்டைவோம் என்பீர்களாகில், காட்டினிடத்தே உள்ள கரடிகளும் நீரிற் குளிப்பதினாலும் மயிரை வளர்ப்பதினாலும் வீட்டைய வேண்டுமல்லவோ? ஆகையால் புத்தி சூன்யமான வார்த்தைகளை விட்டுவிடுங்கள் என்றான் சீவகன். ஃஎய்தற்கரிய யாக்கை தனக்கு எய்திற்றென்றால் அது கொண்டு, செய்தற்கு அரிய அறங்கள் பல செய்து துயர் கூர் பிறவியினின்று உய்தற்கு ஒருமை பெற ஒண்ணாது உழல்வோன் உடம்பு பொற்கலத்தில் பெய்தற்குறிய பால் கமரிற் பெய்வதொக்கும் என்பரால் [பிரபு].

ஆக்குவது உளதெனில் அறத்தை ஆக்குக,
போக்குவது உளதெனில் வெகுளி போக்குக.
நோக்குவது உளதெனில் ஞானம் நோக்குக.
காக்குவது உளதெனில் விரதம் காக்கவே.

பாம்பு கயிறுகக் கடல் கடைந்த மாமாயன்
ஈங்கு நம் மானுள் வருமேல் அவன் வாயில்
ஆம்பலம் தீங்குழல் கேழாமோ தோழி.
கொல்லையம் சாரல் குருந்து ஒசித்த மாமாயன்
எல்லி நம் மானுள் வருமேல் அவன் வாயில்
முல்லையம் தீங்குழல் கேழாமோ தோழி.
கன்று குணிலாகக் கனி உகுத்த மாமாயன்
இன்று நம்மானுள் வருமேல் அவன் வாயில்
கொன்றையம் தீங்குழல் கேழாமோ தொழி [சிலப்].

404. Negation.

எதிர் மறை அவாநிலே தன்னை நோக்கின்
இறப்பும் எதிர்வும் என இருபாற்றே.

இறந்த காலத்தைப் பற்றிவரும் எதிர்மறையும் எதிர் காலத்தைப்பற்றிவரும் எதிர்மறையும்என எதிர்மறை அவா நிலே வாக்கியங்கள் இரு கூறுகுமென்க.

உ-ம்;—இறப்பு: மழை பெய்தும் குளம் நிறையவில்லை. நான்சொல்லியும் அவன் கேட்க இல்லை.

எதிர்வு: மழை பெய்தாலும் குளம் நிரம்பாது. நான் சொன்னுலும் அவன் கேளான்.

எனவே, இவ்வவாநிலே வாக்கியங்கள் எதிர்மறைப்பொருள்நிலே வாக்கியங்களேக்கொண்டே முடியு மெனினும். பொருளினுலே எதிர்மறை நோக்கி நிற்குமெனின் விதி வினே வாக்கியங்களேயும் தழுவி நிற்கும் என்க.

உ-ம்:—அவன் என்ன சம்பாதித்தும் உடுக்கிறது கந்தை. அவனுக்கு எவ்வளவு சொல்லியும் இன்னம் கோபமாய் இருக்கிறுன். இன்னம் முட்டைக்குள் கிடக்கும் குட்டியாயிருந்தும், இருசெவியும் விரித்துக்கொண்டு இரண்டு விரற்கடை நீளமுடைய வாலேத் தூக்கிக்கொண்டு நிலத்திலே மார்புபட, நாலு காலேயும் விரித்து நீட்டி ஒடின சுறுக்கும் வேகமும் சொல்லவும் நினேக்கவும் கூடாதென்றுர் [பரமார்த்தகுரு]. (இதில் குட்டியா யிருத்தலால் வேகமாய் ஓடமாட்டாமை இயல்பு. ஆகையால் குட்டியாயிருந்தும் வேகமாய் ஓடுதல் பொருளால் எதிர்மறை). யாகாவாராயினும் நாகாக்க. (எதிர்மறைக்கு எதிர்மறை = விதிவினே). தன்னே உணர்த்தினும் காயும். கோட்டுப் பூச்சூடி

னும் காயும் நினைத்திருந்து நோக்கினும் காயும் [குற]. (இவை பொருளால் மறை). நட்டார் போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல் ஒல்லை உணரப்படும் [குற]. பாலாற்கழீஇப் பலநாள் உணக்கினும் வாலிதாம் பக்கம் இருந்தைக்கு இருந்தன்று [நால்]. பொழிந்து இனிது நாறினும் பூமிசைதல் செல்லாது இழிந்தவை காமுறும் ஈ [நால்].

405. Solemn Vows.

சபதத்தானும் அவாநிலை என்க.

ஒரு செய்கையினது உறுதியைப்பற்றிக் கூறிய சபதங்களிலும் அவாநிலை வாக்கியங்கள் நடக்கும் என்க,

உ-ம்:—ஓ அநாத இரட்சகா! ஆபத் பாந்தவா! பக்தவச்சலா! பரப்பிரம சொரூபா! ஓய் சுவாமி! நான் மனோ வாக்குக் காய கர்மங்களினாலேயும் என் புருஷருக்கு வஞ்சனை பண்ணாதவளுமாய், சகல லட்சணங்களும் உள்ள பதிவிரதையுமாய், இந்த லோகத்துச் சனங்களெல்லாம் அறிய நளமகராஜா எனக்குப் புருஷருமாய், நான் அவருக்குப் பெண்சாதியுமாய், என்னிடத்திலே ஒரு தப்பிதங்களும் இல்லாமலிருக்கிறது நிசமேயானால், இந்தவேடன் எரிந்து சாம்பலாய்ப் போகக்கடவன் என்று சொல்லிச் சபித்தாள் தமயந்தி [நள]. முட்டுற்ற போழ்தின் முடுகி என் ஆருயிரை நட்டான் ஒருவன் கை நீட்டேனேல், நட்டான் கடிமனைக் கட்டழித்தான் செல்வழிச் செல்க [நால்].

406. Comparison.

ஒப்பினாலும் அவாநிலை என்க.

உபமான சம்பந்தமாய் ஒரு வாக்கியமானது வேறொரு வாக்கியத்தைத் தழுவி 244-ல் காட்டிய ஒகார ஈற்று வினா மொழிகளைக்கொண்டு முடியுமெனின், அவற்றை உபமான அவாநிலை என்க.

உ-ம்:—பழுதுபட்ட கடியாரமானது எவ்விதமாய்ச் சரியான மணிக்கணக்கைக் காட்டக் கூடாமலிருக்கிறதோ அப்படியே மனச்சாட்சியும் பலன் அற்றுப் போய் மற்றத் தத்துவங்களுக்கு ஒடுங்கி நிற்கிறது [அற]. எப்படி ஒரு குழந்தையானது பிறந்து வளர்

ந்து வாலிபனாகி, பிரபலமான செய்கைகளுக் கிடமான மனுஷ தத்துவத்தை அடைந்து, பின்பு தளர்ந்து விர்த்தனாகி இறந்து இருந்த இடமே தெரியாமல் மறைந்துபோவது இயல்போ: எப்படி ஒரு மரமானது ஒரு சிறிய வித்தினின்று தோன்றிச் சில காலம் பசிய இலையையும் இனிய கனியையும் பொருந்திப் பின்பு பட்டுப்போவது சாதாரணமோ, அப்படியே இராசாங்கங்களும் தோன்றிச் சிலகாலம் பிரபலமா யிருந்து பின்பு சகல அங்கங்களும் தளர்ந்து ஒழிந்துபோகும் [துரை].

407. Dependent sentences standing alone.

அவாநிலை தனியே நிற்றலும் உளவே.

செய்தால், செயின், செய்யுமிடத்து, செய்வோமானால் என்னும் இவ்வாய்பாட்டு எச்சங்களில் முடியும் வாக்கியங்கள் செய்யுளிடத்தும் வாசக நடையிலும் பொருள் நிலை வாக்கியங்களைத் தழுவாது தனியே வருதலும் உள. இவ்வாறு வரும் வினைகளாவன: யோசித்தால், எண்ணினால், பார்த்தால், நோக்கின், விசாரித்தால், கூறினால், சொன்னால், புகுந்தால், ஆரம்பித்தால் ஆ.

உ-ம்:—ஓ அம்மா! உன்னுடைய லட்சணங்களைப் பார்த்தால், நவகண்டங்களும் ஆளப்பட்ட ராஜாவினுடைய பட்டத்துத் தேவிபோலேயே இருக்கிறது [நள]. நான்காம் அடியிற் பொருள் சிறக்கவில்லை. அதைச் சிறக்கச் சொல்லுங்கால், மேலிமை கீழிமை என்னும் கண்ணிமை இரண்டில் மேலிமை பெரிது. கீழிமை சிறிது. அன்றியும் மேலிமை அசைந்துகொண்டிருப்பது. கீழிமை அசையாது நிற்பது [விநோ]. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின், மன்னனிற் கற்றோன் சிறப்புடையன். மன்னனுக்குத் தன் தேசமல்லால் சிறப்பு இல்லை. கற்றோற்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு [ஔ]. பழமை எனப்படுவது யாதெனின், யாதும் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு [குற]. நுண்ணூர் வின்மை வறுமை. அஃது உடைமை பண்ணப் பணைத்த பெரும் செல்வம். எண்ணுங்கால், பெண் அவாய் ஆண் இழந்த பேடி அணியாளோ? கண் அவாத் தக்க கலம் [நால்].

இவ்வாறே, ஏனெனில், யாதெனில், என்னத்தினாலெனில், என்னவென்று கேட்டால், அதேனென்றால் முதலிய தனிமொழிகளும் ஆதியில் அவாநிலை வாக்கியங்களாய் வந்தவை, அடிக்கடி கூறிய மிகுவழக்கினால், அவற்றிற்குள்ள முதற்பொருள் கெட்டு, காரணங்காட்டிய தனிமொழிகளாகமாத்திரம் வழங்கி வருகின்றது. இத் தனிநிலை வாக்கியங்களால் உள்ள பயன் யாதெனின், ஒரு வாக்கியம் மிக விரிந்து வருமிடத்து அவ்வாக்கியம் முடியும் வரையில் கேட்கின்றானின் மனதுக்குப் பொருள் இன்னதென்று தோன்றாது வருத்த முண்டாக்குதலால். அம்மலைவு நீங்கும்பொருட்டு அவ்வாக்கியத்தின் மொத்தப்பொருள் இதுவென்று முதலே காட்ட உபயோகமான பதங்கள் இவை என்க. (இவ்வாக்கியத்தையே இதற்குத் திருஷ்டாந்தமாக்கிப் பார்க்கவும்.)

408. EQUIVALENT FORMS:

வினைப்பயனிலையும் அவாநிலையாமே.

வினையைக்கொண்டு முடியும் பயனிலையை உடைய வாக்கியங்களும் அவாநிலை வாக்கியங்களாகும்.

உ-ம்:—நீ படிக்க மாட்டையா? உன்னை நன்றாய் அடிப்பேன்=நீ படிக்காவிட்டால் உன்னை நன்றாய் அடிப்பேன். இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனா? கண்ணிறை நீர் கொண்டனள்=இம்மையில் உன்னை விட்டு நான் பிரியமாட்டேன் என்றேனா (=என்று சொல்வேனானால்) மறுமையிற் பிரிந்துபோவீரோ'என்று கண்ணீர் உகுத்துத் துக்கப்படுவாள் [குற]. யாரினும் காதலம் என்றேனா? ஊடினாள் யாரினும் யாரினும் என்று. ஊடி இருந்தேமா? தும்மினார் யாம் தம்மை நீடுவாழ்க என்பாக்கு அறிந்து [குற].

409. ANOTHER FORM.

முற்றும் ஓரோவழி அவாநிலையாமே.

காரண காரிய சம்பந்தத்தான் வரும் வாக்கியங்களில், தொடர்பு வெளிப்படையானபோதும் வாக்கியம் விரிதலின்றிச் சுருங்கியபோதும், அவாநிலை வாக்கியங்களை முற்றுவாக்கியமாகக் கூறுதல் சிறப்பென்க.

உ-ம்:—திட்டினான் அடித்தேன். சட்டிசுட்டது, கைவிட்டது [பழ]. அரிசியும் இல்லை வரிசையும் இல்லை [பழ].

410. Another Form.

தேற்றேகாரமும் வழக்கினுள் அவாநிலை.

தேற்றேகாரத்தைக்கொண்டு முடியும் முற்றுவினை வாக்கியங்களும் வழக்கில் அவாநிலை வாக்கியங்களாகும்.

உ-ம் :—நேற்று வந்தானே மனிதன், அவன் பெயரென்ன=நேற்றுவந்த மனிதன் பெயரென்ன. பிரகஸ்பதிபகவான் ஒரு பிராமணப்பிள்ளையாக வடிவுகொண்டு எதிரேவந்து கட்டைமேல் வைக்கப்பட்டிருக்கிறதே இது என்ன என்று கேட்க, சோதிஷ சாஸ்திரி சோதிஷ புஸ்தகம் என்று சொன்னான் [விநோ]. அதுவுமல்லாமல், இந்தக் குடை இருக்கின்றதே, அஃது அநேகம் மூங்கிற் பிளாச்சுகளினாற் குறுக்கும் நெடுக்குமாகப் போட்டுக் கட்டிக் குடை என்று சொல்லப்பட்டுக்கொண்டிருக்கின்றது [சத்].

XLIV. விளியிடை.

411. Interjections.

விளியிடைகளுக்குத் தொடர் இலைஎன்க.

இதற்கு உரையும் உதாரணமும் 188-ல் காண்க.

412. Examples of Interjections.

துன்பம், இன்பம், விருப்பு வெறுப்பெனு,
இரக்கம், வெகுளி, கவனம், விளியெனு,
விளியிடைச்சொற்கள் பலவாம் என்க.

உ-ம்: (1) துன்பம்: அப்பா! அப்பப்பா! அப்பாடா அம்மா! ஐயோ! அந்தோ! முல்.

(2) இன்பம்: ஆகா! அடடா! அம்மம்மா! ஓகோ! முல்.

(3) விருப்பு: சபாஸ்! சரி! நல்லது! ஆகா! கெட்டிகெட்டி! முல்.

(4) வெறுப்பு: ஆகா! அப்படியா! அப்படியா சேதி! பத்திரம்! சாக்கிரதை! முல்.

(5) இரக்கம்: பாவம்! பரிதாபம்! ஐயோ! ஐயோசாமி! முல்.

(6) வெகுளி: சீ! சீச்சீ! தோலோதோல்! முதலியன.

(7) கவனம்: சுட்! உஷ்! கவனம்! இதோ! அதோ! பார்! பார்மின்! முதலியன.

(8) விளித்தல்! ஓய்! இந்தா! என்னு! யே! அடே! அடயே! காணும்! முதலியன.

உ-ம்:—இந்தா குறக்கூடை என்றாரோ அல்லியரும் [புக].

(9) சாசம்! கெட்டிகெட்டி! நேத்திநேத்தி! பளபளா! நன்றுநன்று முதலியன.

முற்றும்.

[illegible]